www.padippakam.com

# காலச்சுவடு




இதழ் 11

ரூ 20

படிப்பகம்

www.padippakam.com




Distributors:

**R.D. Enterprises**
No. 55/14, GODOWN STREET
BALAKRISHNA MARKET
MADRAS - 600 001
☎ 581990, 585487

படிப்பகம்

www.padippakam.com




காலச்சுவடு
இதழ் 11
ஏப்ரல் - ஜூன் 1995



***ஆசிரியர் குழு***

***மனுஷ்ய புத்திரன்***
***லஷ்மி மணிவண்ணன்***
***கண்ணன்***

***தயாரிப்பு உதவி***
***எம்.எஸ்.***
***லீலா***
***மைதிலி***
***ரவீந்திரன்***



தனி இதழ் ரூ. 20
ஆண்டு சந்தா ரூ. 80
வெளிநாட்டு சந்தா ரூ. 300

**சந்தாத் தொகையை**
**'Kalachchuvadu' Nagercoil**
என்ற பெயரில்
பணவிடையாகவோ
வரைவோலையாகவோ
அனுப்புக. காசோலையாக
அனுப்புகிறவர்கள் ரூ. 10
சேர்த்து அனுப்புக.



தொடர்பு முகவரி
**'காலச்சுவடு'**
151 கே.பி. ரோடு
நாகர்கோவில் 629 001


**பேட்டி**


கே. சச்சிதானந்தன் 15 சந்திப்பு : ஜெயமோகன்


**கவிதைகள்**


சேரன் 3
கல்யாண்ஜி 4
உமாபதி 24
குவளைக்கண்ணன் 42
சங்கர ராம சுப்பிரமணியன் 56
அபிப்ரியா 69


**சிறுகதைகள்**


அந்த முகம் 8 சுரேஷ்குமார இந்திரஜித்
பட்டுவாடா 25 சுந்தர ராமசாமி
தீட்டு 63 ஹவி


**கட்டுரைகள்**


கா. மார்க்ஸியர் பற்றி அ. மார்க்ஸ் 43 சி. சிவசேகரம்
நாடகப் பிரதி 57 ரெங்கராஜன்
சௌந்தர்ய லஹரியும்
பிற குட்டிக் கதைகளும் 65 கண்ணன்


**மொழிபெயர்ப்புகள்**


காந்தியும் கோட்ஸேயும் இந்தியாவின்
எதிர்காலமும் (கட்டுரை) 11 அஷிஸ் நந்தி
மச்சம் (சிறுகதை) 47 யஸுநரி கவபட்டா
விலக்கப்பட்ட பண்டம் (கவிதை) 52 மிஸ்பா கான்
ஒரு துளி இரத்தத்துக்கான
அலைதல் (கவிதை) 53 கைலாஸ்புரி
விழித்தெழுதல் (கவிதை) 54 ரீட்டா டோன்


**மதிப்புரைகள்**


சந்திரகிரி ஆற்றங்கரையில் 10 சல்மா
கண்மணி கமலாவுக்கு 39 மனுஷ்ய புத்திரன்
கப்சிப் தர்பார் 40 வேதசகாயகுமார்
மாயா பஜார் 42 சுந்தர ராமசாமி
வ.உ.சி.யும் பாரதியும் 55 தொ.மு.சி. ரகுநாதன்
பாரதியின் கருத்துப்படங்கள் 55 தொ.மு.சி. ரகுநாதன்
குருக்ஷேத்திரமும்
ஒரு நிராயுதபாணியும் 62 தளவாய் சுந்தரம்
ஏறுவெயில் 68 க. பூரணச்சந்திரன்
காலச்சுவடு இதழ் 10 70 என். சத்தியமூர்த்தி


**விவாதம்**


தலித் இலக்கியக் கோட்பாடு பற்றி 14 சி. சிவசேகரம்


சிறப்புப் பகுதி
**புதுமைப்பித்தன் படைப்புகள்**


தொகுப்பு : வேதசகாயகுமார், சின்னக்கபாலி
29 - 38


மற்றும் . . .


கடிதங்கள் 5
வரப்பெற்றோம் 9
ஏழு கடல் தாண்டி 51
தமிழ்ச் சிறுபத்திரிகைச் சூழல்:
ஒரு 'கள' ஆய்வு 72 இரும்புக்கை மாயாவி




படிப்பகம்

www.padippakam.com

## காலச்சுவடு கிடைக்குமிடங்கள்

**விஜயா பதிப்பகம்,** 20 ராஜ வீதி, கோயம்புத்தூர் 641 001.

**தமிழ் இலக்கியக் கழகம்,** 49 பாரதியார் சாலை, திருச்சி 1.

**வேர்கள் கலை இலக்கிய அமைப்பு,** 12-டி, பெரியார் சாலை, நகர்கூறு-7, நெய்வேலி 607 803.

**திலீப்குமார்,** 25, 3ஆவது டிரஸ்ட் க்ராஸ் தெரு, மந்தைவெளி, சென்னை 600 028.

**முன்றில்,** 28, 2வது மாடி, சாந்தி காம்ப்ளக்ஸ், 26/3 ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை 600 017.

**வெ. நாராயணன், இலக்கிய வட்டம்,** 39/சி காமாட்சியம்மன் சன்னதி தெரு, காஞ்சிபுரம் 631 502.

**சிலிக்குயில்,** 7 டாக்டர் பெசன்ட் ரோடு, கும்பகோணம்.

**ஸ்டேன்டர்டு புக் ஹவுஸ்,** 55எ, மேல ரத வீதி, (தலைமை தபால் நிலையம் அருகில்) நாகர்கோவில் - 629 001.

**பல்லடம் மாணிக்கம்,** 31, பணிபூந்தர் தெரு, விருத்தாசலம்1. தென்னார்க்காடு மாவட்டம்.

**மீனாட்சி புத்தக நிலையம்,** மயூரா காம்ப்ளக்ஸ், 48/11 & 12 தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001.

**எஸ். தமிழ்ச்செல்வன்,** 80, மேல அக்ரஹாரம், பத்தமடை 627 453.

**அன்புசிவம்,** பாங்க் ஆஃப் பரோடா, அரசூர் 607 107.

**தேவதேவன்,** 4/5 மணி நகர், தூத்துக்குடி 628 003.

**தேவி பாரதி,** இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப்பள்ளி, முத்தூர் 638 105.

**அழகியசிங்கர்,** 7 ராகவன் காலனி, மேற்கு மாம்பலம், சென்னை 600 033.

**துரை. மடங்கன், யாழ் நூலகம்,** 386, காமராஜர் சாலை, காந்திபுரூர், உப்பிலிபாளையம் போஸ்ட், கோவை 641 015.

**அய்யனார்,** விநாயகபுரம், தெற்குத் தெரு போஸ்ட், மேலூர் (தாலுகா) மதுரை 625 122.

**விடியல் பதிப்பகம்,** 3 மாரியம்மன் கோவில் வீதி, உப்பிலிபாளையம், கோவை 641 015.

**வள்ளலார் புத்தக நிலையம்,**266-எ,செரி ரோடு, திருவள்ளுவர் சிலை சமீபம், சேலம் 1.

**சாகித்யா,** கடை எண் 55, மகாராஜா நகர், முனிசிபல் புது அங்காடி, சிவந்திப்பட்டிசாலை, பாளையங்கோட்டை.

**கார்முகில் புத்தக நிலையம்,** 129எ பாலம் ஸ்டேசன் ரோடு, கோரிபாளையம், மதுரை 629 002.

**கிழக்கு,** தபால் பெட்டி எண் 9, 40-எம், பூம்புகார் பில்டிங் (முதல் தளம்), திருத்துறைப்பூண்டி 614 713.

**து.** காந்தி, மேலூர் (கி), செவல்பட்டி (அஞ்சல்), துவரங்குறிச்சி 621 314. திருச்சி மாவட்டம்.

**நசிகேதன்,** 11-சுசிபவன், 4-வது தெரு, சுந்தரம் நகர், தஞ்சாவூர்-4.

**KAAVYA,** 16, 17th E Cross, Indra Nagar, Bangalore 560 038.

R. Mahalingam, 17, Ist Floor, IInd Cross, Brahmapura, Sriramapuram, Bangalore 560 021.

**Dr C. Ravindran,** 39/2046 Naiwala Galli, Karol Bagh, New Delhi-110005.

**Indo-Soviet Book Stall,** Near Tirunelveli Bus Stand, Tirunelveli.

**நாகர்கோவில், திருநெல்வேலி, கோவில்பட்டி, சாத்தூர், மதுரை, தஞ்சாவூர், திருச்சி, திருவண்ணாமலை ஆகிய ஊர்களில் பத்திரிகை கடைகளிலும் கிடைக்கும்.**

**Vasantham** (P) Ltd., S44, 3rd Floor, Colombo Central Super Market Complex, Colombo - 11, SRI LANKA.

**T. Kulasingam,** Uthayan Book Centre, Main Street, Point Pedro, SRI LANKA.

**Selvam,** 145, Glendower Circuit, Scarborough, MIT 2Z7, CANADA.

**Sakthi,** Boks.99 Oppsal, 0619-Oslo-6, NORWAY.


### STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT THE PERIODICAL KALACHCHUVADU (TAMIL QUARTERLY)

**FORM IV**

(See Rule 8)

1. Place of publication : Nagercoil
2. Periodicity of publication : Quarterly
3. Printer's name : V. BAGAVATHY
   Whether citizen of India : Yes
   Address : Bharathy Press, Chettykulam Jn., Rajakkamangalam Road, Nagercoil 629 002
4. Publisher's name : S.R. SUNDARAM
   Whether citizen of India : Yes
   Address : 151 K.P. Road, Nagercoil 629 001
5. Editor's name : S.R. SUNDARAM
   Whether citizen of India : Yes
   Address : 151 K.P. Road, Nagercoil 629 001
6. Name and address of individuals who own the periodical and partners or shareholders holding more than one percent of the total capital : S.R. SUNDARAM, 151 K.P. Road, Nagercoil 629 001

I, S.R. Sundaram, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Nagercoil
31.3.1995

S.R.SUNDARAM
Publisher


### இதழ் 10 பற்றி சில குறிப்புகள்

இதழின் அச்சாக்கத்தில் நேர்ந்துவிட்ட சில குறைபாடுகளுக்காக எங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். வாசகர்களுக்கும் பங்களித்தவர்களுக்கும் எதிரான ஒரு வன்முறையாக பல பக்கங்கள் அமைந்துவிட்டது எங்கள் கவனத்தையும் மீறி நிகழ்ந்தவை ஆகும். வரும் இதழ்களில் இது போன்ற குறைகள் நேராது தவிர்க்க முயற்சி எடுத்த வருகிறோம்.

எஸ். என். நாகராஜனின் பேட்டி அக்டோபர் 93ல், அவரது 'மார்க்ஸியம்-கிழக்கும் மேற்கும்' புத்தகம் அச்சில் இருந்த நேரத்தில் எடுக்கப்பட்டது. பேட்டியாளர்: கண்ணன்.

நட்சத்திரன் செவ்விந்தியன் கவிதைகள் 'வசந்தம் 91' தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்டவை.

காலச்சுவடு மதுரை விமர்சனக்கூட்ட ஒலிப்பதிவுகளை பிரதி எடுத்துக்கொடுத்தவர் தளவாய் சுந்தரம். அவருக்கு எங்கள் நன்றி.

லஷ்மி மணிவண்ணன் கவிதைகள், உலகத்தமிழ் மாநாடு பதிவு ஆகிய பகுதிகளில் இடம் பெற்றிருந்த கோட்டோவியங்கள் ஓவியர் மாரிமுத்து வரைந்தவை.

இதழில் இடம் பெற்றிருந்த எஸ்.என். நாகராஜன், எம்.என். ராய், ராஜாஜி, கிருஷ்ணன் நம்பி, சிவசேகரம் ஆகியோரின் கோட்டுச்சித்திரங்களும், பாட விசித்திரம், நிழலைத் துரத்தியவன் ஆகிய சிறுகதைகளில் இடம் பெற்றிருந்த கோட்டுச்சித்திரங்களும் ஓவியர் ஆதிமூலம் வரைந்தவை.



படிப்பகம்

www.padippakam.com



## ஜே.யுடனான உறவு முறிந்து மூன்று நிமிடங்களாகின்றன

ஜே.யுடனான உறவு முறிந்து
மூன்று நிமிடங்களாகின்றன.
அவளுடைய கடைசி வார்த்தை
காய மறுக்கும் ஒரு குருதித்துளியைப் போல
வாசல் கதவில் இன்னும் ஒட்டிக்
கொண்டிருக்கிறது.

எமக்கிடையில் மொழியின் அழகுகள்
இறந்து போய்விட
மௌனத்தின் வலைப் பின்னலுக்குள் சிக்குண்டு
காலம் நகர முடியாமல் தத்தளித்த போது
ஆற்றாமையுடன்
கோபத்தில் புருவங்கள் துடிக்க
அவள் வீசியெறிந்த புத்தகம்
இதழ்கள் முறிந்து நிலத்தில் துவள்கிறது.

அவளுடைய ஆவேசக் கூச்சலில்
நடுங்கிய அறைச் சுவர்கள்
இன்னும் அதிர்ந்து கொண்டுள்ளன.

படுக்கையறைத் துணிக் கொடியில்
இனி அவளுடைய உள்ளாடைகள் இராது
வெளிவாசலில் இனி அவளுடைய செருப்புகளும்
இருக்காது.
என்றாலும் அவளுக்கான வாசனை
நீண்ட காலத்துக்குத்
தலையணைகளில் கண்ணாடியருகே,
தண்ணீரில் தோய்ந்த சவர்க்காரப் பெட்டியில்,
புத்தக அலமாரியின் இடது பக்கத்தில்
கமழ்ந்து கொண்டிருக்கப் போகிறது
ஜே.யுடனான உறவு முறிந்து
மூன்று நிமிடங்களாகின்றன...

இந்த மூன்று நிமிடங்களில்
நான் கடந்த முதல் நதி வழி மாறிற்று
நான் இறங்கிய முதல் கடல்
என்னை விழுங்கிற்று

உறவுகளின் குச்சொழுங்கைச் சுழலுக்குள்
என் முதல் காலடி திசைமாறிற்று

கொடியும் கொழுகொம்பும், நீரில் படரும்
தாமரை,
இதய ஆகுதியின் ஆத்ம சங்கீதம் என்ற
காதல் பற்றிய பழைய உருவகங்களை
ஜே. துவம்சம் செய்து விட்டுப் போகிறாள்

அவளின் பின்னால்
காற்றும் நிலமும் குழந்தைகளைப் போலத்
தொடர்ந்து செல்கின்றன

அவளுடைய கோபத்தின் பொறிகளிலிருந்து
புதிய வார்த்தைகள் பிறக்கின்றன

எனக்கு மூன்று நிமிடங்களாயின
அவள் மூன்று யுகங்களைத் தாண்டிச்
செல்கிறாள்

**சேரன்**



படிப்பகம்

www.padippakam.com



## குழந்தைகள்

குழந்தைகளை யார் உருவாக்குகிறார்கள்
என்று நான் கேட்டேன்

திறந்து வைத்த யன்னலூடாகச் சலசலத்து
நானல்ல; அவர்களின் குரலுக்குச்
சங்கீத நரம்புகளைத் தருவதே என் வேலை
என்றது காற்று.

அவர்களுடைய கண்களுக்கு
ஆழமான நிறங்களைத் தருகிறேன் நான்
என்றது ஒளி.

உங்களுடைய பிஞ்சுப் பாதங்களுக்கு
ஒரு புன்னகையைத் தருகிறேன் நான்
என்றது செவ்வலரிப்பூ

அவர்களுடைய இதயத்தின் சுவர்களைக்
காதலின் இழைகளால் நெய்கிறேன்
என்றது கடல்

அவர்களுடைய சிரிப்புக்கு
மந்திர வலிமையைச் சேர்க்கிறேன் நான்
என்றன காடுகள்

அப்படியானால்
அவர்களுடைய கைகளில் துப்பாக்கிகளையும்
கால்களுக்கு ராணுவச் சப்பாத்துகளையும்
இடுப்பில் வெடிகுண்டுகளையும்
கண்களில் வெறுப்பையும்
தந்தது யார் என்று கேட்டேன்

காற்றும் கடலும் உறைந்தன;

கண்ணாடித் துண்டுகளாக
வெளியில்
உலர்ந்து நொருங்கிற்று ஒளி;
ஒரு மின்னல் வெட்டில்
எரிய ஆரம்பித்தன பூக்களும் காடுகளும்:
எல்லாப் பறவைகளும்
கூட்டமாகப் பறந்து சென்று
அத் தீயுள் விழுந்தன.

குழந்தைகள் : எங்களுடைய குழந்தைகள்

**சேரன்**

●

## கல்யாண்ஜி கவிதைகள்

நிரப்பிக்கொள் என
காலியிடங்களை விட்டுச்செல்கிறது காலம்.
உனக்குத் தெரியும் உனக்குத் தெரியும் என
ஒவ்வொரு தினமும்
விட்டுச் சென்ற இடங்களைப்
பூர்த்தி செய்யக் கூடவில்லை எனக்கு.
இடைவெளிகளின் பாளங்களை
உருக்கி ஊற்றவரும் சூரியன்
உதிக்கிற உஷ்ணத் திசை எது?
சுழித்துப் பிரவகிக்கும் நதிகளின்
இரண்டு கரைகளுக்கிடையில்
தொங்குபாலமிடப் போகிற மனிதர்களின்
முகம் எப்படியிருக்கும்? என்று
அறியாதிருப்பதிலும் அறிவதிலும்
அபூர்த்தியாகிக் கொண்டே வருகிறது ஆயுள்.
இடைவெளிகள் என்னையும்
இடைவெளிகளை நானும்
அங்கீகரித்துக் கொண்டோம் கடைசியில்.
இன்னும் சற்று
இருந்துவிட்டுப் போ
என்ற குரல் கேட்கிறது அந்தரத்தில் இருந்து
இப்போது.

○

இது சிலந்திகளின் காலம் போலும்.
ஏற்கனவே நுரையீரல்களில்
நூலாம்படை படர்ந்து
அதிககாலம் ஆயிற்று.
சாய்த்து நிறுத்திய வாகனத்துக்கும்
சுவருக்கும்-
தொலைக்காட்சிப் பெட்டிக்கும்
எதிர் நாற்காலிக்கும்-
கொஞ்சம் அயர்ந்தால்
எனக்கும் என் சாப்பாட்டுத்
தட்டுக்கும் இடையில் வலையின்
மினுமினுப்புத் தொங்கிவிடும் ஆபத்து உண்டு.
மிக எளிய என் தேய்ந்த திருப்புளிகள்-
முடி உதிர்ந்த தூரிகைகள்-
மறுபடி வாசிக்காத புத்தகங்கள்-
மற்றும் வெளிச்சொல்ல முடியாத
அந்த இடத்திலும்-
கூடுகள் கட்டிய அது அதன்
மாயத்திலிருந்து வெளிவந்து
சருகுக் கால்களில்
கறுப்புடல் நகர்த்தி
சஞ்சரிக்கிறது சுவற்றில்.
மௌனமான அதன்
வரவேற்பறைச் சவால்கள்
தொங்கிக் கொண்டிருக்க,
நிலைக்கண்ணாடி கொத்தும்
சிட்டுக்குருவிகளை எதிர்பார்த்துக்
கொண்டிருக்கிறேன் நான்
சிலந்திக்கு எதிராக
வலைகள் பின்னிக் கொண்டு.


●



படிப்பகம்

www.padippakam.com

# கடிதங்கள்



இடதுசாரி சிந்தனை, அமைப்பியல்வாதம் போன்றவற்றிலிருந்து சிலவற்றை உள்வாங்கி இன்றைய தேவைக்கான சில அரசியல் பின்னணியோடு இயங்கிக் கொண்டிருக்கும் தலித்தியத்தினுடைய இன்றைய தீவிர போக்கும் அதன் கலகக்குரலும்தான பூணூல் சாக்கஸ்காரர்களையும் அவர்களைச் சுற்றியிருக்கும் பஜனை பாடகர்களையும் வயிறு கலங்க வைத்திருக்கிறது. இது இன்றைய தலித்தியத்தினுடைய மிகப்பெரிய வெற்றி. பார்ப்பனீய தொனியோடு ஏற்கனவே புனையப்பட்ட படைப்பிலக்கியங்களும் அதன் கட்டமைப்பு, நாகரிகம், பண்பு, சகிப்புத்தன்மை, அரசியல் இவையெல்லாமும் கடுமையான் விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்டு தகர்த்தெறியப்படும் பட்சத்தில் எழுப்பப்படும் கூக்குவிளியாகத்தான் ஜனவரி மாதம் வெளியான காலச்சுவடு பத்தாவது இதழின் தலையங்கம்- இடதுசாரிகள், அமைப்பியலாளர்கள், தலித்தியர்கள் எல்லோரையும் சாடியிருக்கும் தலையங்கம் சிறுபான்மையினரையும் தொட்டிருந்தால் எந்த முகமூடியை அணிந்து கொண்டு எந்த தளத்தில் காலச்சுவடு இயங்குகிறது என்பது பேஷா தெரிந்திருக்கும்.

**என்.டி. ராஜ்குமார்,** நாகர்கோவில்.

○

இதழ் 10 நன்றாக வந்துள்ளது. முதல் கட்டுரையில் (தலையங்கம் ?) உங்கள் பார்வையை சரியாகவும், துணிச்சலாகவும் பதிவு செய்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. எஸ்.என். நாகராஜன் நேர்காணல் நிறைய விஷயங்களை தந்தாலும், முழுமையான அவரின் கருத்துகளை வெளிக்கொணரக்கூடிய கேள்விகள் கேட்கப்படாதது போலத்தான் எனக்குத் தோன்றுகிறது. ராஜாஜி சினிமாவுக்குப் போனதற்கு நாலு பக்கம் வீணாக்கப்பட்டிருக்க வேண்டாம். ஒரு நூலுக்கு இருவரின் விமர்சனம் தேவையா என்றிருந்தது படிக்குமுன். தேவைதான் எனத் தோன்றியது படித்தபின். ஒவ்வொரு இதழுக்கும் வெவ்வேறு இடங்களில் விமர்சனக்கூட்டம் நடத்தி பதிவு செய்வது இதழைப் புதிய நோக்குடன் மறுமுறை அணுகப் பயன்படும். விமர்சனக் கூட்டப் பதிவு வரவேற்க வேண்டியது.

**மணிசேஷன்,** திருச்சி.

○

பத்தாவது இதழ் அச்சுப்பிழையும் மங்கித் தெரியும் எழுத்துக்களும் மிகச் சிரமப்படுத்திவிட்டன. கழிந்த இதழைப் போல இந்த இதழ் வரவில்லை. இருப்பினும் புதுமைப்பித்தனின் தொகுப்பு திருப்தி தரக்கூடியதாக அமைந்திருந்தது. யுவனின் 'நிழலைத் துரத்தியவன்' சிறுகதை, அவரது நிழல் பற்றிய பாவை பிரமிப்பு ஏற்படச் செய்கின்றன. ஜெயமோகனின் (சரித்திர) சிறுகதை மகத நாட்டு பின்புலத்தை வைத்து எழுதியது 'ஜிம் பூம்பா' வேலையாக எனக்குப்படுகிறது.

**எஸ். அசோகவர்த்தனன்,** போடிநாயக்கனூர்.

○

எஸ்.என். நாகராஜனின் பல கருத்துகள் சிந்தனைக்கும், விவாதத்துக்கும் உரியவை. ராமஜன்ம பூமி விவகாரத்தில் பி.ஜெ.பி. மற்றும் ஆர்.எஸ்.எஸ். இயக்கங்களின் பங்கு, உள்நோக்கம் கொண்டதென்றாலும் கரசேவையில் கலந்து கொண்ட சாதாரண மக்களின் உணர்வுகள் பற்றிச் சிந்திப்பது அவசியமாகிறது. இஸ்லாம் பற்றி குரான் மற்றும் ஹதீஸ் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அறிவுபூர்வமான விவாதம் இதுவரை நடத்தப்படாதது துரதிருஷ்டவசமானது. சோவியத் யூனியன் சிதறலுக்குப் பிறகு உலக அளவில் முஸ்லீம் நாடுகள் ஓர் அணியாகவும், அமெரிக்கா தலைமையில் பிற நாடுகள் மற்றோர் அணியாகவும் உருவாகும் சூழ்நிலை தவிர்க்க முடியாததாகி விட்டது. இந்நிலையில் இந்திய அரசாங்கத்தின் மற்றும் இந்திய முஸ்லீம்களின் நிலை என்னவாக இருக்கும் என்பது பற்றி சிந்திப்பது அவசியம். சோவியத் யூனியனின் சிதறலைக் கம்யூனிசத்தின் வீழ்ச்சியாகக் கண்டு கைதட்டி மகிழ்பவர்கள் அதன் விளைவுகளான அமெரிக்கக் கட்டைப்பஞ்சாயத்தையும் இஸ்லாமிய பயங்கர வாதத்தையும் பற்றித் தீவிரமாகச் சிந்திப்பது உடனடித் தேவையாகும். ஜெயமோகனின் பாடலிபுத்திரம் ஒரு Undocumented History யை ஒரு விதத்தில் முழுமைப்படுத்தும் முயற்சியாகத் தெரிகிறது. என்றாலும், வரலாற்றின் எச்சங்களுக்குக் கலைவடிவம் கொடுக்க முயல்வது இயல்பான வாசகத்தன்மையை நீர்க்கச் செய்துவிடலாம். இது பற்றிச் சிந்திக்கும்போது கு.ப.ரா. வின் முயற்சிகளையும் வெற்றிகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியம்.

**ஜி. சாமிநாதன்,** தஞ்சாவூர்.

○

தலையங்கம் ரொம்பவும் மோசமான விஷயங்களையே உள்ளடக்கியிருக்கிறது. எந்த இதழும் யாருக்காகவும் பெரிய மசகு பண்ணி எளிமைப்படுத்தி எல்லாம் தர வேண்டியதில்லை. அவரவரின் நேர்மையான தளத்திலேயே சரியான கருத்துகளை, அபிப்பிராயங்களை, அதற்கான கோட்பாடுகளை முன்வைக்கலாம். பெரிய வாத்தியார் மாதிரி எளிமைப்படுத்திச் சொல்கிறேன் சாமி என்று கையில் குச்சி வைத்துக் கொண்டு தன் ஓட்டைகளை எல்லாம் மறைக்க முயலவேண்டாம். அக்டோபர் இதழ் திருப்தியாக இல்லையென்று சொன்னவர்களெல்லாம் உங்கள் பார்வையில் "மாபெரும் அறிவு ஜீவிகள்" என்கிற கிண்டல் பார்வைக்கே ஆளாகிறார்கள். திருப்தியாக இல்லையென்றால் ஏன் திருப்தியில்லை? அதற்கான அவர்களளவில் வைத்துள்ள காரணங்கள் என்ன? அதற்கான நியாயங்கள் என்ன? இதுபற்றியெல்லாம் சிந்திக்காமல் இதுபற்றிய சரியான பதிலேதும் சொல்லாமல் வெறுமனே, தீவிர எழுத்தின் வாசலில் நுழைய முயலும் வாசகனின் உரிமைகளை மொத்தமாக குத்தகைக்கு எடுத்துவிட்டாற்போல பெரும் போக்காகப் பேசுவதில் எந்தப் பயனும் இருப்பதாகத் தோன்றவில்லை. "சகிப்புத் தன்மையையும், விமர்சனங்களை கருத்துலக நாகரிகத்துடன் எதிர்கொள்ளும் பண்பையும் முற்றாக இழந்து வருகிறோம்" என்று வருகிற வரிகள் 'காலச்சுவடு' க்கு ரொம்ப பொருத்தம். எஸ்.என். நாகராஜன் சந்திப்புக்கு முன் கொடுத்த உரை அவருக்கு மதிப்பளிப்பதாக இல்லை. நட்சத்திரன் செவ்விந்தியன் கவிதைகள் நன்றாயிருக்கின்றன. அதிலும் மீட்சி, ஷெல் குத்துதல் ரொம்பவும். ஜெயமோகனின் பாடலிபுத்திரம் ஒரு இறுக்கமான செறிவான கவிதையைப் படித்த அனுபவத்தைத் தந்தது. (அவரின் கவிதை 'ஒளி வேட்கை' ரொம்ப சுமாராக இருந்தது.) பு.பி. பற்றிய சு.ரா.வின் கட்டுரை விரிவான தளத்தில் இயங்குகிறது. மணிவண்ணனின் நாலு கவிதைகளும் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. உலகத்தமிழ் மாநாடு பற்றிய கட்டுரை சூழலின் அவசியம். காட்டின் உருவம் பற்றிய நூல் விமர்சனப் பகுதி சிறப்பான ஒன்று. இதேபோல் தொடர்ந்து செய்யலாம். குறிப்பாக மணிவண்ணனின் கட்டுரையில் வழக்கமாக தொந்தரவுதரும் அதிகப்படியான ஒரு கூச்சல் இதில் இல்லை.

**நிஷா,** மேட்டுப்பாளையம்.

○

காரசாரமான தலையங்கத்தைப் படித்தேன். சொல்லியிருக்கிற விஷயங்களெல்லாம் நியாயமான கோபங்களே. சற்று மெதுவாகச் சொல்லியிருக்கலாமோ என்று தோன்றிற்று. எஸ். என். நாகராஜன் பேட்டியில் இன்னும் மார்க்சியம் குறித்து ஆழமான கேள்விகள் கேட்கப்பட்டிருக்க வேண்டும் என்றாலும் பேட்டியில் ஊடாடிய அவரது தார்மீகம் என் மனதைத் தொட்டது. திருச்செந்தூர் கிராமவாசியின் குரல் அது. சிறுகதைகள் இரண்டுமே திருப்தியாக இல்லை. சுபமங்களாவில் வந்த வெவ்வேறுவிதமாகச் சொல்லப்பட்ட அந்த மூன்று சரித்திர கதைகளுக்குப் பிறகு ஜெயமோகனுக்கு எந்தக் கதையுமே வாய்க்கவில்லை. பு.பி.யின் புத்தக விமர்சனங்களில் சிலவற்றைத் தவிர்த்திருக்கலாம். கவிதைகளும் திருப்தியாக இல்லை.

**வண்ணநிலவன்,** சென்னை.

○

காலச்சுவடில் சில வரம்புகள் மீறப்பட்டுள்ளது. வைரமுத்து வாசகராக கடிதமெழுதி சிறுபத்திரிகையான காலச்சுவடில் அது இடம்பெறுவது எனக்கு மயக்கத்தைத் தருகிறது.

**மாரப்பன், *சதுக்கப்பூதம்*,** நாமக்கல்.

○



படிப்பகம்

www.padippakam.com

தலையங்கம் அதிகமான சொற்களுடன் வெளிப்படையாகவும் இருந்தமை நன்றாக இருந்தது.

**தேவதேவன்**, தூத்துக்குடி.

○

சி. சிவசேகரம் எழுதியுள்ள டானியலின் மார்க்சியமும் தலித்தியமும் விமர்சனக் கட்டுரை சரியாக எழுதப்பட்டுள்ளது. விஷயத்தை தெளிவாகப் புரியவைக்கும் அவரின் விமர்சன நடை நன்றாக இருந்தது.

**சீனி குலசேகரன்**, சென்னை.

○

நூல் மதிப்புரைகள் திகட்டும் அளவுக்கு உள்ளன. புதுமைப்பித்தனின் பிரசுரமாகாத எழுத்துக்கள் மிகவும் பிடித்திருந்தன. மதிப்புரைகள் இவ்வளவு நேர்த்தியாகச் செய்யமுடியும் என்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. எம்.என். ராய் பற்றி எழுதியுள்ளது அவருடைய ruthless objectivity க்கு உதாரணம். நாகரி லிபி பற்றியும் மற்ற சின்ன சின்ன விஷயங்களிலும் அவருடைய கூர்மை வெளிப் படுகிறது. 'இந்திய அரசியல் சமூக வாழ்வில் மதத்திற்கு அதன் யதாஸ்தானத்தை அளிப்பதனாலேயே சாத்தியம்' என்று மிகச் சரியாகக் கூறும் பு.பி. அடுத்த வரியில் 'அதாவது மதம், ஒரு தனிப்பட்ட நபரின் ஆத்ம திருப்திக்காக ஏற்பட்டது என்பதை முஸ்லீம்களும், ஹிந்துக்களும் உணரும்படி செய்விக்க வேண்டுவது அவசியம்' என்று முடிப்பது எனக்கு ஏற்புடையதாக இல்லை. காலச்சுவடு இதழின் விமர்சனக் கூட்டத்திற்கு தேவைக்கதிகமான பக்கங்கள் தந்துள்ளதாக நினைக்கிறேன். அங்கு பேசிய.வற்றை சுருக்கிப் போட்டிருக்கலாம். பேசியவற்றை அப்படியேத் தருவது நன்றாக இல்லை. ராஜாஜி ஔவையார் படத்தை ரசிக்கவில்லை என்பது ஆறுதலான விஷயம். எஸ்.என். நாகராஜனின் profile மிகவும் நன்றாக வந்துள்ளது.

**ஜி.எஸ்.ஆர். கிருஷ்ணன்**, பெங்களூர்.

○

பிராமண எதிர்ப்புக்கு காரணம் அவர்களிடமுள்ள அதிகாரத்தோரணை என்பது எஸ். என். நாகராஜனின் வாதம். இந்த தோரணை வருவதற்கு காலங்காலமான கேட்கக்கூடாது என்ற பிறரின் காரணமும்கூட. பிற சமுதாயத்தினரும் இப்போது அறிவு பெற இவ்வியக்கம் தீவிரமாகிறது. அறிவுநிலையில் மட்டுமல்ல உழைப்பு நிலையிலும் ஒத்துக்கொள்ளக் கூடியதைத்தான் ஒத்துக் கொள்கிறார்கள். முடியாத நிலையில் ஒருவரை ஒருவர் மீறுகிறார்கள். இம்மீறல் சிலசமயம் நேரடியாகவும் பல சமயம் மறைமுகமாகவும் நிகழ்கிறது. நேரடியான எதிர்ப்பை பெரியாருக்கு முன்னும் பின்னும் பார்க்கிறோம். இப்போது முற்பட்டோரை பிற்பட்டோரும், பிற்பட்டோரை தாழ்த்தப்பட்டோரும் ஒருவருக்கொருவர் மாறி மாறி எதிர்க்கின்றனர். இது ஜாதிக் கலவரங்களின் முக்கிய பின்னணி. நேரடியாக எதிர்க்கவியலாத பட்சத்தில் நாட்டார் கதைகள், பாடல்கள், பழமொழிகள் மூலம் பழித்து திருப்தி அடைகிறார்கள். வைணவ மத நிறுவனம் ஜாதி அமைப்பை உதறியதா? அல்லது வைணவத்தில் தனியன்கள் உதறினார்களா? பெரியார் என்ற தனியன் ஜாதியப் போக்கை நிராகரிக்க முயன்றதால் நாயக்க சமுதாயமே அவ்வாறு இருந்தது என்று சொல்வது எத்துணைப் பொருத்தம்? "தீவிர எழுத்தின் வளாகத்தினுள் எட்டிப் பார்க்கும் இளம் வாசகனை மிரட்ட, பயமுறுத்த, விரட்டியடிக்கத் தேவையான நடவடிக்கைகள் அனைத்தையும் சிறுபத்திரிகையாளர்களும் நவீன பண்டிதர்களும் எடுத்து வருகின்றனர்" - இதுதான் என் விவாதப் பொருள். நீங்கள் எங்கிருந்து கொண்டு கல்லை எறிகிறீர்கள் தெரிகிறதா? ஜே.ஜே. சில குறிப்புகள் அப்படியானால் வந்திருக்க முடியாது. ஒரு புளிய மரத்தின் கதை அன்றைக்கு உத்திப் புதுமை; அவ்வாறு எழுதப் பட்டிருக்காவிட்டால் இலக்கியத்தின் போக்கை நகர்த்த முடியாமல் போய்விடுமே. இன்றைக்கு ஊடகம், வெளி, நிகழ், நிறப்பிரிகை, மேலும் இப்படிச் சிறுபத்திரிகைகள் எத்தனையோ வேறுபாடுகட்கிடையிலும் பொருள் நஷ்டங்களுக்கு இடையிலும் தங்கள் தளங்களில் செயலாற்றுவதை அவநம்பிக்கையோடு கணிக்கக்கூடாது. காலச்சுவடின் விஷயம், நடை, சமூகத்தில் பலருக்கு புதிராகப் படுவதால் காலச்சுவடைத் தேவையில்லை என்று சொல்பவனை என்னவென்று சொல்லமுடியும்? அடுத்து மேலைநாட்டு தத்துவங்கள்? நம் தத்துவத்தை அறிந்து அதன் வழியிலோ மீறியோ இலக்கியத்தில் பயன்படுத்துவதை அரசியலாக்கும் பயமுறுத்தல் இங்கே இருக்கிறது. அடுத்து அமைப்பியல் போன்றவை முதல் வெளிநாட்டுக்காரர்களின் கண்ணாடியோடு பார்க்கப்பட்டாலும் இப்போது நிலைமை மாறி நமக்குள் ஒரு தேடலை துவங்கிவிட்டோமே நாம். தொல்காப்பியத்திலிருந்து இன்றுள்ள இலக்கியங்கள் வரை நம்முடைய பார்வையும் தேடலும் வித்தியாசப் படுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். சிறுபத்திரிகை கருத்துருவங்களில் முரண்கள் வரலாம். சிறுபத்திரிகைகள் மேலேயே கோபம் வரக்கூடாது. ஏனென்றால் நாம் எல்லோரும் சிறு பத்திரிகைக்காரர்களே.

**சிவசு**, பாளையங்கோட்டை.

○

குழு சாராமல் நோக்கம் இருக்காது. காலச்சுவடுக்கு நோக்கமும் உண்டு. சின்ன குழுவும் உண்டு. நேர்காணல் முழுமையாகவும், 'நிகழ்'ன் அவியல் தத்துவத்தின் பின்புலத்தை புரிந்து கொள்ளவும் உதவியது. நட்சத்திரன் செவ்விந்தியன், தண்டபாணி கவிதைகள் பாதித்தன. மணிவண்ணன் கவிதைகளில் ஆழம் குறைவு. 'ஒளி வேட்கை' ஆதிமூலத்தின் அருவ ஓவியங்களின் மன பாதிப்பு என்றதும் சிரிப்பு வந்தது. எம். வேதசகாயகுமாரின் எழுத்துகள் பொதுவாகவே எரிச்சல் உண்டு பண்ணுகின்றன. பா.விசாலத்தின் நாவல் விமர்சனமும் அதையே செய்தது.

**ஜி.எஸ். தயாளன்**, பாளையங்கோட்டை.

○

இந்த இதழின் சிறப்பம்சமே எஸ்.என். நாகராஜனின் நேர்காணல்தான். பழம்பெரும் எழுத்தாளரின் இன்னொரு முகம் அறிய வைத்தமைக்கு மகிழ்ச்சி. பாராட்டுகள். பிராமண எதிர்ப்பு இயக்கத்திற்கு வெகுஜன ஆதரவு கிடைத்தமைக்கு அவர் கூறும் காரணம் புதியது. ஆனால் ஆய்வுக்குரியது. நூல் மதிப்புரைகள் எல்லாமே அருமை. தெளிந்தும் துணிந்தும் எழுதப்பட்டுள்ளன. ஆனால் இவை அளவுக்கு அதிகமாக இருப்பது திகட்டுகின்றது. முக்கியமான ஓரிரண்டு நூல்களை மட்டும் அறிமுகம் செய்யுங்கள் போதும். புதுமைப்பித்தன் பகுதி சில புதிய சாளரங்களைக் காட்டுகிறது. விவாதம் பகுதி தேவையான ஒன்றுதான். இன்னும் சுருக்கமாகச் சொல்லி விவாதிக்க வேண்டும். லஷ்மி மணிவண்ணன் கவிதைகளில் 'மறைந்து கொள்கிற எளக்கான பெண்' மனதில் உறைகிறது. 'நிழலைத் துரத்தியவன்' கதை நல்ல கதையம்சம் பொருந்தியுள்ளது. கூறும்விதம் சாதாரண வாசகனை கவரும்படி இல்லை.

**பாச்சுடர் வளவ. துரையன்**, கடலூர்.

○

போன இதழைவிட இது சிறப்பாக இருக்கிறது. கடிதங்களுக்கு இவ்வளவு முக்கியத்துவம் அளித்திருப்பது மகிழ்ச்சி தருகிறது. ஆனால் வைரமுத்துவில் ஆரம்பித்து சுஜாதாவில் முடித்திருப்பது நெருடுகிறது. வெகுஜன பிரபல்யத்தைப் பெற்றுவிட்ட பலரும் தீவிர இலக்கியவாதிகள் வட்டத்திலும் தாங்கள் பேசப்பட வேண்டும் என்று நினைக்கிறார்கள். எவ்வளவுதான் சிறிய வட்டமாக இருந்தாலும் எவ்வளவு குறைகள் இருந்தாலும் இந்த வட்டம்தான் முக்கியமானது; இதில் அங்கீகாரம் பெறுவதுதான் உண்மையில் பெருமைக்குரியது என்று நினைக்கிறார்கள். அதற்கான முயற்சியின் ஒரு பகுதியாகத்தான் இந்தக் கடிதங்களைப் பார்க்கிறேன். இவற்றைப் பிரசுரித்திருப்பதன் மூலம் நீங்கள் அவர்களை ஊக்கப்படுத்தியிருப்பதாகவே நினைக்கிறேன். அவர்களை முற்றாக ஒதுக்க வேண்டும் என்று நான் கூறுவதாக எடுத்துக்கொள்ள வேண்டாம். அவர்களது கடிதங்களில் ஏதேனும் குறிப்பிடத்தக்க கருத்து வெளிப்பட்டிருந்தால் பிரசுரித்திருக்கலாம். எஸ்.என். நாகராஜனின் பேட்டி நன்றாக இருக்கிறது. ஆனால் காந்தி உட்பட பல அம்சங்கள் பற்றி அவர் எல்லாம் தெரிந்த தொனியுடன் பேசுவதைத்தான் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கேள்விகள் கச்சிதமாக இருக்கின்றன. பேட்டியளிப்பவரைவிட பேட்டி எடுப்பவர்கள் அதிகம் பேசும் இன்றைய சூழலின் பின்னணியில் இது முக்கியமானது. பேட்டிக்கு முன்பு எழுதப்பட்டிருக்கும் குறிப்பு சற்று எரிச்சல்படுத்துகிறது. சிறுகதைகள் இரண்டும் முழுமையாக புரியாத நிலையிலும் மனதை கவர்கின்றன. எழுதப்பட்ட பக்கங்களைத் தாண்டி விரிவடைந்து வாசகன் மனதில் பலவித சலனங்களை எழுப்புவதே இக்கதைகளின் வெற்றி. ஜெயமோகனின் கதை சரித்திரத்தின் இருண்ட அறைகளில் வெளிச்சம் பாய்ச்ச முயல்வதுடன் சரித்திர நிகழ்வுகளை வித்தியாசமான கோணங்களில் பார்க்க வைக்கிறது. யுவன் சந்திரசேகரின் கதை தனிமை என்ற விஷயம் பற்றி நிறைய யோசிக்க வைக்கிறது. இரு கதைகளும் கவித்துவம் ததும்பும் நடையைக் கொண்டிருப்பது கூடுதலான சிறப்பம்சம். விவாதம் பகுதியில் மனுஷ்யபுத்திரன் கட்டுரை மிகவும் சிறப்பாக



படிப்பகம்

www.padippakam.com

இருக்கிறது. அவர் வெளிப்படுத்தியிருக்கும் கருத்துகள், அவற்றுக்கு ஆதரவாய் அவர் முன்வைக்கும் வாதங்கள், அவரது மொழி ஆகிய அனைத்தும் செறிவுடனும் நேர்த்தியுடனும் இருக்கின்றன. கலை வெளிப்பாடு சம்பந்தமான வெற்றுப் பிரகடனங்களின் முகமூடியைக் கிழிக்கும் வலிமை கொண்டதாக அவரது கட்டுரை உள்ளது. ஆனால் 'நிகழ்'-ல் தேவிபாரதி என்ன எழுதினார் என்று காலச்சுவடு வாசகர்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும் என்று சொல்லமுடியாது. கட்டுரையில் ரவிக்குமார் வேசியிடம் செல்வது பற்றி ஒரு குறிப்பு வருகிறது. இது எந்தப் பின்னணியின் எதிர்வினையாகச் சொல்லப்பட்டது என்று தெரியாத பட்சத்தில் மனுஷ்ய புத்திரன் எல்லை மீறுவதாக எடுத்துக்கொள்ள இடமிருக்கிறது. மதிப்புரைகள் நன்றாக இருக்கின்றன. குறிப்பாக மனுஷ்ய புத்திரனின் மதிப்புரையும், காட்டின் உருவம் தொகுப்புக்கு ஜெயமோகனும் லஷ்மி மணிவண்ணனும் எழுதிய மதிப்புரைகளும். ஒரு நூலை இருவர் விமர்சிப்பது புதுமையான முயற்சிதான். மேலும் முக்கியமான சில நூல்களை எடுத்துக் கொண்டு இதுபோல செய்யலாம். தலையங்கம் கூர்மையானதாக இருக்கிறது. ஆனால் கடுமை கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறது. இன்றையச் சூழல் புதிய வாசகனை அடித்துவிரட்டுவதாக இருக்கிறது என்று சொல்லவரும் நீங்கள் அதற்கான உச்சக்கட்ட உதாரணமாக சில நபர்களை பகிரங்கமாக பரிகசித்து தாக்குகிறீர்கள். இதைத் தவிர்த்திருக்கலாம். இவர்களின் ஊள்ளீடற்ற வெற்று ஆரவாரங்கள் அற்பாயுளுடன் மடிந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம். நடையில் கூர்மையும் கச்சிதத் தன்மையும் தெரிகின்றன. புதுமைப்பித்தன் பகுதியை மிகவும் ரசித்துப் படித்தேன். அதற்கு முன்னுரையாக சு. ரா. அளித்த பதில் மிகவும் பொருத்தமானதாக இருக்கிறது. கிருஷ்ணன் நம்பி பற்றிய சு.ரா. வின் கட்டுரையும் நன்றாக இருக்கிறது. நட்புணர்வு தரும் நெருக்கம் சு.ரா. வின் பார்வையின் சமநிலையை குறைக்காமல் இருப்பதையும் உணர முடிகிறது.

அரவிந்தன், சென்னை.

○

சிறுபத்திரிகை அரங்கில் விமர்சனம் என்பதே ஒருவிதமான அதிகாரத்தை கட்டமைப்பதற்கான வழிமுறையாக இருக்கிறது. சிறு பத்திரிகைகளேகூட அப்படியாகி விட்டது. ஒரு புறம் ஆயாசமாகவும் இன்னொருபுறம் சலிப்பாகவும் இருக்கிறது. காலச்சுவடு அதன் துவக்க இதழ்தொட்டே தமிழ்ச் சூழலில் ஆரோக்கியமாகச் செயல்பட்டு வரும் பத்திரிகை. இந்த இரண்டு இதழ்களும் அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றன. காலச்சுவடில் வந்த மனுஷ்ய புத்திரனின் 'விவாதம்' கட்டுரையின் தொனியோடு எனக்கு உடன்பாடில்லை. எனினும் கலை/அனுபவம் சார்ந்து அவர் சொல்லியுள்ள கருத்துகள் முக்கியமானவையே. எஸ். என். நாகராஜனுடனான பேட்டி திருப்தியளிக்கவில்லை. பேட்டி நெடுக எஸ்.என்.இன் குற்ற உணர்வு அல்லது தான் பிராமணன் என்பதால் எழுந்த தாழ்வுச்சிக்கல் செயல்பட்டிருக்கிறது. இவ்வகையான சுய விளக்கங்களுக்கு எஸ். என். போன்றவர்கள் உட்பட வேண்டியிருப்பதற்கு இப்போது நடைபெற்று வரும் ஜாதிய விவாதங்களைக் காரணமாகச் சொல்லலாமா?

**தேவிபாரதி,** புதுவெங்கரையாம்பாளையம்.

○

இன்றைய தமிழ் கவிதைச் சூழலில் நிலவும் தேக்கத்தை பிரதிபலிப்பதாகவே இதழின் கவிதைகள் அமைந்துள்ளன. நவீன தமிழ்ச் சிறுகதை என்ற பெயரில் சொற்கூட்டங்களை அபத்தமாக அடுக்கித் தள்ளுகிற தருணத்தில் 'பாடலிபுத்திரம்' ஆறுதலாகவும் மொழியின் வலிமையை நிலைநிறுத்துவதாகவும் அமைந்துள்ளது. இதற்கு நேர் எதிரான யுவனின் சிறுகதை எந்த மனோபிம்பத்தையும் நிகழ்த்த மறுப்பதாய் உள்ளது. புதுமைப்பித்தனின் தொகுக்கப்படாத படைப்புகளைப் படிக்கும்போது உண்மையான கலைஞனின் காலத்தை மீறியெழுகிற விஸ்வரூபத்தையும் அவனின் சாதாரண எழுத்திலும் காணமுடிகிற அக்கறையையும் தரிசிக்க முடிகிறது. அசோகமித்திரனின் கட்டுரை ஒருவித சிறுகதைத் தன்மையுடன் சுவாரசியமாயிருக்கிறது. இன்றைய தமிழக அரசியலும் சினிமாவும் கொண்டிருக்கிற பிணைப்பின் பின்னணியில் இந்தக் கட்டுரை முக்கியத்துவம் பெறுகிறது. அஷிஸ் நந்தியின் கட்டுரை விரிவான அளவில் விவாதிக்கப்பட வேண்டியது. ஆதிமூலத்தின் அற்புதமான ஓவியத்தில் இதழ் பொலிவு பெற்றுள்ளது.

சூத்ரதாரி, திருப்பூர்.

○

நீங்கள் எழுதிய தலையங்கம் உங்கள் தந்தை எழுதும் தலையங்கம் போல் உள்ளது. உண்மையா?

அழகியசிங்கர், சென்னை.

●

With best compliments from

S. RUKMANGATHAN
Engineers & Contractors
96, Kothavalchavadi Street
Saidapet
Madras 600 015
Phone : 4851333

Latest Fashion


Prompt Delivery

BRILLIANT TAILORS A/C
16/2-65, Upstair
Tower Junction
Nagercoil 629 001



படிப்பகம்

www.padippakam.com



# அந்த முகம்

சுரேஷ்குமார
இந்திரஜித்

'டீ சொன்னியா இல்லியா... இன்னுமா கொண்டாரான்?' என்று அதட்டலாகக் கரியமால் கேட்டுக் கொண்டிருந்தபோது ஒரு பையன் டீயுடன் அறைவாசலில் தோன்றினான். சலாமடித்து அவர் முன் டீயை வைத்து, சலாமடித்துச் சென்றான். டீயை எடுத்து உறிஞ்சினார், கரியமால்.

'கூட்டி வந்துட்டேன்' என்று உள்ளே நுழைந்த 747 சொன்னான். கரியமால் கூர்ந்து பார்த்தார். மலங்க விழித்துக் கொண்டு நின்றிருந்தாள். மூக்குத்தி இரண்டு மூக்கிலும் இருந்தது. தலை முடியை முடிந்திருந்தாள். வயது முப்பதை நெருங்கிக் கொண்டிருக்கும். கறுப்பு நிறம். பிசுக்கேறிய கயிறு கழுத்தில் கிடந்தது. கரியமாலின் கண்கள் அவளின் மேலாடையைத் துளைத்தன. 747-யைப் பார்த்து 'கொண்டு வா அவனை' என்றார்.

கைகள் முதுகுப்புறமாக விலங்கிடப்பட்ட ஒருவனை இழுத்து வந்தனர். அவன் ஜட்டியுடன் இருந்தான். அவனைப் பார்த்தவுடனே வந்திருந்தவள் கதறி அழுதாள். கரியமால் அவளைத் தோளைப் பிடித்துத் தள்ளி சுவரோரத்தில் போய் உட்காருமாறு அதட்டினார். 'கையைக் கட்டி வாயைப் பொத்து' என்றார். அவள் பேசாமலிருந்தாள். 'என்ன... சொன்னா செய்ய மாட்டியா' என்றதும் பயந்து போய் மாணவியைப் போல் கையைக் கட்டி வாய் பொத்தி சுவரோரமாய் உட்கார்ந்தாள்.

கரியமால் 'அடிங்க' என்றார். இருவர் விலங்கிடப்பட்டவனை கெட்ட வார்த்தைகளில் திட்டிக் கொண்டே அடித்தனர். கரியமால் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். அவள் முகத்தில் தெரிந்த பீதி அவருக்குக் கிளர்ச்சியைத் தந்தது. அவள் கண்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது. அவன் அடியினால் ஏற்பட்ட வலியில் கத்திக் கொண்டிருந்தான். திடீரென்று அவள் எழுந்து கதறிக் கொண்டே கரியமாலின் காலில் விழுந்தாள். அவள் வாய் 'அடிக்காதீங்க சாமி' என்று சொல்லிக் கொண்டிருந்தது. அவள் கைகள், அவர் பாதங்களைப் பிடித்திருந்தன. கரியமால் 'நிறுத்து' என்றார்.

'நாங்க அடிக்காம பின்னே நீ அடிக்கனுங்கிறியா? அந்த பய மூஞ்சியிலே வெளக்குமாத்தாலே அடி. அவன் செஞ்சதுக்கு கொன்னு காணாமப் போட்டுருக்கனும்' என்றார். அடித்தவர்களைப் போகச் சொன்னார். அவளைப் பார்த்து 'பொண்டாட்டி கையாலே அடி வாங்கினாத் தான் திருந்துவான்' என்றார். அவன் தரையில் முனகிக் கொண்டு கிடந்தான். அவர் எழுந்து சென்று விலங்கை அவிழ்த்தார். அவன் தடுமாறியபடி எழுந்து நின்றான்.

'இவன் பொண்டாட்டி கையாலே அடி வாங்கினாத் தான் திருந்துவான்' என்றார், மீண்டும். அவளைப் பார்த்து 'இங்கே வா' என்றார். அவள் குழம்பியபடி பயந்து கொண்டே வந்தாள். நாற்காலியில் சாய்த்து வைத்திருந்த லத்தியை எடுத்து நீட்டினார். 'அவனுக்கு அடி கொடு'என்றார். அவள் தயங்கி, புரியாதவளாக நின்று கொண்டிருந்தாள்.

'ஒம் புருஷனைக் கூட்டிட்டு போகணும்னு நெனைக்கிறியா இல்லியா?' என்றார். அவள் 'ஆமாம்' என்று தலையசைத்தாள். 'அப்ப அடிகொடு' என்று அதட்டினார். 'நான் எப்படி சாமி.....' என்று ஆரம்பித்தவள் அவர் முகத்தைக் கண்டு பயந்து லத்தியை வாங்கிக் கொண்டாள்.

'இப்படியா அடிக்கிறது. ஓங்கி அடி... இன்னும் ஓங்கி... ம் அப்படித்தான். இன்னும் ஓங்கி...' என்றார், கரியமால். அவன் கைகளினால் தன்னிச்சையாக தடுக்க முயன்று கொண்டிருக்க அவள் அடித்துக் கொண்டிருந்தாள். கரியமாலின் கண்கள் இக்காட்சியைக் கண்டு மின்னியது.

கரியமால் ஆட்டோவில் ஏறி ஜெயந்தி நகருக்கு போகச்சொன்னார். அங்கு அம்பாசடர் கார் நிறுத்தப்பட்டிருந்த ஒரு வீட்டின் அருகே ஆட்டோவை நிறுத்தச் சொல்லி வீட்டினுள் நுழைந்தார். வேலையாள் அவரை மரியாதையுடன் உட்காரச் சொல்லி விட்டு உள்ளே சென்றான். சற்று நேரத்தில் ஆஜானுபாகுவான ஒருவர் தோன்றி கரியமாலை வரவேற்றார்.

'நானே வரணும்னு இருந்தேன். ஊர்லேயிருந்து இன்னைக்கி காலைலேதான் வந்தேன்' என்றார்.

'அதனாலென்ன. ஒங்கள்ட்டேதான் எப்பவும் வாங்கிக்கலாமே' என்றார் கரியமால்.

வேலையாள் குளிர்பானம் கொண்டு வந்து கொடுத்தான். குளிர்பானத்தை உறிஞ்சிக் கொண்டே 'பார்ட்டி வச்சு நாளாச்சு' என்றார், கரியமால். 'ஒண்ணும் தாக்கல் இல்லேயேன்னு பார்த்தேன்' என்றார், வீட்டிலிருந்தவர். 'நாளக்கி பிக்ஸ் பண்ணினா நல்லது' என்றார் கரியமால். 'நாளைக்கா? யார் இருக்கான்னு தெரியலை, ஸார் கோபிச்சிக்கக் கூடாது. சிகரெட்ல சுடறதா சொல்லுதுகள்......' என்று தயங்கினார். 'அது ஏதோ போதைலே ......சும்மா ஜாலிக்கி ஏதாவது நடந்திருக்கும். அது பார்த்துக்கலாம்' என்றார் கரியமால். 'நாளக்கி சிரமப்படும் போல இருக்கே'என்றார் வீட்டிலிருந்தவர். 'ஒங்களாலே முடியாததா ...... நீங்க எவ்வளவு பெரிய ஆள்' என்றார், கரியமால். 'சரி .. நாளக்கி சாயந்திரம் ஹோட்டலுக்கு வந்திருங்க, ரிசப்ஷனிலே சொல்லியிரேன். பார்த்து நடந்துக்குங்க' என்றார், வீட்டிலிருந்தவர். கரியமால் எழுந்தார். 'கொஞ்சம் இருங்க. கவர் வாங்கிக்கிறீங்களா?' என்றார் வீட்டிலிருந்தவர். 'நாளக்கி ரிசப்சனிலே வாங்கிக்கிறேனே' என்று கரியமால் விடை பெற்றுக்கொண்டார்.

○

வீட்டுக் கதவை வேலைக்காரச் சிறுமிதான் திறந்தாள். அவர் உள்ளே நுழைந்ததும் படுக்கையிலிருந்து எழுந்து அவர் மனைவி வந்தாள். அவள் ஆடைகள், தலை முடி கலைந்த தோற்றத்துடன் இருந்தாள். அவள் நடந்து வந்த விதத்திலே தளுக்கு இருப்பதாகத் தோன்றி அவருக்கு எரிச்சல் ஏற்பட்டது. 'சாப்பிடுறீங்களா' என்றாள், அவள். அவர் '...ம்...ம்' என்றபடி அறைக்குள் ஆடை மாற்றிக் கொள்ளச் சென்றார்.

கரியமாலின் முதல் மனைவி திருமணமாகி சில காலத்திலேயே அவள் வீட்டிற்குச் சென்றுவிட்டாள். அதற்குப் பிறகு சுபத்திராவை திருமணம் செய்து கொண்டார். அவளிடம் அவருக்குத் தெரிந்த தளுக்குதான் அவரைப் பாடாய்ப்படுத்தியது. இப்போது அவருக்கு சமயங்களில் எரிச்சல் ஏற்படுகிறது. சுபத்திராவிடம் அவர், ஆசைக்கிழத்தியுடன் கொண்டிருக்கும் மனோநிலையைக் கொண்டிருந்தார். அவருக்குக் குழந்தைகள் இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

அவளை அவர் குடிக்கப் பழக்கியிருந்தார். போதையில் அவளுடைய வேட்கை வெளிப்படும் ஆவேசம் அவருக்குப் பிடித்திருந்தது. சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் டேபிளருகே நின்று கொண்டிருந்த அவளைப் பார்த்தார். அவளின் தேகம் அவருக்குக் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. அவளுடைய வேட்கைக்கு உட்பட வேண்டும் என்று நினைத்தார். அவள் உபயோகித்திருந்த வாசனைத் திரவியம் அவர் நாசியைத் தாக்கிக் கொண்டிருந்தது. சாப்பிட்டு முடித்து எழுந்து கை கழுவினார்.

o

கரியமாலின் உடல் சக்தியிழந்து கிடந்தது. வலது கையைத் தூக்க முயன்றார். முடியவில்லை. உடல் அவர் இச்சைக்கு உட்படாது கிடக்க, அதன்மேல் பெண்கள் சிறு உருவத்துடன் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர். பெரும்பாலான பெண்கள் மூக்குத்தி ஒளிரும் கிராமப்பெண்களாக இருந்தனர். வலது உள்ளங்கையில் ஒரு பெண் விறகுக்கட்டை இறக்கி வைத்துவிட்டு வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தாள். இழுத்துச்செருகிய சேலைக் கட்டுடன் ஒரு பெண் அவர் தோள்பட்டையில் துணி துவைத்துக் கொண்டிருந்தாள். அவர் காலில் ஒரு பெண் படுத்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

பார்க்க வருபவர்களிடம் சுபத்திரா பேசும் பாவனைகளையும், அவள் அணியும் ஆடைகளையும் அவர் பார்வை ஊடுருவிக் கொண்டிருக்க அவள் தொலைதூரம் சென்று கொண்டிருந்தாள். கரியமாலாக அவர் உருவாகிய வரையிலான ரூபங்கள் வரிசைகளை மறந்து தோன்றி மறைந்து கொண்டிருக்க மருத்துவர் ஒருவர் இடையிடையே வந்து கொண்டிருந்தார்.

சுபத்திரா மேலாடைகளற்று தோன்றினாள். அவள் மார்புகளில் சிகரெட் நெருப்பினால் சுட்ட வடுக்கள் இருந்தன.சிகரெட் புகைத்துக் கொண்டிருக்கும் வேசிகள் தோன்றி அவர் முகத்தில் புகையை ஊதினர். சிகரெட்களினால் அவர் நெஞ்சைச் சுட வந்தனர். சில பெண்கள் தோன்றுவதைக் கண்டதும் அவர் ஓட்டமெடுத்தார். அவர்கள் துரத்திக் கொண்டிருந்தனர். அவர் சாலையில் வேகமாக ஓடிக்கொண்டிருந்தார். கேட்டைத் தாண்டி ஒரு வீட்டிற்குள் புகுந்து தாழிட்டுக் கொண்டார். இதயத்துடிப்பு அதிகரித்துக் கொண்டிருந்தது. வீட்டிற்குள் ஒருவருமே தென்படவில்லை. 'வீட்ல யாரு ?' என்று குரல் கொடுத்தவாறு ஹாலில் நின்றார். ஒரு அறைக்கதவைத் திறந்து நுழைந்தபோது அவருக்குப் பின் தோற்றம் தெரிய ஜன்னல் வழியாகப் பார்த்தவாறு ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். அவள் திரும்பினால், அதிர்ச்சியூட்டும்படியாக ஏதாவது நடக்கும் என்று பயந்து அறையைவிட்டு வெளியேற முயன்றார். அறைக்கதவு தானாகவே மூடிக்கொண்டது. அவள் திரும்பும்போது தனக்கு அழிவு ஏற்பட்டுவிடும் என்று அவருக்குத் தோன்றியது.

மூச்சு முட்டுவதுபோல் இருந்தது. தொண்டையில் ஏதோ அடைப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. பெண்ணின் பின்தோற்றம் தெரிந்தது. அவர் எதிர்பார்த்த அந்த முகம் கோரைப்பற்களுடன் பயங்கரமாக மாறியிருக்கும் என்று தோன்றியது. அவள் திரும்பும்போது தனக்கு மரணம் சம்பவிப்பதை யாராலும் தடுக்கமுடியாது என்று தோன்றியது. அவர் 'திரும்பாதே' என்று கத்த முயன்றார். கத்துவதாக நினைத்துக்கொண்டிருந்தார். ஆனால் குரல் வரவில்லை. குரல் வராமலேயே அவர் கத்திக் கொண்டிருந்தார்.

●

## வரப்பெற்றோம்

**நேற்று வாழ்ந்தவர்கள்** (சிறுகதைத் தொகுப்பு); ஆசிரியர்: **பாவண்ணன்**; பக் 208; விலை ரூ. 26

**சொல்லப்படாத நிஜங்கள்** (சிறுகதைத் தொகுப்பு); ஆசிரியர்: **சா.கந்தசாமி**; பக் 238; விலை ரூ. 38

**வெள்ளம்** (சிறுகதைத் தொகுப்பு); ஆசிரியர்: **நீல. பத்மநாபன்**; பக் 150; விலை ரூ. 25

(வெளியீடு : **Kaavya, 16, 17th E Cross, Indiranagar II Stage, Bangalore 38)**

**அச்சடித்த காகிதங்களின் தொகுப்பு** (சிறுகதைத் தொகுப்பு): ஆசிரியர்: மீனாதாஸ்; பக் 144; விலை ரூ. 23

**பட்டமரத்தில் வடிந்த பால்** (நாவல்); ஆசிரியர்: **கர்னன்**; பக் **140+XII** ; விலை ரூ. 24

**எண்பதுகளில் தமிழ்நாவல்கள்**; ஆசிரியர்: **ஞானி**; பக் **112**; விலை ரூ. 16

(வெளியீடு: **விஜயா பதிப்பகம், 20** ராஜவீதி, **கோயம்புத்தூர்-1)**

**திருக்குறளும் புதுமைக்கருத்துகளும்**; ஆசிரியர்: **அ.கி. பரந்தாமனார்**; பக் IV + **96**; விலை ரூ. 15

**தமிழ் இலக்கியம் கற்க**; ஆசிரியர்: **அ.கி. பரந்தாமனார்**; பக்: IV+ **84**; விலை ரூ. 13.50

(வெளியீடு: அல்லி நிலையம், **19** முத்து முதலி தெரு, வேப்பேரி, **சென்னை-7)**

**புல்லாங்குழல்** (கவிதைத் தொகுப்பு) ; ஆசிரியர் : **பாவலர் வடிவேலன்**; பக் **142**; விலை ரூ. 25

**செங்காற்று** (கவிதைத் தொகுப்பு); ஆசிரியர்: **கவிஞர் வடிவேலன்**: பக் **112**: விலை ரூ. 17.50.

**திசைகளில் வீசிய ஓசைகள்** (கவிதைத் தொகுப்பு); ஆசிரியர்: **கவிஞர் வடிவேலன்**; பக்.**124**; விலை ரூ. 20

**அரங்கங்களின் அணிவகுப்புகள்** (கவிதைத் தொகுப்பு); ஆசிரியர்: **கவிஞர் வடிவேலன்**; பக் **99+IV** விலை ரூ.16

**குட்டி** (சிறுகதைத் தொகுப்பு): ஆசிரியர்: **பேரோடு வடிவேல் தூரன்**; பக்: **110**; விலை ரூ. 17.50

(வெளியீடு: வள்ளி புத்தக நிலையம், **8ஏ**, சுந்தரேசுவரர் கோயில் தெரு, இராயப்பேட்டை, **சென்னை-14)**

**தென்றலைத் தேடி** (நாவல்) ; ஆசிரியர்: **இரணியல் கலைத்தோழன்**: வெளியீடு: கலை நிலையம், மாங்குழி, நெய்யூர் **629 802**, குமரி மாவட்டம்; பக் **120**; விலை ரூ.13

**கடற்கரைக்குப் போகும் பாதை** (சிறுகதைத் தொகுப்பு) ஆசிரியர்: **திலகவதி**; வெளியீடு: நர்மதா பதிப்பகம், **16/ 7**, ராஜாபாதர் தெரு, பக் **IV+204**; விலை ரூ.32

**இலக்கிய மலர்** (நவீன இலக்கியத் தொகுப்பு); வெளியீடு: தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், திருப்பரங்குன்றம் கிளை, 'வேடந்தாங்கல்' **276**, ஜி.எஸ்.டி.ரோடு, திருப்பரங்குன்றம், மதுரை - **625 005**; பக் **128**; விலை ரூ. 20

**பாம்புச் சுவடுகள்** (கவிதைத் தொகுப்பு); ஆசிரியர்: **எஸ். எல். நரசிம்மன்**; வெளியீடு: சக்தி பதிப்பகம், **13** வன்னியர் **2ஆம்** தெரு, சூளைமேடு, **சென்னை- 94**; பக் **112**; விலை ரூ.15



படிப்பகம்

www.padippakam.com

**சந்திரகிரி ஆற்றங்கரையில் - சாரா அபுபக்கர்**
தமிழில் : **தி.சு. சதாசிவம்** பக்கம் 128
விலை ரூ.**30**. வெளியீடு : ஸ்நேகா,
**347**, டி.டி.கே. சாலை (முதல்தளம்)
இராயப்பேட்டை, சென்னை **600 014.**

ஆண்வழிச் சமூகம் எப்போதும் நல்லிணக்கத்தோடும் நன்றியுணர்வோடும் இருப்பது மதத்தின்பால்தான். மதத்தின் அடித்தளத்தில் ஆணாதிக்க சமூகம் கட்டியெழுப்பும் கட்டிடம் உறுதியானது. மனிதர் மனிதரை அடிமைக்கொள்ள ஆயுதங்களை விட மனோ பாவங்களை ஊடுருவி எளிதில் வெற்றிகொள்ளலாம். மதம் பெண்ணின் மனோபாவத்தில் தீவிரமாக ஊடுருவுகிறது. ஆணைவிட குறைவான அறிவாற்றலும் உடலாற்றலும் கொண்டவளாக, அவனது விலா எலும்பிலிருந்து படைக்கப் பட்டவளாக அவளது இருப்பை வெட்டிக் குறுக்குகிறது.

எம்பெண்களின் பயணம் எப்போதும் ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டிற்குள் முடக்கப்பட்டிருக்கிறது. வாழ்வுக்கும் சுதந்திரத்திற்குமான தீவிர பிணைப்பை அவள் இழந்து விடுவதால் பிரபஞ்சத்தின் இருண்ட சுவர்களுக்குள் வசிக்க நேர்கிறது. ஒரேயொருமுறை கிடைக்கிற மனித வாழ்வு என்றைக்கும் குறையாத தனிமையாலும் துக்கத்தாலும் நிறைந்து விடுகிறது.

இஸ்லாமிய மதப் பிரச்சாரகர்கள், மற்றெந்த மதத்தையும்விட இஸ்லாமே பெண்களுக்கு அதிகமான சலுகைகளையும் உரிமைகளையும் வழங்குகிறது என்று வழக்காடுவதை சர்வசாதாரணமாக கேட்கலாம். ஒப்பீட்டளவில் மதங்களிடையே பெண்களின் மீதான நிபந்தனைகளில் சிற்சில வித்தியாசங்கள் இருக்கலாம். ஆனால் ஒரு பெண்ணின் நிகழ்கால வாழ்வனுபவம் என்ற நோக்கில் ஏனைய மதங்களைப் போலவே இஸ்லாமும் பெண்ணின் மீது வன்முறையை செலுத்துகிறது. சில அம்சங்களில் அவ்வன்முறை பிரத்யேகமானதாகவும் தீவிரமானதாகவும் வெளிப்படுகிறது.

சாரா அபுபக்கரின் இந்த குறுநாவல் 'முத்தலாக்' எனப்படும் இஸ்லாமிய விவாக இரத்துமுறை, அது குரானில் விதிக்கப்பட்டுள்ள விதத்திற்கும் நடைமுறையில் உள்ள விதத்திற்குமான முரண்பாடு, தலாக்கை ஏகபோக உரிமையாக கொண்டுள்ள ஆண் தலாக்கை திரும்பப் பெற்று மீண்டும் மனைவியோடு வாழ வேண்டுமெனில் அவள் வேறொருவருக்கு ஒரு நாள் மணம் செய்விக்கப்பட்டு உடலுறவு கொண்டு அவரிடமிருந்து மணவிலக்கு பெற்று பழைய கணவனை சேர வேண்டும் என்கிற குரூரவிதி ஆகியவற்றால் பின்னப்பட்டிருக்கிறது. தலாக் ஆணுக்கு மட்டுமான விசேஷ அதிகாரமாகவும் ஆயுதமாகவும் இருப்பதையும் அதனால் பெண் சந்திக்க வேண்டியிருக்கும் ஒட்டுமொத்த பாதுகாப்பின்மையையும் அவமானத்தையும் இக்குறுநாவல் சித்தரிக்கிறது. 'தலாக்' என்ற உரிமையின் வழியே ஆண்களின் முட்டாள்தனமான குரூரமான செயல்கள் ஒரு பெண்ணின் வாழ்வை எந்த அளவு சிதைக்க முடியும் என்பதை சாரா தெளிவாக முன் வைக்கிறார். தலாக் உரிமை ஆணைப் போலவே பெண்ணுக்கும் வழங்கப்பட்டிருப்பின் உண்மையில் அது மணவிலக்கு தொடர்பான மிக இலகுவான, முற்போக்கான சட்டமாக இருந்திருக்கக் கூடும். உரிமை ஒருதலைப்பட்சமாக அமையும்போதே மனித நாகரிகம் அபாயத்திற்குள்ளாகிறது.

நாதிராவின் உலகம் பிடிமானங்களற்று அந்தரத்தில் சுழலும் விநோத உலகம். தனது வாழ்வை தீர்மானிக்கும் அந்தரங்கமும் அடிப்படை உரிமையும் அற்றதொரு உலகம். அவளுடைய அந்தரங்கத்தின் மீது யார் வேண்டுமானாலும் ஆட்சி செய்யலாம். நாதிரா தன்னுள் வெள்ளமென மன ஓட்டத்தை தேக்கி வைத்துக் கொண்டு வரையறைகளுக்குள் உழல்பவள். எல்லாவித சமரசங்களுக்கும் உட்பட்டு தனது இழந்து போன வாழ்வை அடைய போராடுபவள். ஆணாதிக்க மதவழிச் சமூகத்தின் விதிகளுக்காக வெறும் உடலாக மாற்றப்பட்டவள்.

அவளது முதல் கனவும் முடிவான கனவும் கணவனோடு வாழ்வது பற்றியது. இறுதியில் இன்னொருவனோடு ஒருநாள் திருமணம் செய்விக்கப்பட்டு, உறவுகொண்டு, தலாக் பெற்று தன் கணவனை அடைய வேண்டும் என்கிற சூழலுக்குள் தள்ளப்பட்ட நாதிரா தற்கொலை செய்து கொள்கிறாள். இந்தத் தற்கொலை தர்க்க ரீதியானதாகவும், எதிர்ப்புணர்ச்சியின் வெளிப்பாடாகவும் அமைகிறது. அதே சமயம் நாதிராவின் தற்கொலை இன்னொருவனுடன் உறவு கொள்வது குறித்த அருவெருப்பினால் மட்டும் நிகழ்வதாக அல்லாமல் தந்தை, கணவன், மற்றும் கலாச்சார சூழல் ஆகியவற்றால் விளைந்த ஒட்டு மொத்த அநீதிக்கு எதிர்ப்பாக விளங்கும்படி நாவலின் தளம் விரிவடையவில்லை.

நாவலில் வரும் நான்கு பெண்களுமே அவரவர் இடத்தில் இருக்கின்றனர். எந்த முடிவும் எடுக்க முடியாமல் கண்ணீரோடு அடுப்படியில் தங்கி நிற்கின்றனர். ஆனால் ஆண்கள் அத்தனைபேரும் முடிவுகளை எடுக்கவும் செயல்படுத்தவும் வாழ்வின் போக்குகளை நிர்ணயிக்கவும் செய்கின்றனர். ஒவ்வொரு ஆணும் பெண்ணுக்கான காரியங்களை ஆற்றுகிறான். இது நாவலின் பிரதானமான அம்சம்.

சந்திரகிரி ஆறு பெண்ணின் அனைத்து தடைகளுக்குமான ஒரு குறியீடு. தன் கணவனை அடைய நாதிராவுக்கு தடையாக இருக்கும் இந்த ஆறு உண்மையில் ஏனைய சமூகங்களை சேர்ந்த பெண்களுக்கு கிடைக்கக் கூடிய சிறு சிறு சுதந்திரங்கள் கூட ஒரு முஸ்லீம் பெண்ணுக்கு பெருங்கனவாக இருப்பதையே குறிக்கிறது. ஒரு ஆணின் துணையின்றி இந்த ஆறு அவளால் கடக்கப்பட முடியாததாகவே இருக்கிறது.

முன்னுரை என்ற பெயரில் கதையை திருப்பிச் சொல்லும் கெட்ட பழக்கத்திற்கு விதி விலக்கில்லாத தோப்பில் முகம்மது மீரானின் முன்னுரை குறிப்பிடுவது போல இது சாதாரண கதையில்லை. ஒரு இஸ்லாமிய பெண்ணிடமிருந்து வந்திருக்கும் வலுவான எதிர்ப்புக் குரல். ஆத்திரமோ, உணர்ச்சிவயப்பட்ட கூக்குரலோ இன்றி நிதானமான தொனியில் வந்திருக்கும் கண்டனம். மத அடிப்படைவாதம் மாற்று அபிப்ராயங்களை எதிர்கொள்ளும் விதத்தை கவனிக்கும் போது மிகத் துணிச்சல் உள்ளவர்களிடமிருந்தே இது போன்ற குரல்கள் சாத்தியம்.

ஒரு நாவலுக்கான பன்முகத்தளமோ மொழியின் நுட்பமோ வாய்க்காத, நமது மரபான 'கதை சொல்லும்' முறையை சார்ந்த இப்படைப்பு எப்போதும் 'கதை சொல்லி'களோடு வாழ்ந்து பழக்கப்பட்ட நமக்கு அலுப்பு எதையும் ஏற்படுத்தவில்லை. அதன் வசம் அது கொண்டிருக்கும் தார்மீக நியாயத்தில் அமைந்திருக்கிறது.

**சல்மா**


**கிழக்கு**

**நவீன கலை இலக்கிய புத்தக விற்பனை மையம்**

**நூல்கள் வெளியிடுவோர் மற்றும் விற்பனையாளர்கள்.**

* உலகளாவிய தமிழ் கலாச்சாரத் தொடர்பு மையமாக விளங்கும் எம் புத்தக மையத்தில் அனைத்து நவீன கலை - இலக்கிய நூல்கள், நுண் அரசியல் கலாச்சார வெளியீடுகள், மொழிபெயர்ப்பு நூல்கள், புலம்பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள் யாவும் கிடைக்கும்.
* புதிய நூல்கள் வெளியிடுவதற்கும்/ விற்பனை உரிமை ஏற்பதற்கும் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
* படைப்பாளிகள், சிறு பத்திரிகைகள் தங்கள் வெளியீடுகளை குறைந்தது ஐந்து பிரதிகள் அனுப்பினால் விற்பனை செய்து உதவுவோம்.

**தொடர்புக்கு**

**கிழக்கு,** தபால் பெட்டி எண் 9, 40-எம், பூம்புகார் பில்டிங் (முதல் தளம்),
திருத்துறைப்பூண்டி 614 713




படிப்பகம்

www.padippakam.com

# காந்தியும் கோட்ஸேயும் இந்தியாவின் எதிர்காலமும்

அஷிஸ் நந்தி

*காந்தி பிறந்து 125 வருடங்கள் ஆகின்றன. இந்த வருடம் ஜனவரி 30 தேதியுடன் அவர் கொல்லப்பட்டு 47 வருடங்கள் முடிந்துவிட்டன. இந்து நலன்களின் எதிரியாக அவரைக் கண்ட ஒருவனால் அவர் கொலை செய்யப்பட்டார். நாதுராம் கோட்சேயை தன்னளவில் இயக்கிய ஒரு வெறும் வெறியன் என்று ஒதுக்கிவிடுவது யதார்த்தத்திற்குப் பிறழ்வாக அமையும் என்கிறார் அஷிஸ் நந்தி. கோட்சே தனியன் அல்லன். மாறாக காந்தியை, தன குறிக்கோள்களை அடைய ஒரு இடையூறாகக் கண்ட, நவீன யுகத்தின் பிரதிநிதியே என்கிறார் அவர்.*

*இன்று நம் நிலை இந்தியப் பிரிவினை காலத்திய நிலையுடன் ஒப்புமையுடையது. மதவாதம் தலை விரித்தாடிக்கொண்டிருக்கிறது. இன்று காந்தியின் மரணம் தந்துள்ள பாடங்களை நினைவுகூாவது அறிவார்த்தமானது.*

ஒருவர் தன் வாழ்வ மூலம் மட்டுமன்றி அவரது மரணத்தின் மூலமும் அறியப் படுகிறார். தனது வாழ்வே தனது செய்தி என்று ஒருமுறை குறிப்பிட்ட காந்தி, இத்தகைய செய்தி பொருந்திய அரசியல் **(Politics of Message)** தன் மரணத்தில் இன்னும் வன்மை யாக வெளிப்படப் போகிறது என்றும் குறிப்பிட்டிருக்க முடியும். வாழ்வின் தரத்தை நிலைநிறுத்துவது பற்றிய பிரக்ஞை உருவாகிவந்த காலகட்டத்தில், மரணத்தின் தரத்தையும் காந்தி உறுதிப்படுத்தினார்.

1948 ஜனவரி 30, இடம் புதுதில்லி. கண்ணியமான தோற்றம் கொண்ட, காக்கி உடையணிந்திருந்த, நல்ல நிறமுள்ள, நாதுராம் கோட்ஸே என்ற பிராமணன், மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியை மிக அருகிலிருந்து மூன்று முறைச் சுட்டான். அரை வேட்டி, மேல்துண்டுடன் பிரார்த்தனைக் கூட்டத்திற்காக வந்து கொண்டிருந்த காந்தி, 'ஹே ராம்' என்று உச்சரித்தபடியே சரிந்து, புதிதாக சுதந்திரம் பெற்ற இந்தியாவின் அந்தக் கொலை யுதிர்காலத்தில் கொல்லப்பட்ட பலரைப்போலவே மரண மடைந்தார்.

கோட்ஸே காந்தியை கொன்றபோது, காந்தியே தான் கொலை செய்யப்பட ஆயத்தமாக இருந்தார். உண்மையிலேயே மகாத்மா என்றால், படுக்கையாகக் கிடந்து தான் மரணமடையக்கூடாது, ஒரு கொலை யாளியின் கரத்தில் ராமநாமத்தை உச்சரித்தபடியே இறக்க வேண்டும் என்று அவர் பலமுறைக் கூறியிருந்தார். 125 வருடங்கள் வாழ வேண்டும் என்று முன்பு அவர் விரும்பினார்; ஆனால், 79 வயதிலேயே கடுமையான வியாதிகளும் மன உளைச்சல்களினால் ஏற்பட்டிருந்த உடல் உபாதைகளும் அவரை நோயாளியாக்கியிருந்தன. கொடூரமான கனவுகளும், இந்தியப் பிரிவினை ஏற்படுத்தியிருந்த பயங்கரமான குற்றவுணர்ச்சியும் அவரைத் தளர்ச்சியுறச் செய்திருந்தன. சீக்கிரமாகவே இறந்துவிட மாட்டோமா என்று அவர் ஏங்கினார்.

அன்றைய சமூகமும் அதைத்தான் விரும்பியது. காந்தி இறுதியாக உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த போது, 'காந்தி சாகட்டும்' என்ற கோஷம் தில்லியில் பரவலாகக் கேட்டது. இந்தியா மீதும் இந்துக்கள் மீதும் அவர் போதிய அக்கறை கொள்ளவில்லை என்ற எண்ணம் கொண்டிருந்த பலரிடமிருந்து அவரைத் தாக்கி நிறையக் கடிதங்கள் வந்து குவிந்தன. இந்த எதிர்ப்பு காந்திக்குப் புதிதல்ல; ஆனால், இம்முறை இவற்றில் புதிய முனைப்பும் வெறியும் இருந்தன. அவரது தினசரி பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது. வந்தவர்களில் பலரும்





படிப்பகம்

www.padippakam.com

ஒப்புக்காகத்தான் வந்து கொண்டிருந்தார்கள் என்று காந்தியின் சமகாலத்தவர் ஒருவர் குறிப்பிடுகிறார். புகழ் வாய்ந்த அவரது சீடர்களோ, புதிதாக சுதந்திரம் பெற்ற நாட்டை அரசாள்வதில் மும்முரமாக இருந்தனர்.

இவர்களில் சிலருக்கு அரசியலில் தார்மீக சிந்தையை புகுத்த முயன்ற இந்தக் கிழவர் எரிச்சலூட்டுபவராக இருந்தார் என்றும் தெரிகிறது. வன்முறையை வன்முறையாலேயே ஒடுக்கிப் பழகிப்போன காவல்துறைக்கோ 'முஸ்லீம்களின் நேசனா'ன காந்தி அதிகம் எரிச்சல் தருபவராக இருந்தார். காந்தி கொலைத் திட்டம் பற்றிய தெளிவான தகவல்கள் அவர்களுக்கு கிடைத்திருந்த போதிலும் தொடர்ந்து மேலும் விசாரணை செய்யவோ, தக்க முன் நடவடிக்கைகள் எடுக்கவோ அவர்கள் முயலவில்லை. அதிகாரத்திலிருந்தவர்களுக்கு இந்தக் கொலைத் திட்டம் பற்றிய தகவல் சரியான நேரத்தில் எட்டியிருந்தும் அவர்கள் அலட்சியமாக இருந்தனர்.

ஆக, கோட்ஸே தனியாகச் செயல்பட்டான் என்று கூறமுடியாது. ஒரு சிறிய, பரவலாக அறியப்படாத, ரகசியமாகச் செயல்படும் சதிகாரக் கும்பலைச் சேர்ந்தவனும் அல்ல அவன். அவனது சொந்த ஊரில்தான் காந்தியைக் கொல்வதற்காக இரண்டு முறை முயற்சிகள் நடந்தன. காந்திக்கு எதிரான உணர்ச்சிகள் உச்சத்திலிருந்த ஒரு சமூகப் பிரிவைச் சேர்ந்தவன் அவன். நகர்ப்புற, நவீனமான, உயர்சாதியைச் சேர்ந்த, மேற்கத்திய வயப்பட்ட, தனியான சலுகைகள் தங்களுக்கு வேண்டும் என்ற எண்ணம் கொண்ட மத்திய தர வர்க்கப் பிரிவுதான் அது. இந்த வர்க்கந்தான் இந்தியப் பொதுவாழ்வை அன்று ஆக்கிரமித்து வந்தது. கோட்ஸேயின் வழக்கில் ஆஜரான நீதிபதிகளில் ஒருவரான ஜி.டி. கோஸ்லா, அவனது வாக்குமூலத்தை கேட்க நீதிமன்றத்தில் குழுமியிருந்தவர்களின் உணர்ச்சியை இவ்வாறு குறிப்பிடுகிறார்:

> பார்வையாளர்கள் மிகவும் பாதிப்படைந்திருந்தனர். பெண்களில் பலர் கண்கலங்கினர். ஆண்கள் இருமியபடி கைக்குட்டைகளை எடுக்கத் துவங்கினர். இவர்களை மட்டும் இந்த வழக்கில் தீர்ப்புச் சொல்லக் கேட்டிருந்தால், அவன் 'குற்றமற்றவன்' என்று பெரும்பான்மையினரால் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பான்.

பார்த்த வேறு சிலரும் இதே போன்ற அனுபவங்களையேக் குறிப்பிட்டிருக்கின்றனர். கோட்ஸேயின் கடைசி வாக்குமூலம் பரவலான மதிப்பு பெற்றுவிடும் என்ற பயத்தால்தான் இந்திய அரசு அதன் பிரசுரத்தைத் தடைசெய்துவிட்டது. கோட்ஸேயைப் போன்றவர்கள் பெரும்பான்மையினர், காந்தியைப் போன்றவர்கள் சிறுபான்மையினர் என்பதை எப்படியோ அரசு உணர்ந்து கொண்டது.

இந்த கோட்ஸே எப்படிப்பட்டவன்? எந்தப் பாவத்துக்கும் அஞ்சாதவனாகவோ, புத்தி சுவாதீனமற்ற குருட்டு நம்பிக்கைக்காரனாகவோ அவனைச் சித்தரிக்கும் முயற்சிகள் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் இது துளி கூட உண்மையல்ல. சொந்த வாழ்க்கையில், கோட்ஸே, காந்தியைப் போலவே உறுதியான தார்மீகவாதி. இந்து மதத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவன். இந்தியாவின் புராதன நூல்கள் பற்றி, குறிப்பாக காந்திக்குப் பிடித்த கீதையைப் பற்றி, மிகப் பெருமையுடன் பேசுபவன். இவற்றுடன் அன்றைய உலக நடப்புகள் பற்றி நல்ல பரிச்சயமும் அவனுக்கு இருந்தது. காந்தியைப் போலவே, தீண்டாமையை அவனும் எதிர்த்தான். ஆனால், நவீன சிந்தனையுள்ள, 'பகுத்தறிவுள்ள', 'சீர்திருத்த எண்ணம் கொண்ட' இந்துமதத்தை உருவாக்க அவன் எண்ணினான்.

இந்த விஷயத்தில் காந்தியிடமிருந்து அவன் வேறுபட்டிருந்தான். அவன் எதிரிகள்கூட, அவனது இயல்பான நன்னடத்தை, பணிவு, துணிவு, இலட்சிய வேகம் இவற்றைப் புகழ்ந்திருக்கிறார்கள். அரைமனதுடன். காந்தி சுடப்பட்டவுடன் கூட்டம் திகைத்துப் போய் நின்றது. முயன்றிருந்தால் கோட்ஸே தப்பித்திருக்கலாம். ஆனால் அவன் தப்பியோட முயற்சிக்கவில்லை என்று பார்த்தவர்கள் கூறுகின்றனர். அவனுக்கு தான் செய்யப்போகும் செயலைப் பற்றிய பூரணத் தெளிவு இருந்திருக்க வேண்டும். மேலும் தனது ஆழமான சுயத்தை உணர்ந்து கொள்ள இந்தக் கொலை உதவியிருக்கிறது.

அரசியல் தளத்திலும்கூட, கொலையாளிக்கும் கொலையுண்டவருக்கும் ஒருவிதமான தொடர்பு இருந்திருக்கிறது. கோட்ஸே தனது அரசியல் வாழ்வை முப்பதுகளில் காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்திலிருந்துதான் தொடங்கினான் என்பது பலருக்குத் தெரியாது. அந்த வாழ்வு, அவரை அவன் சுடுவதற்கு முன் செலுத்திய வணக்கத்துடன் முடிவுற்றது. காந்தியை, தனது கடமையில் தவறிப்போன 'தேசத்தந்தை' என்றும் 'இந்தியத் தாயின் கடமையுணர்வு மிக்க மகனால் கொல்லப்பட வேண்டியவர்' என்றும் அவனே குறிப்பிட்டான்.

கோட்ஸேயின் கடைசி வாக்குமூலம் இப்போது அவனது சகோதரரால் வெளியிடப்பட்டுள்ளது. கோட்ஸேயுடன் சேர்ந்து சதியில் ஈடுபட்டவர்களின் சார்பாக வாதாடிய வழக்கறிஞர்களில் ஒருவரான பி.எல். இனாம்தார் அவரது நினைவுக்குறிப்புகளை சமீபத்தில் வெளியிட்டுள்ளார். இந்த இரண்டு நூல்களிலிருந்தும் எனது சில சந்தேகங்கள் உறுதிப்பட்டுள்ளன. சிந்தனை ரீதியாக கோட்ஸே தனியன் அல்லன். அவனைப் போலவே எண்ணம் கொண்டிருந்தவர்கள் பலர் மேல்நாடுகளில் இருந்தார்கள். ஒருபுறம், மாக்கியவெல்லி, பிஸ்மார்க்கிலிருந்து நம் காலத்து ஹென்றி கிஸிங்கர் வரையுள்ள பொதுநீதிகள் பற்றிய 'விதிப்படி' சிந்தனையாளர்கள். மற்றொருபுறம், ஜார்ஜ் ஆர்வல் **("Reflections on Gandhi" Collected Essays)** மற்றும் ஆர்தர் கோஸ்லர் **("Mahatma Gandhi-The Yogi and the Commissar" Sunday Times, October 5, 1969)** போன்ற விமர்சன நோக்கு கொண்ட நவீனவாதிகளும் மனிதநேயவாதிகளும். கோட்ஸேயும் அவனது தோழர்களும் எந்த மதிப்பீடுகளை முன்வைத்தார்களோ அதே மதிப்பீடுகளை இவர்கள் தங்கள் கட்டுரைகளில் முன்வைத்திருக்கிறார்கள். இனாம்தாருக்கு இது தெரியாமலிருக்கலாம். ஆனால் கோட்ஸேயின் கடைசி வாக்கு மூலத்திலுள்ள நேரடித்தன்மை உணர்ச்சி மேலோங்கல் இவற்றை அகற்றிவிட்டுப் பார்த்தால், நவீனயுகம் பற்றி இன்று பரவலாகக் காணப்படும் பார்வையை - முழுமையாக ஏற்றுக்கொள்ளும் வகையையோ, விமர்சனமிக்க பார்வையையோ - அப்படியே பிரதிபலிப்பது கண்கூடு. காந்தியைக் கொலை செய்தவன், பகுத்தறிவு, அறிவியல் மற்றும் தயவுதாட்சண்யமற்ற அரசியல் போன்ற கருத்துகளில் ஆழ்ந்த பற்றுள்ள நேர்மையான இளைஞன் என்ற உண்மை நமக்கு சங்கடத்தைத்தான் தருகிறது. கோட்ஸேயின் நிலைப்பாடு, காரியவாத அரசியல் **(real politik)** சிந்தனையினதும், நற்செயல் பகுத்தறிவுவாதிகளும் அமைப்புக்குள்ளிருந்தே அதை விமர்சித்தவர்களுமான ஆர்வல் மற்றும் கோஸ்லர் போன்றவர்களது சிந்தனையினதும் அம்சங்களைக் கொண்டிருந்தது என்பது புதிதாக வெளிவந்த பிரசுரங்களிலிருந்து தெரிய வருகிறது. காந்தியைப் பற்றிய பொதுவான படிமத்தைத் தாண்டி,



படிப்பகம்

www.padippakam.com

அவர் கண்ட உலகினது அம்சங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யும்போது நாமும் இதே நிலைபாட்டைத்தான் கொண்டிருப்போம் என்பது என் துணிவு.

கோட்ஸேயின் இறுதி வாக்குமூலம் எதையும் மறைக்க முற்படவில்லை. அவனுக்கும் அவனால் கொலையுண்டவருக்குமிடையே இருந்த உண்மையான கருத்துவேறுபாடுகளை நேர்மையாக அது எடுத்துச் சொல்கிறது; காந்தீய பகுத்தறிவின்மை, மூடத்தனம், குருட்டு நம்பிக்கைகள் நிறைந்த படுகுழியில் தன் தாய்நாடு வீழ்ந்துவிடாமல் காப்பாற்றுவதற்காக 'தேசத்தந்தையை' அவன் ஏன் வேண்டாவெறுப்பாகக் கொல்லவேண்டி வந்தது என்பதையும் அது சொல்கிறது. இந்தியாவின் எதிர்காலம் பற்றி இருவருக்கும் வேறுவேறான கனவுகள், மானுட விடுதலைப் பற்றிய வேறுவேறான மாதிரிகள் - இருந்தன என்பதையும் இந்த வாக்கு மூலத்திலிருந்து அறியமுடிகிறது. எது ஒருவருக்கு விவேகமானதாகத் தோன்றியதோ அதுவே மற்றவருக்கு மூடத்தனமாகப் பட்டது. ஒருவருக்கு சரி என்று தோன்றியது மற்றவருக்கு அறிவுக்குப் புறம்பானதாகப்பட்டது. இப்போது மீள்பரிசீலனை செய்யும்போது, உண்மையான விவேகம் மற்றும் காரண அறிவு பற்றிய நவீன சித்தாந்தங்களின் பிரதிநிதியாகத்தான் கோட்ஸே செயல்பட்டிருக்கிறான் என்பது சந்தேகமின்றி தெளிவாகிறது.

கோட்ஸே விரும்பியது உறுதியான இந்தியா - ராணுவ பலம் பொருந்திய ஒருபடித்தான, முழுவதும் தொழிற்மயப்படுத்தப்பட்ட, தொழில்நுட்ப சாய்வுகொண்ட, தேசபற்றுமிக்க ஒரு இந்தியா. தன்னை அதிநவீன இந்துவாகப் பிரகடனப்படுத்திக் கொண்ட அவன், இந்தியா இனவேறுபாடற்ற, சமய சார்பற்ற நாடாக திகழவேண்டும் என்று விரும்பினான் என்பது விநோதமாகப்படலாம். இந்தியா மேற்கு நாடுகளுக்கு சரியான போட்டி நாடாக வளர்ந்து, தோதான நேரத்தில் அவற்றைத் தோற்கடிக்கும் வலிமை பெற்றிருக்கவேண்டும் என்று அவன் விரும்பினான். தன்னம்பிக்கை மிகுந்த ஒரு இந்துவால்தான் இதைக் கட்டி எழுப்ப முடியும் என்று அவன் நம்பினான்.

இந்து சமூகத்திலிருந்த மேற்கத்தியமயமான குழுக்களின் சிந்தனையை அடியொற்றி, கோட்ஸேயும் இந்தியாவின் விடுதலை அதை ஒன்றிணைத்து ஒருங்கிணைப்பதிலும், உலக அளவிலான அரசியலில் பங்கேற்பதிலும்தான் உள்ளது என்று எண்ணினான். நவீன உலகத்தை எதிர்கொள்ளவும், பாரம்பரியச் சிந்தனையிலிருந்து பகுத்தறிவை பிரித்தறியவும் அரசியலை வாழ்வின் பிற அம்சங்களிலிருந்து பிரித்தறியவும் இந்தியர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்பினான் அவன். காரியவாத அரசியல் மற்றும் விஞ்ஞான பார்வையுடையதும் ராணுவ பலம் பொருந்தியதுமான நவீன சமூகத்தை ஏற்படுத்தவல்ல ஆண்மைமிக்க பகுத்தறிவு வாதம், இவற்றின் மூலம்தான் இந்தியர்களுக்கு விடிவுகாலம் பிறக்கும் என்ற கருத்து அவனது கடைசி வாக்குமூலத்தில் பொதிந்திருக்கிறது.

காந்தியோ இந்தியா மேற்கு நாடுகளுடன் நவீனத்துவத்திற்காகப் போட்டியிடுவதை விரும்பவில்லை. அதிக ஆண்மைத்தன்மை மிக்கதும், அதிக ஒழுங்குபடுத்தப்பட்டதும், அதிகார நாட்டம் கொண்டதும், நவீனதொழில் நுட்ப சாய்வு கொண்டதுமாக ஒரு நாடு விளங்கவேண்டும் என்ற கொள்கையை அவர் முற்றாக ஒதுக்கினார். ஆன்மீக சத்திழந்த இந்துமதம் முன் வைத்த மனிதனையும் இயற்கையையும் புனிதமாகக் கருதாத நிலைப்பாட்டையும் அவர் வெறுத்து ஒதுக்கினார். மேற்குலகு தானே உருவாக்கிய போட்டி விளையாட்டில் இந்தியாவும் போட்டியாளனாக மாறி அதன் மூலம் மேற்கு ஏகாதிபத்தியத்திற்கு பெருமை சேர்ப்பதை அவர் விரும்பவில்லை. இம்மாதிரியான விளையாட்டுகளில் கலந்துகொண்டு ஒத்துழைக்க மறுக்கும், தனது விஷயங்களுக்கு முன்னுரிமையும் முக்கியத்துவமும் அளிக்கும் நாடாக இந்தியா இருக்கவேண்டும் என்று அவர் விரும்பினார். இந்தியா மற்றும் இந்துமதத்தின் ஆன்மாவை, அர்த்தசாஸ்திரம் முன்வைக்கும் பிராமண - க்ஷத்திரிய பாரம்பரியத்திலோ காரியவாத அரசியலிலோ அவர் தேடவில்லை. மாறாக, மென்மையானதும் பெண்மைத்தன்மை கொண்டதுமான கிராம பாரம்பரியத்தில் - அதன் பன்முகத்தன்மை கொண்ட கலாச்சாரம், தனி மனிதவாதத்தை பொறுத்துக்கொள்ளும் தன்மை, எதிர்ப்புகுணம், அதிகார நாட்டம் கொண்ட அரசியலை ஒதுக்கும் தன்மை போன்றவற்றில் - அவர் இந்தியாவின் ஆன்மாவைக் கண்டார். கோட்ஸே போன்றவர்களைப் போல காந்திக்கு தனது கலாச்சாரம் பற்றிய தாழ்வு மனப்பான்மை இல்லாததால், இந்துக்களை மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணங்கொண்டிருக்கவில்லை; இந்துமதத்திற்குள்ளே உள்ள கலாச்சாரப்பிளவுகள் ஒழுங்குபடுத்தப்பட்டால் போதும் என்று விரும்பினார்.

புறத்தே சுத்தமானதும் அறிவுசார்ந்ததும் ஆண்மைத்தன்மை மிக்கதும் சமூகக் கட்டுப்பாடற்றதுமான எதையும் அவர் வலியுறுத்தவில்லை; சுத்தமற்றதும் உடலுழைப்பு சார்ந்ததும் பெண்மைத்தன்மை கொண்டதும் கிராமிய அடிப்படைக் கொண்டதுமான அம்சங்களுக்கு அவர் அழுத்தம் தந்தார். பயன்பாட்டு பகுத்தறிவின் தந்திரங்களுக்கு அவர் முக்கியத்துவம் அளிக்கவில்லை; மாறாக, நியாயஉணர்வு விமர்சன ரீதியாக சுய பொறுப்பேற்றல் மற்றும் அன்பு இவற்றை வலியுறுத்தினார். தனிமனிதனின் சமூக பொறுப்பை வலியுறுத்தவில்லை; சமூகத்தில் மனிதன் ஆற்றவேண்டிய தார்மீக கடமையை வலியுறுத்தினார். குடும்பக்கட்டுபாடு அல்லது பசுவதை அல்லது நவீன இயந்திரங்கள் இப்படி எதைப் பற்றியானாலும் அவரது அடிப்படைகள் இவைதாம். (குடும்பக்கட்டுப்பாட்டிற்கு எதிரான எந்த தடைகளும் இந்துமதத்தில் இல்லாதபோதும் காந்தி ஏன் குடும்பக்கட்டுப்பாட்டை சுயக்கட்டுப்பாட்டின் மூலம் கடைபிடிக்கச் சொன்னார்? பசு இந்துக்களாலும் அவராலும் கூட புனிதமாகக் கருதப்பட்டும் அவர் ஏன் பசுவதைத் தடுப்புச்சட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார்? நவீன தொழிற்நுட்பத்திற்கு எதிரானவர் என்றாலும், சைக்கிள், லேத் மற்றும் தையல் இயந்திரம் ஆகியவற்றை அவர் ஏன் ஏற்றுக்கொண்டார்? ஆர்வல், கோஸ்லர் போன்றவர்களால் ஒருபோதும் விளக்க முடியாத 'முரண்பாடுகள்' இவை.) காந்தியை பொறுத்தவரை, தன்னாட்சியும் சகிப்புத்தன்மையும் பரஸ்பரம் தொடர்புடையவை. அன்றைய உலகில் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானவை என்று வாதிக்கப்பட்டது. சகிப்புத்தன்மை என்று அவர் குறிப்பிட்டது தனிமனிதர்களுக்கிடையேயோ நாடுகளுக்கிடையேயோ நிலவ வேண்டிய ஒன்றைப்பற்றி மட்டுமல்ல; கலாச்சாரங்களில் தனித்தியங்கும் தன்மைப்பற்றியும் அவற்றிற்கிடையே நிலவவேண்டிய சகிப்புத்தன்மையையும் அவர் மனங்கொண்டிருந்தார்.

நவீன உலகின் சார்பாகவும் அதன் ஆர்வல்கள், கோஸ்லர்கள் மற்றும் கிஸிங்கர்கள் சார்பாகவும் காந்தியைக் கொலைசெய்வதைத் தவிர கோட்ஸேக்கு வேறு வழியில்லை; காந்திக்கும் நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் கோட்ஸேயை விரட்டி ஓட்டுவதற்காக மரணத்தை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு உகந்த வழி இல்லை.

**தமிழாக்கம்: தி.அ. ஸ்ரீனிவாசன்**



படிப்பகம்

www.padippakam.com





## தலித் இலக்கியக் கோட்பாடு பற்றி

மனிதருக்கு எதிரான ஒடுக்குதல் எந்த அடிப்படையில் நிகழ்கிறதோ அதே அடிப்படையில் அந்த ஒடுக்குதலுக்கு எதிரான எழுச்சியும் நிகழ்கிறது. மனித சமுதாயத்தில் மிக அடிப்படையான முரண்பாடு உற்பத்தி உறவுகள் தொடர்பானது. ஆயினும் மனித வரலாற்றின் சிக்கலான விருத்தி, வரலாற்றின் மிச்ச சொச்சங்களான முரண்பாடுகளை அவற்றுக்குரிய வரலாற்றுக் காலகட்டத்திற்கு அப்பாலும் நீடிக்கிறது. இத்தகைய முரண்பாடுகள் சாதி, நிறம், தேசியம் தொடர்பானவையும் உள்ளடங்குவன. இத்தகைய முரண்பாடுகள் பகைமையானவை அல்ல. ஆயினும் இவற்றிற்கு ஒரு பகைமையான தன்மையை வரலாற்றுச் சூழ்நிலைகள் வழங்குகின்றன. இப்பகைமை நிரந்தரமானதாக இருக்குமாயின், மனித இருப்பு அசாத்தியமானதாகிவிடும். எனவே சாதி, நிறம், தேசம், மொழி, மதம் என்றவாறான அடிப்படைகளில் நிகழும் ஒடுக்குதலுக்கு எதிரான போராட்டம் அவ்வாறான வேறுபாடுகளைக் களைந்து மனித சமத்துவத்தை நிலைநாட்டும் இலக்குடனேயே நிகழ வேண்டும் என்பது ஒரு நியாயமான நிலைப்பாடு. ஆயினும் நடைமுறையில் இதற்கு முரணான போக்குகளை நாம் காண்கிறோம். இத்தகைய தீங்கான போக்குக்கள் நடைமுறை மூலமே திருத்தப்பட முடியும்.

இலக்கியம் என்பது சமுதாய முரண்பாடுகளின் ஒரு களமாகவே செயற்படுகிறது. அங்கே மனிதச் சிந்தனை ஒவ்வொரு மனிதருக்குமுரிய சமுதாயச் சார்புடன் புலனாகிறது. இது, சிலர் கருதுமாப் போல, வார்த்தைக்கு வார்த்தை போராட்டக் கொடியுயர்த்தி வரும் பாங்கிலல்லாது, படைப்பாளியின் சமூகப் பார்வையை அதன் பல்வேறு பரிமாணங்களில் முன் வைக்கிறது. கறுப்பின இலக்கியம், தேசிய விடுதலை இலக்கியம் என்பனவும், இன்று, பெண்ணிய இலக்கியமும் நமது இலக்கிய வட்டாரங்களில் ஓரளவு அங்கீகரிக்கப்பட்டு வந்துள்ளன. ஆப்பிரிக்க, லத்தீன், அமெரிக்க எழுத்துக்களிலும் அமெரிக்க மேற்கிந்தியக் கறுப்பின எழுத்திலும் ஒடுக்குமுறைக் கெதிரான குரலே ஓங்கி ஒலிக்கிறது. இதை நம்மால் அங்கீகரிக்க இயலுமாயின் தலித் இலக்கியத்தை அடையாளங் காண்பதில் அதிகம் பிரச்சினை இராது. தலித் இலக்கியம் என்ற சொல் தாழ்த்தப்பட்ட சாதியினர் சார்பான இலக்கியத்தைக் குறிக்கிறது. இதற்குப் பல வேறு பார்வைக் கோணங்களும் பரிமாணங்களும் உள்ளன. ஒவ்வொரு படைப்பாளியும் தனது உணர்வுகளதும் அனுபவங்களதும் செழுமையின் அடிப்படையில் ஆக்கங்களை வழங்குகிறார். தலித் இயக்கம் என்பது குறிப்பிட்ட சாதிப்பிரிவினரால் மட்டுமே படைக்கப்படும் இலக்கியம் என்ற கருத்துச் சிலரால் இன்று பரவலாக்கப்பட்டு வருகிறது. இது சாதியத்திற்கு எதிரான போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் ஒரு போக்காகவே தென்படுகிறது. தாழ்த்தப்பட்ட சாதியினரின் இறுதி இலக்கு சாதி அடிப்படையிலான ஒடுக்குதலையும் சமுதாய வேறுபாடுகளையும் ஒழித்து அதன்மூலம் சாதி முறையையே சுவடு தெரியாமல் அழிப்பதாகும் என்றுதான் தலித்தியர்கள் அனைவரும் கூறுகிறார்கள். இதை ஏற்கும் மார்க்ஸியரும் பிற முற்போக்குச் சக்திகளும் சாதி ஒடுக்குதலுக்கு எதிரான போராட்டங்களை ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளனர். எனினும் இந்தப் போராட்டத்தைப் பிற நியாயமான போராட்டங்களினின்று தனிமைப்படுத்தும் போக்கையும் தலித்தியத்தை ஒரு நிரந்தரமான சாதிப் பூசலாகக் காட்டும் போக்கையும் அவர்கள் எதிர்க்கிறார்கள். இந்த அடிப்படையில் தலித்தியமும் அதன் இலக்கியமும் இரண்டு முக்கியமான போக்குகளை அடையாளங் காட்டுகின்றன.

ஒரு போக்கு, சாதியத்தின் செயற்பாட்டை அடையாளங்காட்டி அதற்கு எதிரான போராட்டத்தையும் அப்போராட்டத்திற்கு உடன்பாடான சமுதாயச் சக்திகளையும் அங்கீகரிப்பது. இது தலித் இலக்கியமாகக் கொள்வன, இலக்கியத்தின் உள்ளடக்கத்தின் அடிப்படையிலானவை. கருத்து வேறுபாடுகள் எத்தன்மையவாயினும் தாழ்த்தப்பட்ட சாதியினரது கண்ணோட்டத்தில் சாதியத்திற்கு எதிரானதும் சாதி ஒடுக்குதல் பற்றிய புரிந்துணர்வை வெளிப்படுத்துவதுமான அனைத்துப் படைப்புக்களும் தலித் இலக்கியமாக இங்கு கருதப்படுகின்றன. இதற்கெதிரானதாகக் கொள்ளக்கூடிய போக்கு, படைப்புகளை முற்றாக சாதி வேறுபாட்டின் அடிப்படையிலேயே அணுகுகிறது. இதன் தீவிரமான நிலையில் தாழ்த்தப்பட்டோரால் தாழ்த்தப்பட்டோருக்காக எழுதப்படுவது மட்டுமே தலித் இலக்கியமாகிறது. இங்கே சகல 'தலித் அல்லாத' படைப்புகளும் சந்தேகத்துடனேயே நோக்கப்படுவது ஒருபாரிய பலவீனமாகிறது. இவ்வாறான எதிரெதிரான போக்குக்களை நாம் தேசிய விடுதலை இயக்கங்களிலும் நிறவெறிக்கு எதிரான போராட்டத் தினுள்ளும் பெண்ணியத்துள்ளும் கண்டுள்ளோம். தலித் இலக்கியம் வேண்டி நிற்பது விடுதலைக்கான சகல நியாயமான போராட்டங்களுடனும் இணைந்து போகும் ஒரு விரிவான பாதையோ அல்லது அல்லாது குறிப்பிட்ட சாதி எல்லைகட்குள் தன்னைக் குறுக்கிக் கொண்டு தனக்கு புறம்பான அனைத்தையும் நிராகரிக்கும் ஒரு பாதையோ என்பதை நடைமுறைதான் தீர்மானிக்க முடியும். தலித் இலக்கியத்தினுள் என்றேனும் ஒரு குறுகிய பார்வை ஓங்கி நிற்கும் காரணத்திற்காக, முற்போக்குச் சக்திகள் தலித் இலக்கியக் கோட்பாட்டை நிராகரிப்பவர்களாயின் அவர்கள் சாதியத்திற்கெதிரான போராட்டத்தையும் சமூக மாற்றத்திற்கெதிரான போராட்டததையும பலவீனப் படுத்துவோராவர்.

**சி. சிவசேகரம்**



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கியம், மொழி, அதிகாரம்

## மலையாளக் கவிஞர் - சிந்தனையாளர் சச்சிதானந்தனுடன் ஒரு பேட்டி


*கே. சச்சிதானந்தன் 1946 இல் திருச்சூர் அருகே பிறந்தவர். ஆங்கிலப் (கல்லூரி) பேராசிரியராகப் பணிபுரிந்தார். தற்போது சாகித்ய அகாதமி வெளியிடும் 'இந்தியன் லிட்டரேச்சர்' இதழின் ஆசிரியர்.*

*அறுபதுகளின் இறுதியில் உருவான தீவிரவாத கம்யூனிச இயக்கங்களில் பங்குபெற்று, கவனத்துக்கு வந்தவர். மலையாளக் கவிதையின் கற்பனாவாதப் போக்கை மாற்றி நவீன கவிதையை உருவாக்கியதில் இவருக்குப் பெரும்பங்கு உண்டு. மார்க்சிய சிந்தனையாளராகவும் மதிக்கப்படுகிறார். 'மார்க்ஸிய அழகியல்' 'வாசிப்பின் அரசியல்' 'விவாதங்கள்' முதலியவை முக்கியமான நூல்கள். நவீன இலக்கிய விமர்சனப்போக்குகள் பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்திருக்கிறார்.*

*இவருடைய கவிதைகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு 'ரத்த சாட்சிகள்' என்று நூலாக வெளிவந்துள்ளது. ('மனஓசை' வெளியீடு). இவருடைய 'மார்க்ஸிய அழகியல்' என்ற நூல் கவிஞர் சுகுமாரனால் மொழிபெயர்க்கப்பட்டு 'மீட்சி' பிரசுரமாக வெளியிடப்பட்டுள்ளது.*

*விரிந்த அளவில் மலையாள மொழிபெயர்ப்புகள் செய்தவர் சச்சிதானந்தன். பெரும்பாலும், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளிலிருந்து. கேரள இலக்கிய ரசனையை வடிவமைத்தலில் இவருடைய பங்கு கணிசமானது.*

பேட்டியாளர் : ஜெயமோகன்





படிப்பகம்

www.padippakam.com

**புகழ் பெற்ற மார்க்ஸிய அறிஞர்/ கவிஞர் நீங்கள். சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப் பிறகு உங்கள் நம்பிக்கைகள் எவற்றையாவது மாற்றியமைத்துக் கொண்டிருக்கிறீர்களா ?**

மார்க்ஸிய அறிஞர் என்பது என்னைப் பொறுத்தவரை ஓரளவுக்கு மட்டுமே பொருந்தும். மார்க்ஸியங்கள் பல உண்டு. மார்க்ஸிலேயே பல காலகட்டங்களும் உண்டு. பல பின்-மார்க்ஸிய சிந்தனையாளர்களும் என்னைக் கவர்ந்துள்ளனர்.

சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப் பல வருடங்களுக்கு முன்னரே நான் மார்க்ஸியத்தின் போதாமைகளைப் பற்றி நிறைய பேசியும் எழுதியும் விவாதித்தும் வந்துள்ளேன். லெனினிசத்தின் போதாமைகளைப் பற்றி என்று இன்னும் கச்சிதமாகக் கூறலாம். போலந்து தேசத்தில் அரசாங்கத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட பூசல்களைப் பற்றி எழுதும்போது அதற்கு காரணம் லெனினி சத்திலேயே உள்ள சிக்கல்கள்தாம் என்று கூறியிருந்தேன். சார்த்தர் மார்க்ஸியத்திற்குத் தரமுயன்ற சாராம்ச சித்தாந்தத்தைப் பற்றி (Ontology) நான் அக்கறை கொண்டிருந்தேன். எங்கல்ஸின் இயங்கியலைப் பற்றிய சார்த்தரின் ஐயங்களையும் தீவிரமாகப் பரிசீலனை செய்து வந்தேன். கிராம்ஷி, ரோசா லக்சம்பர்க், பிராங்பர்ட் மார்க்ஸியர்கள் ஆகியோருடைய சிந்தனைகளை அடிப்படையாக வைத்து ரஷ்ய கம்யூனிசம் மீது விரிவான எதிர் விமர்சனங்களை முன் வைத்திருந்தேன். எனவே சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சி நான் ஓரளவு முன்கூட்டியே ஊகித்ததுதான். இவ்வளவு விரைவாக நிகழும் என்று எதிர்பார்க்கவில்லை, அவ்வளவுதான். அது என்னுடைய சிந்தனைப் போக்குகளை ஓரளவு உறுதிப்படுத்தியது.

**சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சி உங்களை அதிகம் பாதிக்கவில்லையா ? உங்களுக்கு அதில் வருத்தமில்லையா ?**

இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ரஷ்யாவிலும் கிழக்கு ஐரோப்பிய தேசங்களிலும் இருந்த அதிகாரிகளின் அரசாங்கம் வீழ்ச்சி அடைந்து ஜனநாயக அஸ்திவாரம் கொண்ட ஒரு புதிய சோஷலிச அரசாங்கம் உருவாகி வரும் என்று நான் எண்ணினேன். இப்போது அங்கு நிகழும் ஏகாதிபத்திய ஆதரவு மனோபாவமும், இனவெறிச் சண்டைகளும்தான் மனவருத்தம் தருகின்றன. மீண்டும் ஒரு மறுசிந்தனை வராமல்போகாது. சோஷலிசக் கட்டுமானத்தில உள்ள பிழைகள் களைந்து எறியப்பட்டு முற்போக்கான அரசமைப்புகள் அங்கு உருவாகக்கூடும். போலந்து முதலிய நாடுகளில் இதற்கான அறிகுறிகளும் காணப்படுகின்றன.

**சமீபத்தில் சீனாவிற்குப்போய் வந்தீர்களல்லவா ? உங்கள் மனப்பதிவு என்ன ?**

சீனாவிலும் மாற்றம் நிகழத் தொடங்கிவிட்டது. அதிக காலம் அங்கு ஜனநாயக உரிமைகளை தடை செய்து வைக்க முடியாது என்றுதான்படுகிறது.

**மார்க்ஸியத்தின் பொருளாதார சிந்தனையிலேயே பிழைகள் உள்ளன என்பது சோவியத் யூனியன் என்ற பரிசோதனையிலிருந்து உறுதிப்பட்டுள்ளது. தனி மனிதர்களின் சிறு சிறு செயல்கள் மூலம் உருவாகும் பொருள் உற்பத்தி முக்கியமானது. மார்க்ஸியம் சிறு சிறு கூறுகளை அலட்சியம் செய்து உற்பத்தியை பெரிய அளவில் மட்டுமே கணக்கிடுகிறது. உங்கள் கருத்து என்ன ?**

தொழில்நுட்பம் தற்போதைய அளவிற்கு வளராத நிலையில் உருவானது மார்க்ஸியத்தின் பொருளியல். நவீனத் தொழில்நுட்பம் தொழிலாளர்களுக்கு உற்பத்தியில் இருந்த பங்கை மிகவும் குறைத்துவிட்டது. புதிய செய்தித் தொடர்பு வசதிகள் நவீன அரசாங்கத்துக்கு எல்லையற்ற அதிகாரத்தையும் அளித்துள்ளன. தேவைப்படும்போது விரும்பியபடி மக்களை உற்பத்தியில் ஈடுபடச் செய்யவும் விலக்கவும் இன்று ஆளும் வர்க்கத்தினால் முடியும். இன்றைய பொருளியல் மிகச் சிக்கலானது. வளர்ந்த நாடுகளில் உள்ள தொழிலாளிக்கும் வளராத நாடுகளில் உள்ள தொழிலாளிக்கும் இடையே மனோபாவத்திலும் வாழ்க்கை முறையிலும் பெரிய வேறுபாடுகள் உள்ளன. அவன் மறைமுகமாக இவனைச் சுரண்டுகிறான். மதம், மொழி, இனம் முதலிய பல அடிப்படைகள் தொழிலாளர்களைப் பிரிக்கின்றன.

எனவே வெறும் பொருளியல் அடிப்படையிலான வர்க்கப் பிரிவினை இன்று முழுவதுமாக செல்லுபடியாகாது. தலித்துகள், பெண்கள், பழங்குடிகள், சிறுபான்மையினர், அகதிகள் என்று இன்று சுரண்டப்படும் மக்கள் பல்வேறு வகையினர். சுரண்டல் முறைகளும் மாறுபட்டவை. இவற்றையெல்லாம் உள்ளே அடக்குமளவு பழைய வர்க்கப் பிரிவினையை நாம் விரிவுபடுத்த வேண்டியுள்ளது. நிகோஸ் போலன்ஸாஸின் (Nicos Polantzas) 'சமூக வர்க்கம்' என்ற கருதுகோள் இதற்கு உதவக்கூடும். போலன்ஸாஸ் பொருளாதார நிலையை மட்டும் வைத்து வர்க்கப் பிரிவினையை செய்யவில்லை. பொதுவான சமூக அடிமைத்தனம், சுரண்டல் ஆகியவற்றின் அடிப்படையில் அப் பிரிவினையை நிகழ்த்துகிறார். ரஷ்ய உற்பத்தியில் பிரதிபலித்தது வளர்ச்சி பெறாத வர்க்க கோட்பாடின் சிக்கல்களேயாகும்.

உற்பத்தி செய்வதற்கான தனிப்பட்ட உந்துதலை மனிதர்கள் கொள்வதற்கு சமூகத்திடம் அவர்களுக்கு உள்ள கடமை பற்றிய உணர்வும், உழைப்பதற்கான இயல்பான ஆவலும் மட்டும் போதும் என்று லெனினும் மாவோவும் கருதினார்கள். இது ஒருவகை இலட்சியவாதமே. போர் போன்ற தேசிய நெருக்கடிகளின் போது இது உதவியது. ஆனால் உயிர்வாழ்தல், வென்று செல்லுதல் போன்ற அடிப்படை உந்துதல்களை இழந்த மனிதர்கள் பிறகு உழைப்பதற்கு ஆவலற்றவர்களாக ஆனார்கள். கம்யூனிசம்கூட மனிதனின் அடிப்படை இயல்புகளை மாற்ற முடியவில்லை என்று தெரிகிறது. இங்குதான் நாம் ஃபிராய்டின் கோணத்தில் பார்க்க ஆரம்பிக்க வேண்டும்.

**மார்க்ஸியர்கள் இன்று மூன்று வகையான நிலைப்பாடுகளை எடுத்துள்ளனர். ஒன்று : பழைய நிலைப்பாடுகளை அப்படியே தொடர்தல். இரண்டு : எல்லாவற்றையும் வீசிவிட்டு புதிதாகச் சிந்திக்கத் தொடங்குதல். மூன்று : மார்க்ஸியத்தைத் தன்னுள் அடக்கிக் கொள்ளும் விரிவான புதிய சிந்தனைகளை நோக்கி நகர முயலுதல். உங்கள் நிலை என்ன ?**

மூன்றாவது நிலைப்பாடுதான் என்னுடையது. இது இன்றைய நெருக்கடிக்கு முன்னரே என்னில் தொடங்கியும் விட்டது. மார்க்ஸியத்தின் சில அடிப்படைகள் இந்தியச் சூழலில் இன்றும் மிக முக்கியமானவை என்று கருதுகிறேன். இன்றைய நவகாலனிய ஆதிக்கப்போக்கின் பொருளாதார உட்குறிப்புகளை (Economical Implications) ஆராய மார்க்ஸிய ஆய்வுமுறை பெரிதும் உதவக்கூடியது. இன்றுள்ள மார்க்ஸிய அணுகுமுறையின் பெரிய பலவீனம் அதன் வர்க்கப் பிரிவினைதான். அது பொருளாதார ரீதியில் வர்க்கப் பிரிவினையை மிக எளிதில் நடத்திவிடுகிறது. மதம், ஜாதி, பால், மொழி, இனம் சார்ந்து வரும் ஒடுக்குமுறைகளின் சிக்கல்களை அலட்சியம் செய்துவிடுகிறது. இதனால் பல்வேறு சமூகப் போராட்டங்களிலிருந்து அன்னியமாகிவிடுகிறது அது. மனித குலத்தையே அழித்துவிடக்கூடிய பேராபத்துகள் பற்றி (போர், இயற்கை அழிவுகள் முதலியவை) மார்க்ஸியத்தின் அணுகுமுறை மிகவும் பழமையானது.



படிப்பகம்

www.padippakam.com

இலக்கியம், கலைகள், போன்றவற்றை அணுகுவதிலும் மார்க்ஸியம் மிகவும் எளிமைப் படுத்தப்பட்ட முறைகளையே கையாளுகிறது. மார்க்ஸியம் ஒரு பூரணமான தத்துவம் என்று நான் கருதவில்லை. அதில் நிறைய மௌனங்கள் உள்ளன. இடைவெளிகளும் விடுபடல்களும்கூட உண்டு. மனித இருப்பின் தளங்கள் பலவற்றை மார்க்ஸியம் கண்டுகொள்வதேயில்லை. உள்ளுணர்வு **(Instinct)**, தார்மீக உந்துதல் **(Ethics)**, அழகுணர்வு **(Aesthetics)** ஆன்மிகம் **(Spiritual)** போன்ற பல தளங்களை பல சமயங்களில் மார்க்ஸியம் புறக்கணித்துவிடுகிறது. சிலசமயம் அவமதிக்கிறது. சிலசமயம் தவறாகவும் அரைகுறையாகவும் புரிந்து கொள்கிறது. அதாவது மனிதனின் மனச் சமநிலைத் தளத்தில் **(Finitude)** அது செயல்படுகிறது. ஆனால் இந்த சமநிலையை உடைத்து வீசுவதற்காக பெரும் முயற்சிகள் அடங்கியதுதான் மனித வரலாறு. அதாவது மனிதன் மண்ணால் மட்டும் திருப்தி அடைபவனில்லை. கவிதை எழுதவும், கடவுளை உண்டு பண்ணவும், விண்வெளிக்கு பறந்து செல்லவும் அவனை உந்தக்கூடிய மர்மமான ஒரு அம்சம் அவனில் எல்லாக் காலத்திலும் செயல்படுகிறது. அன்றாட வாழ்வு சார்ந்ததும், வெறும் உயிர்வாழ்தல் சார்ந்ததுமான சமநிலைத் தளத்தில் வைத்து அந்த உந்துதலை புரிந்து கொள்ள முடியாது. இப்படி யோசிக்கும்போது மார்க்ஸியத்தின் இடம் மிகவும் குறுகி விடுகிறது. ஒரு பெண்ணை காதலிக்கும் போது, வானத்தைப் பார்க்கும்போது, குழந்தையைக் கொஞ்சும்போது, சங்கீதம் கேட்கும் போது, மரணத்தைப்பற்றி யோசிக்கும்போது நாம் எந்த அளவுக்கு மார்க்ஸியர்களாக இருக்கிறோம் என்று எனக்கு இன்றும் தெரியவில்லை. வாழ்க்கையில் பெரும்பகுதியை நாம் இவற்றுக்காகத்தான் செலவிடுகிறோம்.



**லெனின் ரஷ்யாவில் கொண்டுவந்த மார்க்ஸியத்தை மார்க்ஸ் காண நேர்ந்தால் அவர் கல்லறையில் நெளிவார் என்று மிஷேல் ஃபூக்கோ கூறியது முற்றிலும் உண்மை.**

மார்க்ஸியம் உடைமை மனோபாவம் கொண்ட தனிமனித வாதத்தை **(Possessive Individualism)** உடைக்கக்கூடிய விமர்சனத்தை உருவாக்கி வளர்த்தது. மனித குலத்திற்கு அதன் பங்களிப்பு அது. அதே சமயம் தனிமனித உரிமை, தனிமனித மன வளர்ச்சி, ஆளுமையின் நிறைவு **(Fulfilment)** என்பன பற்றிய தெளிவான மாற்றுக் கருத்துகள் ஏதும் அதனிடம் இல்லை.

**மார்க்ஸியத்தால் மதத்தை, அதன் அடிப்படை மனோபாவத்தை, எதிர்கொள்ள முடியாததற்கு இதுதான் காரணமா ? மதத்தை வெறும் ஆதிக்க நிறுவனமாக தானே அது காண்கிறது ?**

உண்மைதான். மார்க்ஸியம் தனிமனிதனை நிராகரிக்கிறது. கூட்டுமனிதனுக்கு **(Collective man)** அது மிகையான முக்கியத்துவம் தருகிறது. இதன் விளைவாகவே அது சர்வாதிகாரத் தன்மை உடையதாக ஆகிறது. மார்க்ஸியத்திற்கு ஜனநாயக அடிப்படையை தர முயன்றவர்களை லெனின் கிண்டல் செய்தார். கடுமையாக ஒடுக்கினார். லெனின் ரஷ்யாவில் கொண்டுவந்த மார்க்ஸியத்தை மார்க்ஸ் காண நேர்ந்தால் அவர் கல்லறையில் நெளிவார் என்று மிஷேல் ஃபூக்கோ கூறியது முற்றிலும் உண்மை.

**சர்வாதிகாரமும் அடக்கு முறையும் மார்க்ஸியத்தின் தவிர்க்க முடியாத விளைவுகள் என்று குறிப்பிடுகிறீர்களா ?**

மார்க்ஸ் முதலாளித்துவ அமைப்புக்கு ஒரு மாற்று அமைப்பை கற்பனை செய்தார். அதில்கூட சிக்கல்கள் உள்ளன. 'சமூக வளர்ச்சி' பற்றிய மார்க்ஸியக் கண்ணோட்டமும் முதலாளித்துவ கண்ணோட்டமும் ஒன்றுதான். தனது மாற்று அமைப்பில் ஜனநாயகம் எப்படி செயல்படும் என்று மார்க்ஸ் யோசிக்கவில்லை. அதை அவ்வமைப்பை செயல்படுத்த முனையும் மக்களிடமே விட்டுவிட்டார். வன்முறை சமூக மாற்றத்திற்கு அவசியம் என அவர் கருதவில்லை. அதில் தவறில்லை என்றுதான் எண்ணினார். வன்முறை மூலம் நடக்கும் ஒரு மாற்றம் மேலும் மேலும் வன்முறை மூலமே நிலைபெற முடியும் என்று படுகிறது. புரட்சிக்குப் பிறகுதான் சீனாவிலும் ரஷ்யாவிலும் பல இலட்சம் மக்கள் கொல்லப்பட்டார்கள். வன்முறைக்கு நம்மிடம் ஒரு மனத்தடை உள்ளது. எந்தக் காரணத்தினாலாவது அந்த தடை மீறப்படுமானால் பிறகு வன்முறையை நிறுத்துவது சாத்தியமல்ல.

இவற்றையெல்லாம் கணக்கிலெடுத்து கொண்டு நாம் யோசிக்க வேண்டியுள்ளது. மார்க்ஸியத்தின் இக்குறைகளை களைவது வழியாகவே நாம் மேலும் சிறப்பான சமூக முறைகளைப் பற்றி கற்பனை செய்ய முடியும்.

**ஓர் இந்திய புரட்சியில் இன்றைக்கும் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா ?**

புரட்சி என்றால் அடிப்படையான ஓர் மாற்றம் என்ற அர்த்தத்தில் கேட்டீர்களானால் நம்பிக்கை உண்டு. ஆனால் ஆயுதப்புரட்சி வழியாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்தும் பழைய பாணி புரட்சியில் நம்பிக்கை இல்லை. இன்றைய அரசின் பொருளாதார நிலைபாடுகள் மக்கள் விரோதமானவை. நான் வாழும் டெல்லியில் ஒரு கோடி மக்களில் நாற்பது லட்சம்பேர் சேரிகளில் வாழ்கிறார்கள். இவர்களுக்கு மனித வாழ்க்கை கிடைக்காதவரை நமது ஜனநாயகம் வெளிவேஷம் மட்டுமே. மார்க்ஸியத்தின் அரசாங்க வடிவம் சர்வாதிகாரமாகவும், வளர்ச்சி பற்றிய கற்பனை முதலாளித்துவத்திலிருந்து வந்ததாகவும் இருக்கும் வரை மார்க்ஸியத்தாலும் இவர்களுக்கு எதுவும் செய்ய முடியாது. இங்குதான் காந்தியின் குரல் கேட்க ஆரம்பிக்கிறது.

**குரோச்சேயிலிருந்து கிராம்ஷி பெற்றுக் கொண்ட நிரந்தரப்புரட்சி, முடிவற்ற புரட்சி என்ற கருத்தை முன் வைக்கிறீர்களா ?**

ஆம். புரட்சி என்பது இடைவிடாத ஒரு செயல்பாடுதான். முடிவற்ற சீரமைப்புதான். அதற்கு வாழ்வின் ஒவ்வொரு தளத்திலும் மாற்று அமைப்புகளை மெல்ல மெல்ல உருவாக்க வேண்டும். அரசாங்க மாற்றம் அதில் ஒன்று மட்டுமே. மாற்றத்தை மேலிருந்து கொண்டு வரமுடியாது. அது கீழிருந்து, இவர்களிலிருந்து தொடங்கப்பட வேண்டும்.

**மார்க்ஸிய அழகியல் பற்றி எழுதியுள்ளீர்கள். இன்று அதன் அடிப்படைகளை மாற்றியமைத்துள்ளீர்களா ?**



படிப்பகம்

www.padippakam.com

மார்க்ஸிய அழகியல் பற்றி என் கருத்துக்கள் தொடர்ந்து வளர்ந்தபடியேதான் உள்ளன. என் முதல் நூலில் (தமிழில் வெளிவந்துள்ளது) சில பூர்ஷ்வா கருதுகோள்களின் அடிப்படையிலேயே புது இலக்கிய மதிப்பீடுகளை உருவாக்கும் முயற்சிதான் உள்ளது. இலக்கியம், படைப்பு, ஆசிரியர் போன்ற பழைய கருத்துகளை அப்படியே ஏற்றுதான் அந்த ஆய்வு செய்யப்பட்டது. பிற்பாடு பார்த், அல்தூஸர், மஷேரி, லக்கான், தெரிதா, ஃபூக்கோ, ரிச்சாஸ் ரோட்டி, ஸெல்யூஸ் லிடோட்டாட் முதலிய அறிஞர்களின் கருத்துக்களின் அடிப்படையில் எழுத்து - வாசிப்பு ஆகிய செயல்பாடு களுக்கு முக்கியத்துவம் தந்து விரிவாக ஆராய்ச்சி செய்தேன். எனது முனைவர் பட்ட ஆராய்ச்சியே இதுதான் ("Towards an Anti-Empiricist Aesthetics: The Radical Implications Of Post-Structuralist Literary Theory"- புலனறிவு வாதத்திற்கு எதிரான அழகியலை நோக்கி-பின் அமைப்பியல் கொள்கைகளின் பயன்பாடுகள்) எழுத்து என்பது மொழிக்குள் நிகழும் ஒரு செயல் என்ற கருத்தில் தொடங்கி வாசிப்பு என்ற செயல்பாட்டுககு அழுத்தம் தருவதாக என ஆய்வுகள் என்னை இன்று இட்டுச் சென்றுள்ளன.

**முற்போக்கு இலக்கியத்திற்கு இரண்டு தூண்கள். ஒன்று யதார்த்தவாதம். இரண்டு மார்க்ஸிய சரித்திர ஆய்வு. யதார்த்தவாதம் இன்று போதாமலாகி விட்டது. மார்க்ஸிய வரலாற்றாய்வு புதிய மானுடவியல் குறியியல் ஆய்வுகளினால் பின்தள்ளப்பட்டும் வருகிறது. முற்போக்கு இலக்கியத்தின் எதிர்காலம் என்ன ?**

முற்போக்கு இலக்கியம் என்ற ஒரு இயக்கம் நேற்று இருந்தது. அந்த வரலாற்றை நான் மறுக்கவில்லை. ஆனால் அழகியல் ரீதியாக அப்படி ஒரு தனித்த வகை இல்லை. அந்த உருவகத்திலேயே நிறைய குளறுபடிகள் உண்டு. முற்போக்கு என்றால் என்ன என்று அது திட்டவட்டமாக வரையறுத்துக் கொள்ளவில்லை. பொருளாதாரக் காரணிகளின் அடிப்படையிலான வர்க்கப் பிரிவினையில் ஒரு இணைப்பாகவே அதன் தனித் தன்மைகள் கூறப் பட்டுள்ளன. எனவே அடிப்படையில் அது வாழ்க்கையை எளிமைப்படுத்திக்காட்டும் தன்மை கொண்டது. இதன்மூலம் மொழியிலும், அனுபவத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாத வெற்றுப் படைப்புகளை அது உருவாக்க நேர்கிறது. மேலும் அதன் மொழி பற்றிய கருத்தாக்கம் மிகவும் பின்தங்கியது. இப்போது நீங்கள் குறிப்பட்டது போல யதார்த்தவாதமே ஒரே இலக்கிய வகை என்ற பிடிவாதம் அதற்கு உள்ளது. இயல்புவாதம் (Naturalism) என்றுதான் நான் அதை கூறுவேன். யதார்த்தவாதம் (Realism) இந்த முற்போக்கு எழுத்தைவிட விரிவானது. இது ஏன் என்று பார்த்தால் சம்பிரதாயமான மார்க்ஸிய சமூக ஆய்வுமுறையை முழுமையானதாக நம்பி ஏற்பதுதான் காரணம் என்று புரிகிறது. புலனறிவு வாதத்தை முன்நிறுத்தக்கூடியது அது. வரலாற்றையும் மனித மனத்தின் செயல் பாடுகளையும் புலனறிவுவாதத் தின் அடிப்படையில் ஒற்றைப்படையாக அணுகக் கூடியது. அடிப்படையில் இந்தப் பிரச்சனை இருப்பதனால் அதன் அழகியலும் வளரவில்லை. வெளிப்பாட்டுமுறையில் புதிய வடிவங்களுக்கான தேவையும் எழவில்லை.

உண்மையில் எல்லா இலக்கியங்களும் முற்போக்கானவையே. இலக்கியப்படைப்பு மொழியையும், உள்ளுணர்வு சார்ந்த புரிதலையும்(Perception) தொடர்ந்து மாற்றியமைக்கக்கூடியது. புதிய அனுபவ தளங்களுக்குள் நுழையக்கூடியது. அதன் வழியாக வாழ்க்கை மீதான நமது அணுகுமுறையையே நுட்பமாக மாற்றியமைக்கக் கூடியது. இந்தப்பணியை ஆற்றும் ஒரு படைப்பு முற்போக்கானது என்ற நிச்சயம் கூறலாம்.

**நீங்கள் உட்பட மார்க்ஸியர்களிடம் சமூகத்தை மாற்றியமைக்கும் கருத்துகளை பிரச்சாரம் செய்வதுதான் மேலான படைப்பு என்ற கொள்கை இருந்து வந்தது. ஆனால் உள்ளுணர்வு, நுண்ணிய அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் எழுதப்பட்ட படைப்புகள்தான் இன்றும் முக்கியமாக வாசிக்கப்படுகின்றன. உதாரணம் பஷீர். நீங்கள் வலியுறுத்தியவகை படைப்புகள் இந்தப் பதினைந்து வருட காலத்துக்குள் உதிர்ந்துவிட்டன இல்லையா ?**

முன்பே கூறிவிட்டேன், முற்போக்கான கருதது என்பதை தீர்மானிப்பது யார் என்பது முக்கியம் என்று. படைப்பாளி தன் படைப்பின் வழியே நகர்ந்து அதை அடைவதுதான் உண்மையான முற்போக்கு. அதையே எல்லா இலக்கியப் படைப்புகளும் செய்கின்றன. பிற ஆய்வு முறைகள் தங்கள் உபகரணங்கள் மூலம் கண்டுபிடித்து நிறுவிய கருத்துகளையே ஏற்று அவற்றை தங்கள் படைப்புகள் மூலம் முன்வைப்பவர்கள் பிரச்சாரகர்கள், இலக்கியப் படைப்பாளிகள் அல்ல. தனக்குரிய இயங்கு தளத்தை மொழியில் உருவாக்கிக் கொள்ளாத ஒன்று இலக்கியம் என்ற தகுதிக்கு உரியதல்ல என்றுதான் நான் கூறுவேன். மனிதனின் உள்ளார்ந்த அனுபவங்களை உண்மையுடன் எதிர்க் கொண்டு ஆராய்ந்து தனக்குரிய தளத்தில் சுதந்திரமாக முன் நகரும் படைப்புகளே இலக்கியத்தகுதி கொண்டவை.

ஆனால் எல்லா படைப்புகளும் காலத்தை வெல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஜான்பெர்கர், ரேமண்ட் வில்லியம்ஸ் போன்ற விமர்சர்கள் கலையை இரண்டாகப் பிரிக்கிறார்கள். குறுகிய காலக்கலை (Short Term Art) நீண்டகாலக்கலை (Long Term Art). ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் திட்டமிட்டு உருவாக்கப்படும் கலை குறுகிய காலக் கலை. பாடல்கள், குறுங்கதைகள், போஸ்டர்கள், நாடகங்கள் போன்றவை. பிறகு அவை சரித்திர அடையாளங்கள் ஆகிவிடுகின்றன. இவற்றுக்கு இயல்பாக சிலசமயம் நீண்டகாலக் கலையின் இயல்புகள் கைகூடிவிடலாம். நீண்டகாலக் கலைக்கும் குறுகிய காலக் கலையின் இயல்பான உடனடி இலக்கு இருக்கலாம். ஆனால் சில மானுட அடிப்படைகளை தொட்டு அது பேசும், அதன் விளைவாகப் பற்பல உள்ளுரைகள் அதற்கு இருக்கும். காலந்தோறும் அந்த உள்ளுரைகள் மாறிவரும். நீண்ட கால படைப்புகள் பொதுவாக பற்பல பரிமாணங்களும் (Multi-Dimensional) பற்பல உட்குரல்களும் (Polyphonic) உள்ளவையாக இருக்கும். அவை வாசிப்பு விரிய விரிய கூடவே விரிந்து எண்ணற்ற பிரதிகளை உண்டு பண்ணுபவை.

**உங்கள் படைப்புகளில் கணிசமானவை இன்று மறைந்து விட்டனவே. அவை பிரச்சார நோக்கம் கொண்டவை என்பதாலா ?**

ஆம். அவற்றில் பல சமூக மாறுதலை எண்ணி எதிர்ப்புக்குரலாக எழுதப்பட்டவை. குறுகியகாலப் படைப்புகள்தாம். ஆனால் அவற்றில் பல மனித சுதந்திரத்தின் உள்ளார்ந்த சிக்கல்களையும் இருப்பின் துயரங்களையும் தொட்டுப் பேசுவதன் வழியாக அக்காலகட்டத்தை கடந்தும் வந்துள்ளன. சமூக மாற்றம் மட்டுமல்ல காதல், இயற்கை, மரணம் முதலியவையும் இக்கவிதைகளில் பின்னிப் பிணைந்துள்ளன. மேலும் படைப்புகளின் கரு அல்ல அவற்றின் வெளிப் பாட்டமைதியே அத்தகைய நீடித்த ஆயுளை படைப்புகளுக்குத் தருகிறது. மகாபாரதம் ஒரு அரசியல் படைப்புதான். அதன் வெளிப்பாட்டு முறையில் தார்மீகமான சிக்கல்கள் எழுந்து வருகின்றன. காலத்தை படைப்பு எதிர்கொள்ளும்போது இந்த இரண்டு நிலைகளும் சாத்தியமாகின்றன. அந்த காலம் ஒரு பெரிய தொடர்ச்சியின்



படிப்பகம்

www.padippakam.com

ஒரு துளி மட்டும்தானே. எனது படைப்புகளில் கணிசமானவை காலத்தின் ஆழத்துக்கு பல்வேறு விதங்களில் நுழைந்து செல்பவைதாம்.

**ஆனால் தமிழில் வெளிவந்துள்ள உங்கள் கவிதைகளைப் பற்றி அப்படிக் கூறமுடியுமா ?.**

வெளிப்படையான அரசியல் உள்ள கவிதைகள் மட்டுமே தமிழில் என் படைப்புகளாக தெரிவு செய்யப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அங்குள்ள அரசியல் நடவடிக்கை மற்றும் எதிர்ப்பின் ஒரு பகுதியாகவே அவை செய்யப்பட்டன.

**செரபண்ட ராஜூ மற்றும் ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க கவிதைகளை நீங்கள் மலையாளத்தில் மொழிபெயர்த்ததும் இப்படித்தானே ?**

ஆம். நெருக்கடிநிலையின்போது அரசியல் எதிர்ப்பின் ஒரு பகுதியாக செய்யப்பட்டவை அவை.

**இந்திய தேசியம் என்பதில் இன்று உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா ?**

ஒற்றைக்கல் சிற்பம் போல இந்திய தேசியத்தை உருவகித்து வைத்திருக்கும் போக்குகளை நான் முற்றிலும் நிராகரிக்கிறேன். இந்திய சமூகம் ஒரு பன்முக கலாச்சார சமூகம். கலாச்சாரங்களின் தொகுப்பு. அதே சமயம் நிச்சயமாக பொதுவான கலாச்சார அம்சங்களும் (Pan Indian) நிறையவே உண்டு. இந்தியாவில் உள்ள எந்த ஒரு கலாச்சாரத்திற்கும் பிற இந்திய கலாச்சாரங்களை தவிர்த்துவிட்டு தனியானதோர் இருப்பும் தொடர்ச்சியும் சாத்தியமேயில்லை. இவ்வகையில் ஒரு கூட்டு தேசியத்தை நாம் ஏற்கத்தான் வேண்டும்.



**உண்மையில் எல்லா இலக்கியங்களும் முற்போக்கானவையே. இலக்கியப்படைப்பு மொழியையும், உள்ளுணர்வு சார்ந்த புரிதலையும் (Perception) தொடர்ந்து மாற்றியமைக்கக்கூடியது.**

**புரோகித பாரம்பரியம், சந்தை இரண்டைத் தவிர வேறு இணைக்கும் கூறுகள்-இன்னமும் உணர்வு பூர்வமாக- ஏதாவது இந்தியக் கலாச்சாரத்தில் செயல்படுகின்றன என்று கருதுகிறீர்களா ?**

இந்திய மொழிகள் அனைத்திற்கும் பொதுவாக சமஸ்கிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளின் அடிப்படைத்தளம் ஒன்று நிச்சயமாக உள்ளது. தொன்மங்கள், கடவுள்கள், ஆசார மரியாதைகள், சடங்குகள், நம்பிக்கைகள், இதிகாச புராண மரபுகள், அவற்றின் எதிர் மரபுகள் போன்ற பல தளங்களில் பொதுவான அடித்தளம் எல்லா இந்தியக் கலாச்சாரங்களுக்கும் உண்டு. தனித்தன்மைகளும் இந்த பொது அம்சங்களும் பரஸ்பரம் மோதியும் கலந்தும் வளர்ந்தபடியே உள்ளன. பக்தி இயக்கம் தெற்கே தொடங்கி இந்தியாவை முழுக்க அணைத்து, இலக்கிய அடிப்படையில் ஒரு பொதுவான தளத்தை உருவாக்கியது. பிறகு வந்த சமூக சீர்திருத்த இயக்கம், காலனியாதிக்க எதிர்ப்பு, மார்க்ஸிய இயக்கம், நவீனத்துவ இயக்கம் ஆகிய அனைத்திலும் இதே இந்தியப் பொதுத்தன்மை (Pan Indian) காணப்படுகிறது. அரசியல் சமூக மாற்றம் இலக்கியம் ஆகியவற்றில் பொதுவான குவிமையங்கள் (Orientations) நிச்சயமாக உள்ளன. ஆனால் இந்தியக் கலாச்சாரங்கள் ஒவ்வொன்றும் ஒரு 'பொது இந்தியக்' கலாச்சாரத்தின் பல வடிவங்களே என்று கூறும் போக்கில் எனக்கு ஏற்பு இல்லை. அதேபோல இவை ஒவ்வொன்றும் பரிசுத்தமானவை, காற்றுபுகாத அறைகளில் மூடிவைத்து பாதுகாக்கப்பட வேண்டியவை, என்று கூறும் போக்கிலும் சற்றும் உடன்பாடில்லை. நமது மாபெரும் படைப்பாளிகளில் பலர் மூன்று மொழிகளில் ஒரே சமயம் எழுதியவர்கள். பக்தி காலகட்டத்திலிருந்து இன்றுவரையும் இது தொடர்கிறது. இன்று பூர்ஷ்வா சந்தையும் செய்தித் தொடர்பு முறையும் நாம் விரும்பினாலும் இல்லாவிட்டாலும் நம்மை தொகுத்து ஒன்றாக்கும் போக்கை வலுப்படுத்தியபடியேதான் வருகின்றன. நாடுகளுக்கு இடையேகூட இன்று இணைவுகள் நடந்தபடி உள்ளன. நவீன விஞ்ஞானம் எல்லாவிதமான பரிசுத்த வாதங்களுக்கும் எதிரானது.

**அப்படியானால் இந்த பொதுமைப்படுத்தலை அப்படியே ஏற்பதுதான் ஒரே வழியா ?**

நமது தனித்தன்மைகளாகிய கலாச்சார கூறுகளின் சிறப்பம்சங்களை நமது வாழ்வில் கரையச் செய்வது வழியாகவே அவற்றை நாம் தக்கவைத்துக் கொள்ள முடியும். அவை நம் வாழ்வை செம்மைப் படுத்தும் அடையாளங்களாக இருக்க முடியும். ஆனால் கலாச்சார ரீதியாக பல நூற்றாண்டுகளாகவும், அரசியல் ரீதியாக ஒரு நூற்றாண்டுகாலமும் நாம் பங்கிட்டுக் கொண்ட இந்தியப் பொதுத் தன்மையை நாம் அலட்சியம் செய்வது நிச்சயமாக சாத்தியமில்லை. இன்றைய உலக சூழலில் இந்தப் பொதுத்தன்மை அவசியமும்கூட. மூன்றாம் உலக நாடுகளைப் பிளந்து, பரஸ்பரம் முடிவுற்ற போர்களைத் தூண்டிவிட்டு, ஆயுதம் விற்று பிழைக்கின்றன மேற்கு நாடுகள். தங்களை இணைத்துக் கொண்டு மேலும் மேலும் வலிமை பெறுகின்றன. ஒன்றாக வாழ இன்று நமக்குள்ள எல்லா சாத்தியங்களையும் நாம் பயன்படுத்தியே ஆக வேண்டும்.

**இன்று பல்வேறு பகுதிகளில் உருவாகிவரும் பிராந்திய தேசிய வாதங்களைப் பற்றி என்ன கருதுகிறீர்கள் ?**

நமது ஒவ்வொரு பிராந்தியகலாச்சாரமும் பல்வேறு உபகலாச்சாரங்கள் மற்றும் பழங்குடி மரபுகளின் தொகுப்புதான் என்பதை நாம் மறுக்கமுடியாது. ஒரு பிராந்திய தேசியத்திற்குள் அவற்றை சுதந்திரமாக வளரவிடுவது சாத்தியம் என்றால் பொதுவானதோர் தேசிய அமைப்பினுள் அப்பிராந்திய கலாச்சாரங்களும் சுதந்திரமாக வளரவும் முடியும்.

நாம் இன்று உருவாக்கிவரும் கலாச்சார மையப்படுத்தலை எதிர்க்க வேண்டும். எல்லாக் கலாச்சாரங்களையும் சுதந்திரமாக வளர அனுமதிக்க வேண்டும். அதற்கு பிராந்திய கலாச்சாரங்கள் தங்கள் தனிதன்மையை உறுதிசெய்துகொள்ள வேண்டும். பொதுமைப்படுத்தலை எதிர்க்க வேண்டும். இந்த அளவுக்கு மட்டும் பிராந்திய தேசியவாதத்துக்கு முக்கியத்துவம் உண்டு. இதற்கு மேல் இல்லை.

**தமிழ்த் தேசியம் பற்றி நிறையப் பேசப்படுகிறது, இங்கு. கேரள தேசியம் பற்றி என்ன எண்ணுகிறீர்கள் ?**

கேரள தேசியம் தமிழ்த் தேசியம் போன்றதல்ல. பல்வேறு குடியேற்றங்கள் பழங்குடிகள் ஆகியவை கலந்து



படிப்பகம்

www.padippakam.com

உருவான சமூகம் இது. கேரள இலக்கியத்தின் தனித்த அடையாளம் சமீபத்தில் அஞ்சத்து எழுத்தச்சன் முதல்தான் தொடங்குகிறது. நிலபிரபுத்துவகால கலைகள், மரபுகள் ஆகியவையும் சில விசேஷ வாழ்க்கை முறைகளும் இணைந்து சில கலாச்சார தனித் தன்மைகளை உருவாக்கியுள்ளன. அவ்வளவுதான்.

**திராவிட மொழிகளில் ஒன்றில் எழுதும் கவிஞர் நீங்கள். தமிழ் திராவிட இயக்கங்கள் பற்றி என்ன எண்ணுகிறீர்கள் ?**

கேரள மக்கள் திராவிட பாரம்பரியத்தை உரிமை கோர முடியாது. ப்ரோட்டா- அஸ்ட்ராலாய்ட் வம்சத்தைச் சேர்ந்த பழங்குடிகள், ஆரியர், திராவிடப் பழங்குடிகள், மற்றும் மஞ்சள் இனப் பழங்குடியினர் ஆகியோர் கலந்து உருவான சமூகம் இது. தென்னிந்தியர்கள் முழுக்க ஒரே இனத்தவரோ வம்சத்தவரோ அல்ல. தமிழர்களும் அப்படித்தான். வட இந்தியாவின் ஆதிக்கத்திற்கான எதிர்ப்பியக்கம் என்ற அளவில் மட்டுமே திராவிட இயக்கத்திற்கு முக்கியத்துவம். இன்று ஆரியர் குடியேற்றம் என்ற கருதுகோள்கூட மறுவிசாரணை செய்யப்பட்டு வருகிறது. நம்மால் நிரூபிக்க முடியாத பழங்கால ஐதீக வரலாற்றின் அடிப்படையில் அரசியல் இயக்கங்களை உண்டு பண்ணுவது பரம அபத்தமேயன்றி வேறல்ல. திராவிடர்களும் இங்கு வருவதற்கு முன்பு இந்தியாவின் உண்மையான உரிமையாளர்களாக நாங்கள்தான் இருந்தோம் என்று கூறி பழங்குடிகள் பேரியக்கம் ஒன்று ஆரம்பிக்கும்வரைதான் திராவிடவாதம் ஓரளவு செல்லுபடியாகும். 'நாகரிகம்' ஓரங்கட்டிய அந்த மக்களின் தயவில்தான் இதெல்லாம் என்பதை மறக்காமலிருப்பது நல்லது.

**மலையாளத்தில் உள்ள இரு கூறுகளில் (பழங்குடிக் கூறு, சமஸ்கிருதக் கூறு) சமஸ்கிருதமே ஓங்கியுள்ளதாகப் படுகிறதே ?**

சரித்திரப்படி கேரளத்தில் நடந்தது ஆரிய, திராவிட போராட்டமல்ல. ஒருவித சமரசம், கலவை (Synthesis). பிராமணர்களுக்கும் பிற ஜாதியினருக்கும் இடையே மண உறவு இருந்தது. பிற்படுத்தப்பட்ட ஜாதியினர் கூட சமஸ்கிருத பண்டிதர்களாக இருந்தனர். நாராயணகுருவின் மனித சமத்துவம்கூட வேதாந்தத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். சமஸ்கிருத வார்த்தைகள் என்று நீங்கள் கூறும் சொற்கள் புழக்கம் மூலம் மலையாளமாகவே மாறிவிட்டவை. அவை ஒரு பெரிய கலாச்சார உரையாடலின் விளைவுகள். கலாச்சாரத்தை பின்னோக்கி நகர்த்த முடியாது.

**எம். கோவிந்தன் மலையாளத்தைத் தமிழுக்கு அருகில் கொண்டுவர முயற்சி செய்ததுபற்றி என்ன நினைக்கிறீர்கள் ?**

அவருடைய 'திராவிட' எழுத்து சாமானிய மலையாளிக்கு சுத்தமாக புரியவில்லை. வெறும் பரபரப்பு, வேடிக்கை என்றே அவருடைய முயற்சிகள் முடிந்தன. மத அடிப்படைவாதம் போலவே ஆபத்தான ஒன்றுதான் மொழி அடிப்படைவாதம் (Linguistic Fundamentalism). அது மொழியை பின்னோக்கி இழுக்கக் கூடியது. இன மையவாதம், மத மையவாதம், மொழி மையவாதம் அனைத்தையும் நான் தீவிரமாக எதிர்க்கிறேன். இவற்றின் பேரில் பூமியில் நிறைய உதிரம் சிந்தப்பட்டாகிவிட்டது.

மொழி பற்றிய பழைய புலனறிவுவாத அடிப்படையிலிருந்தே இத்தகையத் தூய்மைவாதங்கள் எழுகின்றன. இன்று-பின் அமைப்பியலுக்குப் பிறகு- அவற்றுக்கு தருக்க அடிப்படை இல்லை. ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மொழிபெயர்ப்பு சாத்தியம் என்ற நிலை உலக மொழிகள் அனைத்திற்கும் பொதுவானது. இது ஏன் ? உலக மொழிகள் அனைத்திற்கும் பொதுவானதாக ஒரு தளம் உள்ளது என்று வால்டர் பெஞ்சமின் ஸ்தாபிக்கிறார். புலனறிவுவாதிகள் மொழியை 'சொற்களின் தொகுப்பு' என்று காண்கிறார்கள். சொல் என்பது ஒலிக்குறிப்பான் மட்டுமே என்று கூறுகிறது நவீன மொழியியல். அதில் ஒன்றுமில்லை. மொழி என்பது அது அல்ல. அது இன்னும் விரிந்து பரந்த ஒரு பேரமைப்பு. பல்லாயிரம் வருடங்கள் பலகோடி மனிதர்களின் எண்ணங்கள் மூலம் உருவாகி வளர்ந்தது. எண்ணற்ற முயங்கல்கள் (Synthesis) மூலம் உருப்பெற்றது. அதை சிலர் செயற்கையாக கட்டுபடுத்துவதும் இன அடையாளமாக தக்க வைத்துக் கொள்வதும் சாத்தியமே அல்ல. எல்லா ஞானங்களையும் இயல்பாகவே தழுவி விரிந்தபடியே இருப்பது அதன் இயல்பு. மொழி அடிப்படைவாதம் மொழி வழியாக நமது சிந்தனை மொத்தத்திலும் செலுத்த முயலும் அதிகாரத்தை நாம் தகர்க்க வேண்டும். இன்றைய வாசிப்பின் கடமைகளில் ஒன்று இது.

**ஆரிய-திராவிட மொழிக் கூறுகளின் ஒரு முயக்கத்தையே காண்கிறீர்கள் என்று கொள்ளலாமா ?**

இந்த ஆரிய-திராவிட பிரிவினைக்கு முன்பு என்ன இருந்தது எப்படி இருந்தது என்பதே எனது தேடல். நாம் இன்று இப்படி இரண்டாகப் பிரித்துப் பார்க்கும் இவ்விரு கூறுகளுக்கும் அப்பால் ஒரு பொது அடிப்படை உண்டு என்று கருதுகிறேன். இந்தப் பொது அம்சம் -இதை பிராகிருதம் எனலாமா தெரியவில்லை. எல்லா இந்திய மொழிக்கும் பொதுவானது என்று சில மொழிகள் அறிந்தவன் என்ற முறையில் திடமாகக் கூறமுடியும். வங்காள மொழியிலிருந்து நஸ்ரூல் இஸ்லாமின் கவிதைகளை மொழிபெயர்த்தபோது பாதிப் பங்கு சொற்களை அப்படியே மலையாளத்திலும் போட்டேன். அவை சமஸ்கிருதச் சொற்கள்கூட அல்ல. சகோதர உறவின் இந்த அம்சத்தை தவிர்க்க நான் தயாராக இல்லை. அடிப்படைவாதங்கள் ஒரு வகை மூட நம்பிக்கைகளன்றி வேறல்ல. கதேயும் மார்க்ஸும் உலக இலக்கியம் பற்றி கண்ட கனவு வீண் அல்ல. பின்-நவீனத்தவத்தின் இன்றைய காலகட்டம் உலகப் பொதுமையை நோக்கியே நகர்கிறது. மனிதனின் கீழ்த்தரமான அதிகார வெறி அதை மூழ்கடித்துவிட நாம் அனுமதிக்கக் கூடாது. திராவிடர்கள்கூட இந்த தேசத்துக்கு வெளியேயிருந்து வந்தவர்கள்தாம் என்று கூறப்படுகிறது. இந்த இனப்பிரிவினையே ஐரோப்பியர்களின் கொச்சையான மானுடவியலாய்வின் விளைவு என்றும் கூறப்படுகிறது. ஐரோப்பிய காலனியாதிக்க சக்திகளின் ஆய்வுமுறையை நாம் ஐயத்துடனேயே அணுக வேண்டும்.

**கவிதை ஒரு மொழி அனுபவம் என்று கூறப்படுவதை ஏற்கிறீர்களா ?**

கவிதை மட்டுமல்ல எல்லா இலக்கிய வடிவங்களும் அடிப்படையில் மொழியனுபவங்கள் தாம். கருத்துகள் என்று கூறப்படுபவை கூட மொழியனுபவம் என்ற வரம்புக்குள்தான் வருகின்றன. காரணம் மனமும் மொழிக்குள் இயங்கக்கூடிய ஒன்று. கவிதையில் வார்த்தைதான் முக்கியமானது. இல்லையேல் ஒத்த கருத்துள்ள இரண்டு கவிதைகள் நம்மை ஒன்றுபோலக் கவர்ந்திருக்க வேண்டுமல்லவா ?

**பல கவிதைகளில் அனுபவம் முதிரும்முன் வெளிப்பாடு நிகழ்ந்து விட்டிருப்பதாகத் தோன்றுகிறது. நிகழ்வுகளுக்கு உடனடியாக எதிர்வினைக் காட்டுவீர்களா ? நீங்கள் எப்படி எழுதுகிறீர்கள் ?**

நான் மனத்தூண்டலை (Inspiration) நம்பக் கூடிய கவிஞன். அதன் பிறகுதான் தொழில் நுட்பம்(Craft). என் எல்லா கவிதைகளிலும் அனுபவத்துடன் நான்



படிப்பகம்

www.padippakam.com

கொண்ட மோதலின் பின்புலம் உண்டு. கவிதையின் உத்வேகத்தின் ஒரு பகுதியாகவே அதை செம்மை செய்யும் தொழில்நுட்பத்தைப் பார்க்கிறேன். மரவேலை போலவோ கொத்தவேலை போலவோ திட்டவட்டமாக யோசித்து பிரக்ஞைபூர்வமாகச் செய்யப்படும் தொழில்நுட்பமேதும் கவிதைக்கு உண்டு என்று நான் நம்பவில்லை. கவிதை ஒரு தொழில் அல்ல. கவிதை எழுதுவது உழைப்பும் அல்ல. மிகப் பிரமாதமான செதுக்கல்காரர்களான உள்ளூர் பரமேஸ்வர அய்யரும் ஜி.சங்கரக்குறுப்பும் பெரிய கவிஞர்களாகக் கருதப் படுவதில்லை. இவற்றில் அக்கறையே காட்டாமல் உள்ளுணர்வை நம்பி இயங்கிய சங்கம்புழ கிருஷ்ண பிள்ளையும், பி.குஞ்ஞிராமன் நாயரும்தான் பெரிய கவிஞர்களாக கூறப்படுகிறார்கள்.

**உங்களுடைய சிறந்த கவிதைகளில் அசலான கேரளிய அனுபவம் உண்டு. பல கவிதைகளில் அது இல்லை. ஏன்?**

கேரளியத்தன்மை உடைய கவிதையே சிறந்த கவிதை என்பது தவறான வாதம். கவிதைக்கு இயல்பாக ஒரு கலாச்சார அடையாளம் உண்டுதான். ஆனால் நான் நெருதாவை படிப்பது ஒரு 'சிலி'யன் அனுபவத்திற்காக அல்ல. கவிதையனுபவத்தின் ஒருபுற அடையாளம் - ஒரு அம்சம் - மட்டுமே அது. நல்ல கவிதையை எந்த மொழியில் மொழிபெயர்த்தாலும் அது நல்ல கவிதைதான். இது ஷேக்ஸ்பியர் முதல் ஆக்டோவியா பாஸ் வரை அனைவருக்கும் பொருந்தும். மொழிபெயர்ப்பில் எல்லாவற்றையும் இழந்துவிடும் ஒன்று நல்ல கவிதை அல்ல. எதையும் இழக்காமலிருப்பதும் நிச்சயமாக நல்ல கவிதை அல்ல.



**இன மையவாதம், மத மையவாதம், மொழி மையவாதம் அனைத்தையும் நான் தீவிரமாக எதிர்க்கிறேன். இவற்றின் பேரில் பூமியில் நிறைய உதிரம் சிந்தப்பட்டாகிவிட்டது.**

**உங்களுடைய சிறந்த கவிதைகள் எப்படி உருவாகியுள்ளன? ஒரு சொல் எதேச்சையாக கிடைப்பதன் மூலமா? இல்லை, ஒரு கருத்து தோன்றுவதன் மூலமா?**

கருத்திலிருந்து எந்தக் கவிதையையும் நான் தொடங்கியதில்லை. எப்போதுமே எனக்கு கவிதை மொழியுடன் இணைந்துதான் கிடைத்திருக்கிறது. ஒரு வரி அல்லது சில வரிகள் மனதில் வரும். இவற்றை ஒரு படிமம் அல்லது காட்சி ஆக மாற்றுவேன். அதுவே கவிதையின் பிற அம்சங்களை தீர்மானிக்கும். முதலில் வரும் வரிகள் கவிதையில் முதலில் வர வேண்டியதில்லை. பல சமயம் கடைசியில் கூட அவை இணையும்.

**வாசிப்பின் அரசியல் என்ற பிரபல நூலை எழுதியுள்ளீர்கள். வாசிப்பை இன்றையச் சூழலில் எப்படி நிர்ணயிக்கிறீர்கள்? இலக்கியச் செயல்பாட்டை முழுக்க 'வாசிப்பு' என்பதற்குள் நிறுத்திவிடும் தெரிதாவை எப்படி எதிர்கொள்கிறீர்கள்?**

என்றைக்கும் போலவே இன்றும் வாசிப்பு பல தளங்களில் நடக்கிறது. இந்தப் பேட்டியிலேயே நீங்கள் இலக்கியத்தை பலவிதமான அடிப்படைகள் மீது நின்று பார்க்க முயல்வதைக் காணலாம். ஜாதி, மதம், இனம், வர்க்கம் என்று பல அடிப்படைகள். அதாவது உங்கள் கேள்விகள் ஒவ்வொன்றும் ஒரு பிரச்சினைக்களத்தில் இருந்து எழுகின்றன (Problematique). அதற்கான பரிகாரத்தை ஒவ்வொரு காலகட்டத்திலும் அதற்குரிய அறிவுக்கூறுடன் (Episteme) தொடர்புபடுத்தி உருவாக்குகிறோம். இலக்கியம், பொருளியல், மானுடவியல் போன்ற பற்பல அடிப்படைகளிலிருந்து நாம் படைப்பை அணுகி வருகிறோம். நம்மையறியாமலே இத்தகைய அம்சங்கள் நமது வாசிப்பில் உட்பொதிந்துள்ளன. இதையே சொல்லாடல்களன் (Discourse) என்கிறோம். அதாவது வாசிப்பு என்பது முன்பு கூறப்பட்டு வந்ததைப் போல தூய்மையான, சார்பற்ற, ஒருசெயல்பாடு அல்ல.அதுவும் ஒரு அரசியல் செயல்பாடுதான். இதையே என் நூலில் விரிவாக ஆராய்ந்தேன். அத்துடன் சமஸ்கிருதத்தில் உள்ள த்வனி-அனுமான சித்தாந்தம் மற்றும் தொல்காப்பியம் முதல்தொடர்ந்து வரும் தமிழ் 'குறிப்பு பொருள்' சித்தாந்தம் ஆகியவற்றுடன் இக்கொள்கைகளை சம்பந்தப்படுத்தி அதில் யோசித்திருந்தேன். அந்நூல் வெளிவந்தே பன்னிரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. இன்று இவ்வாய்வு மிகவும் முன்னகர்ந்தும்விட்டது.

நமது மரபை பரிசீலித்தீர்களானால் இங்கும் படைப்பே முன்னிறுத்தப்பட்டது என்பதை காண்பீர்கள். அப்படைப்புகளும் ஒரு குருபரம்பரை, ஒரு பொது மரபு ஆகியவற்றின் விளைவுகளாகவே கருதப்பட்டன. படைப்பை தனிப்பட்ட படைப்பாளியின் ஆத்ம வெளிப்பாடாக கொள்ளும் மரபு நமக்கு இல்லை. தனி மனித வாதம் மேலோங்கியபோதுதான் படைப்பாளி முன்னிறுத்தப் பட்டான். இது இருத்தலியல் சித்தாந்தங்களோடு பெரிதும் சம்மந்தப்பட்டது. நவீன விமர்சனம் படைப்பு படைப்பாளி இரண்டுக்கும் மேலாக வாசிப்பு மற்றும் வாசிப்புச் சூழலை முன்னிறுத்தியது. உள்வாங்கல் சித்தாந்தத்தை முன்வைக்கும் ரொமான் இங்கார்டன், ரொபார்ட் ஜாஸ், ஒல்ப் காங் ஈசர் முதலியவர்கள் வாசிப்புக்கு பின்புலமாக உள்ள கருத்துச் சூழலை பெரிதும் வற்புறுத்துகி றார்கள். இந்தச் சூழலுக்கு ஏற்ப ஒவ்வொரு காலகட்டத்திலும் படைப்பிலிருந்து எடுக்கப்படும் உள்ளுரைகள் மாறுபடுகின்றன என்கிறார்கள். கம்ப ராமாயணம் பக்தி இலக்கிய காலகட்டத்தில் அளித்த பாடம் ஒன்று திராவிட இயக்க காலகட்டத்தில் அளித்த பாடம் இன்னொன்று இல்லையா?

தெரிதா இன்னும் விரிவாக பேசுகிறார். அவருடைய கவனம் எழுத்தில் வெளிப்படும் தருக்கத்தை வாசகன் தகர்த்துக் கொண்டு வாசிக்கும் செயல்பற்றியதாகும். தகர்ப்பு வாசிப்பு என்று இதைக் கூறலாம். எந்திரத்தனமான ஒரு பண்டிதத்தன்மையல்ல இது. மிகவும் படைப்பூக்கம் கொண்ட ஒரு அணுகுமுறையாகும். ஒரு படைப்பு நம்முடன் பேச முன் வரும் போதே சில அடிப்படைகளை வலியுறுத்தியப்படியே வருகிறது இல்லையா? பிற அடிப்படைகளை விடுங்கள். 'நான் ஒரு பிரத்தியேகமான அறிவு வடிவம்' அல்லது 'இலக்கியம்' என்று அது கூறுகிறது. குறைந்த பட்சம் 'வாசகன்','வாசிப்பு', 'புரிதல்'போன்ற சில அடிப்படைகளையாவது அது வலியுறுத்துகிறது இல்லையா? இக்கருதுகோள்களைக் கூட மறுத்தப்படி வாசிப்பதுதான் தகர்ப்பு வாசிப்பு. நூல்கள் அனைத்தும் சில சித்தாந்தங்களின் பின்புலம் உடையவை. அதிகாரம் சித்தாந்தங்களின் மீது



படிப்பகம்

www.padippakam.com

கட்டப்படுகிறது. சித்தாந்தங்களைத் தகர்ப்பதன் மூலம் அதிகாரத்தை தகர்க்க முடியும் என்பது தகர்ப்பு வாசிப்பின் மூலம் முன் வைக்கப்படும் வாதம். நிறைய சாத்தியங்கள் உள்ள ஒரு வாசிப்பு ரீதிதான் இது. இதை ஓர் அரசியல் நடவடிக்கையாகவே தெரிதா காண்கிறார். புத்தகத்தைத் தொட்டுக் கும்பிடக் கூடிய நமது சமூகத்தில் இதன் பணிகள் அனேகம். துரதிருஷ்டவசமாக அமெரிக்க விமர்சகர்கள், கல்வித்துறை ஆட்கள் இதை பிய்த்து குதறி தீங்கற்றதோர் கல்வித்துறைச் சித்தாந்தமாக மாற்றிவிட்டிருக்கிறார்கள். அதன் ஆதார நோக்கமே திசைமாறிவிட்டது. விழிப்போடு அணுகாவிடில் நாமும் முடிவற்ற சித்தாந்த விவாதத்தில் தேவையின்றி அகப்பட நேரும்.

நான் தெரிதாவை ஏற்கவில்லை. ஸ்தாபனங்களையும் அதிகாரங்களையும் வாசிப்பு வழியாக மட்டும் அசைத்துவிட முடியுமென்று நான் நம்பவில்லை. அனைத்து விஷயங்களையும் சொல்லாடலாக குறுக்கிவிடுவதிலும் எனக்கு உடன்பாடு இல்லை. இன்று நமது வாசிப்பு மாறிவருகிறது. தகவல் தொடர்பு முறைகளின் பெருக்கம் மொழிவழி தொடர்பை இரண்டாமிடத்துக்கு தள்ளுகிறது. எனவே வாசிப்பு என்ற சொல்லை அனைத்துவகை தொடர்புகளுக்கும் பொருந்தக்கூடியதாக விரிவு படுத்த வேண்டும். இவ்வகையில் பார்த்தால் ஒவ்வொரு கணத்திலும் கருத்துகளை உள்வாங்கும்போதும் அல்லாத போதும் விழிப்போடு இருக்க வேண்டியுள்ளது. ஃபூக்கோ குறிப்பிடும் நுண்புரட்சி (Micro Revolution) இங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

**அமைப்பியலும் பின்அமைப்பியலும் ஒரு மோஸ்தர் மயக்கத்துடன் தமிழில் பேசப்படுகின்றன. இந்திய சிந்தனையில் அவற்றின் பங்கு என்ன ?**

அமைப்பியல், பின்-அமைப்பியலை இன்று மோஸ்தராக கருதுகிறார்களா அங்கு ? ஆச்சரியம்தான். அவை மிகவும் பழையனவாக ஆகிவிட்டன. மேலும் ஒரு பெரிய விவாதத்தின் பகுதிகள் அவை. தனியாகப் பிரித்துப் பேசுவதும் சரியல்ல.

அமைப்பியலின் சாதனை என்றால் இலக்கியத்திற்கு முன்பு தரப்பட்டுவந்த கற்பனையான ஒரு மர்மம் இருக்கிறதே அதை உடைத்ததுதான். மொழியின் இடம் நாம எண்ணுவதைவிட விரிவானது என்று அது நிறுவியது. படைப்பாளி மொழியையும் பொருளையும் உருவாக்குவதில்லை, மாறாக அவற்றின் மொத்தத்துக்கு உள்ளேதான் அவனும் செயல்படுகிறான் என்று அது காட்டியது. ஒரு வகையில் உலகின் எல்லா தத்துவ மரபுகளிலும் முன்பே பேசப்பட்டு வந்த விஷயங்கள்தாம் இவை. புதிய தருக்க முறையில் இவை தொகுக்கப்பட்டதே அமைப்பியல் எனலாம்.

அமைப்பியலின் குறைகள் என்னவென்றால் அது வரலாற்றை - அதன் வளர்ச்சியையும் நீட்சியையும் - புறக்கணித்தது. ஒரு அமைப்பு (System) தொடர்ந்து தனக்குள் மாறியபடியே இருப்பதுதான் வரலாறு என்று அது உருவகித்தது. இரண்டாவதாக எல்லா செயல்பாடுகளையும் அது மொழியின் வழியாகவே பார்த்தது. மொழியின் நிகழ்வுகளே உலக நிகழ்வுகள் என்றுகூட எண்ணியது. மூன்றாவதாகத்தான் அதன் தருக்க அமைப்பில் உள்ள மிகப்பெரிய குறை வருகிறது. அது ஆசிரியனை (Author) இல்லாமல் செய்து அந்த இடத்தில் அமைப்பை (system) வைத்தது. ஆனால ஆசிரியனுக்கு வழக்கமாகத் தரப்படும் எல்லாப் பண்புகளையும் அமைப்புக்குத் தந்தது. ஒருமை (unity), சுயமான இயங்கும்தன்மை (autonomy), தன்னை திருத்தியமைக்கும் தன்மை (self correction) முதலிய இயல்புகளை.

**மனிதன் இல்லை, பிரம்மம்தான் உண்டு என்று கூறிவிட்டு பிரம்மத்திற்கு மனித குணங்களை கற்பிப்பது போலவா ?**

அதேதான். மேலும் அமைப்பியல் பனுவலை (text) காலத்தில் முன்னோக்கி நகரும் ஒரு சலனமாகப் பார்க்கவில்லை. ஒரு இடத்தில் உள்ள ஒரு பொருளாகப் பார்த்தது (An object in space not a movement in time) மேலும் வாசகனை மத, மொழி, இன, பால் வேறுபாடுகள் ஏதும் இல்லாத ஒரு மொத்தையான வடிவமாக பார்த்தது. இதெல்லாம் பிரச்சினைகள். மேற்கிலிருந்து வந்ததனாலேயே ஒன்றை வெறுப்பதும் சரி, பரபரப்படைந்து அணைத்துக் கொள்வதும் சரி, தவறானவையாகும். எல்லா சிந்தனைப் பாய்ச்சல்களும் வெளிமோதல்கள், இணைவுகள் வழியாகவே நடந்துள்ளன. நம்முடைய பாரம்பரிய இலக்கிய அணுகுமுறையுடன் இவற்றை நாம் எதிர்கொள்வதன் மூலமே நமது பார்வைகள் உருவாக முடியும்.

**அமைப்பியல் படைப்பாளியை புறக்கணிக்கிறது என்றும், படைப்பாளியின் தார்மீகத் தன்மை பொருட்படுத்தப்பட வேண்டிய ஒன்றல்ல என்றும் கூறப்படுகிறது. இவை மார்க்ஸியர்களின் நிலைபாடுகளை நிராகரிக்கிறதல்லவா ?**

மார்க்ஸிய அழகியலுக்கும் பின் - அமைப்பியலுக்கும் இடையே நேற்று விரிவான விவாதங்கள் நடந்து ஓய்ந்துவிட்டன. நீங்கள் கூறுமளவுக்கு பரஸ்பர எதிர்ப்பு உண்மையில் இவற்றுக்கு இடையே இல்லை. அல்தூஸர், பியரி மாஷெரி, டெர்ரி ஈகிள்டன் முதலியவர்கள் இவற்றை இணைக்க முயன்றதுண்டு. எனது டாக்டர் பட்ட ஆய்வும் இதற்கான முயற்சிதான். தார்மீக அடிப்படைகளை பின் அமைப்பியல் நிராகரிக்கிறது என்பது சில பின் அமைப்பியல்காரர்களின் தவறான புரிதல்தான். தார்மீக நிலைபாடு, அறச்சார்பு முதலியவற்றை எழுத்தாளனின் ஆளுமையின் பகுதியாக மட்டும் பார்க்கும் பழைய அணுகுமுறையைப் பின் அமைப்பியல் ஏற்கவில்லை, அவ்வளவுதான். அறச் சார்பின் பிரச்சினைகளை எழுத்தின் மண்டலத்திலிருந்து நகர்த்தி வாசிப்பின் மண்டலத்திற்குக் கொண்டு வருகிறது இது. காரணம் பின்-அமைப்பியலின் படி எழுத்து-வாசிப்பு என்பது ஒரு தனி நபர் பிரச்சினை அல்ல. இதனால் எழுத்தாளனிடம் இப்படி எழுது என்று கூறவோ, ஏன் எழுதினாய் என்று கோபப்படவோ எந்தவித முகாந்திரமும் இல்லாமலாகிறது. அதாவது பனுவலின் (text) சுதந்திரம் அங்கீகரிக்கப்படுகிறது. இது மேலும் ஜனநாயக ரீதியான அணுகுமுறை என்றும், மார்க்ஸிய அடிப்படைகளுக்கு விரோதமானதல்ல என்றும்தான் எனக்குப் படுகிறது.

டால்ஸ்டாயின் சொந்த வாழ்க்கை அவருடைய படைப்புகளை அணுக தடையாக அமையலாகாது என்று லெனின் கூறியது இந்த அடிப்படையில்தான். பிரபல மொழியியலாளரான மிகாயெல் பக்தின் 'கருத்து நிலை மொழியில் உள்ளுறைந்துள்ளது' (ideology is inscribed in language) என்று கூறியதும் இதனுடன் ஒத்துப் போகிறது.

**எதிர்க் கலாச்சாரம், மிஷெல் ஃபூக்கோ பற்றி உங்கள் கருத்து என்ன ? நமது சூழலில் இந்த சிந்தனைகளின் பங்கு என்ன ?**

அதிகார பிரயோகம், ஸ்தாபனங்கள் ஆகியவற்றுக்கு இடையேயான நுண்ணிய உறவுகளை ஆய்ந்தறிய ஃபூக்கோ மிகவும் உதவியானவர். பள்ளி, சிறைச்சாலை, மருத்துவமனை, பைத்தியக்கார விடுதி முதலிய நிறுவனங்களின் பிறப்பு, வளர்ச்சி பற்றிய ஃபூக்கோவின் ஆய்வுகள் மிக முக்கியமானவை. குறிப்பாக நமது சமூகத்தில் மிகப் பெரிய நிறுவனமாகிய குடும்பம் பற்றி அறிந்துகொள்ள. அரசாங்கத்தை தூக்கி வீசி விடக்கூடிய



படிப்பகம்

www.padippakam.com

ஒட்டுமொத்த புரட்சியை ஃபூக்கோ ஏற்கவில்லை. காரணம் அந்த அதிகாரம் பற்பல ஸ்தாபனங்களின் மீது கட்டப்பட்டுள்ளது. மிக நுண்மையாக செயல்படுகிறது.

**கிராம்ஷியும் இதைத்தான் கூறுகிறாரா ?**

ஸ்தாபனங்களுக்கும் அதிகாரத்திற்குமான உறவு பற்றிய க்ராம்ஷியின் சிந்தனைகளின் விரிவாக்கம்தான் ஃபூக்கோவில் உள்ளது. நான் முன்பே கூறியபடி இது ஒரு பெரிய கூட்டு விவாதத்தின் ஒரு பகுதியாகும். ஃபூக்கோ அதிகாரம் செயல்படும் விதத்தை நுண்ணிய அலகுகளாக பிரித்து ஆராய்கிறார். கிராம்ஷி போல பொதுப்படையாக அல்ல. இதை அதிகாரத்தின் நுண்ணிய பௌதிக இயக்கம் (The micro physics of power) என்று கூறுகிறார். பற்பல தளங்களில் நுண்மையாகவும் இடைவிடாமலும் நடக்கும் எதிர்ப்பு மூலமே அதிகாரத்தை எதிர்கொள்ள முடியும் என்று அவர் கருதினார். (Transversal struggles). பின்-மார்க்ஸிய சிந்தனைக்கு ஃபூக்கோவின் பங்கு மிக முக்கியமானது.

**ஃபூக்கோவுடன் எவற்றில் வேறுபடுகிறீர்கள் ?**

அரசு, சித்தாந்தம் போன்ற உருவங்களை முற்றிலும் தவிர்த்து விட்டும், எதிர்ப்பியக்கங்கள் எதிர்ப்பு நிறுவனங்கள் போன்றவற்றை நிராகரித்துவிட்டும் இன்றைய உலகில் உள்ள ஏகாதிபத்திய ஆதிக்கப் போக்கை எதிர்கொள்ளுவது சாத்தியம் என்று நான் கருதவில்லை. சமூக தளத்தில் மாற்றங்களை திட்டமிடுவதற்கு ஃபூக்கோவின் அணுகுமுறைகள் பெரிதும் உதவிகரமானவை. ஆனால் அவையே போதுமானவை அல்ல. இந்தியாவைப் பொறுத்தவரை நமக்கு ஒரு எதிர்க் கலாச்சார மரபு உண்டு. சார்வாக மரபு, ஆரம்ப கால பௌத்தமரபு, பக்தி இயக்க காலத்து சூத்திர எழுச்சி போன்ற பல இயக்கங்களில் எதிர்க்கலாச்சார அம்சங்கள் உள்ளன.. இவற்றுக்கிடையே நுண்ணிய முரண்பாடுகள்உள்ளன. உள்ளுறைந்த அதிகாரமும் உண்டு. இன்றைய நவ-காலனி ஆதிக்கத்துக்கு எதிரான கூறுகளை அவற்றில் நாம் கண்டறிய முடியும். செயல்படுத்தப்படும்போது அவை கொள்ளும் பரிணாமம் மூலமே அவற்றின் முக்கியத்துவத்தை நாம் உணரமுடியும். எதிர்க்கலாச்சார செயல்பாடு என்பது அடிப்படையான அறச்சார்பில் ஊன்றிய ஒரு அரசியல் இயக்கமாகும். வெறும் மோஸ்தராக அதை மாற்றக்கூடாது. நமது வரலாற்றிலிருந்தே அதற்கான வேர்களை நாம் எடுக்க வேண்டும். மக்களை சம்பந்தப்படுத்துவதன் மூலமே வளர்க்கவும் வேண்டும்.

**கிராம்ஷியின் சித்தாந்தத்தின்படி, ஒரு குறிப்பிட்ட கருதுகோள் குறிப்பிட்ட ஜன சமூகத்தின் படைப்பாகத் தொடங்கி, பற்பல ஜன சமூகங்களின் பல கருதுகோள்களுடன் சமரசம் செய்து கொண்டு வளர்ந்து, ஆதிக்கக் கருதுகோளாக மாறுகிறது. மேலாதிக்கத்தை (Hegemony) நிறுவுகிறது. அதிகார வர்க்கத்தையும் உருவாக்குகிறது. இந்தியச் சூழலில் இதன் சித்திரம் என்ன ?**

இந்தியாவில் இன்று உள்ளது வர்க்கம், வர்ணம், பால் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட முப்பட்டை அதிகார மேலாதிக்கமாகும் (Triple hegemony). சாம்ராஜ்யத்துடன் வெளிப் படையாகவே சமரசம் செய்து கொண்டுள்ளது நமது அதிகார வர்க்கம். இதற்கு பின்புலமாக உள்ள நவ முதலாளி வர்க்கத்திற்கும் சுதந்திரப் போராட்ட கால இந்தியாவில் வளர்ச்சி நிலையிலிருந்த முதலாளி வர்க்கத்துக்கும் அடிப்படையில் பெரிய வேறுபாடு உண்டு. இது பேராசையும், ஆக்கிரமிப்பு குணமும் கொண்டது. மதிப்பீடுகளை இழந்தது. இரண்டாவதாக, இத்துடன் கைகோர்த்துக் கொண்டுள்ள பிராமண ஆதிக்கம். அடுத்தப்படியாக ஜனத்தொகையில் பாதியை அடிமையாக வைக்கும் ஆண் மேலாதிக்கம். இவற்றுக்கு எதிரான எதிர்வியக்கங்களையே உண்டு பண்ண வேண்டியுள்ளது. அதாவது பிராமண ஜாதிக்கு எதிராகவும் ஆண் வர்க்கத்துக்கு எதிராகவும் உள்ள தனித்தனியான போராட்டங்கள் அல்ல. பின்னது இரண்டும் சமூக தளத்தில்-முன்பே குறிப்பிடப்பட்டது போல நுண்ணிய தளங்களில் (micro level) எதிர் கொள்ளப்பட வேண்டியவை. இத்தகைய கூட்டான போராட்டம் வழியாகவே இங்கு ஏதாவது சமூக மாற்றங்கள் நிகழ முடியும். இந்தியச் சித்திரம் நவ முதலாளி வர்க்கமானது பிராமணியம், ஆணாதிக்கம் ஆகிய கருதுகோள்களையும் மேற்கத்திய மேலோட்டமான ஜனநாயக கருத்துக்களையும் தொகுத்துக் கொண்டு மேலாதிக்கத்தை அடைந்து இருப்பதாகும். நாம் எதிர் கொள்வது மொத்தமாக இதைத்தான்.

**மொழி அதிகாரத்தின் ஊடகம் என்கிறார்கள். சில அற மதிப்பீடுகளும் ஒழுக்கங்களும் அதிகாரத்தின் பொறிகள் என்கிறார்கள். படைப்பாளியின் சுதந்திரம் எதுவரையில் ? எழுத்தாளனில் அதிகாரம் எப்படி உள்ளுறைந்து செயல்படுகிறது ?**

அதிகாரம் பூமியில் ஒருபோதும் இல்லாமலாவதில்லை. அதிகாரம் எல்லா நிலையிலும் எதிர்மறையானதுமல்ல. அது சர்வாதிகாரம் ஆகும் போதுதான் எதிர்க்கப்பட வேண்டும். அதிகாரம் சமூகம் முழுவதிலும் பரவி அதன் மூலமாக வெளிப்பட வேண்டும். காந்தியின் 'சத்யாகிரகம்' ஒரு வகை அதிகார செயல்பாடுதான். அதை 'அடக்கு முறை' என்பவர்கள் கூட உண்டு. நான் அவர்களை நிராகரிக்கிறேன். தார்மீகமான ஆயுதங்களும் இழக்கப்பெற்றால் பின்பு மக்களுக்கு என்ன தான் மிஞ்சியிருக்கிறது ? இலக்கியவாதியின் அதிகாரம் ஒரு வகையில் சத்தியாகிரகியின் அதிகாரம் போன்றதாகும். பிறர் மனதை மாற்றியமைப்பதற்கான முழுமூச்சான, வதைக்கும் தன்மை இல்லாத, ஒரு முயற்சிதானே அது? ஒழுக்க மதிப்பீடுகளும் அறமதிப்பீடுகளும் அதிகாரப் பிரயோகங்கள்தாம். ஆனால் அவை சாதகமானவை. சமூகத்தின் சாரத்திலிருந்து வருபவை. இலக்கியப் படைப்பு பிரச்சாரம் வழியாக வாசகனிடம் அதிகாரத்தை செலுத்துமானால் அது சரியான படைப்பல்ல. சித்தரிப்பே அதன் வழிமுறை. துயரைச் சித்தரிக்கும் ஒரு படைப்பு அத்துயரை நீக்கும் வழிமுறைகளை பரிசீலிக்கும்படி வாசகனை தூண்டத்தானே செய்கிறது ? கோஷமிடாமலேயே ஒரு நல்ல படைப்பு உங்களை உள்ளும் புறமும் பார்க்க வைக்க முடியும். அதற்கு அது உங்களில் செலுத்தும் அதிகாரமே காரணம். அதேசமயம் பலகுரல் தன்மை, பற்பல உள்ளுறைகள் ஆகியவற்றை கொண்டிருப்பதன் வழியாக அது பலவிதமான வாசிப்புக்குரிய சுதந்திரத்தை வாசகனுக்கு அளிக்கிறது. படைப்பின் ஜனநாயக அம்சம் இதுவே. நல்ல படைப்பு ஒற்றைப் படைத்தன்மை கொண்டதல்ல. ஒற்றைப்படை தன்மையே சர்வாதிகாரம் என்பது. வாசிப்பை முதன்மைப்படுத்துவது மூலம் நவவிமரிசனம் சொல்வதும் இதையே. ராமாயணத்தையும் மகாபாரதத்தையும் நாம் ராவணன், சம்புகன், துரியோதனன் ஆகியோரின் வழியாகவும் வாசிக்கலாம். அப்படி காலங்காலமாக வாசிக்கப்பட்டதன் பிரதிகளும் நம்மிடையே உள்ளன. படைப்பின் ஜனநாயகத் தன்மையை வைத்தே அதன் அதிகாரம் சாதகமானதா பாதகமானதா என்று அளக்க வேண்டும். எல்லா அதிகாரங்களையும் அவற்றின் ஜனநாயகத் தன்மையை வைத்தே மதிப்பிட வேண்டும்.

●



படிப்பகம்

www.padippakam.com

# இரண்டு கவிதைகள்

இருண்ட கண்களுடன்
'ப்ளோரஸன்ட்' பசுமையுடன் அவை
எப்படி கிளிகளாயின

குழலார்ந்த உடலும் கண்ணாடி
இழையார்ந்த கால்களுடன் அவை
எப்படி கிளிகளாயின

சுட்டெரிக்கும் தென்னையின் உச்சி
அனேகமாய் பாழ்பட்ட மரத்தின்
குடைசல்களில் வாழவொண்ணா அவை
எப்படித்தான் கிளிகளாயினவோ

சில வினாடிகள் தொடர்ந்து பறக்கவியலா
இந்த அசடுகள்
எண்ணத்தின் வீச்சை சிறகில்
உயிர்க்கும் கிளிகளுக்குச் சமமா?

பச்சையெல்லாம் கிளிகளென்றால்
முற்றத்து உத்திரத்தில் தொங்கும்
கிளிக்கூண்டை வந்து பார்

சாம்பல் பூத்த உடல் கண்டு
வெட்டுக் கிளிகள் நைச்சியமாய்
சிரிக்கும்.

o

விடிகாலை ஒரு உன்னதமான விஷயம்
'ஓசோன்' படலம் கிழித்து சூரியன்
பிடரியில் புலரும்.


முன் நெற்றி வியர்வை மூக்கில் தெறிக்க
முழங்கால் மடியும்
உடல் மும்முரமாய் ஓடும்.

எதுகையும் மோனையும் சதா
அலைபாயும். வாழ்வில் சந்தோஷம்
துள்ளும். எங்கும் உற்சாகம்
மலைத் தொடரைக் குனிந்து பார்க்கும்
ரயில் வண்டி.

பகல் பொழுதுகள் வியர்வையில்
கரையும் அரித்தெடுத்தால்
எல்லாம் தங்கம். எச்சிற் தட்டில்
நெய் வழியும். கீழிறங்கா அலையென
ஒவ்வொரு அணுவும் உயரம் தாண்டும்.

வெற்றிக் களிப்பு உயிரணுவை
உக்கிரமாய் வெளியேற்றும்
இரைச்சலான இரவுகளில் வெள்ளி
மௌனம் பூக்கும். உடல்
பதறப் பதற சாந்தி பெறும்.
எல்லாம் ஒரு கணம் போல
கடுகி மறையும் வேளை
தூண்டிற் புழு ஒன்று சுந்தரமாய்
சிரிக்கும்.

உமாபதி





படிப்பகம்

www.padippakam.com

# பட்டுவாடா

**சுந்தர ராமசாமி**



அவளுடைய பெயர் நிலைபெறாமல் இருந்தது. சிறு வயதில் கிராமத்தில் அவள் வேலை செய்துகொண்டிருந்த வீட்டு அம்மாள் நகரப்பெயர் வைத்து அவளை அழைத்தாள். வேலை முடிந்து குடிசை திரும்பியதும் பழைய பெயர் வந்துவிடும். அரசியல் இளைஞன் அவளைத் திருமணம் முடித்தபோது சீர்திருத்தப் பெயர் வைத்து அழைப்பிதழ் அடித்தான். துப்பாக்கிச் சூட்டில் அவன் இறந்தபோது அன்றைய விலைவாசியையொட்டி ஒரு தொகை அவளுக்குக் கிடைத்தது. அவளுடைய குடும்பம் குறுகிய காலத்தில் அதைச் சூறையாடித் தீர்த்தது. அரசாங்கத்திடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் அவ்வப்போது சிறு சிறு தொகைகள் அவளுக்கு வந்து சேரும். மறுமணம், குழந்தைப் பேறு, கடுமையான நோய்கள், கைத்தொழில்கள், விபத்துகள் தரும் மரணம் அல்லது ஊனம் இவற்றில் எவற்றுக்கெல்லாம் உதவிப் படிவங்கள் தனித்தனியாக அச்சாகி இருந்தன என்பது அவளுக்கு ஏகதேசமாகத் தெரியும். சில படிவங்களின் எண்களும் அவள் நினைவில் இருந்தன. பூர்த்தி செய்யாத படிவங்களில் அவள் தொடர்ந்து கையெழுத்துப் போட்டுக்கொண்டிருந்தாள். பட்டுவாடா ஆகும்போது கால் பங்குக்குக் குறையாமல் அவளுக்குக் கிடைக்கும். அதற்கு மேலும் சில சமயங்களில் கிடைத்திருக்கிறது. பெண்களுக்கு கர்ப்பப்பையில் வரும் புற்று நோய்க்கு ஜெர்மன் துரை ஒருவர் பணம் ஒதுக்கியிருந்தார். நபருக்கு ஒரு லட்சம். நோய் மூன்றாவது நிலையை எட்டிவிட்டதாகச் சான்றிதழ் வேண்டும். தாய்மொழி தமிழாகவும் வயது எண்பதுக்குக் குறைவாகவும் இருக்க வேண்டும். அவளுக்கு இரண்டு தகுதிகள் இருந்தன. அவள் கணவனின் நண்பன் இதைச் சொல்லும்போது அவளுக்குக் கோபம் வரும். 'கோபப்படாதே தாயி, ஒரு லட்சம் ரூபாய்' என்பான் அவன். குபேரா அடுக்குமாடிக் கட்டடங்களில் வேலைக்குப் போகத்தொடங்கிய பின் அவளுடைய அரசியல் தொடர்புகள் தேய்ந்து போய்விட்டன. வேலை தண்டவாளத்தில் விழுந்திருந்தது. சிறுசிறு எரிச்சல்கள் இருந்தாலும் கிரீச்சிடாத வாழ்க்கை. வீட்டுக் குழந்தைகள் மீது ஒட்டுதல் அடர்த்தி கண்டு தன் வீட்டுக்குக்கூட போக மனமில்லாமல் அவளை ஆக்கிவிட்டிருந்தது.

ஒரு நாள் அவளுடைய பெயருக்குப் பதிவுத் தபாலில் கடிதம் வந்தது. ராஜ வீதியில் 119ஆம் எண் கட்டடத்துக்கு வந்து ரூபாய் 500 வாங்கிக்கொண்டு போகும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தாள். எதற்கு என்பது அவளுக்குத் தெரியவில்லை. எஜமானி அம்மாளுக்கு ஆங்கிலம், தமிழ் தெரியாது. 119ஆம் எண் கட்டடத்தைப் பற்றிக் கேள்விப்படாதவர்கள் அந்த நகரத்திலேயே இருப்பதாகத் தெரியவில்லை. கடிதத்தில் தட்டச்சுப்பொறியின் பதிவு மங்கலாக இருந்ததால் தொகை ஐயாயிரமோ என்ற சந்தேகம் எஜமானிக்கு வந்தது. ஒரு பூஜயத்திற்குரிய இடைவெளி இருந்தது என்பதில் சந்தேகமில்லை. யாருக்கும் தெரிவிக்காமல் முழுத்தொகையையும் தானே பெற்றுக் கொண்டுவிட வேண்டும் என்ற ஆசை அவளுக்கு ஏற்பட்டது.

119ஆம் எண் கட்டடத்திற்குப் போய்ச் சேருவது சுலபமாக இருக்கவில்லை. வெகுதூரம் நடக்க வேண்டியிருந்தது. இரண்டு விதமான வாகனங்களில் ஏறி இறங்க வேண்டியிருந்தது. மீண்டும் நடக்க வேண்டியிருந்தது. மாறி மாறி விசாரிக்க வேண்டியிருந்தது. உயரமும் பருமனுமாய் வானவெளியை மலை போல் அடைத்துக்கொண்டு கிடக்கும் கட்டடம். கதவிலக்கம் ஒன்று என்றாலும் உட்பிரிவுகள் முடிவற்றவை. கடைகளும் அலுவலகங்களும் திரையரங்குகளும் இருந்தன. மிக உயரமான தளத்தை மேகங்கள் சூழ்ந்து கொண்டிருப்பதுபோல் தோன்றிற்று. அந்தத் தளத்திற்குள் எண்ணற்ற கூடங்கள் இருக்கின்றன என்றார்கள். கட்டடத்தின் மிக உயரமான முகப்பைப் பார்க்க முன் வாசலின் எதிர்த் திசையில் ஐந்தாறு நிமிஷங்களேனும் நடந்து போக வேண்டியிருக்கும்.

மேல் தளங்கள் புத்தம் புதிதாக இருக்க அடித்தளங்கள் பாசிபடிந்தும் பழுதுபட்டும் கிடந்தன. அன்றும் முன்வாசலில் வெகுநேரம் அலுப்புடன் நின்றுவிட்டுத் திரும்பினாள் அவள். குழப்பம் மிகுந்து நெருக்கடியில் மனம் வெடித்துவிடும் என்று தோன்றும்போது அவள் திரும்பிவிடுவாள். மூன்றாவது தடவையாகவா நான்காவது தடவையாகவா என்பது அவளுக்கு நினைவில்லை. வரும்போது மனம் தெளிவாகவே இருக்கும். உடல் இறுக்கமில்லாமல் தளர்ந்திருக்கும். ராஜவீதிக்குள் நுழைந்ததும் சிறுகச் சிறுக கலவர உணர்ச்சி தோன்றத் தொடங்கும். அதை அமுக்க முயலும்போது உணர்ச்சிகள் மேலும் கூர்மையாகிக் கூத்தாடத் தொடங்கிவிடும். அதன்பின் பீதி உருத்திரண்டு நடு நெஞ்சில் தூண்போல் விட்டம் வைத்து வீங்கும். 119இன் நெரிசலின் உள்ளிழுப்பில் செருகிக் கொள்ளவும், உருவி வெளியே வரவும் ஒரு வாசலே இருந்தது. நெரிசல், படம் முடிந்த நேரத்தைய திரையரங்கு வாசல்களை நினைவுபடுத்தின. விஷமச்சிறுவர்கள் தெருவிலிருந்து நெரிசலை நோக்கிக் காகிதச் சுருள்களை விட்டெறிவார்கள். அவை உடல்களில் தங்கி தளம் தளமாகப் போய்க் கொண்டிருக்கும் என்பது அவர்களுடைய நம்பிக்கை.

ரவிக்கைக்குள் மார்புக்குவட்டில் சிறிய பணப் பையில் கடிதத்தை மடித்து வைத்துக் கொண்டிருந்தாள் அவள். உடலால் அதன் இருப்பை உணர்ந்துகொண்டே நெரிசலுக்குள் தன்னைச் செருகிக் கொண்டாள். வெயில், உஷ்ணம், வேர்வை நாற்றம் சகிக்க முடியாமல் இருந்தன. முதல் தளத்தில் சுவர்கள்மீது தன் உடல்களை வரிசையாகப் பதித்துக்கொண்டிருந்த ஜீவன்கள் ஒற்றைக் கேள்வியைத்தான் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தன. 'வாங்கியாச்சா, வாங்கவா ?' மேலே போகிறவர்களின் நெரிசலும் கீழே வருகிறவர்களின் நெரிசலும் ஒன்றுடன் ஒன்று மோதி மனிதச் சுழிப்புகள்


படிப்பகம்

www.padippakam.com

உருவாகிக்கொண்டிருந்தன. சுழற்சியில் அகப்பட்டுத் தட்டாமாலை சுற்றும்போதும் குறிக்கோள் சார்ந்துதான் தடுமாறினார்கள். கூரைக் கீறல்கள் எந்த நிமிடத்திலும் பொத்துவிடும் என்ற அச்சத்தைத் தந்துகொண்டிருந்தன. வெடித்து விரிசல்விட்டு சாயப்பூச்சு முற்றாக அழிந்துபோயிருந்த மர ஏணிகள் வந்து கொண்டேயிருந்தன. சிறுநீர் நாற்றம் பரவிக்கொண்டிருந்தது. குழாய்கள் ஒழுகிக்கொண்டிருந்தன. கசிவுகள் பூவாளியில் நீர் வெளிப்படுவது போலவும் நீண்ட வெள்ளி ஊசிகள் போலவும் கோமாளித்தனமான உருவங்களிலும் வெளிப்பட்டுக்கொண்டிருந்தன. கழிப்பறைகளிலிருந்து விசித்திரமான முனகல்கள் கேட்டுக்கொண்டிருந்தன. வெட்கங்கெட்ட கதவுகள் காணாமல் போயிருந்தும் உள்ளே இருந்தவர்களின் லட்சியங்கள் சிதறாமலே இருந்தன. ஏகமாகக் கடைகள். மிகச் சிறியவை அதிகமும். அடைபட்டுக் கிடக்கும் நெரிசலைப் பார்க்கும்போது, இலவசமாகப் பொருட்களைப் பெறுகிறார்கள் என்று தோன்றும். பாதங்களை அறுத்துப் பதம் பார்க்கும் அளவுக்குச் சிமிண்ட் தரை உடைந்து கிடந்தது. உடையாத இடங்களில் விழுதுகள் போல் கீறல்கள் சுவர்கள் வரையிலும் சென்றடைந்தன. ஆனால் தரை மிக வழவழப்பாக இருந்தது.

ஒருவன் மானசீக இணைப்பொன்றை வெட்டவெளியில் உருவாக்கி அவளைப் பின்தொடர்ந்து வரத் தொடங்கியிருந்தான். நெரிசலை முறித்து முன்னேறுவதில் தேர்ச்சி கொண்டவன் என்பது தெரிந்தது. தன் இரு கைகளாலும் துழாவி, தோணிபோல் தன் உடலை நகர்த்திக்கொண்டு வருகிறான். அவன் அவளைத் தாண்டிப் போகும்போது பராக்குப் பார்த்தபடியே வருவித்துக்கொண்ட வாய் குழறலுடன், 'கொஞ்சம் பாத்துப் போடு' என்றான். நெரிசலுக்கு விட்டுக்கொடுத்து பின்னகர்ந்து மீண்டும் சிறிது முன்னேறுவதற்குள் அடுத்த தளம் வந்திருந்தது. அப்போது அவன், 'இருக்கு கடல்போல, ஒண்டியா முடியுமா?' என்றான். இன்னொரு குறுகலான ஏணியில், 'மனசு வை. என் தங்கச்சி மாதிரி' என்றான். அவன் தன்னைத் தொடர்வது அவளுக்கு இம்சையாக இருந்தது. ஆனால் அவனை வெட்டிவிட முயன்றால் வாக்குவாதத்தில்தான் முடியும் என்று நினைத்தாள். அந்த வாக்குவாதத்தின் மூலம் 119ஆம் எண் கட்டடத்தை நோக்கித்தான் அவள் போய்க்கொண்டிருக்கிறாள் என்பது வெளிப்பட்டு மேலும் பலர் அவளை அரண்கொள்ள வாய்ப்புண்டு. 'விளக்குமாறுக்குப் போறேன்' என்றாள். நினைத்த அளவுக்கு உறுதியாகச் சொல்ல வரவில்லை. அவன் கடைவாயில் வழியும் எச்சில்போல் சிரித்து எதித் திசையைப் பார்த்தவாறு 'நானூறு பேர் பெருக்கறாங்க. காணாதா?' என்றான். நானூறு பேர் ஏக காலத்தில் பெருக்குவதுபோலவும் விளக்குமாறுகள் தரையை உரசும் சப்தம் சீராகக் கேட்பது போலவும் அவளுக்குத் தோன்றிற்று. 'ரெட்டைக் குழந்தையா? கூட்டம் தொண்ணூறு. நம்ம அண்ணன்தான்' என்றான்.

தாண்டிச் சென்றபோது அவன் உடம்பு தன் இடுப்பில் அர்த்தத்துடன் உராய்ந்தது போல் அவளுக்குத் தோன்றிற்று. அவன் கண்களை கவனித்தாள். மனப்பூர்வம் இல்லை. நெரிசல்தான். தன் உடல் ஞாபகம் அவன் மனதில் இல்லை என்று தோன்றியதும் ஒற்றைக் கயிறுதான் வீசியிருக்கிறான் என்ற ஆசுவாசம் ஏற்பட்டது. அதைத் துண்டித்துவிட்டால் தன் வழி போய்விடலாம். ஒரு நகைக் கடையில் நிற்பதுபோல் அவள் பாவனை காட்டத் தொடங்கியபோது பின்திரும்பிப் பார்க்காமல் அவனுடைய வேகம் மட்டுப்பட்டுவிட்டது அவளுக்கு வியப்பைத் தந்தது. 'பெரிசு 67ஆவது தளத்தில இருக்கம்மா' என்றான். அவனிடமிருந்து கணத்திற்குக் கணம் ஆச்சரியங்கள் வெளிப்படுவதுபோல் தோன்றின. அவனுக்குப் பின்பக்கமும் பார்வை இருப்பதுபோலவும் உரக்கப் பேசினாலும் விரும்பும் நபருக்கு மட்டும் கேட்கும்படி அவனால் பேசமுடியும் என்றும் அவளுக்குத் தோன்றிற்று. உள்ளாடையை இழுத்துவிட்டுக் கொண்டேயிருந்தான். அவன் அறியாமல் அவனிடம் படிந்திருந்த பழக்கமாகத் தோன்றிற்றே தவிர உள்நோக்கம் கொண்டதாகப்படவில்லை. தோள்பட்டை கடுக்கத் தொடங்கிற்று. கடைகளுக்கு முன்னால் கிடந்த இருக்கைகளில் ஒன்றுகூடக் காலி இல்லை. இளம் வயதுப் பெண்கள் ஒரே இருக்கையில் இருவரும் மூவருமாக தங்களைத் திணித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு முக்காலியில் ஒண்ட அவளுக்கு இடம் கிடைத்தது. அவளைச் சுற்றிச் சூழ்ந்திருந்த வாளிப்பான உடல்களின் இடைவெளி வழியாகப் பார்த்தபோது அவன் பார்வையில் அகப்படவில்லை. இந்த இடைவெளியைப் பயன்படுத்திக்கொண்டு அவள் ஒன்றிரண்டு தளங்கள் கீழே இறங்கி விடலாம். அப்போது மானசீகக் கயிறு அறுந்துபோய்விடலாம். தன் எண்ணத்தை நிறைவேற்ற அதுதான் ஏற்ற தருணம் என்று அவள் யோசித்தாள். சில ஏணிப்படிகளில் ஒரு படிவிட்டு மறு படிகளில் விநோதச் சிறுபொருட்கள் விற்பனைக்குப் பரப்பப்பட்டிருந்ததால் படிவிட்டுப் படிதாண்டிப் போய்கொண்டிருந்தது கூட்டம். சட்டை அணியாத சிறுவர்களும், சிறுமிகளும்தான் விற்பனையில் ஈடுபட்டிருந்தார்கள். சில ஏணிப்படிகள் முழுமையாக கடைகளாகவே மாறியிருந்தன. முகப்புப் பக்கத்தை ஒட்டியிருக்கும் ஏணிப்படிகள் வழியாக மேலே போய்க் கொண்டிருக்கிறோமா அல்லது நடுப்பகுதி அல்லது எதிர்ப்பகுதி ஏணிப்படிகள் வழியாக நகர்கிறோமா என்பதை அவளால் நிதானிக்க முடியவில்லை. நெரிசலில் இழுபட்டுப் போகும்போது ஜன்னல்களின் சிறு வெளிச்சங்களை நோக்கி நெருங்கவே முடியவில்லை. சுழிப்பில் சிக்கும்போது அருகில் தென்படும் ஏணிப்படிகளின் கைப்பிடிகளைத் தாவிப்பிடித்து உருவி வெளியே விழுந்து படியிறங்கிச் செல்ல வேண்டும்.

ஜன்னல்வழி பார்க்க முடிந்தால் மண்ணும் மரங்களும் தெரியும். அப்போது வானவெளியில் எழும்பியிருக்கும் உயரத்தையும் நிதானித்துக்கொள்ள முடியும். முகப்புப் பகுதிகளை ஒட்டியிருப்பது உறுதிப்பட்டுவிட்டால் எதிர்த்திசையைப் பார்க்க ஒழுகும் நெரிசலில் தன்னைச் சிக்கவைத்துக் கொண்டுவிட்டால் பிறர் ஏந்தலில் தொடர்ந்து போய்க்கொண்டிருக்கலாம். மறுபக்கம் சென்று அடித்தளங்களுக்கு இறங்குவதுதான் புத்திசாலித்தனம். அப்போது எங்கிருந்தோ கூர்மையான ஊசி ஒன்றை அவள் காதை நோக்கி விட்டெறிந்ததுபோல ஒரு குரல் வந்தது: 'என்னை வெட்டிவிட்டா இன்னோர்த்தன் ஓட்டிப்பான்' என்றது அந்தக் குரல். தன் நினைப்பு ஒவ்வொன்றும் தனக்குத் தெரிவதற்குமுன் அவனுக்குப் போய்ச் சேருவதில் அவள் மனதில் கிலி படர்ந்தது. தட்ட வேண்டிய பொறிகளை அந்தந்த வினாடிகளில் அவன் தட்டிவிடுவது அவள் மனதை உலுக்கிற்று. எதிர் நின்று அவன் பேசுவதை அதிக அளவு கேட்க நேர்ந்தால் அப்போது அவன் தாடையும் உதடுகளும் பற்களும் கொள்ளும் அசைவுகள் மனதில் படியப்படிய பயம் குறைந்து சிறிது நிம்மதி ஏற்படலாம். ஆனால் சாரம் சார்ந்து ஒற்றைச்சொல் பூடகங்களையே அவன் தட்டிவிடுவது அவளை நிலைகுலையச் செய்துவிடுகிறது. பழைய அவமானங்கள் அவள் மனதில் தேங்கிக் கிடந்தன. தன் மனதின் பொருக்காடாத புண்களை மீண்டும் குத்த இடந்தரக் கூடாது என்று அவள்



படிப்பகம்

www.padippakam.com

கறுவிக்கொண்டாள். பயங்கரமாகக் கத்தத் தொடங்கினால் சாதக பலன் கிடைக்குமா என்று யோசித்தாள். பின்தொடர்பவர்கள் இடையே இணைப்பில்லாத இணைப்பு வலுவாக இருப்பதுபோல் அவளுக்குப்பட்டது. மன வீசையை அழுத்தி ஒரு புள்ளியில் அவர்கள் குவிய சில கணங்களே ஆகும் என்று தோன்றிற்று.

திடீரென்று 'என்னவிதம், என்னவிதம்' என்று அவன் கேட்டான். வேறொரு மூலையிலிருந்து அச்சொற்களுக்குரிய எதிரொலி குழறலாகக் கேட்பதுபோல் அவளுக்குப் பிரமை தட்டிற்று. அவன் முகத்தை அவள் கவனித்தபோது இந்த வினாடியில் தன்னைக் கவனிப்பாள் என்பதை முன்கூட்டி உணர்ந்து கூரையை ஆராய்ந்து கொண்டிருந்தான். அப்போது அவன் நுனிநாக்கு வெளியே எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தது. ஓசையோடு இணைந்து இந்த நடிப்பும் அவள் கலவரத்தைக் கூட்டவே என்று பட்டது. அவளுடைய கணவனின் நண்பர்களும் தலாலிகளும் நடுவர்களும் தாகரிகளும் கைக்கொள்ளும் ஜாலங்களைப்பற்றி அவர்களுக்குள் பேசிச் சிரித்துக்கொள்வதை அவள் பலசமயம் கேட்டிருக்கிறாள். இக்கட்டான ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு தாகரி தன் ஆண்குறியின் நுனியைக் காட்டி ஒருவனை அச்சத்தில் கரைத்ததைப் பற்றி அவர்களுக்குள் சிரித்திருக்கிறார்கள். 'எச்சிக்கலை நாய்களா, உங்க வண்டவாளம் தெரிஞ்சவள்டா நான்' என்று அவள் கத்தினாள். தன் எதிர்ப்பு கூர்மையாக வெளிப்பட வில்லையென்றும் தன் குரலைப் பிசுபிசுக்கச் செய்துவிடும் நச்சு வெளிக்காற்றில் கலக்கப்பட்டிருப்பது போலவும் பட்டது. அவன் திரும்பிப் பார்ப்பான் என்ற அவள் எதிர்பார்ப்பும் வீணாயிற்று. அவன் கைவிரல்களால் பிடரியில் தாளம் போட்டுக்கொண்டே முன்பக்கம் மிதந்து போய்க் கொண்டிருந்தான். இப்போது நெரிசலின் அடர்த்தி கூடிக்கொண்டே வருவதுபோல் தோன்றிற்று. அவள் வீட்டு எஜமானி பேசுகிற மொழியில் ஒருவன், 'இங்கேயே இவ்வளவு நெரிசல் என்றால் போதைத் தளங்களில் மரணம்தான்' என்றான். அதே மொழிக்குரிய ஓசையில் மற்றொருவன், 'மரணம் எவ்வளவோ தேவலாம்' என்றான்.

இப்போது அவன் ஒரு ஏணிப்படிக்குரிய குறுகிய சுழற்சியில் சிக்கிக் கொண்டுவிட்டது தெரிந்தது. இன்னும் சிறிது நேரத்திற்கு அவனால் கைகளை மட்டுமல்ல விரல்களைக்கூட அசைக்க முடியாது. அவள் பக்கத்திலிருந்த ஏணிப்படியின் கைப்பிடியைத் தாவிப் பற்றிக்கொண்டாள். இரு கைகளுக்குமிடையே முகத்தைச் செருகி பல்லைக் கடித்து, தொடைகளையும் இறுக்கிக் கொண்டு நின்றாள். வசைகளை இறைத்தபடி நெரிசல் தாண்டிப் போகிறது. அவள் முதுகில் அதன் அகலத்தைப் பாராட்டுவதுபோல் பலர் குத்திவிட்டுப் போகிறார்கள். அவளுடைய கைப்பிடி தளர்ந்தால் மரணத்தின் பள்ளத்தில் அவள் சரிந்துவிடுவாள். எலும்புகள்கூட கூழாகிவிடும். அப்போது அவளுடைய ஒரு கை இழுப்புக்கு ஈடுகொடுக்க முடியாமல் தளர்ந்து விடுபட அவள் விரல்கள் பதற்றத்துடன் நீண்டு கைப்பிடியை மீண்டும் பற்ற முயன்றன. வலிமையான இரு கரங்கள் அவளை இதமாக அணைத்துப் பின்னகர்த்திப் படிகளில் ஏறிப் போய்க் கொண்டிருக்கும் ஒழுக்கில் அவளை இணைத்தது. அவன்தானா? நொடியில் இங்கு எப்படி வரமுடியும்? மரணத்தின் வாயிலிருந்து தப்பித்துக் கொண்டிருந்தாலும் கூட அவளுக்கு அவமானமாகத்தான் இருந்தது. ஆனால் இப்போது திமிறுவது என்பது மரணத்தை அணைத்துக் கொள்வதுதான். அவனுடைய வலக்கை அவளுடைய இடக்கையை இறுகப் பற்றியிருந்தது. உதவி கருதியா உடல் கருதியா என்று அவள் மூளையின் சிறு நரம்புகளைக்கூட புடைக்கச் செய்து ஆராய்ந்து கொண்டிருந்தாள். அவன் கைவிரல்களின் நுனிகளில் விஷமம் துளிர்க்கிறதா என்பதைச் சூட்சுமமாக உணர முற்பட்டுக்கொண்டிருந்தாள். பிடிமானத்தைத் தக்கவைத்துக் கொள்ளவே அந்த விரல்கள் மேலும் இறுகுகின்றன. சிறிது இடைவெளிக்குப் பின்னால் அந்த முகத்தின் பக்கவாட்டுக் காட்சி அவளுக்குக் கிடைத்தது. அது அவன் அல்ல, வேறொருவன். அவள் நினைப்பு அவனுக்குத் தெரிந்து விட்டதுபோல, 'எல்லாரும் ஒண்ணுதான் மகளே' என்றான். அவள் கையை விடுவித்துக்கொண்டபோது தடையின்றி விட்டுக் கொடுத்தான். அதே அளவுக்கு நெரிசல் இருந்தும்கூட ஏனோ மூச்சுத் திணறல் குறைவாக இருந்தது. தளங்களின் வெளிப்பக்கம் நூதனமாகவும் நவீன முறையில் மறு ஆக்கம் செய்யப்பட்ட தன்மையிலும் இருந்ததால் மேல்தளத்தைப் பார்க்கப் போகிறோம் என்பது உறுதி ஆயிற்று. இன்னும் எத்தனை தளங்கள் தாண்டினால் சிமிண்டும் காரையும் முற்றாக மறைந்து பளிங்கின் ஆட்சி அமுலாகும் என்பது தெரியவில்லை. காற்று மண்டலத்தை வரவேற்கும் பெரிய ஜன்னல்கள் தெரியத் தொடங்கிவிட்டன. நரையிருள் மறைந்து வெளிச்சமும் துளிர்க்கிறது. ஹுங்காரம் கூடிக்கொண்டே போகிறது. இதயத் துடிப்பின் வேகத்தை முடுக்கும் ஹுங்காரம் அது. தளம் தாண்டிப் போகப் போக ஹுங்காரமும் கூடிக்கொண்டேதான் போகும். அப்போது செவிகள் சுத்தமாக அடைத்துவிடும். அதற்கான ஆரம்பம்போல் சிறு வண்டுகள் காதுக்குள் சுழல்வதுபோன்ற கிறுகிறுப்புத் தொடங்கிவிட்டது. இதில் ஆபத்தில்லை. ஆனால் ஹுங்காரம் ஓங்க ஓங்க இதயத் துடிப்பு முடுக்கப்படுவதில் விபரீதங்கள் இருக்கின்றன. வாந்தி, மயக்கம், வயிற்றுப்போக்கு இவற்றால் தாக்கப்படாதவர்கள் மிகக் குறைவு. பளிங்குக்கழிவறைகளும் பளிங்குத் தொட்டிகளும் இருக்கின்றன என்றாலும் தண்ணீர் வசதி குறைவு என்பதால் மலம், வாந்தி ஆகியவற்றின் குவியல்கள் உயர்ந்துகொண்டே போவதைத் தடுக்க முடியாமல் போய்விடுகிறது. மேல்தளம் நெருங்கும்போது காற்றில் நறுமணம் கலக்கப்படுவது ஒரு ஆசுவாசம். தூர்நாற்றமானியின் ஊசிகள் சிவப்புப் புள்ளிகளைத் தொடும்போது தானியங்கி நறுமண விசிறிகள் சுழலத் தொடங்கும். நுட்பமான ஏற்பாடுகள் பல இருந்தும்கூட ஒருவர்மீது மற்றொருவர் வாந்தி எடுப்பதையோ கட்டுப்படுத்த முடியாமல் மலங்கழிப்பதையோ தவிர்க்க முடிவதில்லை.

வாய்க்குள் துணியைத் திணித்துக்கொள்வது சிறிது ஆசுவாசத்தைத் தரும் என்று அவளுக்குத் தோன்றிற்று. கண்களை மூடிக்கொண்டாள். எதையும் பார்க்கத் தேவையில்லாமல் அவள் நெரிசலின் இழுப்பில் சீராகப் போய்க்கொண்டிருப்பதற்கு குந்தகம் எதுவும் இல்லை. தன் வைராக்கியத்தை மொத்தமாகத் திரட்டி உடம்பின் ஒவ்வொரு அணுவுக்கும் விநியோகம் செய்தபடி போய்க்கொண்டிருந்தாள். தலைச்சுற்றலும் குமட்டலும் இருந்தன. நல்ல வேளை பெருங்குடல் சிறுகுடல் ஒத்துழைப்பு நிறைவாக இருந்தது. இரு கைகள் தன் தோள்களைப் பற்றியிருப்பதை அவளால் உணர முடிந்தது. தன் உடலிலும் மனதிலும் நிகழும் மாற்றங்களை அந்த விரல்களின் நுனிகள் நுட்பமாக உணர்வது அவளுக்குத் தெரிந்தது. மயக்கமுறும் நிலையில் கணக்கற்ற உடல்களைத் தாங்கிப் பழக்கங்கொண்ட கரங்கள் அவை. அவன்மீது சாய்ந்து கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் அவளுக்கு ஏற்பட்டுவிட்டது. இப்போது அவளால் இமைகளைத் திறக்க முடியவில்லை. அவளைப் பற்றிய



படிப்பகம்

www.padippakam.com

கரங்களுக்குரியவன் அவனா இன்னொருவனா மற்றொருவனா என்பது அவளுக்குத் தெரியவில்லை. ஆனால் மிகவும் வலுவான கரங்கள் அவை என்பது மட்டும் நிச்சயம். இதமாகப் பற்றிக்கொண்டிருப்பதன் மூலமே அவன் தன் வலுவை எப்படி உணர்த்திவிடுகிறான். 'மயக்கம், மயக்கம்' என்று அவள் வாய் முணுமுணுத்தது. 'நான் செத்தேன்' என்றாள். ஈனமான குரல் அவள் உதடுகளில் வழிந்தது. விரிந்த மார்பின் சதைப்பற்று அவள் முதுகை ஏந்திக்கொள்வதை அவளால் உணர முடிந்தது.

உண்மையில் அவன், அவனோ, இன்னொருவனோ, மற்றொருவனோ அல்ல. அவன் மேல் தளங்களுக்கு மட்டுமே உரிய இடையீட்டாளன். மயக்கமுற்றவர்களை ஏந்திச் செல்ல அவனிடம் அநேக இலகுப் பிரமாணங்கள் இருந்தன. ஒரு சிறு பொம்மையைக் கோட்டின் பெரிய ஜேபியில் வைத்து எடுத்துச் செல்வதுபோல் அவன் அவளுடன் அனாயாசமாக மேல்தளங்களுக்குச் சென்றுகொண்டிருந்தான். மூர்ச்சையுற்ற ஜென்மங்கள் கையாள எவ்வளவு சுலபம் கொண்டு விடுகின்றன. இந்தச் சுலபம் கூடிவிட்டதென்றால் அதன்பின் இக்கட்டில்லை. இழப்பில்லை. ஆக வேண்டிய காரியங்களை ஒரு மனம் சார்ந்து துரிதம்கூட்டிச் செய்துகொணடு போகலாம்.

அவன் ஒரு நொடியில் மேல் தளத்தின் நடுக்கூடத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட்டான். அதற்குள் பலரும் அவனைச் சூழ்ந்து நெருக்கினார்கள். ஒவ்வொருவருடைய கண்களிலும் துருத்தப்பட்டு மடிந்து கிடக்கும் நாக்குகளைப் பார்க்க முடிந்தது. ஹூங்காரத்திற்கு இசைவான ஒலிகளை அவர்கள் எழுப்பியவண்ணம் இருந்தார்கள். தங்கள் குரல்வளையிலிருந்து வெளிப்படும் ஓசைக்கு உடல் சார்ந்த புற அடையாளங்கள் எதுவுமின்றி ஹூங்காரத்தை மேல் ஸ்தாயிக்கு அவர்களால் எடுத்துச்செல்ல முடிந்திருந்தது. பெருங்கூடத்தின் நடுப்பகுதிக்கு மேல்நிலை இடையீட்டாளருக்கு மட்டுமே அனுமதி உண்டு என்பதால் இடையீட்டாளர்களும் தரகர்களும் தலாலிகளும் அடத்திதாரன்களும் நடுவன்களும் தாகரிகளும் பின்னகர்ந்து கொண்டு விட்டார்கள். இதற்குள் அவள் உடலும் இடையீட்டாளர் கையிலிருந்து மேல்நிலை இடையீட்டாளர் கைக்கு மாறி இருந்தது.

நீண்ட உணவு மேஜையில் கிடத்தியிருந்த அவளை பின்வட்டங்கள் கால் பெருவிரல் உன்னி தோள்கள் வழி எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தன. முதல் வட்டக் குழு ஆர்ப்பரிக்கத் தொடங்கியிருந்தது. புணர்ச்சியில் வெளிப்படும் முனகல்களைப் பலர் இசையாக்கிப் பெண் குரலில் கத்திப் பாடிக்கொண்டிருந்தார்கள். பழக்கப்பட்ட கைகள் பாய்ந்து அவளுடைய ஆடைகளைச் சரசரவென்று அகற்றின. குவட்டிலிருந்து பணப்பையை எடுத்து ஒருவன் காகிதத்தை இழுக்க மற்றொருவன் அதைப் பிடுங்கி தன் ஜேபியில் திணித்துக்கொண்டான். பல கைகள் முலைகளை நீவிவிட்டுக் கொண்டிருந்தன. ஒருவன் காம்பைச் சுண்டினான். புதுக் கரங்கள் அவளுடைய அடிவயிற்றைத் தடவத் தொடங்கியிருந்தன. 'ஆனந்த அல்குல்' என்ற ஆர்ப்பரிப்புடன் விரல்கள் துடித்துக் கீழிறங்கி வந்தன. 'புரட்டிப் போடவா?' என்று ஒருவன் கேட்டான். புரட்டிப் போட்டுக் கொண்டிருந்தபோது விளக்கு அணைந்தது. ஹூங்காரம் உச்சம் கண்டது. இருள் ஒலிகள் குழம்பி மறிந்தன.

●

*ஒரு கலைஞன் கொண்டிருக்க வேண்டும் என்று நான் நினைப்பது இதுதான். அவனிடம் மட்டுமே சாவி இருக்கும் ஒரு விசேஷமான உலகம். அவன் புது விஷயம் ஒன்றை அளிப்பது மட்டும் போதாது, அது ஒரு சாதனைதான் என்றபோதும்; இதற்கு மேலாக எல்லாமே புதிதாக இருக்க வேண்டும் அல்லது புதியதாகத் தோற்றமளிக்க வேண்டும். வன்மையான தனிப்பெரும் குணாம்சத்தோடு பார்க்கப்பட்டிருக்க வேண்டும்.*

*அவனுக்கென்று ஒரு தனியான தத்துவம், அழகியல், அறிவியல் கொண்டிருக்க வேண்டும். அவன் படைப்பு முழுதும் அதை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். அதுதான் அவனுக்கென்று ஒரு பாணியை அளிக்கிறது. மிக முக்கியமான ஒன்று என்னவெனில், அவனுக்கென்று ஒரு நகைச்சுவைப் பாணி இருக்க வேண்டும், அதாவது அவனுக்குரித்தான நகைச்சுவை உணர்வு.*

-ஆந்த்ரே ழீதின் குறிப்புகளிலிருந்து.

ஆந்த்ரே ழீத் (1869-1951) பிரெஞ்சு மொழியில் எழுதியவர். 1947 இல் நோபல் பரிசு பெற்றார். முக்கியமான நாவல்கள்,The Immoralist, The Counterfeiters, Strait is the Gate ஆகியவை. இசையிலும் கவிதையிலும் ஈடுபாடு உள்ளவர். Journals என்ற தலைப்பில் விரிவாக வாழ்க்கைக் குறிப்புகள் எழுதினார்.

இந்தப் பகுதியை வழங்கியவர்:
**A. குளத்துாரான் பிள்ளை**, நாகர்கோவில்.



படிப்பகம்

www.padippakam.com

சிறப்புப் பகுதி

## புதுமைப்பித்தன் படைப்புகள்



# புதுமைப்பித்தன்

புதுமைப்பித்தன் கதைகளின் கதை

- கல்கியின் மட்டரகம்
- காற்றாடியின் இலக்கிய சந்தேகங்கள்
- மாயா பஜார்
- காலைக்கடல்
- போட்டிப்பரிசும், பத்திரிகைகளும்
- தமிழ் படித்த பெண்டாட்டி

மதிப்புரைகள்



படிப்பகம்

www.padippakam.com

# புதுமைப்பித்தன் கதைகளின் கதை

எம். வேதசகாயகுமார்

புதுமைப்பித்தன் கதைகளின் எண்ணிக்கை குறித்து திறனாய்வாளர்கள் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர். புதுமைப்பித்தன் மறைவிற்குப் பின் அவர் கதைகளைத் தொகுத்த ரகுநாதன் கதைகளின் எண்ணிக்கை 200 எனக் குறிப்பிடுகிறார். ஆனால் இதற்கான சான்றுகள் எவற்றையும் அவரால் தர இயலவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. புதுமைப்பித்தனின் சமகாலத்தவரான சி.சு.செல்லப்பா கதைகளின் எண்ணிக்கை 99 என்கிறார். இலக்கிய வரலாற்றாசிரியர்கள் அனைவரும் இந்த இரு எண்ணிக்கைகளில் ஒன்றை பின்பற்றுகின்றனர்.

புதுமைப்பித்தன் கதைகள் இதுவரை முறையாகத் தொகுக்கப்படவில்லை. அவர் குடும்பத்திற்கு விட்டுச் சென்ற வறுமையும், சில புத்தகப் பதிப்பாளர்களின் தன்னலமும் சேர்ந்து அவர் கதைகள் தாறுமாறாகத் தொகுக்கப்படக் காரணமாக அமைந்துவிட்டன.

கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட தகவல்கள் புதுமைப்பித்தன் படைப்புலக வாழ்வு குறித்து இதுவரை நிலவிவரும் தகவல்களுக்கு முரணாக அமைகின்றன. சி.சு.செல்லப்பா 'தமிழ் சிறுகதை பிறக்கிறது'என்ற நூலில், 'சிறுகதை மணிக்கொடி'யில் வெளியான 'துன்பக் கேணி' கதை எழுதுவதற்கு முன்னால் புதுமைப்பித்தன் 'ஊழியன்', 'மணிக்கொடி' இதழ்களில் சுமார் 30 கதைகள் எழுதியிருந்ததாகக் குறிப்பிடுகிறார். ஆனால் கள ஆய்விலிருந்து பெறப்பட்ட தகவல்கள் 'துன்பக் கேணி'க்கு முன் 'மணிக்கொடி', 'ஊழியன்', 'காந்தி' ஆகிய இதழ்களில் 62 கதைகள் அவர் எழுதியுள்ளதை நிறுவுகின்றன. இது புதுமைப்பித்தனின் மொத்த கதைகளின் எண்ணிக்கையின் பகுதிக்கு மேலானதாகும்.

புதுமைப்பித்தனின் முதல்கதை குறித்து இதுவரை நிலவிவரும் கருத்தை இவ்வாய்வு மாற்றி அமைக்கிறது. 1933 அக்டோபர் 12இல் வெளியான ஆனந்தவிகடனில்தான் புதுமைப்பித்தனின் முதல் கதை பிரசுரிக்கப்பட்டுள்ளது. "திருமணத்திற்கு முன்பிருந்தே கதைகள் எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்பும் வழக்கம் புதுமைப்பித்தனுக்கு இருந்தது. 'ஆனந்தவிகடன்' ஆசிரியரான ரா. கிருஷ்ணமூர்த்தியிடமிருந்து ஒரு கதைக்கான சன்மானம் பெற்றுக் கொண்டதற்கான பணவிடை ரெசீது ஒன்றைக் கண்டதாக நினைவு" என்ற தகவல் திருமதி கமலா விருத்தாசலத்திடமிருந்து பெறப்பட்டது. இதன் அடிப்படையில் கள ஆய்வு நிகழ்த்தப்பட்டது. 1931 முதல் 1934 வரை வெளியான 'ஆனந்தவிகடன்' இதழ்கள் ஆராயப்பட்டன. கடின முயற்சியின் பலனாக 'சாஸரம்' என்ற புதுமைப்பித்தனின் முதல் கதை தேடி எடுக்கப்பட்டது. இக்கதை 'பித்தன்' என்ற புனைபெயரில் எழுதப்பட்டிருந்தாலும் கதையின் மொழிநடை புதுமைப் பித்தனைத் தெளிவாக இனங்காட்டும் விதத்தில் அமைந்துள்ளது.

கள ஆய்விலிருந்து பெறப்பட்ட தகவல்கள் புதுமைப்பித்தனின் படைப்புலக வாழ்வு ஒரு சீராக அமையாததைத் தெளிவுபடுத்துகின்றன. 1934 செப்டம்பரில் மட்டும் 12 கதைகள் வெளிவந்துள்ளன. ஆனால் 1936இல் இரண்டு கதைகளை மட்டுமே எழுதியுள்ளார். தொடக்க காலக் கதைகளின் எண்ணிக்கை பெருக்கம் இரண்டுவிதக் காரணங்களால் அமையலாம். ஊழியன், காந்தி, மணிக்கொடி ஆகிய பத்திரிகைகளில் காலி இடங்களை இட்டு நிரப்புவதற்கான அவசரத் தேவைக்காக அவர் கதைகள் பயன்படுத்தப் பட்டிருக்கலாம். பத்திரிகைகளில் துணையாசிரியராகப் பணியாற்றியதால் இது அவருடைய கடமையாகக் கூட இருந்திருக்க வேண்டும். 'என் கதைகளும் நானும்' என்ற கட்டுரையில் புதுமைப்பித்தனே இதனைக் குறிப்பிட்டுள்ளார். எடுத்துக்காட்டாக 16.9.1934இல் வெளியான மணிக்கொடி இதழில் 13ஆம் பக்கத்தில் பாரதிதாசனின் 'சங்கங்கள்' கவிதை அச்சிடப்பட்டு மீதி இடத்தில் புதுமைப்பித்தனின் 'புதிய ஒளி' கதை வெளியாகி உள்ளது. இதே இதழில் புதுமைப்பித்தனின் மற்றொரு கதையான 'கனவுப்பெண்'ணும் வெளியாகியுள்ளது. 'கனவுப்பெண்' புதுமைப்பித்தன் என்ற பெயரிலும், 'புதிய ஒளி' கூத்தன் என்ற பெயரிலும் வெளியாகியுள்ளதைப் பார்க்கும்பொழுது இக்கருத்து உறுதிப்படுகிறது.

'என் கதைகளும் நானும்' என்ற கட்டுரையில் தன் கதைகள் பத்திரிகைகளால் திருப்பி அனுப்பப்பட்ட செய்தியையும் கூறுகிறார் புதுமைப்பித்தன். அவரது திருமணத்திற்குப் பின்னும் 1933ஆம் ஆண்டுக்கு முன்னும் ஆன இடைப்பட்ட காலத்தில் இது நிகழ்ந்திருக்க வேண்டும். அவர் பெரும்பாலும் இக்கதைகளையே 1934ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார் என்பதை அறிய முடிகிறது. எனவே 1934இல் வெளியான கதைகள், அந்த ஆண்டிலும், அதற்கு முன்னும் எழுதப்பட்ட கதைகளாக இருக்க வேண்டும்.

புதுமைப்பித்தன், பித்தன், சொ.வி., சொ. விருத்தாசலம் பி.ஏ., சொ. விருத்தாசலம், கூத்தன், நந்தன் என்ற புனைபெயர்களில் புதுமைப்பித்தன் கதைகள் வெளியாகி உள்ளன. ஒரே இதழில் ஒன்றுக்கு மேற்பட்ட கதைகளை வெளியிடும் போது வெவ்வேறு புனை பெயர்களைப் பயன்படுத்துகிறார். 'நந்தன்' என்ற பெயரில் பிரசுரிக்கப்பட்ட கதைகள் அனைத்தும் தழுவல் கதைகளாகவே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மணிக்கொடி, ஊழியன், காந்தி, சுதந்திரச்சங்கு, ஜோதி, கலைமகள், தினமணி, தினசரி, சந்திரோதயம் ஆகிய இதழ்களில் புதுமைப்பித்தன் படைப்புகள் வெளியாகி உள்ளன. புதுமைப்பித்தனின் முதல் கதை ஆனந்தவிகடனில் வெளியாகி அவருக்கு சன்மானம் பெற்றுத் தந்தாலும் தொடர்ந்து அதில் எழுதாமல், பொருள் பெற்றுத்தராத இதழ்களிலேயே தன் கதைகளை வெளியிட்டிருப்பது வணிக நோக்கிற்கு எதிரான அவர் நிலையைத் தெளிவு படுத்துகிறது. சில விசேட மலர்களிலும் அவர் கதைகள் வெளியாகி உள்ளன. பெயர் கண்டறிய முடியாத நிலையில் சிதைந்த ஒரு பொங்கல் மலரின் பக்கங்களிலிருந்துதான் 'நிர்விகற்பசமாதி' என்ற கதை ஆய்வாளரால் தேடி எடுக்கப்பட்டது. இக்கதை எத்தொகுப்பிலும் இடம் பெறவில்லை.

புதுமைப்பித்தனின் மற்றொரு கதையின் பெயரை மட்டுமே ஆய்வாளரால் காண முடிந்தது. பதிப்பு நாள் குறிப்பிடப்படாமல் 'கொடி 8 மணி 8' என வெளியான மணிக்கொடி இதழில் "புதுமைப்பித்தனின் 'கருப்புச் சட்டைக்காரன்' கதை அடுத்த இதழில் (15-3-39) வெளியாகும்" என்ற குறிப்பு உள்ளது. 'கொடி 8 மணி 8' இதழே மணிக் கொடியின் இறுதி இதழாக இருக்க வேண்டும். இதற்குப்பின் மணிக்கொடியின் மற்றொரு இதழ் வெளியானதற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. 'கருப்புச் சட்டைக்காரன்' கதை வெளியானதாகவும் தெரியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

புதுமைப்பித்தன் கதைகளாக இன்று அறியவரும் கதைகளில் சில தழுவல் கதைகளும் கலந்து விட்டிருக்கின்றன. இக்கதைகள் சக்கிராச்சாரி என்ற புனை பெயரில் 'ஜோதி' பத்திரிகையில் புதுமைப்பித்தனால் எழுதப்பட்டவை என சி.சு. செல்லப்பா குறிப்பிடுகிறார். ஆனால் கள ஆய்விலிருந்து பெறப்பட்டத் தகவல்கள் இதற்கு முரணாக உள்ளன. 1938 மே 'ஜோதி' இதழில்தான் புதுமைப்பித்தன் அப்பத்திரிகையில் எழுத இருப்பது விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. 'புதுமைப்பித்தன் புதியவரல்லர், இவருடைய சிறுகதைகள் ஆழமானவை. கருத்து நிரம்பியவை. இவரை 'ஜோதி' வாசகர்கள் அடிக்கடி சந்திப்பார்கள்' என்று விளம்பரத்தில் புதுமைப்பித்தன் என்ற பெயரே குறிப்பிடப்பட்டுள்ளது. இதே இதழில் 'நியாயந்தான்' கதையும் புதுமைப்பித்தன் என்ற பெயரிலேயே வெளியாகி உள்ளது. மொத்தம் ஐந்து கதைகள் ஜோதியில் வெளியாகி உள்ளன. மாதம் ஒரு கதை என்ற முறையில் நான்கு கதைகளும் ஐந்தாவது கதையான 'விபரீத ஆசை' ஐந்து மாத இடைவெளிக்குப்பின் ஏப்ரல் 1939 இதழிலும் வெளியாகி உள்ளது. இதுவே ஜோதியில் அவருடைய இறுதிக்கதையாக அமைகிறது. 1952 சிங்கைத்தமிழ் முரசில் கந்தசாமி வாத்தியார் 'விபரீத ஆசை ஆபாசமானதா' என்ற தலைப்பில் தரும் தகவல் குறிப்பிடத்தக்கது. 'விபரீத ஆசை முதலான சில கதைகளை ஜோதிக்கு எழுத ஒப்புக்கொண்டு சர்மாவிடம் முன்பணமாகப் பெற்றிருந்தார். நோமைக்கார சர்மா கதைகளில் சிலவற்றை வெளியிட்டபிறகு அதன் ஆபாச நாற்றம் தாளாமல் நிறுத்தினார்'.

'விபரீத ஆசை' தழுவல் கதை. ஆனால் முதல் நான்கு கதைகளுக்கும் ஐந்தாவது கதையான 'விபரீத ஆசை'க்குமான இடைவெளியை நோக்கும்போது, முன்பணம் பெற்றுவிட்ட நிலையில், படைப்புமனமின்றி, ஆனால் கதை தந்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில், தொடக்க காலத்தில் எழுதி வைத்திருந்த தழுவல் கதையை அனுப்பியிருக்க வேண்டும். அல்லது, நான்காவது கதையான 'அபிநவ ஸ்நாப்' கதையின் சில வரிகளைச் சாமிநாத சர்மா ஆபாச நாற்றம் கொண்டதாகக் கருதி எதிர்ப்பு தெரிவித்திருக்க வேண்டும். இதற்கு எதிர்ப்புணர்வாக முழுமையும் பாலுணர்வு சிக்கலை அனுபவத் தளமாகக்கொண்ட 'விபரீத ஆசை'யை ஐரோப்பிய சிறுகதையைத் தழுவி எழுதி அனுப்பியிருக்கலாம்.

'விபரீத ஆசை' தவிர்த்து தழுவல் கதைகளான பயம், சமாதி, கொலைக்காரன் கை, தேக்கங்கன்றுகள், செவ்வாய் தோஷம், நல்ல வேலைக்காரன், நொண்டி போன்ற கதைகள், அவர் துணையாசிரியராகப் பணிபுரிந்த 'ஊழியன்' இதழில் நந்தன், சொ.வி., என்ற புனை பெயர்களில் வெளிவந்தவையே. 'குற்றவாளி யார்' போன்ற கதைகள் நந்தன் என்ற புனைபெயரில் 'தழுவல்' என்ற தலைப்புடன் வெளியிடப்பட்டுள்ளதை நோக்கும்போது மேலே குறிப்பிட்டுள்ள கருத்து உறுதி செய்யப்படுகிறது.

'தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும்' என்ற நூலில் பெ.கோ. சுந்தரராஜனும் (சிட்டி), சோ. சிவபாதசுந்தரமும் புதுமைப்பித்தனின் தழுவல் கதைகளுக்கு முக்கியத்துவம் தந்து, தமிழ்ச் சிறுகதை மரபில் புதுமைப்பித்தன் பங்கை மதிப்பிடுகின்றனர். தங்கள் முடிவுகளுக்கு ஆதாரமாகத் தமிழ் இலக்கியத்தில் பிரெஞ்சு மொழி தாக்கத்தை ஆய்வு செய்த ஆர்.கிருஷ்ணமூர்த்தியின் ஆய்வுக் கட்டுரையை மேற்கோள் காட்டுகின்றனர். "புதுமைப்பித்தன் உலகத்துச் சிறுகதைகள் என்ற தொகுப்பில் மாப்பஸானின் 'பைத்தியக்காரி' என்ற ஒரேயொரு கதையை மாத்திரம் சேர்த்திருந்தார்" என்ற செய்தியை ஆர். கிருஷ்ணமூர்த்தி தருகிறார். புதுமைப்பித்தன் "மாப்பஸான் மீது கொண்டிருந்த நெருங்கிய ஈடுபாட்டை மறைப்பதற்காக எடுத்துக் கொண்ட தற்காப்பு நடவடிக்கை என்றுதான் கூற வேண்டும்" என்று புதுமைப்பித்தனை இலக்கியத் திருடராகவே ஆர். கிருஷ்ணமூர்த்தி முடிவு செய்கிறார்.

ஆர். கிருஷ்ணமூர்த்தியின் தகவல் சேகரிப்பில் நிகழ்ந்து விட்ட சில தவறுகளே அவரை இத்தகைய முடிவிற்கு இட்டுச் சென்றிருக்கின்றன. இக்கதைகள் அனைத்தும் புதுமைப்பித்தன் துணையாசிரியராகப் பணிபுரிந்த 'ஊழியன்' இதழில் 1934 கால அளவில் நந்தன், சொ.வி., என்ற பெயர்களில் வெளியானவை. அவர் உயிரோடு வாழ்ந்த காலத்தில் வெளிவந்த தொகுப்புகளில் இடம் பெறாதவை.

7-10-1934 மணிக்கொடி இதழில் "தமிழ் படித்த பெண்டாட்டி (மாப்பஸான் கதையின் தழுவு)- புதுமைப்பித்தன்" என்ற தலைப்புடன் கதை வெளியாகி உள்ளது. இத் தகவல்களைப் பெற்றிருந்தால் புதுமைப் பித்தன் தன் திருட்டை மறைப்பதற்காக மாப்பஸானின் ஒரேயொரு கதையையே மொழிபெயர்த்துள்ளார் என்ற முடிவிற்கு ஆர்.கிருஷ்ணமூர்த்தி வந்திருக்க மாட்டார். இதே இதழிலேயே சிட்டி எழுதிய நவராத்திரி கதையும் வெளியாகி உள்ளதைப் பார்க்கும்பொழுது ஆர். கிருஷ்ணமூர்த்தியின் முடிவுகளை மேற்கோள் காட்டும் சிட்டி இத்தகவல்களைப் புறக்கணிப்பது வியப்பையே தருகிறது. மணிக்கொடி இதழ்கள் அனைத்தும் சிட்டியிடம் உள்ளன, அல்லது அவர் எளிதில் பெறும் விதத்தில் உள்ளன என்பதையும் இங்கு கவனிக்க வேண்டும்.

புதுமைப்பித்தனின் சில கதைகள் தழுவல் எனத் தலைப்பிடப்பட்டு நந்தன், சொ.வி. என்ற பெயர்களில் வெளியாகி உள்ளன. எடுத்துக்காட்டாக 4-1-1935 தேதியிட்ட ஊழியனில் வெளியான 'குற்றவாளி யார்?' என்ற கதையைக் குறிப்பிட வேண்டும். வேறு சில கதைகள் தழுவல் என தலைப்பிடப்படாமல் நந்தன், சொ.வி. என்ற பெயர்களில் வெளியாகி உள்ளன. புதுமைப்பித்தன் கையெழுத்துப் பிரதியைப் பாதுகாக்கும் பழக்கம் கொண்டவரல்லர். மாறாகக் கதைகள் வெளிவந்த பத்திரிகைகளின் பக்கங்களையே பாதுகாக்கும் இயல்பினைக் கொண்டவர்.

**இதழ் 10இல் வெளிவந்த புதுமைப்பித்தன் படைப்புகள் பற்றி**

புதுமைப்பித்தனின் முதல் படைப்பு என்று கருதப்படும் 'குலாப்ஜான் காதல்' என்ற கட்டுரை வெளியானது டி.எஸ். சொக்கலிங்கம் நடத்திய 'காந்தி' (18 அக்டோபர் 1933) இதழில். அப்போது 'கண்டதும் காதல் - பொய்யா? மெய்யா?' என்றொரு விவாதம் 'காந்தி'யில் நடந்து கொண்டிருந்தது. அதில் இடையிட்டுப் புதுமைப்பித்தன் எழுதிய கட்டுரை இது. தமது முதல் படைப்பை வெளியிடும் போதே 'புதுமைப்பித்தன்' என்ற பெயரைச் சூட்டிக் கொண்டுவிட்டமைக் கருதத்தக்கது.

ராய. சொக்கலிங்கம் நடத்திவந்த 'ஊழியன்' என்ற தேசிய வாரஇதழ் 1934 இன் இடையில் காரைக்குடியிலிருந்து சென்னைக்கு இடம் பெயர்ந்தது. அப்போது சில காலம் புதுமைப்பித்தன் ஊழியனில் உதவியாசிரியராகப் பணி ஆற்றினார். எனக்குப் பார்க்கக் கிடைத்த இதழ்களில் புதுமைப்பித்தன் எழுதிய 'பாட்டியின் தீபாவளி' (9 நவம்பர் 1934), 'மாய வலை' (28 டிசம்பர் 1934), 'கலியாணி' (15 பிப்ரவரி 1935) ஆகிய கதைகளோடு இதுவரை தொகுக்கப்பெறாத 'ஒரு கொலை அனுபவம்' (21 பிப்ரவரி 1935) என்ற கதையும், 'பட்டிணங்களைப் பற்றி ஆண்டானின் அபிப்பிராயம்' (15 பிப்ரவரி 1935) என்ற பகடிப் பாடல்களும் வெளிவந்துள்ளன. புதுமைப்பித்தன் தழுவி எழுதியதாகக் கருதப்படும் ('புதிய ஒளி' தொகுதியிலுள்ள) கதைகள் பெரும்பான்மையும் 'ஊழிய'னில் வந்தவை என்பது மனங்கொள்ளத்தக்கது.

ஆ. இரா. வேங்கடாசலபதி



படிப்பகம்

www.padippakam.com

புதுமைப்பித்தனின் மரணத்திற்குப் பின் அவர் கதைகளை வெளியிட்ட பதிப்பாளர்களுக்கு வணிக நோக்கில் அவர் கதைகளின் எண்ணிக்கையே முக்கியமாகப்பட்டது. பதிப்பாளர்களின் சுயநலத்தால் விளைந்த தவறுக்குப் புதுமைப்பித்தன் எவ்வாறு பொறுப்பேற்க முடியும்?

க.நா. சுப்ரமணியம் 'காஞ்சனை' போன்ற பல கதைகளில் ஐரோப்பியச் சிறு கதைகளின் சாயல் தென்படுவதாகக் குறிப்பிடுகிறார். ஆனால் பிற கலைஞர் களிடமிருந்து பெறப்படும் பாதிப்பு வேறு, தழுவல் வேறு. புதுமைப்பித்தன் கதைகள் அவர் படைப்புகளிலிருந்து தழுவல் கதைகளை அகற்றும் நோக்கத்துடன் விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை இவ்வாய்வு முன்மொழிகிறது.

புதுமைப்பித்தன் கதைகள், காஞ்சனை, ஆண்மை என்ற மூன்று தொகுப்புகளும் புதுமைப்பித்தனால் தெரிந்தெடுக்கப்பட்ட கதைகளைக் கொண்டவை. ஆனால் புதுமைப்பித்தனின் மறைவிற்குப் பின்னர் சில பதிப்பாளர்களின் சுயநலம் புதுமைப்பித்தன் கதைகள் தாறுமாறாகத் தொகுக்கப்படக் காரணமாக அமைந்து விட்டது. குறிப்பாக தமிழ்ச்சுடர் நிலைய வெளியீடுகளைக் கூற வேண்டும்.

"1947இல் என்று நினைக்கிறேன். நண்பர் கா.ஸ்ரீ.ஸ்ரீ.யை துணைக்குக் கூட்டிக் கொண்டு என்னிடம் வந்தார். மறுநாள் புனிதமான தமிழ் வருஷப் பிறப்பு. தம்மிடம் உள்ள கதைகளில் 'நீ விரும்பிய கதைகளைப் போட்டுக் கொள்' என்று சொல்லி ஒரு கட்டு கதைகளையும், கையெழுத்துப் பிரதிகளையும் கொடுத்துவிட்டுச் சென்றார்" என்று புதுமைப்பித்தனின் வெளிவராத கதைகள் அனைத்திற்கும் தானே உரிமையாளன் என்பதாகக் காட்டிக் கொள்கிறார் அ.கி. கோபாலன்.

'பலிபீடம்' மொழிபெயர்ப்பு நாவல் 1951 வெளியீட்டில் புதுமைப்பித்தன் சிறுகதைத் தொகுப்புகளாக 'கயிற்றரவு' உட்பட ஒன்பது தொகுப்புகளைத் தமிழ்ச்சுடர் நிலைய வெளியீடாகக் குறிப்பிடுகிறார். 1951 நவம்பரில் வெளியான 'கபாடபுரம்' தொகுப்பில் முன் வெளியீடான 'கயிற்றரவு' தொகுப்பைப் பற்றிய குறிப்பு ஏதுமில்லை. 1953 ஏப்ரல் மாதத்தில் வெளியான 'அவளும் அவனும்' தொகுப்பில் வேறு ஒன்பது தொகுப்புகளின் பெயர்களையும் அதற்கான விலைகளையும் பட்டியலாகத் தருகிறார். இதோடு இனி வரப்போகிற 'புதுமைப்பித்தனின் சிறந்த ஐம்பது சிறுகதைகள்' அடங்கிய தொகுப்பு பற்றியும் குறிப்பிடுகிறார். ஆனால் 'கபாடபுரம்', 'அவளும் அவனும்' என்னும் இரண்டு தொகுப்புகளே உண்மையில் அச்சுப் பதிப்புப் பெற்றவை. பிற பெயர்கள் அனைத்தும் புதுமைப்பித்தனின் வெளிவராத சிறுகதைகள் அனைத்திற்கும் உரிமை இருப்பதாகக் கூறிக்கொள்ளும் வணிக உத்தியாகவே படுகிறது.

இவ்வெளியீட்டாளர் புதுமைப்பித்தன் படைப்பு களுக்கு இழைத்த கொடுமை 'அவளும் அவனும்' தொகுப்பில் வெளிப்படுகிறது. 'அவளும் அவனும்' என்ற பெயரில் ஒரு கதை புதுமைப்பித்தனால் எழுதப்படவே இல்லை. தொகுப்பின் தலைப்பு 'அவளும் அவனும்' என்றிருந்தாலும்இப்பெயரில் ஒரு கதையே தொகுப்பினுள் இல்லை. மாறாக 'மனநிழல்' என்ற கதை உள்ளது. அவள், அவன் என்ற தலைப்பிட்டு காதலர்களின் மனநிலையைச் சித்தரிக்க முயல்கிறது. இதையே கவர்ச்சியாகத் தொகுப்பிற்கே தலைப்பாக அணிவித்துவிட்டார் பதிப்பாளர்.

உண்மையில் 'மனநிழல்' புதுமைப்பித்தனின் கதையே அல்ல. புதுமைப்பித்தனின் மனைவியால் எழுதப்பட்டு அவருடைய 'காசுமாலை' தொகுப்பிலும் சேர்க்கப்பட்டுள்ளது. தவறுதலாக புதுமைப்பித்தனின் கதையாக கருதப்பட்டுவிட்டது எனக்கொள்ள முடியாது. புதுமைப்பித்தன் கையெழுத்துப் பிரதிகளைப் பாதுகாக்கும் பழக்கம் உடையவர் அல்லர். இத்தகவல் திருமதி கமலா விருத்தாசலத்திடமிருந்து பெறப்பட்டது. பி.எஸ். ராமையாவால் உறுதி செய்யப்பட்டது. எனவே பத்திரிகையில் கமலா விருத்தாசலம் என்ற பெயரில் வெளியான கதை வேண்டுமென்றே இப் பதிப்பகத்தாரால் புதுமைப்பித்தன் கதைகளில் கலக்கப்பட்டு அதற்கு கவர்ச்சி ஆடையும் அணிவிக்கப்பட்டது. திருமதி கமலா விருத்தாசலம் இத்தொகுப்பைக் கண்டதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

புதுமைப்பித்தனின் தொகுப்புகளை ஸ்டார் பிரசுரம் மீண்டும் வெளியிட்டபோது 'அவளும் அவனும்' தொகுப்பி லடங்கிய கதைகள் 'அன்றிரவு' தொகுப்பில் சேர்க்கப்பட்டன. 'மனநிழல்' புதுமைப்பித்தன் கதையாக இதிலும் இடம் பெற்றது. இவ்வுண்மை 1979 இல் வெளியான இவ்வாய்வாளரின் 'தமிழ்ச் சிறுகதை வரலாறு' நூலில் "மனநிழல் புதுமைப்பித்தன் துணைவியாரால் எழுதப்பட்டது" எனக் குறிப்பிடப்பட்டது. இருந்தும் 1979க்குப் பின் வந்த தொகுப்புகளிலும், அண்மையில் வெளியான ஐந்திணைப் பதிப்பகத் தொகுப்பிலும்கூட 'மனநிழல்' புதுமைப்பித்தனின் கதையாகவே இடம்பெற்றிருக்கிறது.

புதுமைப்பித்தனின் மறைவிற்குப் பின் 1954 ஆம் ஆண்டு ரகுநாதனின் துணையுடன் ஸ்டார் பதிப்பகத்தார் புதுமைப்பித்தனின் கதைகளைத் தொகுப்புகளாக வெளியிடத் துவங்கினர். ஸ்டார் பதிப்பகத்தாரின் முதல் தொகுப்பான 'புதிய ஒளி' யில் பெரும்பாலும் தொடக்க காலக் கதைகளே சேர்க்கப்பட்டுள்ளன. தவறுதலாகப் புதுமைப்பித்தனின் தழுவல் கதைகளும் புதுமைப்பித்தனின் கதைகளாக நுழைக்கப்பட்டன. இவற்றுடன் புதுமைப்பித்தன் நடைச் சித்திரமாக எழுதிய 'திருக்குறள் குமரேசப் பிள்ளை'யும் சிறுகதையாக சேர்க்கப்பட்டுள்ளது. நடைச்சித்திரம் அனுபவ வாழ்க்கையை நோக்கமாகக் கொண்டதல்ல. மேற்போக்கான கேலியே இதன் நோக்கம். வ.ரா.வின் தூண்டுதலால் மணிக்கொடியில் எழுதிய பலரும் அவரைப் பின்பற்றி நடைச்சித்திரம் எழுதினர். புதுமைப்பித்தன் எழுதிய நடைச்சித்திரம் 'திருக்குறள் குமரேசப் பிள்ளை'.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறைகள் நீக்கப்பட்டு கால முறைப்படி புதுமைப்பித்தன் படைப்புகள் தொகுக்கப்பட வேண்டியதின் தேவையை இவ்வாய்வு வற்புறுத்துகிறது.

எனவே, 'புதுமைப்பித்தன் கதைகள்', 'காஞ்சனை', 'ஆண்மை', 'கபாடபுரம்', 'புதிய ஒளி', 'சித்தி', 'அன்றிரவு', ஆகிய தொகுப்புகளிலடங்கியுள்ள 98 கதைகளில் 'மனநிழல்', 'திருக்குறள் குமரேசப் பிள்ளை' என்ற இரண்டு கதைகளையும் நீக்கி வரும் 96 கதைகளோடுஇவ்வாய்வின் போது தேடி எடுக்கப்பட்ட 'சாளரம்', 'நம்பிக்கை', 'கண்ணன் குழல்', 'சாமாவின் தவறு', 'ஆற்றங்கரைப் பிள்ளையார்', 'நிர்விகற்பசமாதி' என்ற ஆறு கதைகளையும் சேர்த்து புதுமைப்பித்தனின் கதைகளின் எண்ணிக்கையை 102 என வரையறுக்கலாம்.

**(வேதசகாயகுமாரின் 'புதுமைப்பித்தனும் ஜெயகாந்தனும்' ஆய்விலிருந்து ஒரு பகுதி)**



படிப்பகம்

www.padippakam.com

# கல்கியின் மட்டரகம்

**ரசமட்டம்**

பிலிம் இறக்குமதி சங்கடத்தை முன்னிட்டு வினியோக விகிதாசார கட்டுப்பாடு அவசியம் என்று ஏற்பட்டுள்ள நிலையில் சாதாரணமாக சுமார் 12,000 அடி நீளத்துக்குள் படம் எடுத்து வருவதை வழக்கமாகக் கொண்டிருக்கும் ஹிந்தி பட முதலாளிகளுக்கு சர்க்கார் வகுத்துள்ள வரம்பான 11,000 அடிக்குள் படம் எடுப்பது சுளுவு; தென்னிந்தியப் பட முதலாளிகள் எடுக்கும் படத்தின் சராசரி நீளம் 18,000 அடியாக இருக்கும் பொழுது திடு திடுவென்று 11,000 அடிக்குள் பட உற்பத்தியை வரம்பு படுத்திக் கொள்ளுவது கஷ்டமான காரியம்; 14,000 என்று வரம்பு படுத்துவது நலம், என்று நம் நாட்டு பட முதலாளிகள் தொழில் சங்கடங்களை விளக்கும் போது சொல்லுகிறார்கள். இது, 'கல்கி' பத்திரிகையின் 'கல்கி' ஆசிரியருக்கோ, அல்லது 'கல்கி' ஆசிரியரின் 'கல்கி' பத்திரிகைக்கோ புரியவில்லை. அவர் வழக்கம் போல் கலை, கதை, கவிதை, இசை, இலக்கியம் முதலிய விவகாரங்களில் காலை விட்டுக் கொள்ளுவது போல, இதிலும் தமது கருத்தைச் சொல்லித்தான் தீரவேண்டுமென்று நினைத்து விட்டார்.

சமீபத்தில் ஸ்ரீவாஸன், தென்னிந்தியப் பட உற்பத்தியில் ஏற்பட்டுள்ள இந்த அவஸ்தையை பத்திரிகை பிரமுகர்கள் முன் விளக்கியுள்ளதில், 'கல்கி'க்குப் புரிந்ததெல்லாம் இவ்வளவுதான்: "மட்டரகமான படம் பிடிப்பதுதான், தமிழ் சினிமாத் தொழில்" என ஸ்ரீவாஸன் கூறுகிறாராம். ஸ்ரீவாஸன் பட முதலாளி; தம்முடைய படத்தைப் பார்க்க வரவேண்டிய சமுதாயமான வாடிக்கைகாரர்களை ஏன் அவர் வைய வேண்டும்! ஸ்ரீகல்கி, பிரபல ராமாயண ரசிகரல்லவா? ராமாயணங் கேட்ட கதையாக இது முடிந்ததில் அதிசயமென்ன?

ஸ்ரீவாஸன் சொன்னதெல்லாம் இவ்வளவுத் தான்: "தெரிந்த கதையை புரியும் மாதிரியில் படம் பிடிப்பதைத்தான் ஜனங்கள் விரும்புகிறார்கள்." "மட்டரகமான படங்களை, மட்டரகமான மக்களுக்கு தயாரித்து வருகிறோம்" என்று ஸ்ரீ வாஸன் சொல்வதாக, தமிழ் மக்களின் உயர்வைத் தாங்கிப் பிடிக்க முன் வருகிறார் கல்கி.

பட உற்பத்தி வரம்பு சர்ச்சை ஏற்பட்டபொழுது, "ஹிந்து" பத்திரிகை, 14,000 அடி வரம்பை ஆதரித்து எழுதியுள்ளது எப்பொழுது என்பது பற்றி, 'ஞாபக மறதி' வேறு. ஜூன் 9-ம் தேதி குறிப்பை, 19 -ம் தேதிக்குப் பின் தள்ளி வைத்துப் பார்த்தால்தான் அதை விபரீத நிலைக்கு உள்ளாக்க முடியும். இந்த 'ஞாபக மறதி' அவருக்கு இந்த கைங்கரியம் செய்து வைக்கிறது.

இப்பொழுது எழுந்துள்ள சர்ச்சை வர்த்தக நிலவரங்களை ஆதாரமாகக் கொண்டது. 'கல்கியார்' காண்பித்துக் கொள்ள முயலும் ரசிகத் தன்மையைப் பற்றியதல்ல. கச்சா பிலிம் விகிதாசார வரம்பை சற்று கூட்டினால்தான் படம் பிடிப்பவர்களுக்குச் சொற்ப சௌகரியமுண்டு. இதை விவாதித்துக் கொண்டிருக்கும் போது, 'கல்கியார்' ஏன் தமது ரசிகப் பட்டறையை திறந்து வைக்க வேண்டும்? "மட்டரக" மூளைகளுக்கு உதயமாகும் அக்குத் தொக்கற்ற வார்த்தைக் குப்பை எதற்கு? "ககர வர்க்கத்துக்குள்ளாகவே தமிழ்மேதை ஒடுங்கிக் கிடக்கிறது" என்று கோழிக் கனவு கண்டு கொண்டிருக்கும் இவரது துணை ரசிகரைப் போல, இவரும் ஏன், ஸ்ரீவாஸன் பேச்சில் தம்முடைய விசேஷ வியாக்யானத்தை சொருக முயல வேண்டும்? "அரிசிக்கே பஞ்சமடா" என்று சொல்ல வரும்போது "உனக்குத் தான் சர்க்கரைப் பொங்கல் செய்யத் தெரியாதே, நீ அப்படிச் சொல்லக் கூடாது" என்பது தான் 'கல்கி'யின் வாதக்குப்பை. அவர் வேண்டுமானால் தமது இரவல் - இலக்கியங்களையும், இரவல் - ரசனைகளையும், இரவல் - அபிப்பிராயங்களையும், "தமிழ் உலகின் கலை புனருத்தாரணத்துக்காக" பஜனை பண்ணிக் கொண்டிருக்கும் கும்பல்களிடம் போய் வேண்டுமானால், விற்றுக் கொண்டிருக்கட்டும். இங்கு குளறுபடி செய்து கொண்டிருக்க வேண்டாம்.

தினமணி 4-7-43

# காலைக்கடல்

'கூத்தன்'

(காலம் சென்ற சித்தரஞ்சன் தாசர் வங்காளியில் எழுதிய 'சாகர சங்கீதம்' என்ற கவிதையை, அரவிந்தர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். அதன் தமிழ் மொழி பெயர்ப்பு)

கதிரவன் உதயமாகவில்லை
மோகனமான இருள் உன்னைத் தழுவுகிறது;
உன்னைத் தன்னுள் ஆக்குகிறது.
காதலின் திரையா?
உன் வதனத்தில், உன் கண்களில்
உறக்கத்திலும் விழிப்பிலும்
என்ன சாந்தி!

இந்த சப்தமற்ற ஒளியில், காணும் இருளில்
உன் முகத்தில், உன் கண்களில்
என்ன சாந்தி!

என் வார்த்தைகள், என் கவிதை
இந்தக் காலையில்
தடுமாறுகின்றன.
நான் உனக்கு இளையவன் அல்லவா,
உனது கனிந்தப் பார்வை
என்னைச் சில சமயங்களிலாவது
நோக்காதா?
உன் ஹ்ருதயத்தில் ஒலிக்கும் கவிதை
என் உள்ளத்திலும் ஒலி செய்கின்றது.

(மணிக்கொடி 1934 நவம்பர் 25)



படிப்பகம்

www.padippakam.com

## 'காற்றாடி'யின் இலக்கிய சந்தேகங்கள்

'புதுமைப்பித்தன்'

விதிவிலக்காக 'காற்றாடி' நேற்று இலக்கிய சேவையில் புகுந்ததும் ஓர் நல்ல காரியந்தான்; கட்டுரையைப் படித்த பின்பு அதன் 'நல்லதன்மை' ஓர் முக்கிய பிரச்னையை தன் கவனத்திற்கு எடுத்துக் கொள்வதோடு முடிவடைந்து விட்டதுதான் எனக்கு வருத்தம்.

கட்டுரையின் தோரணை முழுவதுமே ஏதோ தன் செவிக்கு எட்டின அரைகுறை விஷயங்களை கொண்டு மேலோட்டமாக கட்சிப் பெயர் சூடி வாதித்துக் கொண்டு செல்வதாக இருக்கிறது.

'தழுவல் கூடாது' என்ற கக்ஷியின் தலைவரை நேற்று சந்தித்து இதைப் பற்றி பேசிக் கொண்டிருந்தேன்.ஏன் தழுவல் கூடாது என்று கேட்டேன்.... என்று தமது வாதத்தின் ஒரு பகுதியை ஆரம்பிக்கிறார் 'காற்றாடி' நண்பர்.

எனக்குத் தெரிந்த விஷயம் இதுதான்.

சென்ற இரண்டு மணிக்கொடி இதழ்களில், தழுவல்-மொழிபெயர்ப்பு பிரச்னை பற்றி என் சொந்த ஹோதாவில் சில அபிப்பிராயங்களை எழுதியிருந்தேன். அதாவது நான் முதல் மணிக்கொடி இதழில் எழுதியிருந்த என் அபிப்பிராயத்தை மறுத்து ஸ்ரீ.என். சிதம்பர சுப்ரஹமணியன் 'தழுவல் அவசியந்தான்' என்றும் ஸ்ரீ.கு.ப.ரா. 'தழுவல் பாதகமல்ல' என்ற விதத்திலும் எழுதியிருந்ததற்கு நான் மறுபடியும் என் அபிப்பிராயத்தை வற்புறுத்தி அவர்கள் சந்தேகங்களைத் தெளிவுபடுத்த முயன்றேன். எனக்கு 'த.கூ.' கட்சி 'த.வே' கட்சி என்று இரண்டு இருப்பதாகவும், 'த.கூ' கட்சிக்கு ஒரு தலைவர் வேறு இருப்பதாக எனக்குத் தெரியாது. கூடிய சீக்கிரம் த.கூ கட்சித் தலைவரை எனக்கு அறிமுகம் செய்து வைக்கும்படி நான் 'காற்றாடி'யை கேட்டுக் கொள்ளுகிறேன்.

### வியாக்கியானம்

நிற்க, 'தழுவல்' என்பதற்கு 'காற்றாடி'யின் வியாக்கியானம் வருமாறு :

'அன்னிய பாஷையில் எழுதப்பட்டுள்ள நூல்களை ஆதாரமாகக் கொண்டு, அதையொட்டி தமிழிலோ, இதரப் பாஷைகளிலோ எழுதுவதற்கு 'தழுவல்' என்று பெயர்.'

மேலோட்டமாகப் பார்ப்பதற்கு இதில் என்ன ஆட்சேபனை இருக்கிறது என்று புலப்படலாம். முதலில் நண்பர் தமது சூத்திரத்தில் 'நூல்கள்' என்று எதைக் குறிப்பிடுகிறார் என்பதை தெளிவுபடுத்த வேண்டும். அவரது வியாக்கியானத்தில் வரும் கருத்துக்கேற்ப, சிறு கதைகள், நாவல்கள், நாடகங்கள் இவையாவும் 'நூல்கள்' என்று அவர் உபயோகிக்கும் பிரயோகத்தில் வரும் சில அம்சங்கள்.

காற்றாடியின் வாதம் முழுவதையும் ஆராய்ந்தால், இந்த நூல்கள் என்ற பதத்திற்கு தாராள வியாக்கியானம் கொடுத்திருப்பதினால்தான் என்று எனக்கும் புலப்படுகிறது. அதாவது இலக்கிய அம்சங்களான, கதை, நாடகம், நாவல்களுடன், தத்துவம், விஞ்ஞானம் முதலிய துறை கிரந்தங்களையும் சேர்த்துக் கொண்டு தழுவல் கூடாது என்று சொல்கிறவர்கள் புது சிந்தனைகள் ஏற்படாதவாறு வேலிபோடுகிறார்கள் என்ற அனாவசியமான முடிவுக்கு வருகிறார்.

ஷேக்ஸ்பியர் நாடகத்தை தழுவி எழுதுகிறேன் என்று ஒப்புக்கொண்டு விட்டால், ஏற்படும் விளைவு குற்றமற்றதல்ல, என்ற முடிவுக்கு வருகிறார். அத்துடன் அவர் கொடுக்கும் இன்னும் ஒரு உதாரணமும் அதை விட விசித்திரமாக இருக்கிறது. வெள்ளைக்காரர்கள் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, ஒயின் சாப்பிடுகிறார்கள் என்பதை, 'இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு தாம்பூலம் தரித்துக் கொண்டார்கள்' என்று சொல்லி விடுவதால் வெள்ளைக்காரத் தன்மையை மாற்றி விட முடியும் என்கிறார். வெற்றிலை போட வைப்பதால் ஒரு வெள்ளைக்காரனைத் தமிழனாக்கி விட முடியுமா? அவ்வளவு இலகுவான காரியமல்ல என்று நான் நினைக்கிறேன்.

### சில உதாரணங்கள்

நான் ஒரு உதாரணம் கொடுக்கிறேன். நண்பர் இரட்சண்ய சேனை என்ற ஒரு ஸ்தாபனத்தைப் பார்த்திருக்கிறாரா? அதில் வரும் ஐரோப்பிய ஸ்திரி புருஷர்கள் நாம் அணியும் வேட்டி,சட்டை, புடவைகளை உடுத்துத்தானே வருகிறார்கள். அதனால் அவர்கள் நம்மவராகிவிட முடியுமா?

இன்னும் ஒரு உதாரணம் கொடுத்துப் பார்க்கிறேன். அப்பொழுதாவது இந்த விபரீதவாதம் தெளிவுபடுகிறதா என்று பார்ப்போம்.

ராமாயணத்தை நாம் யாவரும் - மத சம்பந்தமான பக்தி ஒரு புறம் இருக்கட்டும் - சாகாவரம் பெற்ற உலகத்தின் பொது இலக்கியம் என்று சொல்லக்கூடிய தன்மை வாய்ந்தது என்று ஒப்புக்கொள்ளுகிறோமே.

அதை ஒரு இங்கிலீஷ்காரன் 'தழுவி' - இவர் வியாக்கியானத்தின் படி - எழுதுகிறான் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். அந்தக் கற்பனைத் தழுவலை இங்கிலீஷிலிருந்து தர்ஜமா செய்தால் எப்படியிருக்கும் என்று பாருங்கள்.

### ராமாயணம் இங்கிலீஷில் 'தழுவ'ப்பட்டால்

"முன்னொரு காலத்திலே, அல்பனி என்று இங்கிலாந்தில் ஒரு நாடு இருந்தது. அங்கு டைய்மன் என்ற அரசன் நெறிமுறை தவறாது கிறிஸ்துவ தர்மத்தின் இலட்சியமாக ஆட்சி செய்து வந்தான். பிரஜைகள் மிகவும் சந்தோஷமாகவும் சுபிட்சமாகவும் வாழ்க்கை நடத்தினார்கள். மன்னனைத் தங்கள் தந்தையைப்போல பாவித்து வாழ்க்கை நடத்தினார்கள்.

அந்தக் காலத்தில் கான்டர்பரி ஆர்ச்பிஷப் வாஸிவஸ் என்பவர் மன்னனுக்குக் குலகுருவாகவும், ரோமாபுரி கிறிஸ்துவ மத சாம்ராஜ்யத்தின் பிரதிநிதியாகவும் இருந்தார்.

(மன்னனுக்கு ..... இவ்விடத்தில் சிறிது சிரமம் ஏற்படுகிறது. கிறிஸ்துவ மதாசாரத்தின்படி ஒருவன் ஏககாலத்தில் ஒரு மனைவிக்கு மேல் கலியாணம் செய்து கொள்ளக்கூடாது. மனைவிகளை மக்களாக்கி வைத்துப் பார்ப்போம்.)

மன்னனுக்கு மூன்று புத்திரிகள் உண்டு. தனக்குப் பின் ஆட்சி நடத்த வாரிசில்லாமல் போய்விடுமே என்றஞ்சி, ரோமாபுரிக்குக் காணிக்கைகள் பல அனுப்பினான். ஜெருஸலத்தை சாரஸன் ஜாதியினர் கையிலிருந்து மீட்க மூன்று முறை குருஸேதுகள் (மதப்போர்) நடத்தினான். கான்டர்பரி மடாலயத்தை புதுப்பித்தான். அதிலும் பயனில்லை. பரமண்டலங்களில் உள்ள பிதாவின் மீதும், ஆர்ச் பிஷப் வாஸிவஸ் மீதும் அசையாத நம்பிக்கை வைத்த மன்னன், தன் மூன்று புத்திரிகளான காதரீன், கிளரிஸல், ஸீலியா என்பவர்களுக்குக் கலியாணம் செய்து வைத்தான். அப்படியும் புத்திரப் பேறு ஏற்படவில்லை. இப்படி அறுபதினாயிரம் வருஷங்கள் கழிந்தன. இத்யாதி.... இத்யாதி.... ".

எனக்கே இந்தக் கோரத்தை நீடித்துக்கொண்டு போக மனம் வரவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

மேற்கண்ட தழுவல் - ராமாயணத்தின் கோரத்தைப் பார்த்தீர்களா? அது ராமாயணமா அல்லது தனிப்பட்ட இங்கிலீஷ் நிலத்தில் விளைந்த சரக்கா? இரண்டுமல்ல.

இந்தமாதிரி எழுதுவதினால் வால்மீகியின் கதை அழகை எடுத்துக் காட்டிவிட முடியும் என்று ஒரு வெள்ளைக்காரன் நம்பினால், அவனைப்பற்றி நாம் என்ன முடிவுக்கு வரமுடியும், வரவேண்டும்?

இதே மாதிரி ஷேக்ஸ்பியர் நாடகங்களை ஒரு தமிழன் தழுவி எழுதுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதில் ஷேக்ஸ்பியர் கலையழகைக் காட்டிவிட முடியுமா? ஷேக்ஸ்பியர் ஒரு புறமிருக்கட்டும். சாதாரண நாவலாசிரியன் ஒருவனை எடுத்துக் கொள்ளுங்கள். அவன் கதைகளைத் தழுவி, தமிழர்களான கதாபாத்திரங்கள் நடமாடும் கதைகள் ஆக்குவதால் விளையும் பயன் விசுவாமித்திர - சிருஷ்டிதானே?

### போலிக் கலை

தழுவி எழுதுவதின் மூல நோக்கம் பிற நாட்டு இலக்கியங்களின் அழகை எடுத்துக்காண்பிப்பதுதான் என்றால், அது வெறும் கஜனி வேலைதான். திறமைசாலி ஒருவன் அப்படியே தமிழ் சம்பிரதாயங்கள் நிறைந்த ஒரு புஸ்தகமாக ஒரு விதேசி நூலைக் கொண்டு வந்துவிட்டால் அவனைப் போற்றவேண்டாமா என்கிறார். நிஜமான கதர்தானோ என்று சாதாரண மனிதனை மருளவைக்கும்படி இருக்கிறது போலிக் கதர். அந்த மாதிரி தயாரித்துவிட்டதற்காக ஒருவனை போற்றுகிறோமா? அனுபவம் உள்ளவனுக்கு போலி எது சுத்தம் எது என்று தெரிந்துவிடவில்லையா? என்னதான் தமிழன் வேஷம் போடவைத்தாலும் அந்தத் திறமைப் போலிக் கலைதான். நமது இலக்கியத்தை ஓர் தவறான 'ருசிப்பிச'கான பாதையில் செலுத்துகிறது இந்தப் போலிக்கலை. இதை தடுப்பதுதான் என் நோக்கம்.

'காற்றாடி'யின் முடிவுரை விசேஷமானது, விசித்திரமானது. யாரோ பிற நாட்டு விஷயங்கள் புகுவதைத் தடுக்க முயற்சித்து வேலி போடுவதாக கற்பனை பண்ணிக்கொள்ளுகிறது.

'இலக்கியம் என்பது பாசிபிடித்த குட்டையல்ல. மதம், இலக்கியம், கலை, விஞ்ஞானம் முதலியவைகள் அவ்வப்போது வளர்ந்து கொண்டே இருக்கும் ஜீவப் பொருள்கள். ஜான் ஸ்ட்ராஷி சொல்வதுபோல் இலக்கியம் என்பது ஓர் மகா சமுத்திரம். மனித வர்க்கத்தின் சிந்தனைகள், ஸ்வப்பனங்கள், மனோபாவங்கள், உருவாவதற்கு ஒரு சாதனம் வேண்டியதுதானே. அதுதான் இலக்கியம். இலக்கியம் மகா விஸ்தாரமான சாகரமென்று சொன்னேன். பல நாடுகளிலும் உள்ள உற்பத்திகளும், தாயிடமான சாகரத்தை வந்தடைகின்றன. இதை நான்கெல்லைகட்டி வேலிபோட முயற்சிப்பது அசட்டுதனமான காரியமாகும்.'

இது அவ்வளவையும் நான் ஒப்புக் கொள்ளுகிறேன். இந்த சமுத்திர உருவகத்தையே கொஞ்சம் நெருங்கிப் பிடித்துப் பார்ப்போம். உலகமென்னும் அதாவது பலவித சீதோஷ்ண விகர்பங்கள் உள்ள பூப்பிரதேசப் பகுதி எல்லாவற்றிலும் பரந்து கிடக்கிறது சமுத்திரம். சீதோஷ்ண விகற்பங்களுக்கேற்ப, ஜீவராசித் தன்மைகள் மாறிக் காணப்படும் என்பதை அவர் ஒப்புக்கொள்ளுவார் என்று நினைக்கிறேன். அதாவது பொதுவாக உஷ்ணப் பிரதேச சமுத்திரங்களில் காணப்படும் ஜீவராசிகள் அதற்கு மாறுபட்ட பிரதேசங்களில் உயிர் வாழாது; காணப்படாது. இருந்தாலும் பொதுப் பிரயோகமான சமுத்திரம் என்ற பதம் குறிக்கும் பகுதியில்தான் அவை வாழுகின்றன: அதற்காக ஆர்ட்டிக் குளிர் பகுதியில் உள்ள மீனும், இந்து மகா சமுத்திரத்தில் காணப்படும் மீனும் ஒன்றுதான் என்றால் விபரீதம் வேறு என்ன? ஆர்ட்டிக் குளிர்ப் பகுதியில் உள்ள மீனைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் அதன் சுற்றுப்புற அமைதிகளோடு வைத்துத்தானே பார்க்க வேண்டும்.

### நோக்கம்

சுனையில் உள்ளதும் கிணற்றில் காணப்படுவதும் ஆற்றில் ஓடுவதும் சமுத்திரத்தில் தென்படுவதும் வித்தியாசமாக மேல் பார்வைக்குத் தென்பட்டாலும் தண்ணீர்தான் என்பதை யார் மறுப்பார்கள்? இவ்வளவு பேதத்திலும் ஐக்கியத்தை காண்பது தானே தெளிவு. ஜெர்மானியன் ஆனாலும் புஷ்டு அல்லது நீக்ரோ ஜாதியன் ஆனாலும் அவனும் மனிதன்தான் என்று மனதை விசாலப்படுத்துவதுதானே பிற இலக்கியங்களை ஆராய்வதின் நோக்கம்.

"என்னிடம் இருப்பது 'தமிழன்-தமிழச்சி' அளவுகோல்தான்; நீ எவனானாலும்சரி, இந்த வேஷம் கட்டிவந்தால்தான் உன்னோடு அளவளாவ முயலுவேன்" என்று முரண்டிக் கொண்டிருப்பது 'இலக்கியத்திற்கு நான்கெல்லை கட்டி வேலி போட முயற்சிக்கும் அசட்டுத் தனமான காரியமா' அல்லது பிறநாட்டு இலக்கியத்தை அதன் சுற்றுப்புற அமைதிகளோடு எடுத்துக் காட்டமுயற்சிப்பது அசட்டுத்தனமா?

**தினமணி 8.12.1937**

○

**ஆராய்ச்சி மணி**

## போட்டிப் பரிசும், பத்திரிகைகளும்

வ.ரா.
ஆசிரியர்
வீரகேசரி
கொளும்பு.

அன்பார்ந்த வ.ரா.,

எங்கள் இருவருக்கும் சில மாதங்களாவது உங்களுடன் நெருங்கிப் பழகும் பாக்கியமோ, அல்லது துர்பாக்கியமோ ஏற்பட்டது. அந்த உரிமையைக் கொண்டுதான் இந்தக் கடிதம் எழுதுகிறோம்.

நீங்கள் இங்கு இந்தியாவில் இருந்தபோது, எங்களுடன் பழகிய காலத்தில், தினம் ஒரு முறையாவது தமிழ்ப் பத்திரிக்கைகளில் நடத்தப்படும் போட்டிப் பரிசு மோசடியை அழுத்தமாகக் கண்டிக்காமலிருந்ததில்லை. ஆனால் இன்று, வ.ரா! நீங்களே பொறுப்பு வகித்து ஆசிரியராக இருந்து நடத்தும், 'வீரகேசரி'யில் போட்டிப் பரிசை நடத்தி வருகிறீர்கள். இந்த மாற்றம் எப்போது வந்தது தங்களுக்கு?

நீங்கள் இந்தியாவில் இருந்தபோது தமிழர்கள் தமிழ் எழுத்தாளர்களைத் தக்கபடி ஆதரிப்பதில்லையென்று குறைப்பட்டதை நாங்கள் கேட்டதுண்டு. தமிழர்கள் கவியரசர் பாரதியை பட்டினியால் துடித்து, துடித்து இறக்க விட்டதாகப் பேசியதை நாங்கள் கேட்டிருக்கிறோம். போன வாரம் கூட சென்னையில் பாரதி தினம் கொண்டாடப் பட்டபோது பல பேச்சாளர்கள் தமிழரின் நன்றி கெட்ட குணத்தைப் பற்றி மணிக்கணக்காகப் பேசினார்கள். ஆனால் வ.ரா.! பாரதியாரின் பெயரை பிரபலப்படுத்த முயலும் நம் போன்ற எழுத்தாளர்கள் இந்தியாவில் கண்டிக்கும் போட்டிப் பரிசை, இலங்கையில் போய் ஆதரித்தால் தமிழர்கள் நமக்கு நன்றி செலுத்தத்தான் வேண்டுமா?



படிப்பகம்

www.padippakam.com

'மனசாட்சி, கழுதை, குதிரை எல்லாம் ஒன்றுதான்' என்ற பெரிய உண்மையை நீங்கள் இலங்கையில் போய்த்தான் தெரிந்து கொண்டீர்களா? அதற்கு நீங்கள் இவ்வளவு சிரமப்பட்டிருக்க வேண்டாமே. சென்னையிலேயே தேசியப் போர்வை போர்த்து உலாவுகிறவர்கள் இருக்கிறார்களே. அவர்களோடு சேர்ந்து சுகப்பட முடியவில்லையா?

நாங்கள் இளம் எழுத்தாளர்கள். தமிழ் நாட்டினரின் ஆதரவையும், நன் மதிப்பையும் எதிர்பார்த்து வருங்காலத்தைப் பற்றி கனவு கண்டு கொண்டிருக்கும் இளைஞர்கள் என்ற ஹோதாவில் தங்களை ஒரு கேள்வி கேட்கிறோம். இது போல தமிழ் எழுத்தாளர்கள் வருஷத்துக்கு ஒரு நீதியும், ஊருக்கு ஒரு கொள்கையுமாக எழுதி அதையெல்லாம், தமிழர் ஆதரிக்க வேண்டுமென்றால், அவர்கள் நம்மை ஆதரிப்பார்களென்று நம்புவது சரிதானா? அது தமிழர்களின் புத்திசாலித் தனத்தை கேலி செய்வதாகாதா?

உங்கள் தலையங்கத்தில், "மந்திரிகள் ராஜினாமா செய்வார்களா?" என்று எழுதுகிறீர்களே, அது போலவே நீங்களும் நடைமுறையில் செய்ய வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அந்த எல்லை தாண்டியாகி விட்டதென்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் பழைய நட்புரிமையைப் பாராட்டியும், எங்கள் எழுத்துக்களின் மீதுள்ள பற்றுதலினால் ஏற்பட்ட சுயநல உணர்ச்சியாலுமே எழுதுகிறோம். ஏதாவது சமாதானம் உண்டானால் சொல்லுங்கள்.

**ஸ்ரீ பி. எஸ். ராமையா**
**சொ. விருத்தாசலம் பி. ஏ.**

தினமணி 21-9-35

○

## மாயா பஜார்

வேல் பிக்சர்ஸ் கம்பெனியால் தயாரிக்கப்பட்ட "மாயா பஜார்" என்ற தெலுங்கு பேசும்படம் பிராட்வே டாக்கீஸில் நடக்கிறது.

'மாயா பஜார்' என்ற பேசும்படம் பழைய புராண சம்பந்தமான கதையாகவே இருந்தாலும் பல அம்சங்களில் கச்சிதமாகவும் விரசமற்றும் இருக்கிறது. அதை சினிமா என்று சொல்லக்கூடாது; அது படமாக தயாரிக்கப்பட்ட நாடகம்.

### காட்சி அமைப்பு

புராணத்திற்கு ஏற்ற கற்பனை எல்லையை எட்டும் படாடோபமான காட்சியமைப்பிற்கு முயற்சி எடுத்துக் கொள்ளாவிட்டாலும், தம் வசம் உள்ள சௌகரியங்களை நன்றாக, குற்றமில்லாமல் பயன்படுத்தியிருக்கின்றனர். காட்சிகளில் நம் கவனத்தைக் கவருவது துரியோதனன்(?) துயிலெழும் பகுதி. அதில் சூரிய கிரணங்கள் வந்து மன்னனை எழுப்புகிறதாம். கன்னியர்கள் சூரிய கிரணங்கள் போல் தலையணி சூடி நாட்டியமாடி பூபாள ராகத்தில் திருப்பள்ளி எழுச்சி பாடிக் கொண்டு வந்து அவனை எழுப்புகின்றனர். இக்காட்சி பொருத்தமாகவும் ரசனையுடனும் அமைக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தப்படியாக டிரிக்ஸீன் அமைப்புகள் குற்றமில்லை. கடோத்கஜன் வானத்தில் நடப்பது, வானத்தில் நின்று யுத்தம் புரிவது, பாத்திரங்கள், சாமான்கள் தானே ஓடுவது முதலியன கதையின் அவசியத்திற்கு ஏற்ப அமைந்திருக்கின்றன.

### வேஷப்பொருத்தம்

கடோத்கஜன் சம்பந்தப்பட்டவரை வேஷம் சரியாகப் பொருந்தியிருக்கிறது. சரியான ஆஜானுபாகுவான ஆசாமி. அவரை ராக்ஷஸன் என்று நம்மால் நம்ப முடியாவிட்டாலும் ராக்ஷஸன், இப்படி இருந்திருக்கலாம் என்று உயரம் பருமன் முதலியவற்றிற்கு பரிசு அளிக்கலாம். கடோத்கஜனின் ராக்ஷஸ பரிவாரந்தான், பட்டினித் தெய்வத்தின் நேர் வாரிஸுகளாக இருக்கின்றன. இதரர்களைப் பொறுத்தவரை வேஷம் பொருத்தமாயில்லை. கிருஷ்ணன் இப்படிப்பட்ட சுடுமூஞ்சியாகத்தான் இருக்க வேண்டுமா? அபிமன்யு, பாவம் வெகு சாதுப்பிள்ளை; புராண அபிமன்யுவிற்கும் இவனுக்கும் வெகுதூரம். நல்ல பிள்ளை. சர்வீஸ் கமிஷன் பரிட்சைக்குச் சென்றால் ஒருவேளை பாஸ் கூட ஆகிவிடுவான். சகுனி-ஐயோ பாவம்; இவனை சூழ்ச்சிக்காரன் என்று சொல்லுகிறவர்களை கன்னத்தில் அடிக்க வேண்டும் என்ற கோபம் நமக்கு வரும். அவ்வளவு பரிதாபமாக இருக்கிறது பார்ப்பதற்கு. நடிகைகள்-சகுனிகளும் கிருஷ்ணர்களும் இப்படி இருக்கும்போது சுபத்திரைகளும் வத்சலைகளும் தேவலோக ரம்பைகளாகத்தான் இருப்பார்கள் என்று எதிர்பார்ப்பது தவறு.

### நடிப்பு, சம்பாஷணை

பொதுவாக ஒருவருமே நடிக்க முயற்சிக்கவில்லை. கோபத்தைக் காண்பிக்க வேண்டுமானால்,'கசடதபற' வார்த்தை அள்ளி வீசிய பாட்டு ஒன்றைப் பாடிவிட்டால் போதும் என்று நினைக்கிறார் துரியோதனன். பொதுவாக சம்பாஷணை யாவும் பரம்பரையாக ஓட்டுத் திண்ணையில் பட்டினிக் கிடப்பவர் கனவு காணக்கூடிய ராஜ சம்பாஷணைகள். அதில் எந்த சமயத்தில் பாட்டு வரும் என்பதை யாரும் எதிர்பார்க்க முடியாது; அப்படி திடீர் திடீர் என்று பாட்டுக்கள் பொத்துக் கொண்டு வரும்.

பொதுவாக படம் குற்றமில்லை என்று கூற வேண்டும்: ஏனெனில் படம் தயாரித்தவர்கள் தங்களுக்குள்ள வசதி இன்னதென்பதை பூரணமாக உணர்ந்து முழுவதும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இரண்டாவதாக தென்னாட்டுப் படங்களுக்கு முக்கியமாகத் தமிழ் படங்களுக்கு பீடித்திருக்கும் விரச-வியாதி இதைத் தொத்திக் கொள்ளவில்லை.

**சொ. வி.**

**தினமணி 8.1.1937**

○

## மதிப்புரை

**சுபாஷ் போஸ்**
**(பக்கம் 101, விலை 4 அணா)**
**ஆசிரியர் : டி. எஸ். சொக்கலிங்கம்,**
**கிடைக்குமிடம் : அல்லயன்ஸ் கம்பெனி, மைலாப்பூர், சென்னை.**

நாளாவிருத்தி அரசியல் விவகாரங்களைப் படித்து ரசிப்பவர்களுக்கு, இவ்வருஷ ராஷ்டரபதியைப் பற்றி சில முக்கியமான குறிப்புகளை விவரிக்கும் இச் சிறுநூல் பெரிதும் பயன்படும் என்று நினைக்கிறேன். அரசியல் துறையில் அவரது சேவைக் குறிப்புகளடங்கிய இந்நூல் அவரை அளந்து அறிந்து கொள்வதற்கு ஏற்ற சாதனமாகும்.

**சுபாஷ் போஸ்**
**(பக்கம் 87, விலை 4 அணா)**
**ஆசிரியர் : கே. ராமநாதன்,**
**லோகசக்தி பிரசுராலயம், 21, சௌத் கூவம் ரோட், கோமளீசுவரன் பேட்டை, சென்னை.**

ஆசிரியர் ஸ்ரீ திரு. வி. கலியாண சுந்தர முதலியாரவர்களின் அணிந்துரையுடன் கூடிய இச்சிறுநூல், சிறிது நெரடான நடையில், ராஷ்டிரபதியைப் பற்றி விவரிக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

## புத்தரின் ஆட்டுக்குட்டிகளும் வேலுசாமியின் தன்னடக்கமும்

*சுபமங்களா ஜூலை 95 இதழில் வெளியாகியிருந்த காலச்சுவடு இதழ் 10 பற்றிய திரு. பொ. வேலுசாமியின் விமர்சனத்திற்கு எதிர் வினையாக சுபமங்களாவிற்கு அனுப்பப்பட்டிருந்த கடிதம் இது. சுப மங்களாவில் இக்கடிதம் பிரசுரிக்கப்படவில்லை.*

காலச்சுவடு இதழ் 10 பற்றி பொ. வேலுசாமியின் அவதூறுக்கு எங்கள் எதிர்வினை. வாசகர் மத்தியில் காலச்சுவடு பற்றிய எதிர்மறையான எண்ணத்தை உருவாக்கும் நோக்கத்துடன் அதன் உள்ளடக்கத்தைத் திரித்தும் பழித்தும் இந்த 'விமர்சனம்' எழுதப்பட்டுள்ளது என்பதால் சிறிது விரிவாகப் பதில் எழுத வேண்டியுள்ளது. காலச்சுவடு 1991 ஆண்டு மலரை சுஜாதா சுபமங்களாவின் பக்கங்களில் நிராகரித்து எழுதியிருந்ததை வாசகர் நினைவுப்படுத்திக் கொள்ள வேண்டும். சுபமங்களாவின் விமர்சனப் பக்கங்களின் பொதுத்தன்மைக்கும் இந்த இரு விமர்சனங்களுக்குமான வேறுபாட்டை வாசகர் கவனிக்கவேண்டும்.

வேலுசாமியின் திரிபுரை கலக எதிர்க்கலாச்சார மொழியில் அல்லாமல் சுபமங்களாவிற்கு உகந்த மொழியில் எழுதப்பட்டுள்ளது. வேலுசாமி குழுவினரின் பிரதிகளில் குத்துப்புள்ளி போல இறைக்கப்பட்டிருக்கும் 'பார்ப்பனியம்' இதில் காணக் கிடைக்காதது மற்றொரு சிறப்பம்சம். இதழில் ஒரு சிலருக்கும் ஒரு சில கேள்விகளுக்கும் பதில் சொல்லும் பண்பைக் காண்கிறார் வேலுசாமி. இது தமிழின் தீவிர இதழ்களின் பொதுக்குணம். 1930களில் வெளிவந்த மணிக்கொடியில் இதைக் காணலாம். வேலுசாமியின் நிறப்பிரிகையில் இதை நிறைவாகப் பார்க்கமுடியும்.

சிறுபத்திரிகைச் சூழல்பற்றிய தலையங்கத்தில் கலாச்சார அதிகாரிகளும் நவீனப் பண்டிதர்களும் வாசகனை மிரட்டவும் அடக்கவும் கோட்பாடுகளைப் பயன்படுத்தி வருவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கோட்பாட்டாளர்களின் தோரணைகள் மீதான எதிர்வினை தலித்தியம், அமைப்பியல்வாதம் போன்ற சிந்தனைகளுக்கான எதிர்வினையாகாது. பெண்ணியம், அமைப்பியல், தலித்தியம், பின்நவீனத்துவம் போன்ற சிந்தனைகள் நம் சமுதாயத்தை அறியவும் அதை மாற்றவும் உதவும் என்பதை காலச்சுவடு உணருகிறது. இச்சிந்தனைகளின் நியாயங்களையும் காலச்சுவடு மறுக்கவில்லை. நம் சூழலின் தனித்தன்மைகளை கணக்கிலெடுத்துக்கொண்டே அவை உள்வாங்கப்பட வேண்டும் என்பதே காலச்சுவடின் நிலைப்பாடு. வேலுசாமி திரித்துள்ளதுபோல அமைப்பியல் போன்ற மேற்கின் சிந்தனைகள்

படிப்பகம்

www.padippakam.com

நம்மை அவமானங்களுக்கு உட்படுத்துவதாக தலையங்கத்தில் இல்லை. நவீனப் பண்டிதர்கள் வாசகர்களை மிரட்டவும் அவமதிக்க வும் இச்சிந்தனைகளைப் பயன்படுத்துவது கண்டிக்கப்பட்டுள்ளது.

மனுஷ்யபுத்திரனின் விவாதம் கட்டுரையில் உள்ள 'வாழ்வையும் ஒட்டுமொத்த பிரபஞ்சத்தையும் தன்வயப்படுத்திக் கொள்வதில்தான் உச்சக்கட்ட படைப்புநிலை சாத்தியப்படுகிறது' என்ற வாக்கியத்தை மதத்தின் சட்டகத்திற்குள் முடக்கும் நோக்கத்துடன் அதன் ஒட்டுமொத்த அர்த்தத்திலிருந்து வெட்டி தொங்கவிட்டிருக்கிறார் வேலு சாமி. படைப்புநிலையில் சுய அனுபவம், புற அனுபவம் என்கிற பிரிவினைகள் அழிந்து போகின்றன. எல்லாவகைப்பட்ட அனுபவங் களையும் மனம் தன்வயப்படுத்துகிறது என்பதுதான் இவ்வரிகளில் சொல்லப்பட்டுள்ளது.

இதே கட்டுரையில் 'வானம்பாடிகள் மொழிக்கோ சிந்தனைக்கோ நேர் மறையான பங்களிப்பைச் செய்யவில்லை' என்றிருப்பதை 'நேர் மையான பங்களிப்பைச் செய்யவில்லை' என்றும் கட்டுரையில் உள்ள 'ஸ்டாலினிஸ்டுகளால் அவிழ்த்துவிடப்பட்ட இக்கேள்விக்குள் ஒளிந்திருக்கும் வேட்டைநாய்...' என்று தொடரும் வாக்கியத்தை '...ஸ்டாலினிஸ்டு வேட்டை நாய்களால் அவிழ்த்துவிடப்பட்டது என் கிறார்' என்றும் வேலுசாமி திரித்துள்ளார்.

தலித் இலக்கியத்தின் தேவை அதன் முக்கியத்துவம் ஆகியவை பற்றிய சிவசேகரத்தின் கருத்துகள் அழிக்கப்பட்டு அவர் 'டானியலின் எதிரி'யாக தலித் இரட்சகரால் அறிவிக்கப்பட்டுள்ளார். டானியலின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை சிவசேகரம் தன் கட்டுரையில் முன் வைக்கிறார். டானியலின் நாவலின் வடிவரீதியான குறைபாடு களாகத் தான் காண்பவற்றையும் அவருடன் கோட்பாட்டுத் தளத்தில் தனக்குள்ள கருத்து வேறுபாடுகளையும் சிவசேகரம் தெளிவாக முன் வைத்துள்ளார். புத்தகத்தையும், ஆசிரியரையும் வழிபடுவதில் நம்பிக் கையற்ற வேலுசாமி சிவசேகரத்தின் கருத்துகளை எதிர்கொள்ள வேண்டும்.

'ஐ.ஏ.ஸ். ங்கற CADRE ஒழிஞ்சாகணும்' என்று எஸ்.என். பேட்டியில் சொல்வதை 'ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் தேர்வுகளை ஒழிக்கவேண்டும் என்று' சொல்லியிருப்பதாகத் திரிகிறார். ஏதோ தேர்வுகளை ஒழித்து விட்டு நியமன முறையைக் கொண்டு வந்துவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று எஸ்.என் சொல்லியிருப்பது போல.

இப்படி வார்த்தைக்கு வார்த்தை திரித்துக் கூறியுள்ளதையே 'விமர் சனம்' என்ற பெயரில் சுபமங்களா பிரசுரித்துள்ளது. விமர்சனம்

படிப்பகம்

www.padippakam.com

என்ற போர்வையில் இதுபோல் பிரதியை முற்றாகக் களங்கப் படுத்தும் எழுத்துகளை பிரசுரிப்பதில் இதழ் ஆசிரியரின் பொறுப்பு பற்றி விவாதிக்க வேண்டும்.

அவதூறின் இறுதியில் வேலுசாமி எழுதியிருக்கும் 'புத்தரால் காப் பாற்றப்பட்ட ஆட்டுக்குட்டிகள்' என்ற குட்டிக்கதையைப் பற்றி அவ சியம் குறிப்பிட வேண்டும். காஃப்காவின் குட்டிக் கதைகளுடன் ஒப் பிடத் தகுந்தது இது. தன்னடக்கம் காரணமாக இதை ஜெயமோகனு டையதாகக் காட்டியிருக்கிறார். விமர்சனக் கதைகளுடன், புனை கதைகளையும் வேலுசாமி தொடர்ந்து எழுத வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

வேலுசாமியால் எரிக்கப்பட்டிருக்கும் காலச்சுவடின் பிரதியிலிருந்து சில குரல்கள்:

வளர்முக சமூகங்களில் ஜனநாயக உரிமைகள் அதிகரிக்கும்போது இதுவரை ஓரங்கட்டப்பட்ட மக்கள் திரள் மையத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. ...இப் புதிய குழுக்களின் வெளிப்படையாகத் தெரி யும் குறிக்கோள்கள் அற்ற தன்மை, ஊழல், பண்பற்ற அரசியல் போன்றவை காரணங்களாகக் கூறப்பட்டு அதிகாரத்துவம் நியாயப் படுத்தப்படுகிறது. மத்தியதரவர்க்கத்தினருக்கு இந்த கீழ்மட்டத்தி லிருப்பவர்களின் அரசியல் எப்போதும் அச்சம் தருவதாக இருக் கிறது. வளர்முக சமூகங்களில் அதிகாரத்துவமானது. இந்த கலாச்சார அதிர்ச்சியை தனக்கு சாதகமாக எடுத்துக் கொள்கிறது. (பக்கம் 71)

தலித் இலக்கியம் வெறுமனே தீண்டாமை ஒழிப்புக்கும் ஆலயப் பிரவேசத்திற்கும் ஆதரவான சாத்வீக சீர்திருத்தவாதிகளின் கனி வான மனிதாபிமானத்தின் குரலல்ல. அது தேசிய இன, விடுதலை, பெண்ணியம், வர்க்கப்போராட்டம் என்பனவற்றின் போர்க்குணத் தையுடையது. ...அதில் அரசியலும் பிரசாரமும் வெளிவெளியாகவே இருக்கும். (அவை அழகியலுக்கு ஊறு செய்ய அவசியமில்லை) அதன் யதார்த்தப் பண்பு படைப்பாளியின் சமுதாய நோக்கிற்கு உட்பட்டு இருக்கும். இதனால் அதன் உண்மை எந்த சத்திய தேடற்காரர்களது உண்மைகளையும் விடத் தாழ்ந்துவிட அவசிய மில்லை. (பக்கம் 34)

சென்ற ஒரு நூற்றாண்டுத் தமிழ் மொழி/பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களால் அதிகாரத்தை இழந்த பிரிவினர் இம்மாற்றங்களை கண்டித்தும் கேலி செய்தும் வந்துள்ளனர். தமிழில் சிறுபத்திரி கையின் தோற்றம், வளர்ச்சியின் ஊற்றுக்கண் இதுதான். (பக்கம் 52)

படிப்பகம்

www.padippakam.com

மத்தியதர வாழ்க்கை உருவாக்கித் தரும் மதிப்பீடுகளை அந்த வர்க்கம் பேணிக்காத்து தன் இருப்பின் நலன்களைத் தொடர அவற்றை உறுதிப்படுத்த முயலுகிறது. லோகாயத மதிப்பீடுகளை பின்னகர்த்தி ஆத்மீக மதிப்பீடுகளை வாயளவில் தூக்கிப்பிடிக்கும் மத்தியதர வர்க்கம் லோகாயத வெற்றிகளைச் சென்றடைய முழுவேகத்துடன் நீச்சலடித்துக் கொண்டும் இருக்கிறது. (பக்கம் 58)

பிராமணர்களுக்கு இருக்கிற ஒரு அடிப்படையான பிரச்சினை இந்த அறிவுச் செருக்குதான். அது அருவருக்கத்தக்கதாக மாறிடிச்சு. இன்னிக்கும் பார்க்கலாம். அந்த 'எனக்குத்தான் தெரியும், உனக்கு என்ன தெரியும்' என்ற ஒரு மனோபாவம் இருக்கே இது கொஞ்சம் நிறையவே பார்க்கலாம் நம்ப... 'அவன் மடையன், அவன் கழுதை மேய்க்கத்தான் லாயக்கு' இந்த மாதிரிப் பேச்சுக்களையும் நீங்க பார்க்கலாம். (பக்கம் 12)

இவற்றையும் 'வாசித்து' விட்டு யாரை நோக்கி என்ன கேள்விகளுக்கு பதில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை வேலுசாமி விளக்க வேண்டும்.

ஆசிரியர்குழு
காலச்சுவடு.

### ஈழத்திலிருந்து ஒரு கடிதம்...

இங்கு தற்போது நிலைமை நெருக்கடிக் கட்டத்தை அடைந்துள்ளது. ஷெல் வீச்சுக்கள், விமான குண்டு வீச்சுக்கள் மிகவும் மோசம். சிங்கள அரசு குரூரத்தின் உச்சத்தைத் தொடுகிறது. சந்திரிகா சமாதான வேடமணிந்த சிங்களப் பேரினவாதிதான் என்பதை நடைமுறை நிரூபிக்கிறது. அண்மைய இராணுவ நடவடிக்கை எமது மக்களுக்கு இழப்புக்களைத் தந்தாலும் தோல்வியடைந்துவிட்டது. நூற்றுக்கு மேற்பட்ட படைவீரர் கொல்லப்பட்டு கைப்பற்றிய இடங்களிலிருந்து துரத்தி அடிக்கப்பட்டுவிட்டனர். இலங்கை அரசின் வானொலி – இந்திய வானொலிகள் பொய்ச் செய்திகளைப் பரப்புகின்றன. நவாலி என்ற இடத்தில் சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் – விமான குண்டு வீச்சில் 117 பேர் கொல்லப்பட்டனர்; 300 பேர் வரை படுகாயமடைந்தனர். 125 கிலோ கொண்ட எட்டுக் குண்டுகள் இங்கு வீசப்பட்டன. இந்த அழிவு பற்றிய 30 நிமிட வீடியோப் படம் பார்த்தேன். பயங்கர அனுபவம். இறைச்சித் துண்டங்களாக – அரைகுறை உயிரில் மனிதர்கள், உறவுகளைத் தேடிக் கதறும் மனிதர்கள் – கொடிய அனுபவம். ஒரு பெண்ணான சந்திரிகா இப்படியொரு சம்பவம் நடக்கவில்லை (!) சொல்கிறார். இதுதான் சிங்களவரின் அரசியல் வரலாறு!

24–07–95
யாழ்ப்பாணம்.

www.padippakam.com

**பண்டித ஜவாஹர்லால் நேரு**
**(பக்கம் 55: விலை 4 அணா)**
**ஆசிரியர் : கே.ஜி. ராஜு**
**கிடைக்குமிடம் : மனோன்மணி விலாச புஸ்தக சாலை, திருவாரூர்.**

பண்டித நேருவின் வாழ்க்கைச் சுருக்கத்தை எழுதப் புகுந்த இவ்வன்பர் சாதாரணமாக பழக்கத்தில் வந்துவிட்ட விதேசி பதங்களை அப்படியே உபயோகிக்க முயன்றிருந்தால், அவர் தற்போது செய்திருக்கிறபடி, இதன் மூலமாகவே நமக்கு இங்கிலீஷ் தெரியாது என்பதையும் நிருபித்துக் கொண்டிருக்க வேண்டியிராது.

**சர்மா காலெண்டர் 1938**
**கிடைக்குமிடம் : 29, செம்புதாஸ் தெரு, சென்னை.**

சினிமாத் துறையில் ஆர்ட் டைரக்டராக உழைத்துவரும் சைத்திரிகர் ஸ்ரீ.கே.ஆர் சர்மாவின் சித்திரக் காலண்டர் ஒன்று வரப் பெற்றோம். கந்தன் வள்ளி தினைப்புனக் காதல் காட்சியைச் சித்தரிக்கும் இக்காலண்டர் ஆசிரியனின் கை திறமைக்கு சிறந்த உதாரணமாக இருக்கிறது.

சொ. விருத்தாசலம்.
21-2-38 தினமணி

**திருமுருகாற்றுப்படை, (பக்கம் 33; விலை 4 அணா)**
**உரையாசிரியர் : ஸ்ரீ.ந.சே. ராமசந்திரய்யர், பி.ஏ.எல்.டி., முத்யாலு பேட்டை ஹைஸ்கூல், சென்னை.**

திருமுருகாற்றுப்படையைப் பற்றி தமிழருக்கு அறிமுகப்படுத்தல் அனாவசியம். தமிழர்களின் 'முருக-பாசத்தால்' உயர்ந்த இலக்கியம் என்ற ஸ்தானத்தை பெற்ற இந்த நூலுக்கு உரையாசிரியர் வியாக்கியானம் இருப்பினும், பக்திப் பரவசத்தால் ஏற்படும் புதுவுரைகளில் இதுவும் ஒன்று.

"திருமுருகாற்றுப் படையை எவர் பாராயணம் செய்யினும், அவர் வியாதி, கவலை, வறுமை, மகப்பேறின்மை முதலிய துன்பம் நீங்கி வேண்டிய வேண்டியாங்கு எய்துவர் என்பது அத்தொண்டர்களது துணிந்த கொள்கையும் அநுபவமும் ஆகும்" என்று ஸ்ரீ. ராமச்சந்திரய்யர் கூறுகிறார். பக்தி எல்லையை இவ்வளவு குறுகலாக வைத்துக் கொள்ள வேண்டாம் என்பதை தெய்வ கட்சியைச் சார்ந்தவர்கள் கூட ஒப்புக் கொள்ளுவார்கள். தெய்வபக்தி, பிள்ளை பெறுவதற்கு உபயோகப்படும் சிட்டுக்குருவி லேகியம் அல்ல. ஸ்ரீ. அய்யர் தமது முன்னுரைக் குறிப்பில், ரமண மகரிஷியின் பார்வையில் இவ்வுரை சமர்ப்பிக்கப்பட்டதாகக் கூறுகிறார். எக்காரணத்தைக் கொண்டும் ஆசிரியர்கள் தமது முன்னுரைப் பகுதிகளை பிற பாஷைகளில் முக்கியமாக இங்கிலீஷில் எழுத வேண்டிய அவசியமே கிடையாது.

**இராஜாஜி சரிதம் (பக்கம் 100, விலை 6 அணா)**
**ஆசிரியர் : ஸ்ரீ நாரண துரைக்கண்ணன், சக்தி பிரசுராலயம், இராபர்ட்ஸன் பேட்டை, மைலாப்பூர், சென்னை.**

ஸ்ரீயுத சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் இவ்வாசிரியரை மன்னிப்பார் என்று நம்புகிறோம். பக்தி பரவசத்தால் ஏற்பட்ட விபரீதம். புத்தகத்தை எழுதி முடித்ததும், யாரைப் பற்றி எழுதினாரோ அவர் அருகிலேயே இருக்கிறார். அவர் பார்வைக்குச் சமர்ப்பித்திருக்கலாம். அவர் அப்படிச் செய்யவில்லையென்பது இது வெளிவந்திருப்பதிலேயே நிச்சயம். இன்னும் சிறப்புரை அணிந்துரை எழுதிக் கொடுக்க முன்வரும் பெரியார்களுக்கு ஒரு எச்சரிக்கை. புஸ்தகத்தைப் படித்துவிட்டு அபிப்ராயம் எழுதுவது நலம். அப்படிச் செய்ததாகக் கூறிக் கொள்வது தங்களையே அளந்து கொள்வதாகும்.

**காதலின் வெற்றி (பக்கம். 86, விலை 3 அணா)**
**ஆசிரியர் : ம.கி. திருவேங்கடம், லோகசக்தி பிரசுராலயம், 21-ஏ, சௌத்கூவம் ரோட், கோமளீஸ்வரன் பேட்டை.**

இது நாவலல்ல; பள்ளிக்கூட மாணவன் 'காம்போஸிஷன்'.

**சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் (பக்கம்-36, விலை அணா 6)**
**வியாக்கியான கர்த்தர் : வக்கீல் ஸ்ரீ. கே. அனந்தாச்சாரி பி.ஏ.,**
**கிடைக்குமிடம் : ஆசிரியர், காஞ்சீபுரம்.**

1938 சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தை விளக்குவது ஆசிரியரின் நோக்கம். புஸ்தகத்தை இவ்வளவு மோசமான கடுதாசியில் பிரசுரித்து ஆறு அணா வரி விதிக்க வேண்டாம்.

**கிராம சீர்திருத்தம் (விலை ரூ.1, பக்கம்: 186)**
**ஆசிரியர்: ஸ்ரீ. முத்தையா எம்.ஏ., கிடைக்குமிடம்: கே. பழனியாண்டிப்பிள்ளை, ஜார்ஜ் டவுண், சென்னை.**

கிராம சீர்திருத்தத்தில் உருப்படியான ஆலோசனை சொல்ல வேண்டும் என்றால், வெள்ளைக்காரக் கண்களை வைத்துக்கொண்டு, வெறும் புகைப்படங்களின் மூலம் கிராமத்தைப் பார்ப்பது மட்டிலும் போதாது. கிராமத் தொடர்பிருந்தால்தான் சாத்தியம். தமிழ் புஸ்தகங்களின் முகப்பை எவ்வளவு அழகாகத்தான் இருந்தாலும் இங்கிலிஷில் அச்சிடுவது, வெறுக்கத்தக்க கோரம்.

**இந்திராணி (பக்கம் 66, விலை அணா 4)**
**ஆசிரியர்கள் : ஸ்ரீ. எம். டி. என். சிவன். ஸ்ரீ. டி. வேலன்.**
**கிடைக்குமிடம் : ஆசிரியர்கள், கணேசன் பிரஸ், தூத்துக்குடி.**

இதர நாடக பாத்திரங்கள் போல கதாநாயகனையும், நாயகியையும் மனிதர்கள் போல சம்பாஷிக்க விட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்; மற்ற பாத்திரங்களிடம் காணப்படும் பேச்சுத் திடம் அவர்களிடம்இல்லை. அதற்குக் காரணம் கதாநாயகர் தலைவர் முதலியோர் சமஸ்கிருதத்திலும் மற்றவர்கள் பிராகிருதத்திலும் பேச வேண்டும் என்ற நாடக விதி தமிழில் அனுசரிக்கப்பட்டு வருவதே. நாடகத்தின் முக்கிய பாத்திரங்களையும் நம்போன்ற மனிதர்களாகவே பேச விட வேண்டும். அதில்தான் அழகுண்டு.

**காதலா? கடமையா? (பக்கம் 124 விலை அணா 6)**
**ஆசிரியை : சித்தி ஜுனைதா பீகம்**
**கிடைக்குமிடம் : எம். எஸ். எச். பே, 9, தெருப் பள்ளி தெருவு, நாகூர்.**

முஸ்லிம் ஸ்திரிகளும் எழுத முன்வருவதை வரவேற்கிறோம். நடை நேரடாக இருக்கிறது; தளர்த்துவது அவசியம். கதை ஆன்டனி வேராப் எழுதிய 'ஜெண்டாக் கைதி' 'ஹென்ட்ஜா ரூப்பட்' என்பவர்களின் சுருக்கமான தழுவல் என்பதை ஒப்புக் கொண்டிருக்கலாம்.

**ஜனாப் முகமதலி ஜின்னா (பக்கம் 48, விலை அணா 6)**
**ஆசிரியர்:எல். எம். ஜி., ஜின்னா புக் டிப்போ, மவுண்ட் ரோட், சென்னை.**

மிகவும் தாராளமாக வியாகியானம் செய்து பார்த்தாலும் முகமதலி ஜின்னாவின் ஜீவிய சரிதம் என்று இந்தப் புஸ்தகத்தை கூற இயலாது. அவர் பெயரை வியாஜமாக வைத்து தொகுக்கப்பட்ட முஸ்லிம் லீக் கொள்கை பற்றிய பத்திரிகை துணுக்குகள்.

சொ.வி.

தினமணி 2-5-1938



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் படித்த பெண்டாட்டி

(மொப்பஸான் கதையின் தழுவு)

## புதுமைப்பித்தன்

அன்று கப்பலில் வெகு கூட்டம். நான் சிங்கப்பூருக்குப் புறப்பட்டிருந்தேன். கப்பலும் ஏக கோஷம், இறைச்சலுடன் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டது. நான் கப்பலின் மேல் தட்டிலிருந்து கப்பல் கடலுக்குள் செல்லுவதை கவனித்துக் கொண்டிருந்தேன்.

திடீரென்று என்னை யாரோ கூப்பிட்டார்கள். திரும்பிப் பார்த்தேன். எனது பழைய நண்பன் ஹரிஹரன்.

இருவரும் கை குலுக்கினோம். நண்பன் சீமையில் வக்கீல் பரிட்சை கொடுத்துவிட்டு, இலங்கையில் இருக்கிறான் என்று மட்டும் தெரியும். பார்த்து வெகு நாளாகிவிட்டது.

இருவரும் கை குலுக்கினோம்.

"எங்கு பார்த்தாலும் இந்த வெள்ளைக்காரக் கூட்டம்தானா. என்ன வெறுப்பாக இருக்கிறது!" என்றான் என் நண்பன்.

"ஏன் இப்படி அவர்களை வெறுக்கிறாய்?" என்றேன்.

"நீதான் பார். சமுத்திரத்தையே தங்களுக்குப் பட்டா எழுதி வைத்த மாதிரி பார்க்கிறதை. அதில் என்ன மமதை. என்னமோ பெரிய சண்டைக் கப்பல்கள் இருந்துவிட்டால் பக்கத்தில் இருப்பவன் மனிதன் என்று கூடத் தெரியாது போலிருக்கிறது. இவர்கள் இங்கே வராமல் விரட்டுவதற்கு வழியில்லையா?"

"ஏன்? அவர்களைப் பற்றி எனக்குக் கவலையே இல்லை" என்றேன்.

"உனக்கென்ன கவலை. எனக்குத் தெரியும். அந்த ஜாதியில் ஒருத்தியை நான் கலியாணம் செய்து கொண்டேன்" என்றான் வெறுப்புடன்.

நான் திடுக்கிட்டேன் ... பிறகு .....

"அதைப்பற்றி நன்றாகக் கூறு. ஏன்? அவள் என்ன, தொந்தரவு கொடுக்கிறாளா?"

"தொந்தரவு கொடுக்கவில்லை"

"பின் ..... அவள் என்ன .... நடத்தை ..."

"அதை ஏன் கேட்கிறாய். அவள் கற்புடையவளாகவே இருக்கிறாள். அப்படி ஏதாவது இருந்தால்தான் விவாகரத்திற்காவது வழியுண்டே?"

"பிறகு என்னதான் சொல்லேன். எனக்கு ஒன்றும் அர்த்தமாகவில்லையே"

"கஷ்டம் என்னவென்றால் அவள் தமிழ் பேசப் படித்துக் கொண்டாள். சொல்லுகிறேன் கேள். கொஞ்ச நாட்களுக்கு முன் சீமைக்குப் போயிருந்தேனே அப்பொழுது அவளைச் சந்தித்தேன். நல்ல அழகி ... அவள் அழகில் ஈடுபட்டேன். நல்ல குடும்பத்துப் பெண். அவர்களும் இங்கு இருந்தவர்களாம். அவளைப் பார்த்ததும் எனது இலக்ஷியம் கனவு என்றெல்லாம் நினைத்துக் கொண்டேன். இன்னொன்று உனக்குத் தெரிய வேண்டும். நம்முடைய ஆட்களுக்கு அன்னிய நாட்டுப் பெண்ணென்றால் அவ்வளவுதான். அவள் வெள்ளைக்காரியாக இருக்கட்டும், அல்லது மலையாளத்துப் பெண்ணாக இருக்கட்டும். அவள் நமது பாஷையில் ஒரு வார்த்தை குளறி விட்டால் அவ்வளவுதான்.

நான் அவளைச் சந்தித்த பொழுது அவளும் தமிழ் பேசினாள். எனக்கு அர்த்தமாகவில்லை. நானும் தமிழ் பேசினேன். அவளுக்கு அர்த்தமாகவில்லை. ஆனால் அதுதான் சுவாரஸ்யமாக இருந்தது. அதனால் அவளை கலியாணம் செய்து கொண்டேன். பிறகு இங்கு வந்த பிறகு, தமிழ் வாத்தியார் ஒருவரை வைத்தேன். இத்தனை நாள் அவள் இலக்கணத்தைக் கிழித்து அகராதியைச் சிதைத்தாள். அது ரொம்ப வேடிக்கையாக இருந்தது. சுவாரஸ்யமாக இருந்தது. கேட்பதற்கு இன்பமாக இருந்தது. இப்பொழுதோ ... ஐயோ கடவுளே ... "நீவிர் வருக" என்கிறாள் என்னைப் பார்த்து. நடமாடுகிற தமிழ் இலக்கணம்தான். இப்பொழுது அவள் பாஷை சீனத்துச் சரக்காக இருக்கிறது. ஒன்றும் புரியவில்லை. நான் ஒரு கிளியைக் கலியாணம் பண்ணிக் கொண்டேன். இந்தத் தப்பிதத்திற்கு எந்தக் குட்டிச் சுவற்றில் முட்டிக் கொள்ளுவது."

சற்று மௌனம்.

"இப்பொழுது உமது மனைவி எங்கிருக்கிறாள்?"

"அவளை சென்னையில் விட்டு விட்டு வந்திருக்கிறேன்."

"பிறகு நீ... ?"

"சிங்கப்பூருக்கு 'ரெஸ்ட்' எடுக்க (களைப்பாற)ப் போகிறேன்."

"பெண்கள் எவ்வளவு தூரம் முட்டாளாக இருப்பார்கள் சில சமயங்களில் என்று தெரிகிறதா?" என்றேன்.

"ஏன்? ஆண்களை ஏன் மறந்துவிட்டாய்?" என்றான் எனது நண்பன்.

மணிக்கொடி 1934 அக்டோபர் 7

இதழ் 10இல் வெளியான புதுமைப்பித்தனின் 'இஸ்லாம் மதத்தின் ஸ்தானம்' (புத்தக விமர்சனம்) வெளிவந்தது தினமணியில். தேதி: 14.2.1938

'கட்டை வண்டி' (புத்தக விமர்சனம்) தினமணியில் வெளிவந்த தேதி 7.2.1938


## புதுமைப்பித்தன் எழுத்துக்கள்
### ஆய்வரங்கத் தொகுப்பு

**நிறப்பிரிகை** நடத்திய ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு **கிழக்கு** வெளியீடாக ஏப்ரல் மாதம் வெளிவர இருக்கிறது.

* அ.மார்க்ஸ் * ராஜமார்த்தாண்டன் * கோ. கேசவன் * ரவிக்குமார் * கண்ணன். எம் * ராஜ் கௌதமன் * அ.ராமசாமி * கரிகாலன் * கிராமியன் * உ.செ.துளசி * அருணன் * தேவகாந்தன் ஆகியோரின் கட்டுரைகள்.

புதுமைப்பித்தன் எழுத்துக்கள் பற்றிய புதிய பரிமாணத்தில் வெளிவரும் முக்கிய விமர்சனத் தொகுப்பு இது.

முன் வெளியீட்டு சலுகை விலை ரூ. 20

தொடர்புக்கு

**கிழக்கு**, தபால் பெட்டி எண் 9, 40- எம், பூம்புகார் பில்டிங் (முதல் தளம்) திருத்துறைப்பூண்டி 614 713.




படிப்பகம்

www.padippakam.com

# மனிதார்த்தமான காதலின் துயர காவியம்



**"கண்மணி கமலாவுக்கு..."**
புதுமைப்பித்தன் கடிதங்கள், தொகுப்பு : **இளையபாரதி;** பக்கம் 186, விலை ரூ. 60, வெளியீடு : சாந்தி பிரசுரம், விற்பனை : திலீப்குமார், 25 மூன்றாவது டிரஸ்ட குறுக்குத் தெரு, மந்தை வெளிப் பாக்கம், சென்னை - 600 028.

நாம் நமது மகத்தான கலைஞர்களுக்கு அளித்து வந்திருக்கும் மரியாதையின் தன்மைக்கு தொடர்ந்து சாட்சியங்கள் இருக்கின்றன. இந்தச் சாட்சியங்கள் அவமானத்திற்கும் தலைகுனிவிற்கும் இட்டுச் செல்பவை. கலாச்சார வாழ்வின் ஜீவனுள்ள ஊற்றுகள் மீது படியும் குரூரமான அக்கறையின்மைகள் படிப்படியாக அவ்வூற்றுகளை தூர்ந்து போகச்செய்துள்ளன.

பாரதியிலிருந்து தொடங்கும் தமிழின் நவீன படைப்பு மரபின் மீது எவ்வாறு ஆழமும் விரிவும் கொண்ட ஒரு விமர்சன மரபு இல்லையோ அதேபோல படைப்பாளிகளின் மீது முறையான 'வாழ்க்கை வரலாறு' மரபும் இல்லை. படைப்பாளிகளின் தனிப்பட்ட வாழ்வின்மீது கவியும் மௌனங்கள் அந்தந்த கால கட்டம் பற்றிய இலக்கிய வரலாற்றின் மௌனங்களாகவும் விரிவடைகின்றன.

படைப்புக்கும் படைப்பாளிக்கும் இடையிலான உறவின் நுட்பமான முடிச்சுகளைக் கண்டு கொள்ள 'சரிதைகள்' அவசியமாகிறது. மேலும் ஒரு வாசகன் படைப்பின் வழியே படைப்பாளியோடு கொள்கிற உறவை சரிதைகளின் வழியாகவே முழுமைப்படுத்திக் கொள்கிறான். தீவிர அன்பும், பகைமையும் கலந்த பிணைப்பு அது. இலக்கியம் மட்டுமல்ல, எந்தத் துறை சார்ந்த முக்கியமான ஆளுமைகள் குறித்தும் நாம் இவற்றையெல்லாம் சொல்லலாம்.

துரதிருஷ்டவசமாக தமிழில் புனை கதைகளுக்கும் வாழ்க்கை வரலாறுகளுக்கும் நடுவிலான இடைவெளிகள் மிகவும் சுருங்கிவிட்டன. பிம்பங்களால் அறிதல் என்ற நமது நோய்க்கூறான பொது மனோபாவத்திலிருந்து அரைகுறை உண்மைகளும், பொய்த் தோற்றங்களும் வரலாறுகளாக உருவெடுத்து வந்திருக்கின்றன. தோற்றங்களை குலைக்கக்கூடிய உண்மைகளை பதிவு செய்வதென்பது ஒருவரை அழிக்கும் காரியம் என்பதான மூட நம்பிக்கை இங்கே கப்பிக் கிடக்கிறது.

இதற்கு நிவாரணமாக 'சுய சரிதை' என்ற ஒரு பதிவு முறையும் தமிழில் தோன்றி வளரவில்லை. நமது படைப்பாளிகள் பெரும்பாலானோர் ஆங்காங்கே விட்டுச்சென்ற சில தற்செயலான குறிப்புகள் தவிர்த்து சரிதைகளை முழுமையாக எழுத முயன்றதில்லை. அவமானகரமான புறக்கணிப்புகளால் தன் வாழ்வின்மீது தனக்கே மரியாதையற்றுப் போதல் ஒருபுறமும், அவசரமான விடைபெற்றுக் கொள்ளுதல்கள் மறுபுறமும் சுய வரலாறுகளை தடைசெய்து வந்திருக்கின்றன. அப்படியே ஒருவன் எழுத வந்தாலும் தனது பிம்பங்களை தானே அழித்துக்கொண்டு எந்த அளவு நிர்வாணத்தோடு வெளியே வருவான் என்பதெல்லாம் நம்முடைய விசேஷமான பிரச்சினைகள்.

இச்சூழலில் யாருடைய வரலாற்றை அறிய விரும்புகிறோமோ அவர் எழுதிய கடிதங்கள் நம்பகமான ஆவணங்களாக இருக்கின்றன. புதுமைப்பித்தன் பரபரப்பாக மறு கண்டுபிடிப்பு செய்யப்படும் ஒரு காலகட்டத்தில் அவர் வாழ்நாளின் கடைசிப் பத்தாண்டுகளில் அவரது மனைவி கமலாவுக்கு எழுதிய கடிதங்கள் தொகுக்கப்பட்டு நமக்கு இப்போது கிடைத்திருக்கிறது.

வறுமையும், பிணியும், தனிமையும், பிரிவாற்றாமையும் புதுமைப்பித்தன் - கமலா தம்பதிகளை பெரும் நிலைகுலைவுகளுக்கு ஆளாக்கிய ஆண்டுகளில் எழுதப்பட்ட இக்கடிதங்கள் அந்தரங்க உணர்வுகளின் ஈரமும், மன வீழ்ச்சியின் வெம்மையும் கொண்டிருக்கின்றன. ஒருவரால் தொடர்ச்சியாக வாசிக்க இயலாதபடி நெஞ்சக் கசிவையும் மூச்சு முட்டலையும் உண்டாக்கும் கடிதங்களின் நெருப்புத்துண்டான வாக்கியங்களிலிருந்து வாழுதலின் பெருந்துயரம் சுடர்கிறது. இந்த பாதிப்பு புதுமைப்பித்தன்



படிப்பகம்

www.padippakam.com

மீது கொண்டிருக்கும் அன்பினாலும் அனுதாபத்தினாலும் மட்டும் எழுவதல்ல. அவரோடு மானசீகமான பந்தங்கள் ஏதுமற்ற எந்த ஒரு வாசகனும் இக்கடிதங்களிலிருந்து கிளம்பும் அன்பின் இதத்தையும், கருகுதலின் நெடியையும் உணர முடியும்.

இக்கடிதத் தொகுப்பை மொத்தமாக வாசிக்கும்போது அவற்றின் காலத் தொடர்ச்சியும், சம்பவங்கள், உணர்ச்சிகளின் அடுக்கடுக்கான அலைகளும் இவற்றை கடிதங்களாக மட்டுமல்லாது அத்தியாயங்களாக எழுதப்பட்ட நாவல் போன்று மயக்கம் ஏற்படுத்துகின்றன. எந்த மொழியிலும் மனித இதயத்தின் இத்தகைய தத்தளிப்புகளே பெரும் படைப்புகளாக உருவெடுத்திருக்கின்றன.

புதுமைப்பித்தன் ஏன் இந்தக் கடிதங்களை எழுதினார்?

"பேசுவதாலும், எழுதுவதாலும் துன்பப்பளு கொஞ்சம் குறையும் என்பதை நான் உனக்குச் சொல்ல வேண்டுமா?" (கடிதம் 10, பக்கம் 25)

பிழைப்பிற்காக தன் மனைவியைப் பிரிந்திருக்க நேர்ந்த நீண்ட காலங்களில் அடைந்த நெருக்கடிகள், வேதனைகள், தீய கனவுகள் ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்ளும் புகலிடமாக இக்கடிதங்களைப் பயன்படுத்திய புதுமைப்பித்தன் அதே காரணங்களுக்கான அதே புகலிடத்தை தன் மனைவிக்காகவும் உருவாக்குகிறார். கூடவே இருக்கும் ஒருவர் அன்றாட வாழ்வின் எந்தெந்த எளிய, சின்னஞ்சிறு விஷயங்களையெல்லாம் பேசுவாரோ அவற்றையெல்லாம் தொலைவிலிருந்து கவனித்து, மொழியின் ஊடே தொலைவை அழிக்கவும் முற்படுகிறார். தன்னுடைய சகபிரயாணி மீது கொண்ட பரிபூரண அக்கறையும், உக்கிரமான நேசமும் இவற்றை மிகச் சிறந்த காதல் கடிதங்களாக்குகின்றன. கண்ணீரையும் முத்தங்களையும் கொண்ட காதல் கடிதங்கள்.

பல சந்தர்ப்பங்களில் தினம் ஒரு கடிதம்கூட எழுதியிருக்கிறார். அது எவ்வாறு அவரது இயக்கத்தின் மையமாக இருந்ததென்பதை இவ்வரிகளால் அறியலாம்.

"முந்தா நாள் இரவு வேலை செய்துவிட்டு வந்த பிற்பாடு வேறு ஒருவனுக்கு புஸ்தகம் எழுதும் வேலையில் கொஞ்சம் ஈடுபட்டுவிட்டு படுத்துக் கொண்டேன். அன்று இரவு பயங்கர சொப்பனம் பல கண்டேன். அலறியிருப்பேனோ என்னமோ, எனக்குத் தெரியாது. அன்று இரவு தூக்க சமயத்தில் பக்கத்திலிருந்த பேடில் இத்துடன் வைத்திருக்கும் கடுதாசியை எழுதியிருக்கிறேன். விடியற்காலம் பார்க்கும்பொழுதுதான் இது தெரிந்தது. இரவில் எழுந்து லைட் போட்டதாகக் கூட ஞாபகம் இல்லை. எழுத்துக்களைப் பார்த்தாலும் இருட்டில் எழுதியதாகத் தெரிகிறது. அதுவும் முடியவில்லை. என் மனநிலைக்கு அது ஒரு உதாரணம் போதும் என்று நினைக்கிறேன்." (கடிதம் 8, பக்கம் 21)

இயலாமையிலிருந்து பெருகும் குற்றஉணர்வும் கழிவிரக்கமும் கடிதங்கள் நெடுகப் பரவிக் கிடக்கின்றன. ஆனால் அவை தன்னையும் தன் மனைவியையும் மூடி அழித்துவிடாமல் நம்பிக்கையின் பற்றுக்கோட்டினை தக்க வைத்துக் கொள்ள விழைகிறார். நாளையோ, அதற்கு மறுநாளோ அதற்கும் மறுநாளோ எல்லாம் சரியாகி விடுமென தொடர்ந்து வற்புறுத்துகிறார்.

"நம்மைச் சுற்றிலும் கன்னங்கனிந்த இருள் சூழ்ந்திருக்கிறது. விடிவதற்கு முன்தான் இருட்டின் கனம் அதிகமாகும்". (கடிதம் 18, பக்கம் 44)

இது புதுமைப்பித்தன் தன் மனைவியை சமாதானப்படுத்தச் சொன்னதோ அல்லது மனதார நம்பியோ, நம்பாமலோ தனக்குத்தானே சொல்லிக் கொண்டதோ, அந்த நம்பிக்கைகள் படிப்படியாக இற்றுப்போய் இருள், கடைசியில் அவரது மரணத்தின் அந்தகாரமாக பூர்த்தியாகிறது.

1940இல் தனது மனைவியின் தெய்வ பக்தி பற்றி குறிப்பிட்டு, தனக்கு "கைதூக்கி கும்பிடுவதற்கு ஒன்றுமில்லையே, நித்ய சூன்யமாக இருக்கிறதே" (கடிதம் 21, பக்கம் 54) என எழுதும் புதுமைப்பித்தன் 1947இல் எழுதும் கடிதமொன்றில் "என் மீது யாரும் செய்வினைப் பிரயோகம் உண்டா என்று விசாரித்துப்பார்" (கடிதம் 77, பக்கம் 174) என எழுதுகிறார்.

இந்த இரண்டு வாக்கியங்களுக்கிடையே அவர் வாழ்வின் பெரும் துயரங்கள் நிகழ்ந்து முடிந்து விடுகின்றன. அவருடைய வீழ்ச்சியின் பாதாளத்திற்கு இதைவிடச் சான்று வேண்டியதில்லை. அவர் கடைசிக் காலத்தில் எழுத முடியாமல் எழுதிய கடிதங்கள் அனைத்தும் "கை வலிக்கிறது-கை வலிக்கிறது" என பீதியூட்டும் துர்ச்சகுன வரிகளோடு முடிகின்றன.

"தமிழ் நாட்டிற்கு நான் செய்த சேவை தகுதியானது. மறுக்க முடியாதது. ஆனால் நான் இன்று சாகக் கிடக்கிறேன். வறுமையால் சாகக் கிடக்கிறேன். எனவே தமிழ் நாட்டாரைப் பார்த்து, 'நீங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும்' என்று கேட்க எனக்கு உரிமை உண்டு" (புதுமைப்பித்தன் வரலாறு - தொ.மு.சி.ரகுநாதன், அத்தியாயம் 16, பக்கம் 89)

புதுமைப்பித்தனுக்கு அன்று அளிக்க முடியாமல்போன உதவியை இன்று நாம் அளிக்க முயற்சிக்கலாம். அவரை மென்மேலும் அறிவது என்பதுதான் அது.

**மனுஷ்ய புத்திரன்.**

●

**கப்சிப் தர்பார்**

ஆசிரியர்:
சிலிக்குயில் புத்தக பயணம்
7, டாக்டர் பெசண்ட் ரோடு
கும்பகோணம்; விலை ரூ.12.

புதுமைப்பித்தன் என்ற படைப்பாளியின் மீதான பொதியவெற்பன் என்ற வாசகனின் ஈடுபாடு சந்தேகத்திற்கு இடமற்றது. இத்தகைய வாசக ஈடுபாடுகளே அவர் படைப்புகள் மீண்டும் மீண்டும் வாசிக்கப்படுவதற்கான காரணமாக அமைந்துள்ளன. தமிழ் விமர்சன மேதாவிகள் அன்றும் இன்றும் ஓரக்கண்ணோடுதான் அவர் எழுத்துகளை எதிர்கொண்டிருக்கின்றனர். புதுமைப்பித்தனை நசிவு இலக்கியவாதியாகச் சித்தரித்த மாஜி 'சோவியத் லேண்ட் யதார்த்தவாதிகளை' இப்போது நினைவில் கொள்ள வேண்டும். முற்போக்குவாதியாகத் துவங்கி பிற்போக்கு தனிமனித வாதத்தில் சரிந்தவராகப் புதுமைப்பித்தனை இனங்கண்ட இவர்களுடைய மார்க்சீய அறிவு அலாதியானது. இன்றும் புத்தம் புது விமர்சன அறிவுகள் அவர் எழுத்துகள் மீது பிரயோகிக்கப்படுகின்றன. அவரை 'சுயமரியாதைக்காரராக' சித்தரிக்கும் திராவிடக் கயிறுகூட சற்றும் கூசமின்றி சமீபத்தில் திரிக்கப்பட்டிருக்கிறது. பொதியவெற்பனின் இப்பதிப்பு முயற்சி புதுமைப்பித்தனுடனான வாசக உறவை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது என்பதிலும் சந்தேகமில்லை. என்றாலும் இப்பதிப்பைப் பற்றி அடிப்படையான சில கேள்விகளை எழுப்பவேண்டியுள்ளது.

'கப்சிப் தர்பார் - மணிக்கொடி பிரசுரம் ஏழு' என்ற முகப்புடன் நவயுகப் பிரசுராலயம் லிமிடெட் நிறுவனத்தினரால் 1939 இல் வெளியிடப்பட்டது. மறுபதிப்பு வரவில்லை. முதற்பதிப்பு சொ. விருத்தாசலம், ந. ராமரத்தினம் ஆகியோரை ஆசிரியர்களாகக் குறிப்பிடுகிறது. இப்போதைய பொதியவெற்பன் பதிப்பில் காணக்கிடைக்கும் 'முதல் ஒன்பது அத்தியாயங்களை புதுமைப்பித்தனும் இறுதி ஒன்பது அத்தியாயங்களை ராமரத்தினமும் எழுதியுள்ளனர்' என்ற குறிப்பு முதற்பதிப்பில் இல்லை. இரண்டு ஆசிரியர்கள் இணைந்து எழுதிய ஒரு நூலை சரிபாதியாகத்தான் பங்கிட்டு எழுதினார் என்று எவ்வாறு ஊகிக்க முடியும்? இத்தகவல் எங்கிருந்து பெறப்படுகிறது? இத்தகைய ஒரு தகவலை முதலில் தருவது ரகுநாதன்தான். தன் 'புதுமைப்பித்தன் வரலாறு' நூலுக்கு அனுபந்தமாக இணைத்திருக்கும் அவரது பேட்டியில் (பேட்டி கண்டவர்: சுந்தர ராமசாமி) இதைக் குறிப்பிடுகிறார். ரகுநாதனின் வாய்மொழி எந்த அளவுக்கு நம்பகத்தன்மை கொண்டது? ரகுநாதன் - புதுமைப்பித்தன் முதல் சந்திப்பு 1944 இல் நிகழ்கிறது இப்பதிப்பு வெளியானதோ 1939இல்.



படிப்பகம்

www.padippakam.com

இச்சிக்கல்களிலிருந்து விடுபட முதற்பதிப்பைத் தீவிர வாசிப்பிற்கு உட்படுத்தியிருக்க வேண்டும். எதையும் மொழியில் சித்திரமாக வரைந்துவிடுவது புதுமைப்பித்தனின் தனித்தன்மை. தகவல்களை எளிமையாகக் கட்டுப்பாடுடன் அடுக்கித்தருவது ராமரத்தித்தின் தனிப்போக்கு. இப்புரிதலுடன் வாசிப்பை நிகழ்த்துவதாக இருந்தால் முதல் ஒன்பது அத்தியாயங்களிலும், கடைசி (18 ஆவது) அத்தியாயத்திலும் புதுமைப்பித்தனையும் 10 முதல் 17 வரையிலான அத்தியாயங்களில் ராமரத்தினத்தையும் இனங்காண முடியும்.

ஒன்பதாவது அத்தியாயத்தின் இயல்பான நீட்சியாகவும் தர்க்கரீதியான முடிவுரையாகவும் பதினெட்டாவது அத்தியாயம் அமைந்திருக்கிறது. 'ஹிட்லரின் கதை பவுண்டில் கிடந்த ஜல்லிக்கட்டுக்காளை, பிய்த்துக்கொண்டு போன மாதிரி ஜெர்மனியை ஒரு வல்லரசு என்ற ஸ்தானத்தில் மறுபடியும் கொண்டுவந்து ஸ்தாபித்தது'. இது ஒன்பதாவது அத்தியாயத்தின் இறுதிப்பகுதி. ஹிட்லரின் பிரமிக்கத்தக்க எழுச்சி இயற்கையின் விபரீதங்களில் ஒன்றுபோல் காணப்படுகிறது. ஆனால் அவன் எழுச்சியால் ஜெர்மனி மீண்டும் ஒரு வல்லரசாக விளங்குகிறது. இது பதினெட்டாவது அத்தியாயத்தின் துவக்கம். இந்த இரு பகுதிகளின் இயல்பான இணைப்பை, மொழி நடையின் ஒற்றுமையைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அதேபோல் பத்து முதல் பதினேழு வரையிலான அத்தியாயங்கள் ஒன்றுபோல் அமைந்துள்ளன. பத்தாவது அத்தியாயத்தில் நூலின் போக்கு மாறுதல் அடைவதால் '...விபரமாக அடுத்துவரும் அத்தியாயங்களில் கவனிப்போம்' என்ற வரி செயற்கையான ஒட்டாக ஒன்பதாவது அத்தியாயத்தின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. "யுத்தத்தை சாசுவதமாக ஒழிப்பதற்காக 1914இல் மகாயுத்தம் நடந்தது. அதன் பலனாக ஏதோ ஒரு சமாதானம் வந்ததல்லவா ? அந்த சமாதானத்தைப் பாதுகாப்பதற்காகவும் மற்றொரு யுத்தம் நடக்குமா ? " பத்து முதல் பதினேழு வரையிலான அத்தியாயங்களில் தர்க்க ரீதியான முடிவுரையாக பதினேழாவது அத்தியாயத்தின் இந்த இறுதிவரி அமைந்துவிடுகிறது. இச்சிக்கலைத் தவிர்க்க நூலை முழுமையாகப் பதிப்பித்திருக்க வேண்டும். இரண்டாம் பதிப்பிற்கு முன்னுரை எழுதியிருக்கும் அ. மார்க்ஸ் 'நிறைவுறாத முதற் பகுதி' என பிரதியை குறிப்பிடும் நிலை தோன்றியிருக்காது.

அ. மார்க்ஸின் முன்னுரைக்குள் வருவோம். வரலாற்றின் மீதான நம் முதற்கடமை அதில் பொய்மையைக் கலக்காதிருப்பதுதான். 'பாசிஸ்ட் ஜடாமுனி', 'கப் சிப் தர்பார்', 'ஸ்டாலினுக்குத் தெரியும்', 'அதிகாரம் யாருக்கு ?' என்ற நான்கு நூல்களையும் புதுமைப்பித்தன் தன் இறுதிக் காலத்தில் எழுதியதாக மார்க்ஸ் குறிப்பிடுகிறார். புதுமைப்பித்தனின் படைப்புலக வாழ்வின் துவக்கம் 1933. 'பாசிஸ்ட் ஜடாமுனி', 'கப் சிப் தர்பார்' இரண்டும் 1939இல் வெளிவந்துள்ளன. 'அதிகாரம் யாருக்கு' 1944இல் வெளியாகியிருக்கிறது. 'ஸ்டாலினுக்குத் தெரியும்' முதற்பதிப்பு 1991இல். அணிந்துரையில் டாக்டர் க. ரத்னம் "1939ஆம் ஆண்டு பற்றிய செய்திகள் கூட இந்த நூலில் இடம் பெறுவதால் இரண்டாம் உலகப்போர் தொடங்கிய காலகட்டத்தை அடுத்து புதுமைப்பித்தன் இதனை எழுதி முடித்திருக்கலாம் என ஊகிக்கலாம்" என குறிப்பிடுகிறார். 1948இல் புதுமைப்பித்தன் மரணம் அடைந்தார். 'வாழ்வின் இறுதி' என்னும் மார்க்ஸின் தொடர் பொருத்தமானதுதானா ? இத்தொடர் இந்த நான்கு நூல்களும் புதுமைப்பித்தனால் வெவ்வேறு காலப் பின்னணியில் எழுதப்பட்டவை என்பதை மறைக்கவே மார்க்ஸுக்கு பயன்படுகிறது.

முப்பதுகள் தமிழ் வரலாற்றில் மிக முக்கியமான காலப்பகுதி. தேசிய இயக்கத்தின் உச்சம். மணிக்கொடியின் கலகக்குரல்கூட தேசிய இயக்க ஊற்றிலிருந்துதான் பீறிட்டெழுந்தது. தேசிய இயக்க அரசியல் தமிழ்ச் சிந்தனையை உலக அரசியல் தளத்திற்கு எழுப்ப முயன்று கொண்டிருந்தது. உலக அரசியலிலும் மிகக் கொந்தளிப்பான காலப்பகுதி இது. அதன் வீழ்படிவுகளை தேசிய அரசியல் மக்களுக்கு இனங்காட்டவே ஹிட்லர், முசோலினி, சோவியத் குறித்த தகவல்களையும், ஐரோப்பிய ஆதிக்க அரசியல் மீதான தேசிய இயக்கத்தின் பார்வையினையும், மணிக்கொடியும் அதன் சகல இதழ்களும் 1933லிருந்தே முன்வைத்துக் கொண்டிருந்தன. உலகப் போர் தீவிரம் பெற்றபோது ஐரோப்பிய ஆதிக்க அரசியல் மீதான தங்கள் நிலைப்பாட்டின் மாற்றங்களை மக்கள்முன் வைத்தாக வேண்டும். போர்க்காலச் சூழலில் உலகப்போர் நாயகர்களைக் குறித்த அறிவும் மக்களுக்குத் தேவை. இத்தேவையை பயன்படுத்திக்கொண்டு போர்க்கால பொருளாதாரத்தில் திணறிக்கொண்டிருந்த வெளியீட்டுச் சாதனங்களுக்கான நிதி திரட்டும் நோக்கமும் இணைந்து கொண்டது. தேவையும் நோக்கமும் வரையறுக்கப் பட்டுவிட்டபோது குறிப்பிட்ட சட்டத்திற்குள் இயங்கும் வாய்ப்புதான் புதுமைப்பித்தனுக்குத் தரப்பட்டது.

ஆனால் அவருடைய படைப்பு மனம் இதற்குள்ளாகவே திமிறிக்கொண்டு செயல்பட்டிருக்கிறு. முசோலினியைப் பற்றிய புத்தகம் 'பெனித்தோ முசோலினி' என்று தொடர்ந்து விளம்பரம் செய்யப்பட்டது. வெளிவந்தது 'பாசிஸ்ட் ஜடாமுனி'யாக. அதுபோல், 'ஹிட்லரின் வாழ்க்கையும் கனவுகளும்' (முதற்பதிப்பில் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள தலைப்பு) 'கப் சிப் தர்பார்' என்றாகிவிட்டது. அவர்கள் வாழ்க்கைத் தகவல்களைத் தொகுப்பதற்குப் பதில் அவர்கள் மீதான தன் விமர்சனத்தை முன்வைத்திருக்கிறார் புதுமைபித்தன். சர்வாதிகாரத்தின் வளர்ச்சிக்கு ஐரோப்பிய ஆதிக்கவெறியை காரணமாக்கும் தேசிய அரசியல் பார்வையோடு இணைந்தும் அதே நேரத்தில் பூரண சுதந்திரத்தோடு சுயமான புரிதல்களையும் முன்வைத்திருக்கிறார்.

'அதிகாரம் யாருக்கு' முற்றிலும் வேறான சூழலில் எழுதப்பட்டது. பத்திரிகை லாபம் தரும் முதலீடாக மாற்றப்பட்டபோது தேசிய இயக்கமே முதலீடாக மாற்றப்படுகிறது என கொதித்தெழுந்து தினமணியை விட்டு விலகிய பத்திரிகையாளர்கள் மாதம் ஒரு நூலாக வெளியிட்ட வரிசையில் முதல் நூலாக இது வந்தது. விடுதலையின் ஒளி அடிவானத்தில் துலங்கியபோது எதிர்காலப் பத்திரிகையாளரின் கடமையைச் சுட்டும் நோக்கத்தினைக் கொண்டது. மார்க்ஸ் இப்பிரதியையே தன் வாசிப்புக்கு எடுத்துக்கொண்டுள்ளார்.

'ஸ்டாலினுக்குத் தெரியும்' நூலில், ஸ்டாலினையும் சோவியத் கூட்டமைப்பையும் உயர்வாக மதிப்பிடும் புதுமைப்பித்தன் 'கப் சிப் தர்பார்' இல் முடிவுரையில் ஹிட்லரும் ஸ்டாலினும் அரசியல் எதிரிகளை ஒரே வகையில் கையாள்வதாகக் குறிப்பிடுகிறார். ஸ்டாலின், ட்ராஸ்கி மோதலை எடுத்துக்காட்டாக முன்வைக்கிறார். 'பாசிஸ்ட் ஜடாமுனி' முடிவுரையில் பாசிஸத்தையும் பொதுவுடமையையும் இணையாகக் காண்கிறார். இரண்டுமே தேவையை இலட்சியமாக மாற்றி அதை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதால் நிரந்தரமானதல்ல என கணிக்கிறார். சிறுகதைகளிலிருந்து வெளிப்படும் புதுமைப்பித்தனைப் போலவே இங்கும் புதுமைப்பித்தன் சிமிழுக்குள் அடைபடப் பிடிவாதமாக மறுத்துவிடுகிறார்.

புதுமைப்பித்தன் நீங்கலான மணிக்கொடியாளர்களை மார்க்ஸ் அரசியல் மௌனிகளாகக் கணிக்கிறார். அரசியல் தளத்தில் மட்டுமே கவனம் செலுத்திய சொக்கலிங்கம், சிவராமன் போன்றவர்களும் அரசியலிலும் படைப்பிலும் கவனம் செலுத்திய பி.எஸ்ராமையா, வரா., புதுமைப்பித்தன் போன்றவர்களும், படைப்பில் கவனம் கொண்ட பிச்சமூர்த்தி, குபரா. போன்றவர்களும் ஒரே வகையான அரசியல் தெளிவுடன் ஒரே கொடியின் கீழ் இயங்கினார்கள். பிச்சமூர்த்தியும் குபராவும் கவிதையில் வடிவ மாறுதலை காண்பதை தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட அவர்களின் கலகக் குரலின் அடிப்படையில்தான் புரிந்து கொள்ளமுடியும்.

பிரதியின் மீதான எல்லோருடைய வாசிப்பும் ஒன்றாகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. மார்க்ஸ் அவருடைய வாசிப்பை நிகழ்த்த முடியும். ஆனால் நம சுமைகளை இறக்கி வைக்கும் சுமைதாங்கியாக படைப்பை, படைப்பாளியைப் பயன்படுத்தக்கூடாது.

**எம். வேதசகாயகுமார்.**



படிப்பகம்

www.padippakam.com

## மாலை மயக்கம்

பாழ் மண்டபத்தில்
பறவைகளுக்காக
காத்திருந்த போது
கீழைத் திரை வானில்
ஒற்றை நட்சத்திரம்
சிமிட்டி அழைத்து
தன் ரகசிய பொக்கிஷங்களை
எனக்கு அளித்தது
தங்க ரோஜாவை
ஒரு யுவதிக்கும்
பறக்கும் குதிரையை
குழந்தைகளுக்கும்
தானே எழுதும்
மாய எழுத்தாணியை
உனக்கும் அளித்து
பறவைகளுடன்
கூடடைகிறேன்.



## சமன்

தந்திகள் எனக்கு அதிர்ச்சி தருவதில்லை
நேற்று அதிகாலையில்
ஒரு தந்தி வந்தது
ஏழு மணி தூரத்தை
அமர்ந்து கடந்தேன்
உகுப்பார் உகுத்திருக்க
தன்வினைக்கும்
எதிர்வினைக்குமான குறுகிய இடத்தில்
ஒய்ந்தவனை
சுட்டெரித்து முக்கூடலில் கரைத்தேன்
மீதமிருந்த
தகப்பனின் வெற்றிடத்தை
எனதுடன் இணைத்தேன்.

குவளைக்கண்ணன்

சுந்தர ராமசாமி

நாகர்கோவில்,
22-2-1994.

அன்புள்ள ரவி,

உங்கள் கவிதைகள் பற்றி வெகுவாகப் பிந்தி எழுதுகிறேன். இக்கடிதத்தில் எதிர்மறைவிஷயங்கள் அதிகம் என்றாலும் சாதகங்களையும் நீங்கள் ஊன்றிக் கவனிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

கவிதை சார்ந்து ஆழம் நோக்கிச்செல்லும் மனோபாவத்தை நீங்கள் கொண்டிருக்கிறீர்களா அல்லது கவிதையை ஒரு பொழுதுபோக்காகக் கருதுகிறீர்களா என்பதுதான் எனக்கு முக்கியம். இப்போதைய முயற்சிகள் கூடி வந்திருப்பவையாகவோ அல்லது கூடிவராதவை யாகவோ இருப்பதை விட இது முக்கியம். கவிதையிலிருந்து தீவிரத்தைப் பிரிக்க முடியாத நம்பிக்கையில் நான் இருக்கிறேன். நீங்கள் அந்த நம்பிக்கையில் இல்லையோ என்ற எண்ணம் ஏற்படுகிறது.

'கிட்டத்தட்ட கவிதைகள்' என்ற உப தலைப்பைத் தவிர்த்திருக்க வேண்டும். இது கவிதைக்கு எதிரான ஒரு வேடிக்கை மனநிலையை உருவாக்குகிறது. இந்த வேடிக்கை மனோபாவம் தமிழில் ஒரு இதழாலும், ஒரு பிரபல எழுத்தாளராலும் தொடர்ந்து உருவாக்கப்பட்டு வருவது. கவிதையை துணுக்காக மாற்றியவர்கள் தீவிர கவிதை போன்ற ஒன்றை உருவாக்குவதில்லை என்பதால் அவர்களால் கவிதையைச் சீரழிக்க முடியாது என்றே நம்புகிறேன். தீவிர கவிதை போன்ற போலிகளை உருவாக்குபவர்களே தீவிர கவிதையைக் கொன்று கொண்டிருப்பவர்கள். கள்ள நோட்டு அச்சாக்கத்தில் துல்லியமான வெற்றி பெறும் போலிகளே அதிக ஆபத்தானவை என்பது போல். தொகுப்பை கொண்டுவரும் முயற்சியைக்கூட நீங்கள் இன்னும் சற்றுத் தள்ளிப்போட்டிருக்கலாம் - அதிகம் எழுதி அதிலிருந்து சிலவற்றைத் தேர்வுசெய்ய வசதியாக.

நீங்கள் எழுதியிருப்பவற்றில் கவிதையாக வந்திருப்பவையும் வராதவையும் பொருட்படுத்த முடியாதவையும் இருக்கின்றன. கவிதை மனோபாவமும் உள்ளோட்டமும் அநேக கவிதைகளில் வெளிப்படுகின்றன. உள்ளோட்டம் என்பது இளம் கவிஞர்களிடம் முற்றாக அழிந்து போய்க் கொண்டிருக்கும் ஒரு சக்தி. இன்றைய பல கவிதைகள் வறட்டு வசனங்களாகச் சரிய குறைந்தபட்சம் உள்ளோட்ட ஈர்ப்புகூட இல்லை என்பதுதான் முக்கிய காரணம். தொடர்ச்சி, அழைப்பு, அரங்கத்துள், பித்தம், தாவரவியல், போகிறவன், இனி, போக்கு போன்ற கவிதைகள் பொருட்படுத்தும்படி இருக்கின்றன.

தொகுப்பில் விளம்பரங்கள் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். இதில் பெறும் பொருளாதார ஆதாயத்தைவிட வாசக மனநிலை சார்ந்த இழப்புத்தான் அதிகம்.

நீங்கள் தொடர்ந்து தீவிரமாக இயங்கவேண்டும் என்பது என் ஆசை. நான் கூறியிருப்பவற்றைச் சரிவர எடுத்துக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கையில் இக்கடிதம் எழுதியிருக்கிறேன்.

என் வாழ்த்துக்களுடன்,
சு. ரா.

(சுந்தர ராமசாமி குவளைக்கண்ணனுக்கு எழுதிய கடிதம்)

**மாயாபஜார்** *(கிட்டத்திட்டகவிதைகள்)* **ஆசிரியர்: குவளைக்கண்ணன்**, வெளியீடு : சாயா (ஆசிரியரால் பதிப்பிக்கப்பட்டது) 31, வெள்ளைய கவுண்டர் காலனி, தில்லைநகர், சேலம் 636 001; பக்கங்கள் : 32, விலை ரூ.10



படிப்பகம்

www.padippakam.com

# கா. மாக்ஸியர் பற்றி அ. மார்க்ஸ்

## சி. சிவசேகரம்



அ. மார்க்ஸ்

அ. மார்க்ஸ் எழுதிய சில அண்மைக்கால கட்டுரைகளது தொகுப்பான 'மார்க்ஸியத்தின் பேரால்' என்ற நூல் சர்வதேச மாக்ஸிய நடைமுறை பற்றிய விவாதங்கள் தொடர்பானது. குறிப்பிடுமளவுக்கு நிதானமாக எழுதப்பட்ட இந்நூலின் கட்டுரைகள் மாக்ஸியத்தின் எதிர்காலம் பற்றிய சமகால ஐயங்களைக் கருத்திற் கொண்டுள்ளன. ரஷ்யப் புரட்சியை அடுத்து எழுச்சி பெற்ற சர்வதேச சோஷலிஸப் புரட்சிகர இயக்கத்தில் ஏற்பட்ட பிளவுகள் அனைத்திலும் அதிமுக்கியமானது, ஸ்தாலின் இறந்த பின்பு சோவியத் யூனியனின் தலைமையில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாக ஏற்பட்ட மோதல் எனலாம். 1963இல் உலகின் சகல கம்யூனிஸ்ட் கட்சிகளிலும் இது பிரதிபலித்தது. இந்தியாவினுள் இது தொடர்பான விவாதம் முறையாக விரிவடைய இயலாதவாறு சீன-இந்திய எல்லைப் போரும், அதனை யொட்டிய இந்திய தேசியவாத உணர்வும், திட்டமிட்டு வளர்க்கப்பட்ட சீன விரோத உணர்வும் குறுக்கிட்டன. ஆயுதமேந்திய சமூக விடுதலைப் போராட்டங்கள் பற்றிய மாக்ஸிய நிலைப்பாட்டை மையமாகக் கொண்ட விவாதமே பல ஆசிய நாடுகளிலும் கம்யூனிஸ்ட் கட்சிகளுள் பிளவுகளின் தன்மையைத் தீர்மானித்தது. மிகச் சிறிய நாடுகளில் ஒன்றான இலங்கையில் இவ்விவாதம் ஆழமாகவும் உக்கிரமாகவும் நடந்தது. இந்தியாவில் ஏற்பட்ட பிளவின் தன்மை வித்தியாசமானதாக இருந்தது மட்டுமன்றி, 1960களின் பிற்கூற்றில் நக்ஸல்பரிப் போராட்டத்தின் சூழலிலேயே கட்சிக்குள்ளான விவாதம் புரட்சியின் பாதை பற்றிய முரண்பாடாக உருப்பெற்றது. கலாச்சாரப் புரட்சியின் பின்னணியில் சீனாவுள் நேர்ந்த தவறுகள் போல சர்வதேச மட்டத்தில் தவறான அதிதீவிர நிலைப்பாடுகள் விருத்திபெற்றன. இதன் விளைவாக மக்கள் யுத்தம் என்ற கோட்பாடு தனிநபர் பயங்கரவாதமாக கூட விகாரம் அடைந்தது. இந்திய மாக்ஸிய–லெனினிஸ இயக்கங்கள் எனப்படுவன சில இன்னமும் அன்றைய குழப்பத்தின் பின்விளைவுகளில் இருந்து மீளமுடியாமல் உள்ளன. விறைப்பான சில அரசியல் நிலைப்பாடுகள் இன்னமும் பல மாக்ஸியக் கட்சிகளையும் இயக்கங்க ளையும் பீடித்துள்ளன. இவற்றினின்று மீள்வதற்கான தேவை உள்ளது. இவ்வாறான குறைபாடுகள் எந்தவொரு அரசியல் இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கிலும் இயல்பானவை. இவற்றைக் களைவதற்குக் கட்சிகட்கு உள்ளும் வெளியிலும் ஆரோக்கியமான விவாதங்கள் அவசியம். இவ் விவாதங்களின் தொனி, பொறுப்பானதாயும் நிதானமானதாயும் நண்பனுக்கும் எதிரிக்கும் இடையிலான வேறுபாட்டைத் தெளிவாகக் காட்டுவதாயும் இருப்பது அவசியமானது. இந்த வகையில் அ. மார்க்ஸின் நூல் மிகவும் வரவேற்கத்தக்கது.

ஆசிரியரின் முன்னுரைபோல அமைந்துள்ள 'இதற்கு முன்..' என்ற கட்டுரையில் திறந்த விவாதத்திற்கான தேவை வலியுறுத்தப்பட்டுள்ளது. கட்சியின் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடு தெளிவுபடுத்தப்பட வேண்டிய தேவையும் அடையாளம் காணப்பட்டுள்ளது. மாக்ஸியவாதிகள் பரவலான அறிவைப் பெறுவதன் அவசியத்தை வலியுறுத்தும் போக்கில் கிராம்சி, அல்தூஸர் மற்றும் றோஸா லக்ஸம்பர்க், ரொட்ஸ்கி ஆகியோரையும் கற்கும் தேவையை வலியுறுத்தும் மார்க்ஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் மாக்ஸ்-எங்கெல்ஸ்- லெனின்-ஸ்தாலின்-மாஓ ஆகியோரின் குறிப்பிட்ட சில படைப்புக்கட்கு வெளியே எவற்றையும் கட்சிக்குள் பயில்வது இல்லை என்றும் அவ்வாறு பயிலப்படுவது சந்தேகத்துடன் நோக்கப்படுவதாகவும் குறிப்பிடுகிறார். இது பகுதி உண்மை. மாக்ஸியக் கட்சிக்குள் மாக்ஸிய விரோதிகளது படைப்புக்களுங் கூடக் கவனமாகக் கற்கப்பட வேண்டும் என்பது பற்றியும் எனக்கு மறுப்பில்லை. ஆயினும் ஒரு கட்சியின் செயற்பாடு நடைமுறை சார்ந்தது. தமிழ் நாட்டில் இன்று நடக்கிற பட்டிமன்றங்களிற் போன்று "உனக்கு அமைப்பியல் வாதம் தெரியாதா? அப்போது உன் வாழ்வில் காற் பங்கு பாழ். உனக்குப் பின்னமைப்பியல்வாதம் தெரியாதா? அப்போது உன் வாழ்வில் இன்னொரு காற் பங்கு பாழ்..." என்றவிதமாக ஒரு கட்சிக்குள் ஆய்வுகள் நடக்க முடியாது. மாக்ஸியக் கட்சிகள் சில படைப்புக்களை வலியுறுத்துவது மாக்ஸிய அடிப்படைகள் தொடர்பான தெளிவுக்காகவே. மாக்ஸியக் கட்சிகளுக்கு நெருக்கமான அமைப்புகளின் நூல் வெளியீடுகளிற் பல வேறு படைப்புக்களும் உள்ளடங்குவன. என்னுடைய மதிப்பீட்டில், நமது உடனடியான சூழலைப் பற்றிய விரிவான அறிவும் உலக நிலையுடன் அதனைப் பொருத்திப் பார்க்கும் ஆற்றலும் முக்கியமானவை. விஞ்ஞான ரீதியான அணுகுமுறையும் தெளிவான சிந்தனையும் ஆழமான ஆராய்வும் எளிமையான கருத்து வெளிப்பாடும் மிக அவசியமானவை. எந்தளவு விரிவான வாசிப்பையும் விட நடைமுறையோடு இணைந்த சிந்தனை உயர்வானது. மாக்ஸ், மாக்ஸியப் புத்தி ஜீவிகளை மனதில் வைத்துக் கொண்டுதான் இப்பகுதியை எழுதியிருப்பதாகத் தெரிகிறது. ட்றொட்ஸ்கிய வாதிகள் மத்தியில் இன்னமும் பிரெஞ்சுப் புரட்சியை மையமாகக்கொண்ட வாதப் பிரதிவாதங்களைக் கேட்கலாம். நாம் அயலிலிருந்து கற்பது என்ன நோக்கத்திற்காக என்பது பற்றி மார்க்ஸ் விரிவுபடுத்தியிருக்கலாம். பேருதிர்ப்பையும் மேற்கோள் பட்டியலையும் விட முக்கியமான காரியங்கள் உள்ளன என்பதைப் பற்றி அவர் நிச்சயம் உடன்படுவார்.

'சோசலிசக் கட்டுமானம்-தத்துவமும் நடைமுறையும்' என்ற கட்டுரை அரிந்தாம் ஸேன் அதே தலைப்பில் எழுதிய நூலின் விமர்சனம். ஸேன் எழுதிய நிலைப்பாட்டுடன் தன் உடன்பாடின்மையும் நூலின் முழுமையின்மையும் பற்றி விரிவாக எழுதியுள்ள மார்க்ஸ் ஸ்தாலினின் காலத்தில் நேர்ந்த தவறுகளை அந்த வரலாற்றுச் சூழலிலும் சோவியத் அரச அமைப்புடனும்



படிப்பகம்

www.padippakam.com


## South Indian Studies

***A multi-disciplinary journal***

***Editor: M.S.S.Pandian***

*Re-evaluating* old themes and problematising received forms of knowledge is a refreshing aspect of recent social science enquiries. Areas and aspects of social life which have remained outside the domain of academic knowledge, are now being brought under investigation. While conventional terrains of research show signs of having been overworked, there are indications of new ones emerging, provoking fresh insights and keen debates. These enquiries and debates, dispersed across disciplines, is recasting our understanding of South Indian society in a new light.

*South Indian Studies* intends to consolidate the gains of such enquiries by offering a broad forum to present and discuss current research on South India. In addition to papers and reviews, the journal plans to carry resume of major debates taking place in South Indian languages.

*The* journal invites papers, research notes, review articles and reviews for publication. All papers will be refereed before being accepted for publication.

**First issue : January 1996** **Size : Demy 1/8** **Pages : 150**

*Editorial correspondence*

M.S.S. Pandian, Madras Institute of Development Studies
79, IInd Main Road, Gandhi Nagar, Adyar, Madras 600 020

*Business correspondence*

***Chithira* Publishers**

*a divison of*

Chithira Communications Co. P. Ltd. 39/3006, Manikath Road, Kochi, Kerala 682 016.



ஜே.ஜே. சில குறிப்புகள் ரூ. 48

சுந்தர ராமசாமி சிறுகதைகள் ரூ. 90

'க்ரியா' வெளியீடான இந்நூல்களின் முழு விற்பனை உரிமை காலச்சுவடு பதிப்பகம் பெற்றிருக்கிறது.

காலச்சுவடு ஆண்டு மலர் 91 ரூ. 68

காலச்சுவடு தனி இதழ் ரூ. 15

(1989 இதழ் எண்கள் 6, 7, 8 மறு நிர்ணயம் செய்யப்பட்ட விலை)

**காலச்சுவடு**

151 கே.பி. ரோடு

நாகர்கோவில் 629 001

பதிவு தபால் செலவு இலவசம் வி.பி.பி. இல்லை

**விமானப் பதிவுத் தபால்**

**கூடுதல் கட்டணம்**

| | |
|---|---|
| ஜே.ஜே. சில குறிப்புகள் | ரூ 60 |
| சுந்தர ராமசாமி சிறுகதைகள் | ரூ 145 |
| காலச்சுவடு சிறப்பு மலர் | ரூ 110 |
| காலச்சுவடு 6, 7, 8 இதழ்கள் ( இதழ் ஒன்றுக்கு) | ரூ 35 |




படிப்பகம்

www.padippakam.com

பொருத்திப் பார்ப்பதன் தேவையை வலியுறுத்துகிறார். "கட்சியின்றிப் புரட்சியில்லை என்பதில் நமக்குக் கருத்து மாறுபாடில்லை. ஆனால் மேலிருந்து கீழான முதலாளியக் கம்பெனி நிர்வாக அமைப்பில் ஒழுங்கமைக்கப்பட்ட இன்றைய கட்சி வடிவம் எந்தளவுக்குச் சரியானது என்பதே நமது கேள்வி... தலைமையகத்தைத் தகர்த்து எறியச் சொன்ன மாவோவால் கூட இதனை மாற்றியமைக்க முடியவில்லை. இதன் விளைவாகவே அதிகாரத்துவமும் தனிநபர் வழிபாடும் கட்சிகள் சிதறுண்டு போவதும் என்று சொன்னால் மிகையாகாது" என்கிற மார்க்ஸ் மேலிருந்து கீழாக ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு சமுதாயத்தில் இருந்துதான் கட்சியும் உருவாகிறது என்பதையும் அறிவார். பரந்து பட்ட அளவில் மக்கள் அரசியல் உணர்வுள்ளவர்கள் ஆகும் வரை அவர் தேடுகிற மாற்றம் ஏற்படாது. மாஓவாற் கூட முடியாமற் போனது என்று கூறும்போது, ஒரு தனி மனிதரால் இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்த இயலும் என்ற எதிர்பார்ப்பை மார்க்ஸ் வெளிப்படுத்துகிறாரோ என்று புரியவில்லை. மாஓ செய்தது, ஒரு புதிய திசையைக் காட்டியது தான். அதில் நடந்த அவசரமான பயணம் எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்தியது என்பது என் மதிப்பீடு. கட்சியில் ஜனநாயகம் என்பதும் மக்கள் ஜனநாயகம் என்பதும் பற்றிய கோட்பாடுகள் ஈற்றில் நடைமுறை சார்ந்தன. ரஷ்யாவின் தவறுகளினின்று மாஓவின் காலத்துச் சீனம் கற்றது. சீனத்தின் தவறுகளிலிருந்தும் நாம் கற்க வேண்டியுள்ளது. ஜனநாயகம் பற்றிய கோட்பாடும் நடைமுறையும் ஒவ்வொரு நாட்டினது சூழலுக்கும் வரலாற்றுக் காலகட்டத்துக்கும் ஏற்பவே அமைய முடியும். அதீத ஜனநாயகம் அராஜகமாகவே முடியும் என்பது பற்றியும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஸமிர் அமின் எழுதிய "மாஓயிஸத்தின் எதிர்காலம்" என்ற ஆங்கில நூலின் விமர்சனம் 'மாவோயிசத்தின் எதிர்காலம்' என்ற கட்டுரை. மாஓயிஸம், மாஓவாதம் போன்ற சொற்றொடர்களை, மாஓவின் பங்களிப்புக்களை அடையாளங்காட்டும் பாங்கில் மட்டுமின்றி, மாக்ஸியத்தின் ஒரு கிளையாகக் காட்டப்படுவதை மாஓ என்றுமே விரும்பவில்லை. கலாச்சாரப் புரட்சிக் காலத்தில் மாஓ எதிர்ப்பாளர்களாற் பயன்படுத்தப்பட்ட இச்சொற்றொடரை விட, மாஓ சேதுங் சிந்தனை என்ற சொற்றொடரே மாக்ஸிய-லெனினிஸவாதிகளால் அதிகம் விரும்பப்பட்டது. சில நடுத்தர வர்க்கப் புத்தி ஜீவிகளுக்குத் தம்மை மாஓவாதிகள் என்று கூறிக் கொள்வதில் மகிழ்ச்சி இருந்தது உண்மை. ஆயினும் மாஓவின் பங்களிப்பின் முக்கியத்துவம், மாக்ஸியத்தை இன்றைய நவ கொலனித்துவ உலகிற்கு ஏற்ற ஒரு போராட்ட நடைமுறையாக விருத்தி செய்வதிலேயே தங்கியுள்ளது. லெனின் செய்ததையே மாவோ மேலும் விரிவாக்கினார் என்பது அடிப்படையான உண்மை.

அமின் 1981இல் எழுதியபோது அவர் எதிர்பார்த்ததைவிட வித்தியாசமான முறையில் சீனாவின் பொருளாதாரக் கொள்கை திசை மாறிவிட்டது. அமினுடைய எதிர்பார்ப்புக்கள் பல நிறைவுபெறவில்லை என்பது உண்மை. ஆயினும் அமின் கூறிய சில விஷயங்கள் பற்றி மேனாட்டுச்செய்திகளின் அடிப்படையில் மார்க்ஸ் எழுப்பும் வினாக்களில் குறைபாடுகள் உள்ளன. "சீனக் கம்யூனிஸ்ட் கட்சி என்றும் ஒற்றைப் பரிமாணமுடையதாய் இருந்ததில்லை. கருத்து வேறுபாடுகட்காக ஆட்கள் கொல்லப்பட்டதில்லை" என்கிறார் அமின். கலாச்சாரப் புரட்சியின் போது ஏராளமானோர் கொல்லப்பட்டதாக இன்று நமக்கு செய்திகள் கிடைக்கின்றன... அமின் தனது கணிப்பில் தவறு செய்து விட்டாரா? (ப. 94) கலாச்சாரப் புரட்சியின்போது வன்முறை நிகழ்ந்தது. ஆயினும் இவை கருத்து வேறுபாட்டுக்குக் கட்சியின் பேரில மரண தண்டனை விதிக்கும் பாங்கில் நிகழவில்லை. கலாச்சாரப் புரட்சி ஏறத்தாழ ஒரு உள்நாட்டு யுத்தத்தின் அளவுக்கு வளர்ந்துவிட்ட பின்பு அதை முடிவுக்குக் கொண்டுவரும் தீர்மானம் 1968-69 இல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

"சீனத்தின் பாதை திரிபுவாதப் பாதை என்றால், அமின் போலந்து எழுச்சி பற்றிக் குறிப்பிடுவதுபோல, ஜனநாயக உரிமைக்கான மாணவர் போராட்டத்தை எதிர்ப்புரட்சி என ஒதுக்காமல் புரட்சிகரமாய்த்தானே பார்க்க வேண்டும்." (ப.96)

இங்கு போலந்தில் அந்நிய (சோவியத்) மேலாதிக்கத்துக்கும் அதன் சார்பாகச் செயற்பட்ட அரசுக்கும் எதிரான பண்புடைய ஒரு கிளர்ச்சியை சீனாவை முதலாளித்துவ நாடாக்கும் விருப்பத்துடனும் ஏகாதிபத்திய சக்திகளது குறுக்கீட்டை நம்பியும் நடத்தப்பட்ட ஒரு நடவடிக்கையுடன் மார்க்ஸ் சமன்படுத்த முற்படுகிறார். சீனாவில் நடந்த கிளர்ச்சியில் பங்கு பற்றிய அனைவருமே பிற்போக்காளர்களல்ல. ஆயினும் அப்போராட்டத்தின் முனைப்புப் பற்றிய பிரமைகள் நமக்கு இல்லை.

முற்குறிப்பிட்ட கட்டுரையின் தொடர்ச்சி போன்று, 'சீனமும் ...' என்ற கட்டுரை அமைந்துள்ளது. இன்றைய சீனா பற்றி இடதுசாரிக் கட்சிகளிடையே ஏறத்தாழ பூரண ஆதரவு அல்லது பூரண எதிர்ப்பு என்ற நிலைப்பாடுகளே உள்ளதாக மார்க்ஸ் சுட்டிக் காட்டுவது இந்தியாவைப் பொறுத்தளவில் உண்மையாக இருக்கலாம். சர்வதேச ரீதியாகவும் உள்ள இரண்டு பொதுவான போக்குகளாக இவற்றை அடையாளங் காண்பதில் சிறிது அபாயம் உள்ளது. சீனாவின் இன்றைய பொருளாதாரக் கொள்கையைக் கடுமையாக விமர்சிக்கிற அதே வேளை, சீனாவின் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையையும் அவ்வகையில் அதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துவோர் உள்ளனர் என்பது நம் கவனத்துக்குரியது.

மாஓ, அரசு, கட்சி, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்பன பற்றிய பொல்ஷெவிக் நிலைப்பாட்டில் நின்றதையே கலாச்சாரப் புரட்சியில் மக்களின் பங்கேற்பு இல்லாமைக்கான காரணமாக மார்க்ஸ் கருதுகிறார். (ப. 109) "அதிகாரக் குவியலுக்கும் சலுகைக்கடை சொகுசுகட்கும் ஆசைப்படாதவர்களாகவே கட்சி அணிகள் புரட்சிக்குப் பின்னும் நீடிக்க வேண்டும்." (ப.109 )

மேற்குறிப்பிட்ட சில விஷயங்களை மார்க்ஸ் மிகுதியாகவே எளிமைப்படுத்துகிறார். சீனாவின் பின் தங்கிய சமுதாய அமைப்பில் சீனப் புரட்சியைச் சாத்தியமாக்கியது என்ன என்ற கேள்வியிலிருந்து தொடங்கினால் சீனாவில் சோஷலிஸத்தைக் கட்டியெழுப்புவதன் சிக்கல்களை மேலும் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். சமுதாய மாற்றங்களைச் சாத்தியமாக்கும் சக்திகள், தலைவர்கள், போராளிகள் உட்பட, அனைத்துமே சாதாரண மனிதர்கள் தான். எனவே, தனிவுடைமைச் சமுதாயத்தின் நோய்கட்கு அப்பாற்பட்ட மனிதர்கள் அபூர்வம். புரட்சி ஏராளமான அபூர்வப் பிறவிகளுக்காகக் காத்திருப்பதில்லை. எனவே கட்சி அணிகள் நெறி பிறழாமல் இருக்குமாறு வெகுஜன இயக்கங்கள் கட்டி எழுப்பப்படுவது அவசியம். தொடரான போராட்டங்கள் மூலமே கட்சிகள் உண்மையான மக்கள் இயக்கங்களாகத் தொடர முடியும் என்பதே மாஓவின் கருத்து. இவ்விஷயத்தில் சமுதாய நடைமுறை மூலமே தவறுகள் களையப்பட முடியும். வேறுவிதமாக எதிர்பார்ப்பது மிகவும் கற்பனைப் பாங்கானது.



படிப்பகம்

www.padippakam.com

உலகெங்கிலும் உள்ள புரட்சிகரச் சக்திகள் (சீனக்) கிளர்ச்சியாளர்களை எதிர்த்தால் அவர்கள் ஏகாதிபத்தியத்தைத் தழுவிக் கொள்வார்கள் என்ற வாதம் (ப. 114) முறையான ஒன்றாகத் தெரியவில்லை. சீனக் கிளர்ச்சியாளர்களின் தலைவர்கள் பலரதுஞ் சுயரூபம் கிளர்ச்சி அடக்கப்பட்ட சில நாட்களிலேயே தெளிவாகி விட்டது. லெஹ் வலெஸாவின் தலைமையைப் புரட்சி வாதிகள் ஆதரித்திருந்தால் போலந்துக் கிளர்ச்சி போப்பாண்டவரின் ஆசியை நாடி இருக்காது என்றும் எவரும் வாதிக்கலாம். சீனக் கிளர்ச்சியை எதிர்ப்பது சீன ஆட்சியாளர்களை விமர்சனமின்றி ஆதரிப்பதாகி விடாது

சீனாவில் 1989ல் நடந்த சம்பவங்கள் பற்றிய தகவல்கட்கு மார்க்ஸ் முற்றிலும் மேனாட்டுச் செய்தியாளர்களையே சார்ந்திருக்கிறார். இவற்றில் மிகைப்படுத்தல் பற்றிய ஒரு குறிப்பும் மார்க்ஸால் எங்கும் தரப்படாதளவில் அவர் அவற்றை அப்படியே நம்புகிறார் என்று நான் ஊகிக்கிறேன்.

'மார்க்ஸியம் தோற்கவில்லை' என்ற கட்டுரையும் 'மாக்ஸியம்-அறிவியல்-வன்முறை' என்ற கட்டுரையும் சமகால மார்க்ஸியத்தின் பிரச்சினைகள் தொடர்பானவை. இக் கட்டுரைகளில் உலகெங்கிலும் உள்ள மார்க்ஸிய வாதிகளை இரண்டு பெரும் பிரிவுகளாக வகுக்கும் மார்க்ஸ் இவற்றின் குணாம்சங்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகளதும் மா.-லெ. குழுக்களதும் அடிப்படையில் தான் வந்தடைந்துள்ளார் என ஊகிக்கிறேன். மார்க்ஸியம், செல்லாக்காசாகி விட்டது என்ற வாதத்திற்கெதிரான அவரது பதில்கள் மார்க்ஸிய விரோதிகளது நேர்மையற்ற நிலைப்பாடுகளை அம்பலப் படுத்துகின்றன. புரட்சிக்குப் பிந்திய அரசுகளின் சீரழிவின் தோற்றுவாய்களை மார்க்ஸ் மாக்ஸிய - லெனினிஸப் புரட்சிக் கோட்பாடுகளுக்குள்ளேயே அடையாளங் காண்கிறார். இவையெல்லாம் பின்னோக்கிய பார்வையிற் சரியாகவே தென்பட்டாலும் சமுதாயப் புரட்சியின் சிக்கலான தன்மையே அவர் குறை காணும் அணுகுமுறைகளை அவசியமாக்கின. ரஷ்யாவிலும் சீனாவிலும் பாட்டாளி வர்க்கப் புரட்சி எதிர்கொள்ள வேண்டியிருந்த சூழல் பின்தங்கிய முதலாளித்துவ வளர்ச்சியை உடைய சமுதாயங்களினது. லெனினும் மாஓவும் சார்ந்த கட்சிகள் செய்தவற்றையும் செய்யத் தவறியவற்றையும் நாட்டினதும் உலகினதும் நிலவரங்களின் அடிப்படையில் வைத்து மதிப்பிடும் தேவை உள்ளது. மார்க்ஸிடம் அந்த ஞானம் உண்டென்பதில் எனக்கு ஐயமில்லை. ஆயினும் கட்டுரைகளில் அது வெளிவரத் தவறிவிடுகிறது. இதன் விளைவாகவோ என்னவோ ஸ்தாலின் காலத்துத் தவறுகள்பற்றிய மதிப்பீடுகள் லெனினினின்று ஏற்பட்ட பிறழ்வாகவும் ஸ்தாலினுக்குப் பின் ஏற்பட்ட மாற்றங்கள் ஸ்தாலினியத்தின் தொடர்ச்சி போலவும் காணப்படுகின்றன.

மாக்ஸியத்தில் இட்டு நிரப்பப்படாத இடைவெளிகளாக மார்க்ஸ் கருதும், சுற்றுச்சூழல், சாதியம் என்பனவும் பெண்ணியம், சனநாயகம், தேசிய இன உணர்வு போன்ற கருத்தாக்கங்களும் மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்ற அவரது கூற்றுச் சரியானதே. இவ்விஷயங்களில் எந்தவொரு மாக்ஸியவாதியின் அணுகுமுறையும் நிலைப்பாடும் கால இடச் சூழல்கட்கமைய வேறுபடும் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். சாதியம் தொடர்பாக இலங்கையில் மாக்ஸிய-லெனினிஸ சக்திகள் 1965ல் எடுத்த நடவடிக்கைகளிலிருந்து தமிழகமும் இந்தியாவும் நிறையவே கற்க வேண்டியுள்ளது. தேசிய இனப்பிரச்சினையிலும் ஈழத்து மாக்ஸிய - லெனினிஸ வாதிகளது தெளிவான நிலைப்பாடு தமிழகத்தின் பூரணமான பிரிவினை எதிர்ப்பினின்றும் கண் மூடித்தனமான பிரிவினை ஆதரவினின்றும் வேறுபடுகிறது.

"உலகெங்கிலும் உள்ள பொதுவுடைமை கட்சிகளும் மாவோயிஸ்டுகளும் கூட பன்மைக் கருத்துக்களுக்கும் கருத்து மாறுபாடுகளுக்கு மதிப்பளித்தல் சிவில் மற்றும் சனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நிறுவன வடிவம் ஆகிய கருத்துக்களை ஏற்றுக் கொள்வதில்லை" (ப. 168) என்ற கூற்று, முற்றும் சரியானதல்ல.. பிரச்சனைக்குரிய விஷயம் எத்தகைய பன்மை, எத்தகைய மாறுபாடு, எத்தகைய குடிசார் பண்புகளும் சனநாயகமும் என்பதே.

"(செவ்வியல் மாக்ஸிய) வாசிப்புக்குள் அடங்காத அனைத்தையும் நவ மாக்ஸியம் எனவும் திரிபு வாதம் எனவும் டிராட்ஸ்கியம் எனவும் புதிய இடதுக் கருத்துக்கள் எனவும் ஒதுக்குவது வழக்கமாயிற்று" (ப.169) என்ற குற்றச் சாட்டில் உண்மை உண்டு. ஆயினும் இது பொதுவான உண்மையல்ல. சில மாக்ஸிய எதிரிகள் தம்மைத்தாமே முற்குறிப்பிட்ட பதங்களால் வர்ணிப்பதும் நம் கவனத்துக்குரியது. இந்த பட்டியலில் அமைப்பியல் வாதமும் பின் அமைப்பியல்வாதமும் இப்போது இணைந்துள்ளன.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் காலத்தில் பார்ப்பனியம் இறுக்கமாக்கப் பட்டிருந்தது என்று (ப.175ல்) மார்க்ஸ் கூறுவது பற்றி எனக்குச் சிறிது ஐயம் உண்டு. ஆரியப் பாதிப்பு ஏற்பட்ட காலம் பார்ப்பனியமயமாதலின் காலம் என்று என்னாற் கருத இயலவில்லை.

அறிவியலும் வன்முறையும் தொடர்பான தெளிவான, நியாயமான கருத்துக்களை முன்வைக்கும் மார்க்ஸ் பாட்டாளிவர்க்க அரசுகளின் வன்முறை, இதர அரச வன்முறைகட்குச் சற்றும் குறைவில்லாது இருந்ததற்கான விளக்கங்களில், போராட்டம், அரசு, நீதி, தண்டனை என்பன தொடர்பான பொது விதிகளை உருவாக்கியமை முக்கிய பங்கு வகிக்கிறது என்கிறார். இங்கு, பாட்டாளி வர்க்க அரசுகள் எத்தகைய புற உலகச் சூழலில் இயங்கின என்பதையும் அவர் மனதில் வைத்திருந்திருக்கலாம்.

இறுதி அத்தியாயம் பிற கட்டுரைகளிற் கூறப்பட்ட கருத்துக்களது மீள வலியுறுத்தலாக உள்ளது. சோஷலிஸக் காலகட்டத்தில் வர்க்கப் போராட்டம் இல்லை என்று ஸ்தாலின் கூறியதைச் சுட்டி காட்டும் மார்க்ஸ், அந்த விஷயத்தில் தனது தவறை ஸ்தாலின் தன் இறுதிக் காலத்தில் ஏற்றுக் கொண்டார் என்பதையும் குறிப்பிட்டிருக்கலாம். இக்கட்டுரையில் புரட்சிக்குப் பிந்திய சமுதாயம் பற்றி அவர் கூறுகிற கருத்துக்கள் மிகவும் பயனுள்ளவையும் புரட்சிகர மாக்ஸியவாதிகட்கு ஏற்புடையவையும் என்றே நம்புகிறேன்.

இந்நூலில் உள்ள கட்டுரைகளின் நிதானமும் எளிமையான நடையும் பாராட்டுக்குரியன. மிகுந்த கருத்து வேறுபாடுகளின் மத்தியிலும் முற்போக்குச் சக்திகளாற் பகைமையுணர்வின்றி விவாதிக்க முடியும் என்ற நம்பிக்கையையூட்டும் இந்த எழுத்துக்கு நூலின் இறுதி அத்தியாயத்தில் வரும் சில கடுஞ்சொற்கள் சிறிது கேடு செய்கின்றன. மற்றவர்கட்குப் புரியாதவாறு எழுதுவதே தம் மேன்மை என நினைப்பவர்கள் கட்டாயம் வாசிக்க வேண்டிய நூல்.

(மார்க்ஸியத்தின் பெயரால், அ. மார்க்ஸ, விடியல், கோவை, 1994, பக்கம் 208, விலை ரூ. 25/-)

●



படிப்பகம்

www.padippakam.com


# மச்சம்

**யஸுநரி கவபட்டா**

பல ஜப்பானிய இலக்கியப் பரிசுகளையும், பிரான்ஸிலும் மேற்கு ஜெர்மனியிலும் சில கௌரவ மிக்க விருதுகளையும் பெற்றிருக்கும் யஸுநரி கவபட்டா, மனோதத்துவ ரீதியிலான கதைகள் புனைவதில் வல்லவர்.

1968ஆம் ஆண்டுக்கான இலக்கிய நோபல் பரிசு பெற்ற இவர், 'அர்த்தமுள்ள விதத்தில், ஜப்பானிய மனங்களின் ஆழத்தைக் கலை உணர்வுடன் வெளிப்படுத்துபவராக'க் கருதப்படுகின்றவர். 'மரணத்தை அழகு செய்வதற்கும், மனிதனை இயற்கையோடும், வெறுமையோடும் ஒருங்கிணைப்பதற்கும், வாழ் நாள் முழுவதும் அழகைத் தேடி அலைவதாகவும்' தன் முயற்சிகளைச் சொல்கிறார். இவர் கதைகளில் வெளிப்படும், 'ஆழ்ந்த, மனோதத்துவ ரீதியிலான பெண் மனதின் குண சித்திரத்தை' மேற்கத்திய இலக்கியவாதிகள் பாராட்டுகின்றனர். கவபட்டா, சித்தாந்தங்களை விடவும், தனி மனிதனிடத்தில் அதிக அக்கறை காட்டுபவர்.

o



நேற்றிரவு என் கனவில் அந்த மச்சத்தைப் பார்த்தேன்.

'மச்சம்' என்று நான் எழுதினாலே போதும், எந்த மச்சம் என்று உங்களுக்குப் புரிந்துவிடும். உங்களிடம் எத்தனை தடவை வசவு வாங்கிக் கொடுத்திருக்கிறது எனக்கு!

"அது ஏற்கனவே அவரை விதை சைஸுக்கு இருக்கு; அதை நிமுண்டிக்கிட்டே இருக்கியே. பாரு, ஒரு நா அது தெறிச்சிடப் போகுது."

நீங்கள் பலதடவை கேலி செய்திருக்கிறீர்கள். நீங்கள் சொன்னது மாதிரியே அது ஒரு பெரிய மச்சம்தான். பெரியது மட்டுமில்லை, புடைத்து அழகாகவும் இருக்கிறது.

குழந்தையாயிருந்தபோது படுக்கையில் அதனிடம் கைச்சேட்டை பண்ணிக் கொண்டிருப்பேன். முதன் முதலில் நீங்கள் அதைப் பார்த்தபோது நான்தான் எவ்வளவு வெட்கப்பட்டேன்!

அழுதேவிட்டேன். உங்களுக்கானால் ஆச்சரியம்.

"அந்தப் பழக்கத்த விட்டுரும்மா, அதைத் தொட்டுக்கிட்டே இருந்தா அது இன்னும் பெரிசாயிடும்."

என் அம்மாவும், அப்படித்தான் திட்டுவாள். அப்போது நான் பதிமூன்று வயதே நிரம்பின குழந்தைதான்; பெரியவளானபோது அது ஒரு பழக்கமாகவே ஆகிவிட்டது - அது ஒரு விஷயமேயில்லை என்கிற அளவு என்னோடு தங்கிவிட்ட பழக்கம்.

முதன் முதலாக அதை நீங்கள் பார்த்த சமயத்தில், கல்யாணமாகியிருந்ததேயொழிய, நான் குழந்தையாய் தானிருந்தேன். உங்களுக்கு, ஒரு ஆண்பிள்ளைக்கு, என்னுடைய அப்போதைய கூச்சம் புரியுமா என்ன!

ஆனால், அது வெறும் கூச்சமில்லை; பயம். அப்படித்தான் நான் நினைத்துக் கொண்டேன். திருமணம் என்பதே ஒரு பயங்கரமான விஷயமாய்ப்பட்டது எனக்கு.

என் அந்தரங்கம் வெளிச்சத்துக்கு வந்து விட்டதாய் உணர்ந்தேன். எனக்கே தெளிவில்லாத என் ரகசியங்கள் ஒவ்வொன்றையும் நீங்கள் வெளிக்கொண்டு வந்த மாதிரி; நான் மிகவும் நிர்க்கதியாய் ஆகிவிட்ட மாதிரி உணர்ந்தேன்.

நீங்கள் நிம்மதியாய்த் தூங்கிவிடும்போது எனக்குச் சில சமயம் ஆசுவாசமாய் இருக்கும்; சிலவேளை மிகவும் தனியாய் இருப்பதாய்த் தோன்றும். எப்போதாவது மச்சத்தை நோக்கிக் கை எழும்பும்போது சுதாரித்துக் கொள்வேன்.

"என் மச்சத்தை இனி மேல் என்னால் தொடவே முடியாது" என்று அம்மாவுக்கு எழுத நினைப்பேன்; அப்படி நினைக்கும் போதே என் முகம் ரத்தமாய் சிவந்து விடும்.

ஒரு தடவை சொன்னீர்கள்:

"ஒரு மச்சத்துக்குப் போய் ஏன் இப்படி அசட்டுத்தனமா அலட்டிக்கிறே."

ஆனால், இப்போது தோன்றுகிறது; நீங்கள் மட்டும், என்னுடைய அந்த மோசமான பழக்கத்தைக் கொஞ்சமாவது ரசித்திருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்!

அந்த மச்சம் பற்றி நானும் அவ்வளவு ஒன்றும் கவலைப்படவில்லை. எந்தப் பொம்பளைக்குக் கழுத்தில் மச்சம் இருக்கு என்று யாரும் தேடி அலையவில்லை. ஊமையான பெண்ணைக்கூட திறக்கப்படாத அறை மாதிரி சுத்தமாய் இருப்பவள் என்று தான் சொல்வார்கள். ஆனால், ஒரு மச்சம், அது எவ்வளவு தான் பெரியதாய் இருக்கட்டுமே, அதை ஊனம் என்று நிச்சயம் சொல்ல முடியாது.

இந்தப் பழக்கத்தை நான் விடப்போவதே இல்லை என்று ஏன் நீங்கள் நினைக்க வேண்டும்?

தவிர, அந்தப் பழக்கம் உங்களுக்கு ஏன் இவ்வளவு எரிச்சலூட்ட வேண்டும்?

"கையை எடுடி" என்று கோபிப்பீர்கள்; நூற்றுக்கணக்கான தடவைகள் திட்டிவிட்டீர்கள் இப்படி.

"உன் இடது கையைக் கட்டாயம் அங்க கொண்டுபோய் வைக்கணுமா?"

- ஒரு தடவை ரொம்ப எரிச்சலுடன் கேட்டீர்கள்.

"இடது கையையா?" நான் அதிர்ந்து போனேன். நீங்கள் சொன்னது சரிதான். நான்தான் கவனித்ததில்லையே தவிர, நான் எப்போதுமே இடது கையைத்தான் உபயோகப்படுத்துவேன்.

"மச்சம் உன் வலது தோளிலே இருக்கு, வலது கையாலே நிமிண்டினா என்ன?"

"ம்?" - நான் வலது கையால் தொட்டுப் பார்த்தேன்.

"ம் ஹூம்.. அசிங்கமாயிருக்கும்."



படிப்பகம்

www.padippakam.com

"இப்ப இருக்கிற அளவு அசிங்கமில்லே."

"ஆனா இடது கையால தொடுறது தான் வசதியாய் இருக்கு."

"வலது கையே நல்லா எட்டுமே?"

"ஆனா, கையைப் பின்னால் கூடிக் கொண்டு போகணும்."

"பின்னால கூடியா!"

"ஆமா, ஒண்ணு, இடதுகையை தொண்டைக் குழியைச் சேர்த்து இப்படிக் கொண்டு போகணும். இல்லாட்டி வலதுகையைப் பின்னால் கூடிக் கொண்டு போகணும்."

நானும் நீங்கள் சொல்வதையெல்லாம் உடனே கேட்டு நடக்கும் மனோபாவத்திலிருந்து விலகியிருந்தேன். ஆனாலும், உங்களுக்கு பதிலைச் சொல்லி விட்டேனேயொழிய, எனக்கு வேறுமாதிரித் தோன்றியது. என் இடதுகையை முன்னால் கொண்டு வந்து மச்சத்தைத் தொடும்போது நான் உங்களை விலக்குகிற மாதிரி இருக்கிறது; என்னை நானே அணைத்துக் கொள்கிற மாதிரி.

இவரிடம் நாம் இரக்கமற்று நடந்து கொள்கிறோம் என்று பட்டது.

நிதானமாய்க் கேட்டேன் :

"ஆமா, இடது கையால தொட்டா என்ன, தப்பா?"

"எந்தக்கைன்னா என்ன. கெட்டபழக்கம் தான்."

"அதுதான் எனக்கும் தெரியுமே."

"டாக்டர்ட்டப்போயி அந்தச் சனியனை அறுத்து எறின்னு எத்தன தடவை சொல்லியிருக்கேன்."

"நான் மாட்டேன். எனக்குக் கூச்சமாய் இருக்கும்."

"இது ஒரு சாதாரண சமாசாரம்."

"மச்சத்தை எடுக்கணும்னு யாராவது டாக்டர்கிட்டப் போவாங்களா?"

"எத்தனையோ பேர் போறாங்க."

"முஞ்சியில மச்சம் இருந்தா போவாங்க. முதுகில இருந்தாப் போவாங்களா? அப்படிப் போனாலும் டாக்டரே சிரிப்பாரு, எம் புருஷனுக்குப் பிடிக்காததுனாலதான் வந்தேன்னு அவருக்கும் தெரிஞ்சுபோகும்."

"நீ அவர்ட்டச் சொல்ல வேண்டியதுதானே, நான் சும்மா அதை நோண்டிக்கிட்டே இருக்கேன்னு."

"அந்த மச்சத்தைப் பார்க்கக் கூட முடியாது. சின்ன விஷயம்; இதைப் போயி....."

"நீ அதை நோண்டாம இருந்தா நான் ஒண்ணுமே சொல்லப் போறதில்லை!"

"நானும் என்ன, வேணும்னா செய்றேன்."

"ஆனாலும் நீ ரொம்பப்பிடிவாதம் பிடிக்கிற. நான் என்ன சொன்னாலும் காதுலயே வாங்குறதில்லே. மாத்திக்கணுங்கிற நெனைப்பே உனக்கு இல்லே!"

"நானும் எவ்வளவோ முயற்சிபண்ணித்தான் பார்த்தேன். அதைத் தொடாம இருக்கணும்னு கழுத்தமூடற மாதிரி சட்டை போட்டுக்கிட்டேன்!"

"எவ்வளவு நாளைக்கு?"

"சரி, தொட்டாத்தான் என்ன, குடியா முழுகிப்போச்சு?" யாரும் பார்த்தால், நான் எதிர்த்துச் சண்டை போடுகிற மாதிரித்தான் தோன்றியிருக்கும்.

"குடியொண்ணும் முழுகலே, எனக்குப் பிடிக்கலே; அதைச் செய்யாதேன்னுதான் சொல்றேன்...!"

"ஏன் ஒங்களுக்குப் பிடிக்காமல் போகணும்?"

"இதுக்கெல்லாம் காரணம் சொல்லணுங்கிற தில்லே. அந்த மச்சத்தை நீ நோண்டியே தீரணும்ங்கிறதும் இல்லே. அது கெட்ட பழக்கம். நீ நிறுத்திடணும்னு ஆசைப்படறேன்."

"நான் ஒண்ணும் நிறுத்தவே மாட்டேன்னு சொல்லல"

"நீ அதைத் தொடும்போதெல்லாம் முகத்தை விளக்கெண்ணை குடிச்ச மாதிரி வச்சுக்கிற. உண்மையிலே அதுதான் எனக்குப் பிடிக்கலே." நீங்கள் சொன்னது சரிதான்போல. இப்படி நீங்கள் சொன்னது என் மனதைத் தொட்டுவிட்டது. சரியென்று ஆமோதிக்கத் தோன்றியது. "இன்னொரு தடவை நான் தொடுறதைப் பார்த்தா என் கையிலேயே அடிங்க, இல்லாட்டி, சப்புன்னு அறைஞ்சிடுங்க."

"அது கிடக்கட்டும், ஒரு சின்னப் பழக்கம்; ரெண்டு மூணு வருஷமா முயற்சி பண்ணியும் ஒன்னால நிறுத்தமுடியலையே. ஒனக்கே சங்கடமாயில்லையா?"

நான் பதில் சொல்லவில்லை. "உண்மையிலேயே அதுதான் எனக்குப் பிடிக்கலே" என்று நீங்கள் சொன்னதையே யோசித்துக்கொண்டிருந்தேன். இடது கையை தொண்டையைச் சுற்றிப் பின்னால் கொண்டுபோகும்போது நான் எப்படியிருந்திருப்பேன். அசிங்கமாகவும் மிகுந்த வேதனை கலந்தும்தான் என்முகம் இருந்திருக்கும். தனிமை என்றெல்லாம் பெரிய வார்த்தை சொல்லமாட்டேன், பரிதாபமாய், கேவலமாய், தன் சின்னஞ்சிறு ஆத்மாவை தற்காத்துக் கொள்வதைத் தவிர வேறொன்றும் அறியாத பெண்ணைப் போல் நின்றிருப்பேன். என் முகபாவம் நீங்கள் சொன்னது போலவேதான் இருந்திருக்கும். விளக்கெண்ணெய் குடித்த மாதிரி. நமக்கிடையில் இருந்த இடைவெளியை, நான் என்னை முழுமையாக உங்களிடம் ஒப்படைக்க வில்லை என்பதைத்தான் அது காட்டியதா? அப்படி என் மச்சத்தைத் தொட்டு கனவுலகத்தில் ஆழ்ந்துவிடுகிற போது, என் உண்மையான உணர்ச்சிகள் என் முகத்தில் பிரவகித்து விடுகிறதா? என் குழந்தைப் பிராயத்திலிருந்தே நான் இப்படித்தான் செய்து வந்திருக்கிறேனே.ஆனால், உங்களுக்கு ஏற்கனவே என்னிடம் அதிருப்தி இருப்பதால்தான் இந்தச் சின்னப் பழக்கம் இவ்வளவு பெரிசாய்ப் படுகிறது. என்னால் நீங்கள் சந்தோஷப் பட்டிருந்தால் லேசாய்ச் சிரித்துவிட்டு, இதை மறந்தே போயிருப்பீர்கள்.

இப்படி நினைப்பதுதான் மகா பயங்கரமாய் இருந்தது. திடீரென்று, இந்தப் பழக்கத்தை விரும்பி ரசிக்கும் ஆண்களும் இருக்கக்கூடும் என்று எனக்குத் தோன்றியபோது நான் நடுங்கியே விட்டேன்.

என்னிடம் உங்களுக்குள்ள காதலால்தான் இதை முதலில் கவனித்தீர்கள்; அதுபற்றி இப்போது கூட எனக்குச் சந்தேகமில்லை. ஆனால் இது மாதிரியான சிறு எரிச்சல்கள்தான், பிறகு வளர்ந்து விருட்சமாகி, திருமணத்தின் ஆதாரத்தையே பிளக்கக் கிளம்பி விடுகிறது. ஒரு உண்மையான கணவன்- மனைவிக்கு அடுத்தவரின் பலவீனம் பெரிசாய்த் தெரிவதில்லை. ஆனால் எடுத்ததுக்கெல்லாம் மண்டைய உடைத்துக் கொள்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதற்காக, அனுசரித்துப் போகிறவர்கள் எல்லாம் உன்னதமான காதலர்கள் என்றோ, அனுசரிக்க முடியாதவர்கள் பரஸ்பரம் அன்பில்லாதவர்கள் என்றோ நான் சொல்லமாட்டேன்.

என் யோசனைக்கு எப்படிப்படுகிறதென்றால் (யோசிப்பதை மட்டும் என்னால் நிறுத்தவே முடியாது!) நீங்கள் இந்தப் பழக்கத்தைக் கண்டுகொள்ளாமல் விட்டிருக்கலாம்.

நீங்களோ, என்னை அடிக்க வந்தீர்கள், உதைத்தீர்கள். நான் அழுதேன். ஏன் இப்படி முரட்டுத் தனமாக நடந்து கொள்கிறீர்கள் என்று கேட்டேன். ஒரு மச்சத்தைத் தொட்டதுக்காக என்னை இந்தபாடு படுத்தணுமா என்று கேட்டேன். அதெல்லாம் மேலுக்குத்தான்.

"இதை எப்படித்தான் நிறுத்தறது?" என்று நடுங்கும் குரலில் கேட்டீர்கள். உங்கள் வேதனை எனக்குப் புரிந்தப்படியால் நீங்கள் நடந்துகொண்ட விதம் குறித்து



படிப்பகம்

www.padippakam.com

நான் வருத்தமேதும் படவில்லை.

"நான் இதை யாரிடமாவது சொன்னால் எனக்கு முரட்டுப் புருஷன் வாய்த்திருக்கிறான் என்று சந்தேகமில்லாமல் நம்பியிருப்பார்கள். ஆனாலும் ஒரு சின்னஞ்சிறு விஷயத்துக்காக நமக்கிடையில் பெரும் மனத் தாங்கல் வந்திருந்த சமயத்தில் நீங்கள் என்னை அடித்தது எனக்கு உடனடி ஆசுவாசம் தரவே செய்தது.

"நான் எப்பவுமே அதைத்தொடமாட்டேன் இனி. என் கையை வேணாக் கட்டிப் போட்ருங்க."

நான் என் கைகளை ஒன்றாக்கி உங்கள் நெஞ்சுக்கு நேரே நீட்டினேன். நான் அப்படி நீட்டினது என்னையே, என் சகலத்தையுமே, உங்களிடம் ஒப்படைத்துவிடுவது மாதிரித்தான் இருந்தது.

நீங்கள் குழம்பின மாதிரித் தோன்றினீர்கள். உங்கள் கோபம் உங்களைத் தடுமாறவைத்து உணர்ச்சியின் வீச்சில் அடித்துக்கொண்டு போய்விட்டமாதிரி இருந்தது. பாவாடை நாடாவை எடுத்து என் கைகளைக் கட்டினீர்கள்.

கட்டிப்போட்டிருந்த கைகளால், கலைந்த என் தலைமயிரை நான் கோதினபோது நீங்கள் பார்த்த அந்தப் பார்வை எனக்கு எத்தனை சந்தோஷமாய் இருந்தது. இந்தப் பழக்கம் இன்னையோட ஒழிஞ்சுது என்று நினைத்துக்கொண்டேன். மறுபடியும் மச்சத்தைத் தொடுவது மிக அபாயகரமானதுதான்.

ஆனால் பழையபடி அந்தப் பழக்கம் என்னைத் தொற்றிக் கொண்டதுதான், என் மேல் உங்களுக்கிருந்த பிரியம் முழுக்க மறைந்ததற்குக் காரணமா? 'நீ உன் இஷ்டப்படியே நடந்துக்க. எக்கேடும் கெட்டு ஒழி' என்பதை நான் உணரும்படி செய்வதுதான் உங்கள் நோக்கமா?

அதற்கப்புறம் நான் மச்சத்தை நிமிண்டும் போதெல்லாம் நீங்கள் கவனிக்காததுபோல் இருந்துவிடுவீர்கள்; ஏதும் சொல்லவும் மாட்டீர்கள்.

அப்போதுதான் அந்த விநோதம் நிகழ்ந்துவிட்டது. உதையும் வசவும் குணப்படுத்திவிட முடியாத அந்தப் பழக்கம் எப்படிக் காணாமல்போனது. முயற்சிகள் அத்தனையும் பலனளிக்காமல் தோற்றுப்போன வேளையில் அது தானாகவே போய்விட்டது.

"கவனிச்சீங்களா, நான் இப்பல்லாம் மச்சத்தைத் தொடுறதே இல்லே". அப்போதுதான் அந்த விஷயத்தையே கண்டுபிடித்தவள் மாதிரி நான் உங்களிடம் சொன்னேன். நீங்களோ, அழுத்தமாக 'உம்' கொட்டி விட்டு அதைப்பற்றி சற்றும் கவலையில்லாதவர் போல் இருந்துவிட்டீர்கள். அந்தப் பழக்கம் உங்களுக்கு இவ்வளவு சாமான்யமானது என்றால், என்னை ஏன் அவ்வளவு திட்டணும் என்று கேட்கத்தான் ஆசைப்பட்டேன். ஆனால், இதை இவ்வளவு லேசா நிறுத்திட முடியும்னா, ஏன் முன்னாடியே நிறுத்தியிருக்கக் கூடாது என்று உங்களுக்கும் கேட்கத் தோன்றியிருக்கும். நீங்கள் ஒரு வார்த்தையும் பேசவில்லை. "அந்தப் பழக்கம் ஒரு விஷயமேயில்லை; மருந்தும் இல்லை. விஷமும் இல்லை. அதைத் தொடர்ந்து பண்ணினால்தான் உனக்கு சந்தோஷமென்றால், தாராளமாகச் செய்" என்று சொல்வதாகவே இருந்தது உங்கள் முகபாவம். எனக்கு ஏமாற்றமாய் இருந்தது.

உங்களைக் கடுப்படிப்பதற்காகவே, உங்கள் கண் முன்னாலேயே என் மச்சத்தை உடனே நிமிண்டவேண்டும் என்று தோன்றியது. ஆனால், என்ன ஆச்சரியம்! என் கை ஒத்துழைக்க மறுத்தது.

நான் மறுபடி தனியளாய் உணர்ந்தேன். ஆத்திரம் வந்தது. நீங்கள் இல்லாத சமயத்திலும் அதைத் தொடவேண்டும் என்று நினைத்தேன். ஆனாலும், ஏனோ அது அருவருப்பான கேவலமான சமாச்சாரமாய்த் தோன்றியது. என் கை வர மறுத்தது.

உதட்டைக் கடித்தபடி தலையைக் குனிந்து கொண்டேன். "ஒன் மச்சத்துக்கு என்ன ஆச்சு" என்று நீங்கள் கேட்பதற்காகக் காத்திருந்தேன். ஆனால், இந்தச் சம்பவத்துக்குப் பிறகு 'மச்சம்' என்ற வார்த்தையே நம் சம்பாஷணையில் இடம் பெறமால் போனது. அந்த வார்த்தை மட்டுமல்ல, வேறு சில காரியங்களும் மறைந்து போயின.

நீங்கள் என்னைத்திட்டின சமயங்களிலெல்லாம் நான் எதுவுமே செய்யாமலிருந்து விட்டேன், என்ன ஒரு உதவாக்கரைப் பெண்பிள்ளை நான்!

என் வீட்டுக்கு வந்தபோது என் அம்மாவுடன் குளிக்க நேர்ந்தது.

"நீ முன்னமாதிரி அழகா இல்ல ஸயோகோ, அதுக்குள்ளயும் வயசாயிடுச்சு உனக்கு" என்றாள் அம்மா.

நான் அதிர்ந்து போனேன். அம்மா வழக்கம் போலவே பறங்கிப் பழமாய், பளபளப்புடன்தான் இருந்தாள். "அந்த மச்சம் கூட எவ்வளவு அழகாயிருக்கும்." அந்த மச்சத்தால் நான் பட்ட கஷ்டத்தை எப்படிச் சொல்வது அம்மாவிடம்? நான் சொன்னேன்:

"டாக்டர்டப்போனா அந்த மச்சத்தை லேசா எடுத்துடுவாராமே."

"டாக்டர்டயா? எதுக்கு? அப்புறம் அந்த இடம் தழும்பால்ல ஆயிடும்."

அம்மாதான் எவ்வளவு நிதானமாக, சரளமாக இருக்கிறாள். "நாங்க நெனச்சு நெனச்சு சிரிப்போம். கல்யாணமாயி இவ்வளவு நாள் கழிச்சும் ஸயோகோ அந்த மச்சத்தைத் திருகிக் கிட்டுத்தான் இருப்பாள் என்று சொல்லிச் சிரிப்போம்."

"நான் திருகிக்கிட்டுத்தான் இருந்தேன்."

"நாங்க நினைச்சது சரித்தான் பின்னே."

"மோசமான பழக்கம்மா அது. நான் எப்ப அப்படிப் பண்ண ஆரம்பிச்சேன்."

"கொழந்தைகளுக்கு எப்ப மச்சம் உண்டாகுதுன்னு சொல்ல முடியுமா? சில கொழந்தைகளுக்குப் பாரு, மச்சமே இருக்காது."

"வாஸ்தவம்தான். என் கொழந்தைகளுக்கும் மச்சமே இல்லை."

"ஆமா, ஆனா கொழந்தைகள் வளர வளர மச்சமும் உண்டாயிடும். அப்புறம் மறையவே செய்யாது. ஒன் மச்சம் அளவு பெரிசாயிருக்காதுதான், உனக்கும் சின்ன வயசிலேயே வந்திருக்கனும்" அம்மா என் தோள்பட்டையைப் பார்த்துச் சிரித்தாள்.

நான் குழந்தையாயிருந்தப்போது அம்மாவும் என் சகோதரிக்கும் அந்த மச்சத்தைத் தொட்டுக் குறுகுறுக்க வைத்தது ஞாபகம் வந்தது. அப்போதெல்லாம் அந்த மச்சம் சிறிய அழகான புள்ளியாய் இருக்கும். பார்க்கப்போனால், எனக்கு இந்தப் பழக்கம் வந்ததற்கே அவர்கள் தான் காரணம்.

படுக்கையில் படுத்து மச்சத்தை நிமிண்டியபடி யோசிக்க ஆரம்பித்தேன். நான் குழந்தையாய் இருந்த போது, இளம்பெண்ணாய் இருந்த போதெல்லாம் அது எப்படி இருந்தது?

அந்த மச்சத்தை நான் கடைசியாய்தொட்டு எத்தனை வருஷங்களாயிற்று என்று ஆச்சர்யமாய் இருந்தது.

நான் பிறந்த இந்த இடத்தில், என் வீட்டில், உங்களிடமிருந்து தொலைவில் இருக்கும் போது என் இஷ்டப்படி அதைத் தொடமுடியும், யாரும் என்னை இப்போது தடுக்கமுடியாது.

ஆனால் அது ரஸிக்கவில்லை. மச்சத்தில் என் விரல்பட்டவுடன் சூடான கண்ணீர் என் கன்னத்தில் வழிகிறது.



படிப்பகம்

www.padippakam.com

என் இளமையையும் குழந்தைப் பருவத்தையும் பற்றித்தான் நினைத்துப் பார்க்க ஆசைப்படுகிறேன். ஆனால்,என் மச்சத்தைத் தொட்டவுடன் என்னால் உங்களை நினைக்க முடிகிறது.

நான் ஒரு மோசமான மனைவி; எனக்கு உரிய சன்மானம் விவாகரத்துத்தான். என் வீட்டில் என் படுக்கையில் இருக்கும்போதும் உங்கள் ஞாபகம் மட்டும்தான் எனக்கு இருக்கமுடியும் என்று முன்னமே ஏன் தெரியாமல் போனது.

ஈரமான என் தலையணையில் முகத்தைப் பதித்துக் கொண்டேன் - கனவில் அந்த மச்சம் வந்தது.

கனவில் வந்த இடம் எது என்று விழித்த பிறகு நினைவில் இல்லை. ஆனால் அங்கே நீங்கள் இருந்தீர்கள். சில பெண்களும் இருந்த மாதிரியிருந்தது. நான் குடித்துக்கொண்டிருந்தேன். ஏதோ ஒன்றுக்காக உங்களிடம் மன்றாடிக் கொண்டிருந்தேன்.

என் பழக்கம் மறுபடி வந்துவிட்டது. என் இடது கையை வழக்கம் போலவே என் முலைகளில் வைத்து அழுத்தியவாறு என் மச்சத்தைத் தொட்டேன். அது, அந்த மச்சம், நான் திருகும்போது என் கையோடு வந்து விட்டது. வலியே இல்லாமல், உலகத்தில் மிகவும் சகஜமான விஷயம்தான் அது என்கிற மாதிரி, அது பிய்ந்து வந்து என்விரல்களுக்குள் இருந்தது. அவித்த அவரை விதையின் ஸ்பரிசத்தை என் விரல்களின் இடுக்கில் உணர்ந்தேன். வக்கிரம் பிடித்த குழந்தை மாதிரி இருந்தேன். நான் அந்த மச்சத்தை உங்கள் மூக்கின் பக்கத்திலிருந்த மச்சத்துக்குள் வைத்துக் கொள்ள வேண்டினேன்.

என் மச்சத்தை உங்கள் மேல் எறிந்தேன். கத்தினேன். அலறினேன். உங்கள் கையைப் பிடித்து இழுத்தேன். உங்கள் மார்பில் தொங்கிக் கெஞ்சினேன்.

கனவு கலைந்து விழித்தபோது என் தலையணை நனைந்திருந்தது. நான் இன்னமும் அழுது கொண்டிருந்தேன்.

முழுக்க முழுக்க களைப்பாய் உணர்ந்தேன். ரொம்ப லேசாகிவிட்ட மாதிரி - பெரிய சுமையை இறக்கி வைத்து விட்டதுபோல - நிம்மதியாய் இருந்தது.

அந்த மச்சம் உண்மையிலேயே பிய்ந்து வந்து விட்டதா என்று நினைத்த போது சிரிப்பு வந்து விட்டது. அது இருப்பதைத் தொட்டுப் பார்த்துத் தெரிந்து கொள்ள ரொம்ப கஷ்டப்பட்டுப் போனேன்.

அந்த மச்சத்தின் கதை இவ்வளவுதான்.

அந்தக் கறுத்த அவரைவிதை இன்னமும் என் விரல்களுக்கிடையில் இருக்கிற மாதிரித் தான் உணர்கிறேன்.

உங்கள் மூக்கருகில் இருக்கும் அந்த சிறிய மச்சம் பற்றி நான் அதிகம் யோசித்ததில்லை. பேசினதும் கிடையாது. என்றாலும் அது எப்போதும் என் மனதில் இருந்து வந்திருக்க வேண்டும். என் மச்சத்தை உங்களுடையதில் வைத்து உங்கள் மச்சம் பெரிதாக வீங்கினால் அது எத்தனை பெரிய தமாஷாய் இருந்திருக்கும்! அதேபோல என் மச்சம் பற்றி நீங்களும் கனவு கண்டிருந்தால் நான் எவ்வளவு சந்தோஷப் பட்டிருப்பேன்.

ஒரு விஷயம் மறந்து போய்விட்டது.

"அதுதான் எனக்குப் பிடிக்கலே" என்று சொன்னதும் கூட என் மேலிருந்த அன்பின் அடையாளம் என்றுதான் நான் நம்பினேன். நான் மச்சத்தைத் தொடும்போது என் மனதின் அசிங்கம் அத்தனையும் வெளியில் வந்துக் கொட்டி விடுவதாய்த்தான் பட்டது.

என் அம்மாவும் சகோதரிகளும் செல்லம் கொடுத்ததால்தான் இந்தப் பழக்கம் வந்து சேர்ந்தது என்று சொன்னால் போதாதோ? அம்மாவிடம் கேட்டேன்:

"முந்தியெல்லாம் நீகூடத் திட்டுவேல்லம்மா- மச்சத்தை நிமிண்டினா ?"

"ஆமா, கொஞ்ச நாள் முந்திக் கூட திட்டினேனே!"

"ஏன் திட்டினே ?"

"ஏன்னா! கெட்ட பழக்கம், அதுனாலதான்."

"அந்தப் பழக்கம் எப்படித் தோணுச்சு உனக்கு ?"

"அதுவா" அம்மா தலையை ஆட்டிக் கொண்டாள். "அதைப் பார்க்க நல்லாயில்லே."

"ஆனா, நான் அப்படிப் பண்ணும்போது உனக்கு எப்படி இருந்தது ? வருத்தமாவா ?அசிங்கமாவா ?"

"அதைப்பத்தி அதிகம் யோசிக்கலே. நீயே அதை விட்டுருவேன்னு நெனச்சேன். தூங்கி வழியிற மாதிரி மூஞ்சிய வச்சிக்கிட்டு."

"உனக்கு எரிச்சலா இருந்துச்சா ?"

"ஆமா, பார்க்கக் கொஞ்சம் கஷ்டமாத்தான் இருந்துச்சு."

"அப்ப நீங்க எல்லாரும் என் மச்சத்தைத் தொட்டது கிண்டலுக்குத்தானா ?"

"அப்புறம் வேற எதுக்காம் ?"

அப்படியென்றால் எனக்கு வேண்டியவர்களின் அன்பை ஞாபகப்படுத்திக் கொள்ளும் விதமாய்த் தானே நான் மச்சத்தைத் திருகியிருப்பேன் ? இதைத் தான் நான் உங்களுக்குச் சொல்லியாக வேண்டும். நீங்கள் ஆரம்பம் முதல் கடைசிவரை என் மச்சத்தைத் தவறாய்தானே புரிந்துகொண்டீர்கள்.

நான் உங்களோடு இருந்த போது வேறு யாரைப் பற்றியாவது நினைத்திருப்பேனா ? வார்த்தையில் சொல்லி விளக்கிவிட முடியாத அன்பின் விளைவுதான் நீங்கள் வெறுத்த அந்தப் பழக்கம் என்பது ஒரு விந்தைதானே!

என்னுடைய அந்தப் பழக்கம் ஒரு சின்ன விஷயம். அதற்காக நான் சமாதானங்கள் சொல்ல வரவில்லை.

ஆனால் என்னை, ஒரு மோசமான மனைவியாக்கிய சகலமும் அதிலிருந்து தானே ஆரம்பித்தது ? அவையெல்லாமே, எனக்கு உங்களிடமுள்ள காதலை வெளிப்படுத்தும் முயற்சிகள்தானே. அவற்றை நீங்கள் உணர மறுத்தது தானே இன்றைய இந்த நிலைக்குக் காரணம் ?

இதை எழுதும் போதும், நான் தவறு செய்துவிட்ட ஒரு மோசமான மனைவிதானா என்று என்னுள் சந்தேகம் வரத்தான் செய்கிறது. இருந்தாலும் இதையெல்லாம் நான் உங்களிடம் சொல்லித்தான் ஆகவேண்டும்.

தமிழில்: ஜே. வசந்தன்


**திரட்டு**

(காலாண்டு இதழ்)

ஆசிரியர்: நா. தர்மராஜன் எம்.ஏ.

சிறுகதை, சமூக-ஆய்வுக் கட்டுரைகள், புத்தகச் சுருக்கம் இடம் பெறும்.
ஒவ்வொரு இதழிலும் ஜீவாவைப் பற்றி ஒரு கட்டுரை பிரசுரிக்கப்படும்.
விலை ரூ. 10 ஆண்டு சந்தா ரூ. 40


முகவரி : 'திரட்டு', 41, முத்துசாமி நகர், சிவகங்கை 623 560 (ப.மு.தே.மாவட்டம்)




படிப்பகம்

www.padippakam.com

# ஏழு கடல் தாண்டி



இனவாத அழித்தொழிப்பினூடே ஐரோப்பாவை நோக்கி புலம் பெயர்ந்து சென்ற ஈழத் தமிழர்கள், வரலாறு அவர்கள்மேல் தொடுத்திருக்கும் சவால்களை தீவிரத்தோடு எதிர்கொண்டு வருகின்றனர். கடும் அபாயத்திற்குள்ளாகியிருக்கும் தமது அரசியல், பொருளியல், கலாச்சார அடையாளங்களை மீட்டுக் கொள்ளவும் அவ்வடையாளங்களை விடுதலைப் போரின் வெப்பத்தில் புத்துருவாக்கம் செய்து கொள்ளவும் சிந்தாந்த அரசியல் இலக்கியச் செயல்பாடுகளை முன்னெடுக்கின்றனர். ஐரோப்பிய நாடுகளிலிருந்து இக்குரல்களைத் தாங்கி நிறைய இதழ்கள் வெளிவருகின்றன. அவற்றின் வெளிப்பாட்டு முறையும் மொழியும் ஒரு தனித்துவமான புதிய தமிழ் இதழியல் முறையாகவும் வளர்ந்து வருகின்றன. ஈழத் தமிழர்கள் மீதான நமது வறட்டு அனுதாபங்களை ஒதுக்கி வைத்துவிட்டு அவர்களுடன் மரியாதையான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான நிர்ப்பந்தங்களை இவ்விதழ்கள் ஏற்படுத்துகின்றன. அவர்கள் தமிழ்ச் சிறுபத்திரிகைகள் மீது காட்டும் ஆர்வத்தையும் அக்கறையையும் நாம் அவர்களின் இதழ்கள் மீது காட்டவில்லை என்றே தோன்றுகிறது. புலம்பெயர்ந்த தமிழர்களின் கலாச்சாரத் தனிமையைப் பகிர்ந்து கொள்ளவும், விமர்சன பூர்வமான பரிமாற்றங்கள் வழியே பரஸ்பரம் கற்றுக்கொள்ளவும் காலச்சுவடு முயற்சி எடுத்துக்கொள்ள விரும்புகிறது. அவர்கள் நடத்துகிற இதழ்களையும், பிற வெளியீடுகளையும் தொடர்ந்து இப்பகுதியில் பதிவு செய்யவும், அவற்றின் சிறப்பான பகுதிகளை மறுபிரசுரம் செய்யவும் நினைக்கிறோம். புலம்பெயர்ந்த நாடுகளின் தமிழ் கலாச்சாரவாதிகள் தமது இதழ்களையும் வெளியீடுகளையும் அனுப்புவதுடன் தாங்கள் ஏற்பாடு செய்கிற 'அரங்குகள்' பற்றிய பதிவுகளையும் அனுப்பி உதவ வேண்டும்.

**1. மீட்சி**

தமிழ் தகவல் நடுவத்தின் மாதாந்த வெளியீடு
10 & 11 பெப்ரவரி 1995 இதழில் :

- பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கோருபவர்களின் இன்றைய நிலை
- பிரிவினை, தேசிய கெரில்லா இயக்கங்கள், சமாதானம் - Adrian Wijemanne
- ஐரோப்பாவில் அகதிப் புகலிடம்: ஓர் அறிமுகம்
- ரேமாண்ட் வில்லியம்ஸ்: ஒரு அறிமுகம் - யமுனா ராஜேந்திரன்
- போர் அல்லது முரண்பாடு விளைவுகளின் உண்மைக் கணிப்பு
- புத்தக மதிப்புரைகள்

சந்தா (12 இதழ்கள்) 12 Pounds

முகவரி : TAMIL INFORMATION CENTRE,
THAMIL HOUSE, 720 ROMFORD ROAD,
LONDON E12 6BT, Tel: 081-514 6390

**2. சக்தி**

பெண்ணிய காலாண்டு இதழ்
3.3.95 இதழில்

- பிரியங்கா : *திரைப்பட விமர்சனம்* - நிவேதிகா
- பாலியல் நிந்தனைச் சொற்களும் ஆணாதிக்கமும் - சி. சிவசேகரம்
- தஸ்லிமா நஸ்றினின் சுய சித்திரக்குறிப்பு
- ஈழத்து பெண்கள் இயக்கம் மற்றும் சக்தி இதழ் பற்றிய ஆய்வு
- பெண்ணிலைவாதம் பற்றிய சில கேள்விகள்
- சிறுகதை மற்றும் கவிதைகள்.

சந்தா : U$ 20 (இலங்கைக்கு இலவசம்)
தபாற்கணக்கிலக்கம் - 0824 038 3676

முகவரி : SAKTI, BOKS 99 OPPSAL, 0619 OSLO 6
NORWAY.

மருத்துவம், பொறியியல், கம்ப்யூட்டர், சட்ட புத்தகங்கள்,
சிறந்த ஆங்கில தமிழ் நாவல்கள் குறிப்பாக க்ரியா, அன்னம்,
காவ்யா முதலிய பதிப்பகங்களின் புத்தகங்களும் கிடைக்கும்.

**ஸ்டாண்டர்டு புக் ஹவுஸ்**
55 ஏ, மேல ரதவீதி,
(தலைமை தபால் நிலையம் அருகில்)
நாகர்கோவில்-629 001.
போன் : 31608



படிப்பகம்

## விலக்கப்பட்ட பண்டம்

www.padippakam.com

நான் ஆசியப்பெண்
சமூகநிலையின் கீழ்மட்டத்திலிருப்பவள்
என்னையொத்த பிறரைப் போன்றே
ஒடுக்கப்படுபவள்
நான் வேட்டையாடப்படும் திமிங்கலம்.

வெள்ளை நிறத்தவன் சொன்னான் :
"எமக்கு ஒரு ஆசியப்பெண் தேவைப்படுகிறாள்
எமக்கு ஆசியத் தொலைநோக்குடன்
பார்க்க ஒரு பெண் வேண்டும்
நாங்கள் எப்போதும் உங்களை
கலந்தாலோசிக்கவில்லை.

நீங்கள் எங்கள்
நோக்கங்களை ஆதரிப்பீர்கள் என்று நம்புகிறோம்."

நான் ஆசியப்பெண்
எனது குழந்தைகளை மேல்நிலைக்குக் கொண்டுவர
ஆசைப்படுகிறவள்
பெருந்தன்மை நிரம்பிவழிபவள்
எமது ஆண்களுக்கு உதவத் தயாராயிருப்பவள்.

ஆனாலும் இப்போதும்
கழித்தொதுக்கப்பட்ட பண்டம்.

நான் ஆசியப்பெண்
எப்போதும் கொடுத்துக்கொண்டே இருப்பவள்
ஒருபோதும் திரும்பப் பெறாதவள்.
நான் வேட்டையாடப்படும் திமிங்கலம்.
என்னை இவர்கள் ஏமாற்றுகிறார்கள்.

கறுப்பு நிறத்து ஆண்கள் சொன்னார்கள் :
ஏன் இவ்வாறெல்லாம் இருக்கிறதென்று
எங்களுக்குத் தெரியும்.
ஆகவே நீ இங்கே வந்து நான் சொன்னதைத்
திரும்பச் சொல்கிறாயா ?
"எனது எதிரொலியாக இரு"
"எனது பெருமையை வளர்த்துச் செல்"
"எனது தானென்னும் நினைப்பை ஊதிப் பெருக்கு"
"எனது எஜமானனாக இரு"
"ஏணியில் மேலேறுவதற்கு உதவிசெய்"

ஆனாலும் இப்போதும் எனது முதுகைத்
தனது உயர்ச்சிகளுக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்
இவர்.
இப்போதும் நான்
கழித்தொதுக்கப்பட்ட பண்டந்தான்!

உங்களது வலிகளுக்கு போக்கிடம் நான்
எனது இதயத்தின் ஆசையை ஒடுக்கி வாழ்கிறேன்
உமது இமைகளை அழுத்திவிடுகிறேன்
உமது நரம்புகளை சமனப்படுத்துகிறேன்
எனது பலத்தை உமக்குத் தருகிறேன்.

இரவின் மௌனத்தில்
எனது எல்லையற்ற வெளிக்கு நான் போகிறேன்
வலிக்கும் உடலில் மௌன நினைவுகளாக
எனது இதயம் விம்முகிறது.

நான் ஒரு சமுத்திரம்
எனது விலையைக் கவனியுங்கள்
எனக்குள்ளிருக்கும்
வெகுமதியைப் பாருங்கள்
ஆனாலும் இப்போதும்
நான் ஒரு விலக்கப்பட்ட பண்டம்.

நான் ஆசியா
எனது இடத்தை நான் பிரகடனப்படுத்துகிறேன்.
நான் என்னைக் கண்டுகொண்டேன்
நான் ஆபிரிக்கா
இனி நீங்கள் என்னை உபயோகப்படுத்திக்கொள்ள
முடியாது.

நான் ஆசியப்பெண்
சமுத்திரத்தைப் போன்று விசுவாசமானவள்
எனது கரையை எப்போதும் நான்
அடைந்தே தீருவேன்
என்னை ஜாக்கிரதையாகக் கையாளுங்கள்.
இனி ஒருபோதும்
விலக்கப்பட்டவள் இல்லை நான்.

மிஸ்பா கான்

(மிஸ்பா கான் கென்யாவைச் சேர்ந்த ஆசியப்பெண்; ஓர் ஆண்குழந்தைக்குத் தாய்; கணக்காளர்; ஆசிரியர்; சமூக சேவகி; நிறவெறி எதிர்ப்பாளர்; தற்பொழுது லண்டனில் வாழ்ந்து வருகிறார்.)





படிப்பகம்

www.padippakam.com



## ஒரு துளி இரத்தத்துக்கான அலைதல்

எனது வேர்களுள்ள நாட்டில்
புதைப்பது ஒரு சடங்கு அல்ல
கல்லறையும் இல்லை
மரத்தைப்போல் இறந்தவர் எரிக்கப்படுவர்
கண்ணிலிருந்து மறைவர்
நினைவுகள் என்றென்றும் இருக்கும்

நான் இப்போது ஒரு புலம்பெயர்ந்தவள்
தேர்ந்துகொண்ட நாட்டில் இருப்பவள்
புதையல் போல புதைக்கப்பட்டு இங்கு
பாதுகாக்கப்படுகிறார்கள்
இறந்தவரின் நினைவுகளை என்றும் கொண்டிருக்க

இன்று நான் இந்த அன்னியதேசத்தில்
இரண்டடி மண்
உயிருடன் புதைக்கப் பெற்றிருக்கிறேன்

இறந்தவர்கள் வாழ்வுக்கு
இன்னும் அர்த்தம் தந்துகொண்டிருக்கிற
அந்த நினைவுகளுடன் புதைக்கப்பட
கேள்வி அது எப்போது என்பதுதான்?

இன்றிலிருந்து நான்

இந்தக் கல்லறையில் பாதி வாழ்வேன்
இந்த பூமியின்மீது பாதி வாழ்வேன்
எனது சொந்தமாயிருக்கிற இக்கல்லறையில்
வாழ்வேன்
இந்த பூமியில் நானறிய வாழமுடியாது.

பாதி அம்மணமாய் பாதி உயிருடன்
பாதி மூச்சுடன்
பாதி ஆன்மாவுடன்
முழுக்கவும் நான் ஜீவித்திருப்பேன்.

இந்தக் கல்லறை
எந்தவொரு பிற கல்லறையைப் போலவும்
இருக்காது.

**கைலாஸ் புரி**

## தீக்கொழுந்து : நிறவெறி எதிர்ப்புக் கவிதைகளும் ஓவியங்களும்

ஐரோப்பா/அமெரிக்க நாடுகளில் வாழும் புலம்பெயர் சமூகங்கள் தமது அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் வலிதரும் அனுபவம் நிறவெறிக் கொடுமைகள் சார்ந்தது.

நடைபாதைகளில் பேருந்துகளில் வேலையிடங்களில் அரசு அலுவலகங்கள் என எங்கும் புரையோடிப் போயிருப்பது வெள்ளை நிறவெறி. எமது கலாச்சாரத்தில் தீண்டத்தகாத மக்களுக்கு எதிரான துவேசத்திற்கு நிகரான கொடுமை.

நிறுவனமயப்படுத்தப்பட்ட இந்த நிறவெறி (Institutionalised Racism) மனப்பான்மையை எதிர்த்துக் குரல் கொடுக்கும் கலைஞர்கள் நாடகாசிரியர் ஹெரால்ட் பின்ட்டரிலிருந்து (Herold Pinter) நாவலாசிரியர் ஸல்மன் ருஸ்டி (Salman Rusdie) வரை இருக்கிறார்கள். அறிவாளிகளில் மார்க்ஸீய அழகியலாளர் டெர்ரி ஈகிள்டனிலிருந்து (Terry Eagelton), Race and Class மும்மாத சித்தாந்த இதழின் ஆசிரியர் சிவானந்தன் வரை இருக்கிறார்கள். சிவானந்தன் இலங்கைத் தமிழர்.

பத்திரிக்கைகளில் New Left Review, Radical Philosophy, New Statesman and Society இல் இருந்து Third Text வரை இருக்கின்றன. ஓவியங்களும் கவிதைகளும் தொகுப்புகளாக வெளியாகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

இங்கு கவிதைகளின் கருப்பொருள் சார்ந்து பிரத்யேகமாக இடம்பெறும் ஓவியங்கள் லண்டனில் வாழும் இலங்கைத் தமிழர் கே. கிருஷ்ணராஜா வரைந்தவை.

○

திரு. கே. கிருஷ்ணராஜா 25-09-1950இல் பருத்தித்துறையில் பிறந்தவர். யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு பல்கலைக் கழகங்களில் அழகியலும் சிற்பமும் ஓவியமும் பயின்றவர். ஈழத்தில் நவீன ஓவியத்திற்கு வித்திட்ட ஓவியர் மாற்குவின் மாணவர்.

மனித உரிமைகள் அமைப்பு (Amnesty International) இலண்டனில் நடத்திய மனித உரிமைக் கல்வி மற்றும் சர்வதேச வழிகாட்டு நெறிகள் தொடர்பான கருத்தரங்கை ஒட்டி லண்டனில் 1991 மே 12 இவரது ஓவியக் கண்காட்சியொன்று நடைபெற்றது. அதே ஆண்டு அவைக்காற்றுக் கழகத்துடன் இணைந்து மற்றொரு ஓவியக் கண்காட்சி நடைபெற்றது. இவரது 'ஈழத்தமிழர் வாழ்வு' பற்றிய 25 ஓவியங்கள் கண்காட்சியாக வைக்கப்பட்டது.

இவர் சிற்பக் கலைஞரும் நல்ல புகைப்படக் கலைஞரும் ஆவார். இவரது ஓவியங்கள் பற்றிக் குறிப்பிட வந்த ஈழக்கலை விமர்சகர் காயத்திரி கொன்ஸ்டிரைன் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

'நவீன ஓவியம் என்பது காட்சி நிலைப்பட்ட பிரதிநிதித்துவம் என்ற தளத்தினின்று, கருத்து நிலைப்பட்ட பிரதிநிதித்துவம் என்ற தளத்திற்கு இடம் பெயர்ந்துள்ளது.

ஈழத் தமிழர்களின் ஓவியக் கலையின் பின்னடைவை நிறைவு செய்யக் கூடிய திறமையும் மனப்பலமும் கொண்டவர்களில் கிருஷ்ணராஜாவும் ஒருவர் என்பதில் எமக்கு எவ்வித சந்தேகமுமில்லை.'

கிருஷ்ண ராஜா நிறவெறி எதிர்ப்புப் பேனர்கள் சுவரொட்டிகள் விநியோக துண்டுப் பிரசுரங்கள் என தமது ஓவியங்கள் மூலம் நிறவெறி எதிர்ப்புக்குரலை முன் வைக்கிறார்.

சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளில் மட்டும் ஆசிய ஆப்ரிக்கர்கள் 10 பேர் நிறவெறியர்களால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் இலங்கைத் தமிழர் சகிதரனும் ஒருவர்.

இந்த ஓவியங்களும் கவிதைகளும் நிறவெறிக்கெதிரான எதிர்ப்புணர்வையும் புலம்பெயர் நாட்டில் ஆசியப் பெண்களின் வாழ்நிலை அனுபவங்களையும் முன் வைக்கின்றன.

○

1991 ஆம் ஆண்டு லண்டனில் உள்ள Crocus பதிப்பகம் வெளியிட்டுள்ள ஆங்கில/உருதுக் கவிதைகளின் தொகுப்பிலிருந்து இக்கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இத்தொகுப்பின் ஆங்கிலப் பெயர் Flame (தீக்கொழுந்து). இந்த கவிதைகள் எழுப்பும் அனுபவங்கள் எங்களின் அன்றாட வாழ்வனுபவங்களை படைப்புக் களத்தில் மீள்நோக்குபவை.

தாய்மண் குறித்த ஏக்கம், வந்த இடத்தில் எதிர்கொள்ளும் நிறவெறி அவலம், தனது அடையாளத்தைப் பேணவேண்டும் எனும் ஆர்வம், எதிர்ப்புணர்ச்சி போன்றவைகளை இவை முன்வைக்கின்றன.

இக்கவிதைகளை மொழிபெயர்த்தபோதும் மீள் அனுபவமாக்கிப் பார்க்கும்போதும், எனக்கு முதலில் நினைவில் வந்தவள் எனது நாலு வயது பெண் குழந்தை ரோஸா நிர்மலாதான்.


அவளுக்கு இக்கவிதைகள் சமர்ப்பணம்.

அக்குழந்தை தனது தேர்வின்றி இந்நாட்டில் பிறந்துவிட்டவள்.

அவ்வாறாய்ப் பிறந்துவிட்ட எம் சந்ததி அனைவர்க்கும் இக்கவிதைகள் சமர்ப்பணம்.

யமுனா ராஜேந்திரன்

*(யமுனா ராஜேந்திரன் மொழிபெயர்த்துள்ள இரு கவிதைகள் காலச்சுவடு 9இல் பிரசுரிக்கப்பட்டுள்ளன)*



## விழித்தெழுதல்

ஒரு அழைப்பிதழைப் போன்று
எங்கும் பரவியுள்ளது வெறுமை
நீ இல்லாத இக்கணங்களில்
நண்பர்களும் உறவினர்களும் வந்து
வீட்டை நிரப்ப முயற்சிக்கின்றனர்
அறைகளோ இன்னும் காலியாகவே உள்ளன.

நான் நாற்காலியில் அமர்ந்திருக்கும்போது
கதகதப்பான உன் மூச்சுக் காற்று
என் தோளின் மீது படிகிறது.
படுக்கைக்கு ஏறிச் செல்லும்போது
கண்ணுக்குப் புலப்படா உன்
பிரிவினூடே நடக்கிறேன்
கீழ்த் தளத்தில்
தங்கியுள்ள மற்றவர்களோ
அழுகையால் இந்த மௌனத்தை
மறைக்க முயல்கின்றனர்.

நான் படுக்கையில் விழும்போது
என்னுடைய கருப்பையின்
குளிர்ந்த திரவங்களில் விழுகிறேன்.
அங்கு குழந்தையாகி
யாருக்கும் தீங்கிழைக்காத
ஒரு உயிராக
நிராதரவாக வளர்ந்து வருகிறேன்.

நான் உறங்கினேன்
என்னால் முடிந்ததெல்லாம் அது மட்டுமே
கனவுகளும் கண்டேன்
என்னால் அதை நிறுத்த முடியவில்லை.

ரீட்டா டோன்

தமிழில் : எம். எஸ்தர்

*'ரீட்டா டோன்' அமெரிக்க கறுப்பின பெண் கவிஞர். 1987 ஆம் ஆண்டிற்கான புலிட்சர் பரிசை பெற்றவர். மேற்கண்ட கவிதை Span மார்ச் 94 இதழில் வெளிவந்தது.*



படிப்பகம்

www.padippakam.com

# பாராட்டுக்குரிய இரு தொகுப்பு நூல்கள்

**வ.உ.சி.யும் பாரதியும்; தொகுப்பாசிரியர்: ஆ.இரா. வேங்கடாசலபதி;** மக்கள் வெளியீடு, 24, உனிசு அலி சாகிப் தெரு, எல்லிசு சாலை, சென்னை 600 002; பக்கங்கள் 158; விலை ரூ. 30.



இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வங்கப் பிரிவினை அறிவிக்கப்பட்டதன் விளைவாக எழுந்து, திலகர் முதலான தலைவர்களின் தலைமையில் இயங்கிய இந்தியத் தீவிரவாதத் தேசிய இயக்கம் தமிழ்நாட்டில் வேர் பாய்ச்சுவதற்கு உரமிட்ட மும்மூர்த்திகளாக விளங்கியவர்கள், மகாகவி பாரதி, வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா ஆகிய மூவரும் ஆவர். இவர்கள் மூவரிலும் தமிழில் பாரதியின் நூற்பதிப்புகளும், பாரதியைப் பற்றிய நூல்களுமே அதிகம் வெளிவந்துள்ளன. சொல்லப் போனால், தமிழில் திருக்குறள் பதிப்புகளும், திருக்குறளைப் பற்றிய நூல்களுமே எண்ணிக்கையில் அதிகம் வெளிவந்துள்ளன. திருவள்ளுவரை அடுத்துத் தமிழில் பாரதியின் நூற்பதிப்புகளும், பாரதியைப் பற்றிய நூல்களுமே அதிக அளவில் வெளிவந்துள்ளன எனலாம். ஆயினும், பாரதியின் நூற்பதிப்புகளில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்ட 'ஆய்வுப் பதிப்'பான பாரதியின் கவிதைகள் உட்பட, வெளிவந்துள்ள பல பதிப்புகளும் செம்மையானவை என்று கூறுவதற்கில்லை. அதேபோல் பாரதியைப் பற்றிய பல ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ள போதிலும் இன்னும் ஆய்வு செய்யப்பட வேண்டியவை நிறையவே உள்ளன.

இத்தகைய பாரதி ஆய்வுகளிலும் பல்கலைக்கழகங்களின் பங்கு மிகமிகக் குறைவு. தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள், மற்றும் பாண்டிச்சேரி, கேரளா, டில்லி, கல்கத்தா ஆகிய அனைத்திலும் உள்ள பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில், டாக்டர் பட்டத்துக்காகச் செய்யப்பட்ட பாரதி ஆய்வுகள் மொத்தத்தில் இருபதைக் கூட எட்டவில்லை. இவற்றிலும் புத்தகங்களாக வெளிவந்தவை மிகக் குறைவு. வெளிவந்தவற்றிலும் உருப்படியானவை என்று சொல்லக் கூடியவை மிகமிகக் குறைவு. உண்மையில் பல்கலைக்கழகங்களுக்கு வெளியே உள்ளவர்களில் சிலர்தான் பாரதி ஆய்வுக்கு உருப்படியான பங்காற்றியுள்ளனர்.

மேலும் பாரதி பற்றிய ஆய்வுக்கு அவரது சகாக்களான வ.உ.சி, சிவா ஆகியோரைப் பற்றிய தகவல்களும் ஆவணங்களும் அவசியமானவை. ஆனால் தமிழில் இவர்கள் இருவரையும் பற்றி வெளிவந்துள்ள நூல்கள் சிலவேயாகும். எனவே இவர்களைப் பற்றிய தகவல்களும் ஆவணங்களும் இன்னும் முழுமையாக வெளிக்கொணரப்படவில்லை. இந்நிலையில், பல்கலைக் கழகத்துக்கு வெளியிலிருந்து பணியாற்றிவரும் இளைஞரான ஆ.இரா. வேங்கடாசலபதியின் பணி குறிப்பிடத் தக்கதாகும்; பாராட்டுக்குரியதாகும். குறிப்பாக வ.உ.சி. பற்றிய ஆராய்ச்சியில் பெரிதும் ஈடுபட்டுள்ள இவர், "வ.உ.சி.யின் கடிதங்கள்" என்ற தொகுப்பு நூலையும், வ.உ.சி. கைதானதைத் தொடர்ந்து திருநெல்வேலியில் வெடித்த எழுச்சி குறித்து, "வ.உ.சி.யும் திருநெல்வேலி எழுச்சியும்" என்ற சிறந்த நூலையும் வழங்கியுள்ளார். இப்போது இவர் "வ.உ.சி.யும் பாரதியும்" என்ற தொகுப்பு நூலையும் திறம்பட தொகுத்துத் தந்துள்ளார். நூலின் தலைப்புப் பொருளுக்கேற்றவாறு அதற்கான ஆவணங்களையும் தகவல்களையும் கர்ம சிரத்தையோடு சிரமப்பட்டுச் சேகரித்து அவற்றைத் திரிபின்றி, ஆதாரபூர்வமாக வழங்கும் பாராட்டுக்குரிய பண்பு இவரது நூல்கள் அனைத்திலும் காணப்படுகிறது. விமர்சிக்கப்படுகின்ற இந்த நூலும் இதற்கு ஒரு சான்றாக அமைந்துள்ளது.

நூலில் பாரதியைப் பற்றி வ.உ.சி. எழுதிய நினைவுக் குறிப்புகள், வ.உ.சி. சம்பந்தமாகப் பாரதி பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதிய குறிப்புகள், மற்றும் மதிப்புரைகள், கருத்துப் படங்கள், விளம்பரங்கள் முதலியவை அனைத்தும் தொகுத்தளிக்கப்பட்டுள்ளது. மேலும் 1915இல் 'ஞானபானு' இதழில் பாரதிக்கும் வ..உ.சி.க்கும் இடையே 'தமிழ் எழுத்துகள்' சம்பந்தமாக நடந்த விவாதமும் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது. இவற்றோடு இவர்கள் இருவரோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த மண்டயம் சீனிவாசாசாரியார், இவர்களைப் பற்றி எழுதிய நினைவுக் கட்டுரையும் இடம் பெற்றுள்ளது. இவற்றில் பல இப்போதுதான் முதன்முறையாக நூல்வடிவில் வழங்கப்பட்டுள்ளன என்பது இந்நூலின் தனிச்சிறப்பாகும்.

முன்னர் வெளிவந்த 'வி.ஓ.சி. கண்ட பாரதி' என்ற நூலில், அது இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்பு வெளியிடப்பட்டதால் வ.உ.சி.யின் புதல்வர் வ.உ.சி.சுப்ரமணியம் அதில் 'சில மாற்றங்களை'ச் செய்து வெளியிட்டார் என்ற தகவல் இந்நூலின் மூலம் வெளிப்படுவதோடு, அந்த மாற்றங்கள் களையப் பட்டு, அந்நூல் வ.உ.சி.யின் கையெழுத்தில் உள்ளபடியே இந்நூலில் இடம் பெற்றுள்ளது. மேலும் வ.உ.சி மீது ஆங்கிலேய அரசு தொடுத்த வழக்கில் அவருக்கு ஆதரவாகப் பாரதி சாட்சி கூற முற்பட்டது சம்பந்தமான இரகசியப் போலீஸ் அறிக்கை முதலியனவும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள பகுதிகள் சிலவற்றிற்குத் தொகுப்பாசிரியர் எழுதியுள்ள அடிக்குறிப்புகளும் பல தகவல்களை வழங்குவதாக உள்ளன என்பதும் ஒரு சிறப்பாகும்.

மொத்தத்தில் இந்நூல் பாரதி-வ.உ.சி. ஆய்வாளர்களுக்கும் இவர்களைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள விரும்பும் அக்கறைமிக்க வாசகர்களுக்கும் அரியதொரு சான்றுக் கருவூலமாக விளங்குகிறது.

நூலில் மண்டயம் சீனிவாசாசாரியார் 'இந்திய விடுதலை இயக்கமும் எங்கள் குடும்ப நினைவுகளும்' என்பது பற்றி ஆங்கிலத்தில் எழுதிய கையெழுத்துப் பிரதியைத் தொகுப்பாசிரியர் பார்வையிட்டதாகவும், இந்நூலில் இடம் பெற்றுள்ள அவரது கட்டுரைக்கு அதில் உள்ள செய்திகள் அரண் செய்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நினைவுக் குறிப்புகளையும் இந்நூலில் சேர்த்துக் கொண்டிருக்கலாம். ஆனால் ஏனோ சேர்க்கவில்லை.

○

**பாரதியின் கருத்துப்படங்கள்:இந்தியா 1906-1910;** தொகுப்பாசிரியர்: **ஆ.இரா. வேங்கடாசலபதி;** பக்கங்கள் 208; விற்பனை உரிமை: நர்மதா பதிப்பகம், சென்னை 600 017; விலை ரூ. 50.

மகாகவி பாரதி பல புதுமைகளைப் படைத்துச் சாதனை புரிந்தவர். அவற்றில் ஒன்று அவர் தாம் ஆசிரியராயிருந்த 'இந்தியா' பத்திரிகையில் கார்ட்டூன் எனப்படும் கருத்துப் படத்தைப் புகுத்தியதாகும். அவரே இதைப் பற்றி அறிவிக்கும்போது "தென்னிந்தியாவிலே இம்மாதிரி ஏற்பாடு தமிழ், இங்கிலீஷ், தெலுங்கு, கன்னடம் முதலிய எந்த பாஷைப் பத்திரிகைகளிலும் இதுவரை கிடையாது. நாம் நூதனமாகச் செய்யப் போகிறோம்"



படிப்பகம்

www.padippakam.com

என்று எழுதினார். உண்மையில் படங்களை அச்சிடும் அச்சுக்கலை அவ்வளவாக முன்னேறியிராத, இத்தகைய படங்களை உலோகத் தகட்டில் செதுக்கி அச்சுக் கட்டையில் அறைந்து அச்சிட வேண்டிய நிலைமை இருந்த அந்தக் காலத்திலேயே அவர் இத்தகைய முயற்சியில் துணிந்து ஈடுபட்டு, அதனை வெற்றிகரமாகச் சாதித்து வந்தது வியத்தற்குரிய சாதனையேயாகும். மேலும் கருத்துப்படங்கள் தமிழ் வாசகர்களுக்குப் புதியவை என்பதால், அவற்றை விளக்குவதற்கு அவர் ஒவ்வொரு படத்திற்கும் 'சித்திர விளக்க'மும் எழுதி வந்தார். என்றாலும் இந்தக் கருத்துப்படங்கள், சித்திர விளக்கங்கள் ஆகியவற்றில் ஒரு சிலவே பாரதி பற்றிய நூல்களில் இடம் பெற்று வந்துள்ளன.

பாரதியின் 'இந்தியா' பத்திரிகையின் இதழ்கள் கல்கத்தா தேசிய நூலகம், மறைமலையடிகள் நூல்நிலையம், மற்றும் சில தனிநபர்கள் ஆகியோரிடம் சிதறிக்கிடக்கின்றன. மேலும் அவற்றில் பல காலத்தின் கொடுமையால் சிதைவுற்றும் சிதிலமடைந்தும் உள்ளன. துரதிருஷ்டவசமாக, 1906 முதல் 1910 வரை வெளிவந்த 'இந்தியா' இதழ்களில் அறுபதுக்கும் மேற்பட்ட இதழ்கள் இன்னும் கிடைக்கப்பெறவே இல்லை. இந்நிலையில் 'இந்தியா'வில் வெளிவந்த கருத்துப்படங்களையும், அவற்றுக்கான விளக்கங்களையும் ஒருசேரத் தொகுத்து வெளியிடும் முயற்சி எவராலும் மேற்கொள்ளப்படாமலே இருந்தது. இதற்கு இவற்றையெல்லாம் திரட்டிப் பிரதி எடுத்துத் தொகுப்பதில் உள்ள பெருஞ்சிரமம் ஒருபுறமிருக்க, இதற்கு ஆகக்கூடிய பெரும் பொருட் செலவும் ஒரு காரணமாகவே இருந்தது எனலாம்.

என்றாலும் இந்தச் சிரமங்களையெல்லாம் மேற்கொள்ளும் அரிய முயற்சியில் ஈடுபட்டு, நூலை வெற்றிகரமாக வெளிக் கொணர்வதற்கான நிதியாதாரத்தையும் வசதிபடைத்தவர்கள் மற்றும் நல்லெண்ணம் கொண்டவர்களிடமிருந்து பெற்று, 'பாரதியின் கருத்துப்படங்கள்' என்ற இந்த அரிய பொக்கிஷத்தை ஆ.இரா. வேங்கடாசலபதி உருவாக்கி வெளிக்கொணர்ந்து பெருஞ்சாதனை படைத்துள்ளார்.


'டபுள் டெம்மி' அளவில் உள்ள இந்தப் பெருநூலில் ஏறத்தாழ நூற்று இருபத்தைந்து இதழ்களிலிருந்து தொகுக்கப்பட்ட எண்பத்தேழு கருத்துப்படங்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் கிடைக்கப் பெறாத 'இந்தியா' இதழ்களில் வெளிவந்த கருத்துப்படங்களைப் பற்றிய விவரங்கள், அரசாங்க ஆவணக் காப்பகத்தில் கிட்டிய அன்றைய ஆங்கிலேய அரசின் உளவுத் துறையைச் சேர்ந்தவர்கள் சுதேசப் பத்திரிகைகளைப் பற்றி அரசுக்கு எழுதியனுப்பிய இரகசியக் குறிப்புகளின் துணைகொண்டு, நூலில் இறுதியில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு கருத்துப்படத்துக்கும் ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டு, வலது பக்கத்தில் முழுபக்க அளவில் கருத்துப்படமும், எதிர்ப்பக்கத்தில் சம்பந்தப்பட்ட படத்தைப் பற்றிய பாரதியின் சித்திர விளக்கமும் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தையும் அத்தாட்சிபூர்வமாக அப்படியே வழங்குவதில் தொகுப்பாசிரியர் மிகுந்த சிரத்தையும் சிரமமும் மேற்கொண்டுள்ளார்.

மேலும் நூலின் முன்பகுதியில் 'தமிழ் இதழியலில் கருத்துப்படங்கள்', 'பாரதியின் கருத்துப்படங்கள் - வரலாற்றுப் பின்னணி' ஆகிய தலைப்புகளில் தொகுப்பாசிரியர் எழுதியுள்ள ஆதாரபூர்வமான குறிப்புகளும் பல அரிய செய்திகளைத் தெரிவிக்கின்றன.

"அமெரிக்கா, ஐரோப்பா கண்டத்துப் பதிப்புகளைப் போல நேர்த்தியாகவும், மனோரம்யமாகவும், நல்ல காயிதத்தில் தெளிவான எழுத்துகளில், தெளிவாகப் பதம் பிரித்து, ஆச்சர்யமான தகுந்த சித்திரங்க"ளோடு நூல்கள் வெளிவர வேண்டும் என்று பாரதி விரும்பியது போலவே இந்நூல் உருப்பெற்றுள்ளது மிகவும் பாராட்டத்தக்கதாகும். அழகிய அட்டைப்படமும், இத்தனை படங்களும், சிறந்த கட்டுமானமும் கொண்ட இந்த நூலின் விலையோ கொள்ளை மலிவு.

இந்த நூல் பாரதி ஆய்வாளர்களுக்கு மட்டுமல்லாது, பாரதியிடம் ஈடுபாடு கொண்ட அனைவருக்குமே ஒரு வரப்பிரசாதமாகும் என்றால் அது மிகையாகாது. மேற்கூறிய இந்த இரு நூல்களையும் தொகுத்தளித்த தொகுப்பாசிரியர் வேங்கடாசலபதியை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

தொ.மு.சி. ரகுநாதன்.



## வியூகம்

பாதைகள் சிடுக்குகளுடன்தான்
ஆரம்பம் ஆகின்றன.
உடைந்த கோட்டைகள்
உள்ளீடற்ற வார்த்தைகளாய்
சடலங்களாய்.
இருள் கவியும் சாயங்காலமும்
காற்றில் ஆடும் ஒற்றை மரமும்
என்னுள் பீதியை எழுப்புகின்றன.
சினேகத்தின் பீஜங்கள் எப்போது
என்னைப் புணரும்?
பதப்படுத்தப்பட்ட மௌனத்தின்
இறுக்கத்தையும்
என்னைச் சுற்றியுள்ள
வெற்றிடத்தையும் மதிய
வெயில் அதிகப்படுத்துகிறது.
என் வீட்டு மொட்டை மாடித்
தளத்தின் தூசுகளை
மழை அவ்வப்போது தற்காலிகமாய்
தான்
கழுவிச் செல்கிறது.

சங்கர ராம சுப்பிரமணியன்



படிப்பகம்

www.padippakam.com

ரெங்கராஜன்

# நாடகப் பிரதி

நாடகம் என்பது ஒரு அற்புதமான விஷயம். காலம் காலமாக மனிதனின் படைப்புணர்வுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பது அது. சிக்கல்களும், மோதல்களுமான மனித வாழ்க்கை துவங்கியபோதே நாடகமும் துவங்கி விட்டதாகத் தோன்றுகிறது. எண்ணற்ற நாடகங்களை மனித வாழ்க்கை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. இந்த உலகம் ஒரு நாடக மேடை என்று சேக்ஸ்பியர் சொன்னது அந்த வார்த்தைகளை விடவும் அதிகப் பரிமாணங்கள் கொண்டதாகத்தோன்று கிறது. நாடகம்என்பது என்றைக்கும் எளிய மனிதனின் மனதுக் குகந்த கலையாக இருந்திருக்கிறது. ஆடல் என்றும், பாடல் என்றும் பல வழிகளில் அவன் தன்னுடைய சந்தோஷ மனத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறான். ஆடலும், பாடலும் மனித வாழ்க்கையில் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றன. என்னுடைய மாணவப் பருவத்தில் காலையில் எழுந்து படித்துக் கொண்டிருக்கும்போது சீரங்கம் கோவிலி லிருந்து திருப்பாவை பாட்டு ஒலித்துக் கொண்டிருக்கும். ‘சிற்றஞ் சிறுகாலே வந்துன்னை சேவித்து .... ’ என்று துவங்கும் திருப்பாவை பாடலில் வரும் ‘எற்றைக்கும் ஏழ்ழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமேயாவோம், உனக்கே நாம் ஆட் செயவோம், மற்றை நம் காமங்கள் மாற் றெலோ ரெம்பாவாய்’ என்ற வரிகளில் வரும் உருக்கமும் நெகிழ்வும் அப்படியே என் மன தைப் பிடித்துக் கொள்ளும். திருவெம்பாவைப் பாடலில் ஒலிக்கும் ‘மங்களம் வருமோ’ என்ற வரி வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலும் என்னைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருப்பது போல் தோன்றும்.

பாரதியார் பாடல்களைப் பலமுறை படித்திருந்தாலும் டி.கே.பட்டம்மாள் பாரதியார் பாடலைப் பாடுகிறபோது ஏற்பட்ட கிளர்ச்சி எனக்கு வேறெப்போதும் ஏற்பட்ட தில்லை. ‘ஆடுவோமே பள்ளு பாடுவோமே’ பாடலில் வரும் ‘நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம். இது நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம். இந்தப் பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம், பரிபூரணனுக் கேயடிமை செய்துவாழ்வோம்’ என்ற வரிகளைக் கேட்கும்போது ஏற்படுகிற உணர்ச்சிகளை விவரிக்க இயலாது. துன்பப்படும் போதெல்லாம் மனம் பாடலைத்தான் நாடும். ‘துன்பம் நேர்கையில் யாழெடுத்துநீ இன்பம் சேர்க்க மாட்டாயா. அன்பிலா நெஞ்சில் கவிதைபாடி நீ ஆடிக்காட்ட மாட்டாயா’ என்று கவிஞர் பாடுவது ஆடலிலும் பாடலிலும் மனம் பெறும் உணர்வைக் காட்டும். நான் ஒருமுறை கிழக்காசிய ஆதிவாசிகள் பற்றிய ஒரு படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அவர்கள் அடிமைப்பட்டும் அடக்குமுறைக்கு ஆளாகியும் பல துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள். ஒரு நாள் எங்கிருந்தோ ஒரு கழைக்கூத்தாடி வந்து மெல்லிய குரலில் பறையொலியை எழுப்புகிறான். அந்த ஒலி அவர்கள் மனதில் புதைந்துள்ள துயரங்களைத் தட்டி எழுப்புகிறது. அவர்கள் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. தங்கள் நிலையை அவர்கள் உணர்கிறார்கள். இவ்வாறு பாடல் நம்முடைய உணர்ச் சிகளை ஒருமுகப் படுத்திக் கொண்டும் ஆடல் நம்முடைய சுதந்திரத்தின் எல்லை களை விரிவுபடுத்திக் கொண்டும் தொடர்ந்து வந்து கொண்டி ருக்கிறது.



ஆடல் பாடலு டன் ஒரு கதை நிகழ்வு மூலம் சிறப்பான ஒரு கருத்தைச் சொல்லுதல் என்ற நிலையில் நாடகம் தோன்றுகிறது. இங்கு வேறு ஒரு தளம் உருவாகிறது. அந்தக் கருத்தையும் அது உருவாக்கும் தளத்தை யுமே நாம் பிரதி என்ற நிலையில் வைத்துப் பார்க்கிறோம். எழுதப் பட்டோ, எழுதப் படாமலோ அவை நாடகத்தை இயக்கிக் கொண்டிருக்கின்றன. தமிழில் இதுவரை அறிமுகமான நாடகங் களில் எப்படிப்பட்ட பிரதிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன, அந்த பிரதிகளில் எப்படிப்பட்ட கண்ணோட்டம் செயல்படுகிறது, அவை உருவாக்கும் தளங்கள் என்ன என்பதைப் பார்க்கும் போது நம்முடைய மரபான நாடகங்களில் குறிப்பிட்ட சில அணுகு முறைகளைக் காணமுடியும்.

1. தலைவன் அல்லது கடவுளின் சிறப்பை வழிபடுதல்
2. நல்லொழுக்கம் மற்றும் மத உணர்வுகள்

ஆகிய இவை போன்ற உணர்வுகளால் உந்தப்பட்டே பெரும்பாலான நாடகப்பிரதிகள் உருவாகி யிருக்கின்றன. தங்கள் கருத்தை விளக்க ஒரு காவியப்பாங்கு (Epic style) கையாளப்பட்டிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

இவை உருவாக்கும் தளம் குறிப்பிட்ட நிலைகளைத் தாண்டி விரிவடைவதில்லை. கிட்டத்தட்ட 17ஆம் நூற்றாண்டு வரை இந்த நிலை நீடித்திருக்கிறது. மன்னர்களின் மங்கல விழாக்களும், அவர்களுடைய வெற்றிச் சிறப்புகளும் நாயன்மார்களின் வரலாறுகளும் இறைவனின் அருட் செயல்களுமே நாடகமாக்கப்பட்டு மன்னர்களின் அரண்மனைகளிலும் ஆலயங்களிலுள்ள நாடக அரங்குகளிலும் நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்றன. இத்தகைய வழிப்பாட்டு உணர்வுகள் குறிப்பிட்ட தளங்களிலேயே இயங்குகின்றன. இவைகளிலிருந்து மாறுபட்ட அணுகுமுறைகள் கொண்ட சில பிரதிகளை நாம் ஆராயும்போது பிரதியின் பல்வேறுபட்ட சாத்தியங்கள் குறித்த ஒரு கண்ணோட்டத்தை நாம் பார்க்க முடியும். இத்தகைய மாறுபட்ட அணுகுமுறைகளும் பார்வைகளும் கொண்ட பிரதியாக முதலில் நமக்குத் தென்படுவது சிலப்பதிகாரம். பலகீனங்கள் நிறைந்த மனித வாழ்க்கை இங்கு பிரதியாகிறது. மனித இயல்புகளின் ஏற்றத் தாழ்வுகளை பிரதி இயங்குதளமாக எடுத்துக்கொள்கிறது. முன் அனுமானங்களின்றி வாழ்க்கையின் ஓட்டத்துடன் பிரதி நகர்ந்து செல்கிறது. ஒரு காவியப் பாங்குடன் கோவலனுடைய வாழ்க்கை வரலாற்றை நாடகம் சொல்லிக் கொண்டு போவதில்லை. நாடகத்துக்குத் தேவையான விஷயங்களை மட்டும் ஆசிரியர் எடுத்துக் கொள்கிறார். நாடகமே கோவலன் கண்ணகி திருமணத்துடன்தான் துவங்குகிறது. சம்பவங்கள் காலப் பின்னணியில் அடுக்கப் படாமல் உணர்வு நிலைகளின் மாற்றத்துக்கு ஏற்ப களம் மாறுகிறது. ஒரு காதையின் முடிவு அடுத்த காதையின் தொடக்கமாக அமையாமல் தனிப்பட்ட காட்சிகளை தொடர்பற்ற முறையில் தொடங்கி பார்ப்பவர்களை சிந்திக்க வைத்து இடையிலுள்ள நிகழ்ச்சிகளை அவர்களே தொடர்புபடுத்திக் காணுமாறு செய்கிறார். அண்மையில் கிரிஷ் கர்னாட் எழுதிய 'பலிபீடம்' நாடகத்தில் கூட இந்த அணுகுமுறையைப் பார்க்கலாம். **Off Stage** என்று சொல்லப்படும் நாடகத்திற்கு வெளியிலான வாழ்க்கை குறித்த ஒரு இடைவெளியை உண்டாக்கி பலஅனுமானங்களுக்கும் கற்பனைகளுக்கும் நாடகம் இடமளிக்கிறது.

புகார், மதுரை, வஞ்சி என்று நாடகத்தின் களம் மாறிக்கொண்டே இருக்கிறது. இடையில் குன்றக் குறவர்களின் குரவைக் கூத்து வருகிறது. காட்சி மாற்றங்களை அமைக்கும்போது அவற்றைக் குறிப்பிட்டுக் காரணம் காட்டி விளக்கிச்சொல்லும் காப்பிய மரபு கையாளப்படவில்லை.

கதைப்போக்கில் காட்சி மாற்றங்கள் நிகழ்கின்றன. ஆசிரியரின் குறுக்கீடு இல்லாமல் நாடகப் பாத்திரங்களே நாடகத்தை நகர்த்திச் செல்கின்றன. நாடகத்தின் உணர்ச்சி நிலைகளை வலுப்படுத்த பல்வேறு குரவைக் கூத்துகள் இடையிடையே அறிமுகப் படுத்தப்படுகின்றன. கிட்டத்தட்ட ஒரு தெருக்கூத்து போன்ற அமைப்பை இந்த நாடகம் கொண்டுள்ளது.

கோவலன் கண்ணகியோடு இன்பம் அனுபவித்தல், கண்ணகியைப் பிரிந்து மாதவியோடு சேர்தல், மாதவியைக் கடற்கரையில் பிரிதல், கண்ணகியை அடைந்து மதுரைக்கு செல்லுதல் என்றவாறு நிகழ்ச்சிகள் விரைந்து அமைகின்றன. கோவலன் மாதவியுடன் வாழ்ந்தபோது மணிமேகலையை மகளாகப் பெற்றது, தானம் வாங்க வந்த மறையவனை யானையிடம் இருந்து கோவலன் காப்பாற்றியது, மனைவியின் மீது கோபம் கொண்டு அவளைத் துறந்து காடு சென்ற கணவனை அழைத்து வந்து பொருள் கொடுத்து அவர்களை ஒன்று சேர்த்தது, பத்தினியின் மீது பழிச்சொல் வீசி பூதத்தின் வாய்ப்பட்ட ஒருவனின் தாயையும், அவன் உறவினர்களையும் காப்பாற்றியது ஆகிய நிகழ்வுகள் அனைத்தும் அவர்கள் மதுரைக்குச் செல்லும் வழியில் சந்தித்த மாடல மறையோனின் கூற்றாக ஒரு நனவோடை உத்தியில் சொல்லப்படுகின்றன. தேவையற்ற சம்பவங்கள் எதுவும் நாடகத்தில் இல்லை. மாதவியைப் பிரிந்த அன்றே இரவோடு இரவாக மதுரைக்குப் புறப்படுதல், கோவலன் மதுரை சென்ற அன்று மாலையே கொலையுறுதல், மறுநாள் காலை கண்ணகி மதுரையை எரித்தல் என்று நாடகத்தின் காலத்தை மட்டுமே ஆசிரியர் கவனத்தில் கொள்கிறார். நூல் முழுவதும் மக்கள் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய ஆசிரியப்பாவினால் இயற்றப் பட்டுள்ளது. பிரதியைப் பற்றிய கலைத்தன்மையுடன் கூடிய ஒரு பார்வை, அதற்கேற்ற உத்திகள், வாழ்க்கையின் ஓட்டத்தில் மனிதர்கள் அடித்துச் செல்லப்படுவது குறித்த ஒரு நிதர்சன நோக்கு ஆகியவை ஒரு விரிந்த தளத்தை உருவாக்குகின்றன. இவற்றால் இந்த நாடகம் பல நூற்றாண்டுகளைக் கடந்து 17ஆம் நூற்றாண்டில் தோன்றிய பள்ளு, குறவஞ்சி நாடக அமைப்புக்கும், தெருக்கூத்து நாடக அமைப்புக்கும் ஒரு ஆரம்பமாக அமைகிறது. இந்த வகையில் தமிழின் மிக முக்கியமான ஒரு நாடகப்பிரதியாக இதை நாம் கொள்ளமுடியும்.

சங்கப் பாடல்களிலும் அவ்வப்போது சில **Down to earth** நாடக உரையாடல்கள் தென்படுகின்றன. கலித் தொகையில் வரும் ஒருகாட்சி. தலைவி மோர் விற்றுத் திரியும் ஒரு பெண். அவளுடைய வழியை தலைவன் மறிக்கிறான். தலைவன் தலைவி உரையாடல் :

தலைவி : *கடன் கொடுத்தவர்கள் வழியை மறித்துக் கொண்டு பெட்டியைப் பிடித்து என்ன வைத்திருக்கிறாய் என்று கேட்பது போல என்னை மறிக்கிறாய். உன்னிடம் எந்தப் பொருளை நான் கடன் வாங்கினேன் ?*

தலைவன் : *நீயா என்னிடம் வாங்கவில்லை ? நான் சொல்கிறேன் கேள். அன்றொரு நாள் செம்முல்லை நெருங்கியதோர் காட்டின் சிற்றாங்கரையில் நான் நின்று கொண்டிருந்த போது நீ மோர் விற்று மீண்டு சென்று கொண்டிருந்தாய் அல்லவா ? அப்போது உன்னுடைய மாவடு பிளந்தாற்போன்ற கண்ணினால் என் நெஞ்சத்தைப் பறித்துக் கொண்டு சென்றாயே, நீ கள்ளி அல்லையோ ? அது உனக்குத் தெரியாதோ ?*

தலைவி : *நன்றாக இருக்கிறதே உன் பேச்சு. உன்னுடைய நெஞ்சத்தை நான் ஏன் வாங்குகிறேன் ? அதனால் எனக்கு என்ன ஆதாயம் ? உன் நெஞ்சம் தினைப்புனத்தில் இருக்கும் என் தமையனுக்கு உணவை எடுத்துக்கொண்டு செல்லுமா ? பசுக் கூட்டங்கள் நடுவே நிற்கும் என் தந்தையிடம் கறவைக் கலங்கள் கொண்டு செல்லுமா ? அல்லது தினையரிந்த தாளிடத்தே என் தாய்க்குப் பதிலாக நின்று கன்றுகளை மேய்க்குமா ? உன் நெஞ்சம் எனக்கு என்ன வேலை செய்யும் ?*

இவ்வாறு உரையாடல் செல்கிறது. இப்படி சில ஓரங்க நாடகங்களை கலித்தொகையிலும், சில தனிப்பாடல்களிலும் பார்க்கமுடியும். இவற்றில் வாழ்க்கையோடு ஒட்டிய பல செய்திகள் உண்டு. வாழ்க்கையின் அடித்தளத்தில் உள்ளவர்களும், உருக்குலைந்தவர்களும், உருமாறியவர்களும் இந்த நாடகங்களில் இடம் பெறுகிறார்கள்.

இவ்வாறு அவ்வப்போது சில பிரதிகளில் வெளிப்பட்ட ஒரு **Dramatic Text 17** ஆம் நூற்றாண்டின் பள்ளு, குறவஞ்சி மற்றும் நொண்டி நாடகங்களில் ஒரு புதிய பிரதியை நமக்கு அடையாளம் காட்டுகிறது. மிகவும் அடிப்படையான குணாம்ச ரீதியிலான ஒரு மாற்றத்தை இந்தப் பிரதிகளில் நாம் பார்க்கமுடியும். இவை வாழ்க்கையின் அடித்தளத்தில் ஒதுக்கப்பட்டிருந்த மக்களின் வாழ்க்கையைப் படம் பிடிப்பனவாக அமைந்தன.



படிப்பகம்

www.padippakam.com

செந்நெறி மரபுகளுக்கு மாற்றாக வெளிப்பாட்டில் ஒரு எளிமையான, நாட்டுப்புற வழக்காடல்கள் நிறைந்த ஒரு பாணி கையாளப்படுகிறது. அரண்மனைகளிலும், ஆலயங்களிலும் ஆட்சி செய்த நாடகக்கலை மக்கள் மன்றத்துக்கு வருகிறது. இவை தாங்கள் வழிபடும் கடவுளரின் பெருமையையும், வள்ளல்களின் சிறப்பையும் எடுத்துக்காட்டினாலும் இவற்றின் பெரும்பகுதி வாழ்வியல் நிகழ்ச்சிகளுக்கு ஒதுக்கப்பட்டு அவை ஒரு மாறுபட்ட தளத்தை உருவாக்குகின்றன.

பள்ளு நாடகங்கள் பள்ளர்களின் வாழ்க்கை முறையையும் அவர்களுடைய அழகியலையும் முன் நிறுத்தின. மூத்த பள்ளியின் முறையீட்டினால் பண்ணைக்காரன் பள்ளனைக் குட்டையில் அடித்தலும், அவன் விடுதலை பெற்று வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுதலும், விளைந்த நெல்லைப் பங்கிடுவதில் வந்த கருத்து வேறுபாட்டினால் மூத்த பள்ளியும், இளைய பள்ளியும் ஒருவரை ஒருவர் ஏசுவதும், பேசுவதும், பின் இருவரும் சமாதானமடைந்து இறைவனை வழிபடுதலும் என்ற ரீதியில் பள்ளு நாடகங்கள் அமைகின்றன. அந்த மக்களின் வாழ்க்கையில் காணப்படும் நிகழ்ச்சிகளை பின்னணியாகக் கொண்டு அவர்களுடைய பேச்சு மொழியிலேயே உரையாடல்கள் அமைகின்றன. இதேபோல் குறவஞ்சி நாடகம் குறவர்களின் வாழ்க்கை முறையைப் படம் பிடிக்கிறது. தலைவனைப் பார்த்து பெண்ணொருத்தி மயங்க குறத்தி வந்து குறி கூறுகிறாள். குறவன் குறத்தியைத் தேடித் திரிதலும், குறத்தியைக் கண்டு உரையாடுதலும், இருவரும் கடவுளைப் போற்றிப் பணிதலும் என்று குறவஞ்சி நாடகம் அமைகிறது. இந்த அமைப்பிற்குள்ளேயே நொண்டி நாடகங்கள் எனப்படுபவை வேறொரு பிரதியை வழங்குகின்றன. திருடி அகப்பட்டு தண்டனையாக கால்கள் துண்டிக்கப்பட்டு நொண்டியான ஒருவன் கடவுளை வழிபட்டு இழந்த கால்களை மீண்டும் பெறுவதாக இந்த நாடகங்கள் அமைந்துள்ளன. திருடர்களின் இயல்புகள், அவர்கள் வாழ்வில் படும் துன்பங்கள் ஆகியவற்றை இந்த நாடகங்கள் வெளிப்படுத்துகின்றன. குறிப்பிட்ட கடவுளரின் பெருமையைப் பரப்ப இவை எழுதப்பட்டவை என்றாலும் திருடியும், போலித் துறவிகளாக வேடமிட்டும் மக்களை ஏமாற்றிப் பிழைத்த கூட்டத்தினரின் வாழ்க்கையில் நிகழ்ந்த கொடுமைகளை ஒரு **Monologue** பாணியில் இவை காட்டுகின்றன. இந்த நாடகங்கள் சமூகத்தின் விளிம்பில் உள்ள மக்கள் குறித்த ஒரு பரிவுணர்வையும், அவர்கள் வாழ்க்கை முறையின் அழகியல் தன்மைகளையும் விளக்குவனவாக அமைகின்றன. இன்றைய தலித் மற்றும் ஒடுக்கப்பட்டோர் அரங்கு குறித்த பார்வைகளை இந்த நாடகங்கள் தமக்குள் கொண்டிருப்பதை நாம் பார்க்கமுடியும்.

இதுபோன்ற கண்ணோட்டத்தில் எழுந்த இன்னொரு முக்கியப்பிரதி கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை. சேக்கிழாரின் பெரிய புராணத்தை எடுத்துக்கொண்டு தம் காலத்து சிக்கல்களை மையமாகக் கொண்ட ஒரு புதிய பிரதியை இவர் உருவாக்குகிறார். அன்றைய சமூக மனிதன் பல நிலைகளில் மேற்கொள்ளும் போராட்டத்தை பிரதி மையப்படுத்துகிறது. எளியவர்களுக்கும், செல்வர்களுக்கும் இடையிலான போராட்டம், உயர்ந்த ஜாதியினர் என்று கருதிக் கொள்பவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையிலுள்ள போராட்டம், தம் இனத்துப் பழமைவாதிகளுடனும் வைதீக அந்தணர்களுடனும் இன்னொரு போராட்டம் என்று பிரதி ஒரு சமூகச் சிக்கலை முன்வைக்கிறது. நந்தனார் பாத்திரம் இங்கு ஒரு குறியீடாகிறது.

பள்ளு, குறவஞ்சி, நொண்டி மற்றும் கீர்த்தனை நாடகங்களின் ஒரு வளர்ச்சி பெற்ற பிரதியாக தெருக்கூத்தை நாம் பார்க்க முடியும். பாடல்களும், பாடல்களின் விளக்கமாக உரைநடைப்பகுதி என்ற வகையில் தெருக்கூத்துப் பிரதி அமைந்துள்ளது. நாட்டுப்புற மக்களிடமும் பாமர மக்களிடமும் நாடகம் என்கிற வடிவத்தை பரவலாகக் கொண்டு சென்றது இந்தக் கூத்துப் பிரதியின் முக்கிய அம்சம். ராமாயணம், மகாபாரதம், கந்த புராணம், பெரிய புராணம், மதுரை வீரன், பவளக்கொடி, நல்ல தங்காள், ஆரவல்லி, சூரவல்லி, காத்தவராயன், அரிச்சந்திரன் கதை எல்லாம் தெருக் கூத்துகளாக நடிக்கப்பெற்றவை. தெருக்கூத்து அடிப்படையில் ஒரு காவிய மரபைப் பின்பற்றினாலும் நாடகத்துக்கான ஒரு பரந்த வெளியை அது உருவாக்கியது. உடை, ஒப்பனை, உடல் அசைவுகள், இடைவெளியை உபயோகித்த விதம், பாத்திரச் சித்தரிப்பு, நிறங்கள் பற்றிய உணர்வு ஆகிய எல்லாவற்றிலும் தெருக்கூத்து ஒரு புதுமொழியை உபயோகித்தது. தெருக்கூத்துக்கு அடிப்படையாக ஒரு பிரதி இருந்தாலும் ஒவ்வொரு நிகழ்விப்பும் ஒரு பிரதியை உருவாக்கியது. பரம்பரை பரம்பரையாகவும் வாய் மொழியாகவும் கற்ற பல பிரதிகள் காலப்போக்கில் உருவாயின. தெருக்கூத்து வெறும் நாடக வடிவமாக மட்டும் இயங்காமல் முழுச் சமூகத்தின் அடையாளமாகவும் அது உருமாறியது. சமூக பரிவர்த்தனை மற்றும் கலாச்சார உரையாடலுக்கான ஒரு தளத்தையும் அது வழங்கியது. நான் அண்மையில் 'திரௌபதி வஸ்திராபரணக் கூத்து' பார்த்த போது பிரெக்டின் அந்நியமாதல் கோட்பாடு மிகவும் இயற்கையாக நமக்குரிய ஒரு தளத்தில் செயல்படுவதைப் பார்த்தேன். ஒரு செறிவான நாடக வெளியை உருவாக்கியதும் கட்டியங்காரன் மூலம் நாடகத்தை பல தளங்களுக்கு விரியச் செய்த தன்மையும் தமிழ் நாடகத்துக்கு தெருக்கூத்தின் பங்களிப்பாகும்.

இத்தகைய ஒரு பின்னணியில்தான் சமுதாய நாடகங்களின் தோற்றம் உருவாகிறது. அரசியல் ரீதியாக பல மாற்றங்களை உலகம் சந்திக்கிறது. ஐரோப்பியர் வருகை, தொழிற்புரட்சியின் பின்னணியில் எழுந்த தொழில் நுட்ப மாறுதல்கள், குழுச்சமூகம் சிதறுபடல், அச்சு எந்திரத்தின் தோற்றம் ஆகியவை உலகம் முழுவதும் கலை இலக்கியம் குறித்த புதிய அணுகுமுறைகளை உருவாக்குகின்றன. பாடல் வடிவில் அமைந்த நாடக மரபிலிருந்து விலகி உரைநடை நாடகங்கள் தோன்றுகின்றன. உலக அரங்கில் சேக்ஸ்பியரின் தாக்கம் பரவலாகிறது. பரிதிமாற் கலைஞர், சுந்தரம் பிள்ளை போன்றவர்கள் சேக்ஸ்பியர் போன்று ரொமாண்டிசிஸ பாணி நாடகங்களை உருவாக்குகிறார்கள். ஆங்கிலேயர் களின் வரவால் சமூக அமைப்பில் ஏற்பட்ட மாறுதல்களின் பின்னணியில் சமூக விமர்சனத்தை உள்ளடக்கிய ஒரு புதிய பிரதியும் உருவாகிறது. பெரும்பாலும் ஒரு **Epic** பாணியிலேயே இந்த நாடகங்களின் தளம் அமைகிறது.

ப்ரொசீனிய மேடை அறிமுகத்தாலும், மேற்கத்திய நாடகக் கோட்பாடுகளின் தாக்கத்தினாலும் பம்மல் சம்பந்த முதலியாரும் வேறு சிலரும் சில வேறுபட்ட பிரதிகளை அறிமுகப்படுத்துகிறார்கள். பெரும்பாலும் இன்பியல் நாடகங்களாகவே இருந்த போக்குக்கு மாறாக துன்பியல் நாடகப் பிரதிகளும் இந்த வகையில் தமிழுக்கு அறிமுகமாகின்றன. மேலைநாட்டு நாடகங்களில் காணப்படும் ஒவ்வொரு புதிய வகையையும் தமிழில் கொண்டு வர வேண்டும் என்ற ஆர்வத்தை பம்மல் சம்பந்த முதலியார் செயல்படுத்துகிறார். நீண்ட நாடகங்களே செல்வாக்குப் பெற்றிருந்த ஒரு காலகட்டத்தில் 3 அல்லது 5 மணி நேரத்தில் நடத்தி முடிக்கப்படக்கூடிய அளவு சிறிய நாடகங்களை அவர் துவக்கி வைத்தார்.



படிப்பகம்

www.padippakam.com

சிக்கல் அரசியல் சதிகளுக்கும், ஊர்வலத்தின் நாடகத் தன்மைக்கும் முடிவாக அமைகிறது. **myth, parody, absurdity** என்று பல கூறுகளின் ஊடாக நாடகம் செல்கிறது. மரபின் தொடர்ச்சியும் விமர்சனமும் இதில் உண்டு. கால இட மாற்றத்திற்கு நூல் ஏணிகள் பயன்படுகின்றன. நாடகம் சுலபமாக இடம் பெயர்ந்து கொண்டே போகிறது. மையம் இழந்த சமூகத்தின் பிம்பங்கள் வந்து கொண்டே இருக்கின்றன.

இன்னொரு நாடகம் வேலு சரவணனின் 'பனிவாள்'. சிறுவர் உலகின் விளையாட்டுச் சித்திரங்கள் இவருடைய பிரதிகளாகின்றன. பனிவாள் அன்புக்கும், வெறுப்புக்கும் இடையிலான மனிதனின் போராட்டம். ஒருவர் மற்றவரின் பிம்பமாக இருவர் இந்த வேறுபட்ட நிலைகளை உருவகப்படுத்துகிறார்கள். முன் பகை காரணமாக ஒருவரை ஒருவர் கொல்வதற்கு தேடி அலைகிறார்கள். பனி விழுந்து கொண்டிருக்கும் ஒரு கடுமையான இரவில் ஒருவரை ஒருவர் தேடி ஒரு குகையை அடைகிறார்கள். பார்வையைப் பனி மறைக்க ஒருவரை ஒருவர் பார்க்கமுடியாத நிலையில் சந்திக்கிறார்கள். தூங்கிவிட்டால் அவர்கள் பனியில் உறைந்து போய்விடக்கூடும். எனவே அவர்கள் விழித்திருக்க வேண்டும். ஒருவர் விழித்திருக்க மற்றவர் பேசிக் கொண்டிருக்க வேண்டும். விழித்திருக்க உதவி செய்தால் மறுநாள் எதிரியைக் கொன்று அதற்கு நன்றி கடனாக உனக்கு என் உயிரைக் கொடுப்பேன் என்கிறான் ஒருவன். மற்றவனுக்கும் இதே நிலை. தங்களுடைய பல்வேறு கடந்தகால பிம்பங்கள் அவர்களுக்குள் நிழலாட இரவு நீடித்துக் கொண்டிருக்கிறது. அந்த அமைதியை உடைக்க அவர்கள் ஏதாவது செய்ய வேண்டும்.

நாடகம் ஸ்தூலமாக சொல்லப்படுவதில்லை. பலவித பிம்பங்களுடனான விளையாட்டு போல் நாடகம் செல்கிறது. தன்னுடைய சிறுபிராயத்தில் மனதில் படிந்த நாட்டுப்புறப் படிமங்களை நாடகமாக்கியிருக்கிறார் வேலுசரவணன். நாடகத்தில் வசனங்கள் அதிகம் இல்லை. ஒருவித குழந்தைத் தன்மையும், கவிதைத் தன்மையும் நாடகம் முழுக்க விரவியிருக்கின்றன. நிகழ்காலத்திற்கும், கடந்த காலத்துக்குமான இடைவிடாத பயணம் நடந்து கொண்டிருக்கிறது. விளையாட்டு, ஓட்டம், அன்பில் களிப்பு, குரோதம், வீழ்ச்சி, மரணம் என பாத்திரங்கள் அலைபாய்கின்றன. கற்பனைக் கெட்டாத தூரத்தில் சிந்திக்கிற குழந்தைகளாக இருப்போம் என்ற ஒரு **nonentity** உடன் நாடகம் முடிகிறது. ஒரு வகைப்படுத்தமுடியாத தெளிவற்ற நிலையை நாடகம் பிரதிபலிக்கிறது.

இத்தகைய ஒரு பரிமாணத்தில்தான் நாம் நவீன அரங்கைப் பார்க்கிறோம். இன்று மாற்று அரங்கத்தில் பலவிதமான பிரதிகள் கையாளப்பட்டு வருகின்றன. நடுத்தர வர்க்கப் பார்வையாளருக்கான நாடகம், தமிழ் அடையாளத்தை முன்நிறுத்தும் நாடகம், வீதி மற்றும் அரசியல் நாடகம், தலித் மற்றும் ஒடுக்கப்பட்டோருக்கான நாடகம், பெண்ணியம் மற்றும் பாலியல் சுதந்திரம் குறித்த குரல்கள் ஆகியவை தமக்கான பிரதிகளை உருவாக்கிக் கொண்டு வருகின்றன. சமூகத்தின் குறிப்பிட்ட தேவைகளுக்கான தளங்களை இவை அடையாளப் படுத்துகின்றன. மிகைப்படுத்தப்பட்ட உணர்ச்சிகளையும், நடிப்பு முறைகளையும் தவிர்த்தல், கதைப்போக்கை விட உணர்வு நிலைகளுக்குள் ஊடுருவிச் செல்லுதல், பாத்திரங்கள் முடிவுகளை நோக்கி உந்தப்படுவதை தவிர்த்து வாழ்க்கையின் முடிவற்ற தன்மையைப் பிரதிபலித்தல் ஆகியவற்றை இன்றைய பிரதிகளின் முக்கியமான போக்குகளாகப் பார்க்க முடியும்.

## குருக்ஷேத்திரமும் ஒரு நிராயுதபாணியும்

ஆசிரியர் : **ஸ்ரீ பால்பாண்டியன்**, வெளியீடு: தங்கம், கேசவன்புதூர் 629 501, குமரி மாவட்டம். விலை ரூ.15, பக். 114.

பலருக்கு சிறுகதை சுலபமாக வருகிறது. நிறைய வாசகர்கள் விரும்பிப் படிப்பதும் சிறுகதையாகத்தான் இருக்கிறது. எனவேதான் நாவல், விமர்சனம் ஆகிய புத்தகங்களைவிட சிறுகதைத் தொகுப்புகளின் வரவு அதிகமாக இருக்கிறது. எதைப் படிக்க எதை விட எனத் திணறும்படி குவிந்து கிடக்கும் புத்தகக் குவியல்களில் புதிதாக இணைந்திருக்கும் கவனத்திற்குரிய சிறுகதைத் தொகுப்பு ஸ்ரீ பால்பாண்டியனின் 'குருக்ஷேத்திரமும் ஒரு நிராயுதபாணியும்'. இவர் தமிழுக்குக் கிடைத்திருக்கும் புதிய படைப்பாளி.

ஐந்து கதைகளைக்கொண்ட இத்தொகுப்பில், 'எல்.எம்.பி.', 'குருக்ஷேத்திரமும் ஒரு நிராயுதபாணியும்' ஆகிய கதைகள் குறிப்பிடத் தக்கவை. மற்ற மூன்று கதைகளும் இக்கதைகளின் தரத்தை எட்டுவதற்கான ஒரு பயணமாக உள்ளன. 'குருக்ஷேத்திரமும் ஒரு நிராயுதபாணியும்' கதையில் கிராமத்தில் இருந்து மிகத் தொலைவில் மிகப்பெரிய நகரத்தில் படிக்க நேர்ந்த ஒரு மாணவனின் தயக்கங்கள், நிராசைகள், தாழ்வு மனப்பான்மை ஆகியவை அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒரு தீவிர ஆராய்ச்சியாளனின் மனநிலையையும் அவனை உலகம் எதிர்கொள்ளும் விதத்தையும் பற்றியது 'எல்.எம்.பி.'

இந்தத் தொகுப்பில் உள்ள கதைகளின் வடிவம் எந்த அளவுக்குச் சரியாக வந்திருக்கிறது என்பது விவாதத்திற்குரியது. ஆனால் இக்கதைகளை படிக்கும்போது இவரால் தமிழுக்கு சில நல்ல கதைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

**தளவாய் சுந்தரம்**

**நாவல்**

நாவல் பற்றிய விவாத நூல்

**ஜெயமோகன்**

**விலை ரூ. 35**

மடல் வெளியீட்டின் முதல் நூல்
உலக மொழிகளிலும் இந்திய
மொழிகள் சிலவற்றிலும்
நிகழ்த்தப்பட்ட நாவல்
சாதனைகளின் பின்னணியில்
தமிழின் நாவல் முயற்சிகள்
இந்நூலில் விவாதத்திற்கு எடுத்துக்
கொள்ளப்பட்டுள்ளன. நாவல்
பற்றிய நம்முடைய புரிதலை
ஆழப்படுத்தும் முயற்சி இந்நூல்.

விற்பனை உரிமை
**திலீப் குமார்**
**25, மூன்றாவது டிரஸ்ட் குறுக்குத் தெரு**
**மந்தைவெளி, சென்னை-28**




படிப்பகம்

www.padippakam.com

# தீட்டு

ஹவி



கம்பிக் கதவைப் பூட்டு போட்டு பூட்டி விட்டு, 'கதவ திறந்து போட்டு தூங்கிராத, யாரும் வந்தா போனா கூட தெரியாது, உள்பக்கமாக பூட்டு போட்டு பூட்டிக்க' என்ற குரலை - கனமான மரக்கதவையும் அடைத்து மேல் நடு கீழ் தாழ்பாளையும் போட்டு விட்டு, அறைக்குள் வந்த போது, அறை வெப்பமாயிருப்பதுபோல் பட்டது. அவர்களுடைய வெப்பமாயிருக்கலாம். எப்படியும் அவர்கள் திரும்ப நிறைய நேரமாகும் - என்ன செய்யலாம்? எப்படியும் திரும்பவும் அவர்கள் வந்து விடுவார்கள் என்ற எண்ணம் வந்ததும் ஒரு வித பயமாகவும், அதுயையாகவும் இருந்தது. அந்த நிமிடமே ஏதோ ஒரு பயங்கரம் சூழ்ந்தது போல பட்டது. அவர்களை பற்றி நினைத்தாலே ஏன் எரிச்சல் வர வேண்டும் எனத் தோன்றியது. நாம் (நான்) ஏன் இப்படி இருக்கிறோம் என்று பட்டது. அறையின் குறுக்கும் நெடுக்குமாய் இரண்டுமுறை நடந்தான்-ள். பின் ஏதோ தோன்ற கண்ணாடியில் முகத்தைப் பார்த்தபடி சிறிது நேரம் நின்று தலையை பல தடவை வாரிவிட்டுக் கொண்டு, என்ன செய்வது எனத் தெளிவாகத் தெரியாமல் வந்து சோபாவில் அமர்ந்தான்-ள். கையை கைலி/பாவாடைக்குள் விட்டு ஜட்டியை நிரடிக் கொண்டான்-ள். (ஜட்டி உறுத்துகிறதோ? உறுத்துமோ?) பின் இரண்டு கால்களையும் எடுத்து சோபா மேல் 'V' வடிவத்தில் வைத்துக் கொண்டு, மோட்டு வளையை வெறித்தபடி இருந்தான்-ள். லஜ்ஜையாய் இருக்கவே, எழுந்து சமையலறைக்குள் நுழைந்து, கழுவாத பாத்திரங்களில் இருந்து ஒரு நெடி வருவதை உணர முடிந்தது, ஏன் சமையலறைக்குள் வந்தோம் என்பதாக எண்ணி, பூஜையறைக்குள் நுழைய, எண்ணெய்ப் பிசுக்கின் நெடியும், சாம்பிராணி மற்றும் பூஜாப் பொருட்களின் நெடியும் உறுத்த அந்த அறைக்கதவை மூடிவிட்டு, மீண்டும் ஹாலுக்கு வந்தான்-ள். ஹாலுக்குள் வந்தாலே அவர்கள் ஞாபகம் தவிர்க்க முடியாதபடி வருவது அதிர்ச்சியை தந்தது. மனநிலை தாறுமாறாக போவதை தடுக்க நினைத்து, டீபாயில் கிடந்த செய்தித்தாள்கள், வார, மாத பத்திரிகைகளை பார்த்து, அவற்றை விலக்கி, விலக்கி ஏதோ புத்தகம் ஒன்றை தேடினான்-ள். கவிதைப் புத்தகமொன்று கிடைக்க, மீண்டும் சோபாவில் அமர்ந்து, பக்கங்களை புரட்டி, வெள்ளைப் பக்கங்களில் அடுக்கி வைக்கப்பட்ட கறுப்பு எழுத்துகளில் மனது பதிய மறுத்தது, ஏதேதோ அலைந்தது. திடீரென எதிர்பாராமல் அவள்-ன் ஞாபகம் வந்தது ஏன் என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்-ள். பின் அன்று காந்தி மண்டபத்தில் பேசிக்கொண்டிருக்கையில் அவளின்/அவனின் சிறு முலை தொட்ட கைகளைத் தடவிக் கொடுத்தான்-ள். கால் மேல் காலை போட்டுக் கொண்டு, புத்தகத்தை டீபாயில் எறிந்து விட்டு வெகு நேரம் தடவியபடி கைகளைப் பார்த்தபடி இருந்தான்-ள். இடது கையால் தன் மார்பை தன்னை யுமறியாமல் தடவிப் பார்த்தபடி, எழுந்து சென்று கண்ணாடியில் முகம் பதித்து நின்றான்-ள். சீப்பை எடுத்துத் தலையை வாரினான்-ள். சமயலறைக்குள் சென்று வாஷ்பேஸின் குழாயைத் திறந்து சிறிது நீரை கையில் பிடித்து தலையில் தெளித்து, குழாயை மூடி, ஈரக்கையால் தலையைக் கோதிவிட்டபடி, வந்து, கண்ணாடி முன் நின்று, வேறு வேறு வடிவத்தில் - பின் பக்கம் படிய வாரிய தலை - இடப்பக்க உச்சி - வலப்பக்க உச்சி - டிஸ்கோ ஸ்டைல் - திடீரென நடு உச்சி - தன் தலையை வாரிச் சீவி மகிழ்ந்தபடி இருக்க, நடு உச்சி எடுத்து சீவி முகத்தை தானே கோணலாக்கி வெட்கப் படுகையில், தான் 'அலி' போல் இருப்பதாய் பட்டது. அந்த எண்ணம் வந்ததும் திடீரென ஒரு பயம் தன்னைச் சூழ மெலிதாய் கக்கத்தில் வியர்த்தது. உள்ளே சில்லிப்பை உணர்ந்து இடது கையை சட்டைக்குள் விட்டு கக்கத்து வியர்வையை துடைத்து, இடது கையை முகர்ந்து பார்த்தான்-ள். தன் வாசம் தனக்குப் பிடித்தது போல் தோன்றியது. மீண்டும் கண்ணாடியில் முகம் பார்த்ததும் ஒரு சமயம் தான் அலி தானோ என்ற சந்தேகம் வந்தது. வந்ததும், வேகமாய் தலையை கையால் கலைத்து விட்டு, கையாலேயே கோதிவிட்டபடி வந்து



படிப்பகம்

www.padippakam.com

சோபாவில் இருந்து கொண்டதும் ஒரு வித நடுக்கம் அவனை-ளை ஆட்கொண்டது. தொப்புளின் வழியே கைலி/பாவாடைக்குள் கையை விட்டு, தடவிக் கொண்டதும் சற்று தைரியமும், ஒருவித மெலிதான உணர்ச்சியும் தோன்றியது. கையை வெளியில் எடுக்க விருப்பமின்றியே, யாரேனும் ஜன்னல் வழி பார்த்து விடக்கூடும் என்று பயந்தபடியே வெளியில் எடுத்து, ஜன்னலை நோக்கிப் போனான்-ள். வரிசையாய் அத்தனை ஜன்னலையும் அடைத்ததும் ஒரு வித அரையிருள் அறைக்குள் வந்து சேர்ந்தது. லேசான இருட்டுக்குள் இருப்பது தலைக்குள் ஏதோ பாரத்தை வைத்தது போல் இருந்தது. எப்படியும் அவர்கள் திரும்ப நிறைய நேரமாகும். குறைந்தது மூன்று மணி நேரமாவது - போயே பத்து நிமிடம்தான் ஆகிறது - அவனு-ளுக்கு காலத்தைப் பற்றி சரியாக தெரியாது, அவர்கள் போய் முக்கால் மணி நேரத்திற்கு மேல் ஆகிறது. க்ஷணங்களின் கொதிப்பில் நிமிடங்கள் வழிந்து கொண்டிருந்தன. திரும்ப வந்து சோபாவில் அமர்கையில், ஜட்டி உறுத்தியது. ஆனால் சட்டையை கழற்றி விடலாமா என யோசித்தபடி,

**உள்ளே சில்லிப்பை உணர்ந்து இடது கையை சட்டைக்குள் விட்டு கக்கத்து வியர்வையை துடைத்து, இடது கையை முகர்ந்து பார்த்தான்-ள். தன் வாசம் தனக்கு பிடித்தது போல் தோன்றியது. மீண்டும் கண்ணாடியில் முகம் பார்த்ததும் ஒரு சமயம் தான் அலி தானோ என்ற சந்தேகம் வந்தது.**

முதல் இரு பட்டன்களை அவிழ்க்கையில் அந்த சந்தேகம் தன்னை உலுக்கியது. திடீரென அவர்கள் வந்து விட்டால் ஏன் இவன்-ள் சட்டையின்றி இருக்கிறான்-ள், வீட்டில் எப்போதுமே சட்டையின்றி இருக்கும் பழக்கமில்லாத காரணத்தால் என எண்ணக் கூடும். ஜன்னலை எல்லாம் அடைத்து விட்டு தூங்குவதால் வியர்க்கும் என்று சட்டையை கழற்றியிருக்கக் கூடும் என அவர்கள் எண்ணிக் கொள்வார்கள் என்று தன்னை சுயசமாதானம் செய்தபடி மேலும் இரு பட்டன்களை கழற்றியவனு-ளுக்கு அவள்-ன் ஞாபகம் வர, தனக்குத் தானே வெட்கப்பட்டபடி, அனைத்து பட்டன் களையும் கழற்றிவிட்டு வெகுநேரம் சட்டையைக் கழற்ற முடியாமல் குழப்பத்துடன் அறைக்குள் மெலிதாய் இங்கும் அங்கும் நடந்தான்-ள். சட்டென சட்டையை கழற்றி போட்டுவிட்டு கண்ணாடியை நோக்கி பாதி தூரம் போனதும், திரும்பி வந்து சட்டையைக் கழற்றி எடுத்து, ஆணியில் தொங்க விட்டு போனான்-ள். இருட்டடைந்த அறையின் சுவர்களில் சித்திரங்கள் நெளிந்தன. கண்ணாடியைப் பார்க்கையில், பிம்பம் இருட்டடைந்து தெரிய, விளக்கைப் போட்டு, அந்த அரைக் கண்ணாடியில் தன்னை முன்னும் பின்னும் பார்த்து திருப்தியுறாமல், பூஜை அறையை திறந்து பீரோவின் ஆளுயரக் கண்ணாடியில் தன்னை நெருக்கமாய் பார்த்தான்-ள். திரும்பினான்-ள். திரும்பினான்-ள். தன் மார்பு கதுப்பு பக்கத்தில் பொருக்கு போல் ஒன்றை மெலிதாய் கிள்ளி விட்டுக் கொண்டு, ஒருமுறை தன் மார்பால் பிம்பத்தின் மார்பில் மோதிக்கொண்டான்-ள். மெலிவான சதைகளற்ற தன் கைகளை முஷ்டி மடக்கி கம்பீரமாக இருப்பதை போல் காட்டிக் கொண்டான்-ள். தன் தொப்பூளை நெருடையில், ஜன்னலின் இடுக்கு வழியே தன்னை யாரோ கவனிக்கிறார்கள் என்பதாய் பயந்து மெல்ல நடந்து ஜன்னலை நெருங்கி, சட்டென ஜன்னலைத் திறக்க - வானம் - வலைக் கம்பிக்கு பின்னால் - இருந்த ஒளி ஓடி வந்து அறையை நிரப்பிக் கொண்டது. எரிச்சலாய் வந்தது. எப்படியும் அவர்கள் வர நிறைய நேரமாகும். ஜன்னலை அடைக்க போகிறான்-ள் என்று தெரிந்ததும் வாரிச் சுருட்டிக் கொண்டு அறையை விட்டு ஜன்னல் வலைக் கம்பி வழியே ஓடி போனது ஒளி. உள்ளே வந்து, - என்ன செய்ய - கேசட்டை போட்டு டேப்பை ஆன் செய்து, இடுப்பின் கீழ் பகுதியை லேசாய் ஆட்டி, ஆட்டி எதிரே யாரோ இருப்பது போல் சல்லாபமாய் ஆடுகையில், க்ஷணத்தில் பாட்டின் மீதிருந்த தன் லயிப்பு தப்பிப் போனது. நாராசமாய் பட்டது பாட்டு. அதை அணைத்து விட்டு, செய்வதறியாமல் சிறிது நேரம் நின்றான்-ள். திடுமென்று வந்த அமைதியில் அறையே குலுங்கிற்று. மெல்ல மெல்ல பெருத்த ஓசையாய் சுவரில் மாட்டப் பட்டிருந்த குவார்ட்ஸ் கடிகாரத்தின் நொடி முள்ளின் 'க்ராக்....க்ராக்' ஒலி பெரிதாய் கேட்பது போல் பட்டது. அறையின் குறுக்கும் நெடுக்குமாய் உலாத்தினான்-ள். தொண்டையில் ஏதோ சிக்கிக் கொண்டதாய் படவே, கொஞ்சம் நீரெடுத்து ஒரு மிடறுக்கு மேல் விழுங்க முடியாமல் திணறி, மூச்சு சூடானது. கிளாஸை வைத்து விட்டு நடந்தான்-ள். உடம்பில் ஏதோ ஊர்வதுபோல் தோன்றியது. விளக்குகளை அணைத்தான்-ள். மீண்டும் அறையின் அரையிருட்டில் சுவரில் சித்திரங்கள் நெளிந்தன. நடு ஹாலுக்கு வந்து, சட்டென்று கைலி/பாவாடையை அவிழ்த்து விட்டு, காலை சுற்றி தரையில் கிடந்த கைலி/பாவாடையில் சிறிதுநேரம் அப்படியே நின்றான்-ள். குவார்ட்ஸின் க்ராக்கை மனம் மறந்துவிட்டது. கைலி/பாவாடையை தாண்டி இரண்டு அடி நடந்து சென்று நின்று தொப்பூளுக்கு கீழே ஜட்டிக்குள் கையை விட்டான்-ள். தடவினான்-ள். கையை எடுத்து விட்டு இடுப்புப் பகுதியிலிருக்கும் ஜட்டியின் பகுதியைப் பிடித்து மிக மெலிதாய் கீழ் நோக்கி நகர்த்துகையில், கதவு தட்டப்படும் ஓசையைத் தொடர்ந்து, அழைப்பு மணியின் சப்தம் கேட்டது.

●



படிப்பகம்

www.padippakam.com

# சௌந்தர்ய லஹரியும் பிற குட்டிக் கதைகளும்

## அ. மார்க்ஸின் புனைகதைகள் பற்றி ஒரு ஆய்வு

*"விசித்திர அபிப்ராயங்கள் ஒளிந்து கிடக்கும் இடங்களை யாரறிய முடியும்!"*
**- புதுமைப்பித்தன்.**

சுந்தர ராமசாமியின் 30.4.94 தினமணி சுடர் பேட்டி பற்றி அ. மார்க்ஸ் கிழக்கு, களம் புதிது, நிறப்பிரிகை இதழ்களில் எழுதியுள்ள கட்டுரைகளிலும் புதிய நம்பிக்கையில் மறுபிரசுரமான அவரது பேட்டியிலும் மீண்டும் மீண்டும் குறிப்பிடுகிறார்.

அ. மார்க்ஸின் மேற்படி கட்டுரைகளிலும் 'புதிய நம்பிக்கை' பேட்டியிலும் இடம் பெற்றுள்ள சு.ரா.வின் தினமணி சுடர் பேட்டி பற்றிய பகுதிகளை, மேற்கோள்களை, மூலத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பதே இக்குறிப்பின் நோக்கம்.

முதலில் 'தமிழ் நவீனமான கதை' (நிறப்பிரிகை, நவம்பர் 94) கட்டுரை. இக்கட்டுரையில் மூன்று இடங்களில் சு.ரா.வின் தினமணி சுடர் பேட்டி பற்றி அ. மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

*1 தனது உன்னதப் படைப்புகள் ஒருவித 'லஹரியில்' வெளிப்படுவதாக சுந்தர ராமசாமி சமீபத்திய தினமணி சுடர் (ஏப்ரல் 94) பேட்டியில் குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது. (ஆதி சங்கரரின் 'சௌந்தர்ய லஹரியுடன் ஒப்பிட்டுப் பார்க்க).* (பக்கம் 19)

*2. தமிழகத்தில் இன்று தலித் இலக்கியம் மற்றும் எதிர்க் கலாச்சாரச் சிந்தனைகளை முன்வைப்போரை நோக்கி சுந்தர ராமசாமி போன்றோர் 'அடாவடித்தனம்' (சு.ரா.வின் முன் குறிப்பிட்ட தினமணி சுடர் பேட்டி) செய்வதாகக் கூறுவது இத்துடன் ஒப்புநோக்கத்தக்கது.* (பக்கம் 22)

*3. தலித் பண்பாட்டின் பெயரால் தமிழ்ச் சூழலில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் சொற்பமேயெனினும் ஏற்பட்டுள்ள தாக்கம் குறிப்பிடத்தக்கது. சுந்தர ராமசாமி போன்றோர் தலித் குரலால் அதிர்ச்சியடைந்திருப்பதை ஏற்கனவே குறிப்பிட்டோம்.* (பக்கம் 28)

குறிப்பு 1 மற்றும் 2 இல் இரண்டு 'மேற்கோள்களும்' (?) ஒற்றை வார்த்தைகளில் இருப்பது கவனத்திற்குரியது. ஒற்றை வார்த்தை மேற்கோள்களை திரிக்க முடியுமா? தினமணி சுடர் பேட்டியில் 'லகரி' என்று இருப்பது அ.மார்க்ஸின் மேற்கோள்களில் 'லஹரி'யாக மாறுகிறது. (அவரது பேட்டியிலும் இதே 'பிறழ்வு' நிகழ்கிறது. இதை எப்படி சாதித்தார் என்பது விளங்கவில்லை) கேள்வி-பதிலை முழுமையாகப் பார்ப்போம்.

தினமணி சுடர் பேட்டியிலிருந்து:

*கேள்வி : ஜே.ஜே. சில குறிப்புகள் உங்களுடைய இரண்டாவது நாவல். அது உருவான பின்னணியைச் சொல்லுங்கள். எவ்வளவு கால அவகாசத்தில் அது எழுதப்பட்டது?*

*பதில் : நான் எழுதிக்கொண்டிருந்தது மற்றொரு பெரிய நாவல். அந்த நாவலில் ஒரு திண்ணைப் பேச்சில் பல நண்பர்களிடையே ஒரு விவாதம் எழுந்தபோது கருத்து முடிச்சு ஒன்று விழுகிறது. அப்போது ஒரு கதாபாத்திரம், தன் சகோதரனான சம்பத்தை மறுநாள் அழைத்து வருவதாகவும், புதிய பார்வையில் அவன் விஷயத்தை அலசுவான் என்றும் சொல்கிறது. மறுநாள் சம்பத்துடன் விவாதம் தொடர்கிறது. சம்பத் தன் நண்பனான ஜோசஃப் ஜேம்ஸை மறுநாள் அழைத்து வருவதாகவும் அவன் கூரிய சிந்தனையாளன் என்றும் சொல்கிறான். ஜோசஃப் ஜேம்ஸ் என்ற பெயரை எழுதியதுமே என் மனம் சிறகு கட்டிப் பறக்கத் தொடங்கிற்று. மிகுந்த உவகை தரும் ஆவேசத்திற்கு ஆளானேன். எழுதும் நாவலை விட்டுவிட்டு ஜோசஃப் ஜேம்ஸின் அழைப்புக்கு ஏற்ப அவனைப் பின்தொடர்ந்து சென்றால் முற்றிலும் புதிய உலகம் ஒன்று உருவாகக்கூடும் என்று தோன்றிற்று. ஜே.ஜே. யின் ஓவியத்தை டாக்டர் பிஷாரடியும், எஸ்ஆர்.எஸ்ஸும் பார்க்கும் பகுதியை முதலில் எழுதினேன். அப்போது படைப்பின் ஆவேசம் முழுமையாக என்னைக் கவ்விக் கொண்டிருந்தது. அந்தப் பகுதிக்கு முன் பின்னாக வேறு பகுதிகளை எழுதிச் சேர்த்தேன்.*

*நாவலின் முதல் வடிவத்தை சுமார் மூன்று மாதங்களில் எழுதினேன் என்று நினைவு. செம்மை செய்ய சுமார் ஒரு வருடம் ஆயிற்று. மொத்த நாவலையும் ஐந்தாறு தடவைகளேனும் எழுதியிருப்பேன். படைப்பு.. படைக்கப்படும் வேளையில் லகரியைத் தந்த அபூர்வ சந்தர்ப்பம் அது.*

தற்காலத் தமிழ் அகராதியில் (க்ரியா) 'லகரி'க்கு 'இன்ப மயக்கம்' (எ.கா: மல்லிகையின் வாசனை ஒருவித லகரியை ஏற்படுத்தியது) என்று அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ளது. அ.மார்க்ஸ் லகரியை வடமொழி உச்சரிப்பில் இந்துமதம் சார்ந்த அர்த்தத்தில் புரிந்து கொள்கிறார். ஒரு சொல்லுக்கு முடிவான அர்த்தம் எதுவுமில்லை என்பதால் அவரவர் மனச்சாய்வுக்கு ஏற்ப 'ல்கரி' பயன்படுத்தப்படவும் புரிந்துகொள்ளப்படவும் செய்கிறது என்று கொள்ளலாம்.

அடுத்து குறிப்பு (2) இல் உள்ள 'அடாவடித்தனம்' எனும் ஒற்றை வார்த்தை மேற்கோளுக்கு வருவோம்.

தினமணி சுடர் பேட்டியிலிருந்து:

*கேள்வி : தமிழில் இப்போதைய இலக்கியப் போக்கு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

*பதில் : தமிழில் இப்போதைய இலக்கியப் போக்குகள் பொதுவாக மிகக் கேவலமாக இருக்கின்றன. அடாவடித்தனமும், அராஜகமும் தலைவிரித்து ஆடிக் கொண்டிருக்கின்றன. மனிதப் பண்புகளிலும், குறைந்தபட்ச ஜனநாயகப் பண்புகளிலும் நம்பிக்கையில்லாதவர்கள் தங்கள் அதிகாரங்களை அமல்படுத்த தீவிரமாக முயன்று கொண்டிருக்கிறார்கள். படைப்பின் பின் நிற்கும் நுகூஷ்மங்களும் படைப்பாளி தன்னைத் தயார் செய்து கொள்ளும் விதங்களும் சிக்கலான தளத்தைச் சேர்ந்தவை. தீவிரமான படைப்பாளியை அச்சுறுத்தி அடக்க முடியாது. படைப்புக் குணமற்றவர்கள், பெயர்களை சகட்டுமேனிக்கு உதிர்த்து குரலெடுத்துக் கத்தி, வசைகளைப் பொழிந்து படைப்பாளிகளைப் பின் தள்ளிவிடலாம் என்று கனவு காண்கிறார்கள். தமிழில் பெரிய படைப்புகள் எந்தத் துறையைச்சார்ந்தும் வராத நிலை சவடால்களுக்கு அனுகூலமாகப் போய்க் கொண்டிருக்கிறது. அதனால் அதிகாரங்கள் சிறிது செல்லுபடியாகிக் கொண்டிருக்கின்றன. பெரிய படைப்புகள் தோன்றும்போது மிரட்டல்களும் அதிகாரமும் ஆணவமும் சரியும். தரம் சார்ந்த மதிப்பீடுகள் புத்துயிர் பெறும். உருவாகி வரும் இளம் எழுத்தாளர்கள் அதிகாரத்தையும் ஆணவத்தையும் பொருட்படுத்தமாட்டார்கள்.*

'இலக்கியப் போக்குகள்' பற்றிய பொதுவான வார்த்தைகளைத் தன்னையொத்தவர்களின் இலக்கியப் போக்கைப் பற்றியதாக அ. மார்க்ஸ் எடுத்துக்கொள்வது ஏன் என்று விளங்கவில்லை.

3ஆவது குறிப்பில் "சு.ரா. போன்றோர் தலித் குரலால் அதிர்ச்சியடைந்து இருப்பதாக ஏற்கனவே குறிப்பிட்டோம்" என்கிறார். அப்படி அவர் தன் கட்டுரையில் எங்கும் குறிப்பிடவில்லை. பிறர் எழுத்துகளை திரிப்பது நமக்கு பழக்கமானதுதான். தன்னுடைய கட்டுரையை அதே கட்டுரையின் பிற்பகுதியில் திரித்து அ.மார்க்ஸ் குறிப்பிடுவதை தமிழுக்குப் புதிய வரவு என்று ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

அடுத்து, 'தமிழ் சூழலில் தலித்தியத்திற்கும் பெண்ணியத்திற்கும் எதிராய் ஒன்று குவியும் சக்திகள்' கட்டுரை. (களம் புதிது, டிசம்பர் 94 - பிப்ரவரி 95)

*1. தலித் இலக்கியத்தை தலித் அல்லாதவர்களும் பெண்ணியக் குரலை ஆண்களும் ஒலிக்க முடியும் என்று சொல்வது (சு. ரா. தினமணி கதிர் பேட்டி)* (பக்கம் 42)

*2. எழுத்து புனிதமான செயல், எல்லோராலும் எழுதிவிட முடியாது. அதற்கு ஒரு அனுபூதி நிலை வேண்டும்; லஹரி வயப்படவேண்டும் - என்று சொல்வது. (சு.ராவின் மேற்குறித்த பேட்டி)* (பக்கம் 42)

இதில் 2ஆவது குறிப்பை முழுவதுமாக அ. மார்க்ஸின் கற்பனையைச் சார்ந்தது என்று ஒதுக்கிவிடலாம். பேட்டியில் இப்படிச் சொல்வதாகப் புரிந்து கொள்வதற்கு முகாந்திரம் எதுவும் இல்லை. குறிப்பு 1 இல் உள்ளபடி தலித் இலக்கியத்தை தலித் அல்லாதவர்களும் 'ஓலிக்க' (sic) முடியும் என்று பேட்டியில் இருப்பதாகக் கூறுவது பச்சைப் பொய். பேட்டியில் தலித் இலக்கியம் பற்றிய கேள்வி எதுவும் இல்லை. இதே பொய்யை 'கிழக்கு' மே 1994, *'சோ' வுக்கு மீசை முளைச்சால் 'சுஜாதா'* கட்டுரையிலும் எழுதுகிறார்.

*"தலித்களைப் பற்றி பார்ப்பான்களும் எழுதலாம்; பெண் விடுதலை பற்றி நானும் எழுதுவேன்; இலக்கியத்தில் சாதி வித்தியாசம் பார்க்கிறவர்கள் அடாவடிப்பயல்கள். முதன் முதலில் நான்தான் தலித் நாடகம் போட்டேன் எனத்'தடாலடியாக' உரிமை கொண்டாடுவது அபத்தம்". இவைதான் இன்றைய இலக்கியச் சூழல் பற்றி இவர்கள் முன் வைக்கும் கருத்துக்கள். பார்க்க: இந்தியா டுடே இலக்கிய மலரில் கோமல் சாமிநாதன் கட்டுரை மற்றும் 30.4.94 தினமணி சுடரில் சு.ரா. பேட்டி. "இலக்கியத்தில் சாதி கூடாது என்றால் 'எங்கே பிராமணனும்' 'பெட்டி'யும் யாருடைய நலனுக்காக எழுதப்பட்டுள்ளன ? பார்ப்பன நலன் முன் வைக்கப்படவில்லை எனச் சொல்ல சுந்தர ராமசாமியும் கோமல் சுவாமிநாதனும் தயாரா ?"* (பக்கம்79)

கீழ்க்கண்ட கேள்வி பதிலின் ஒரு பகுதியை தலித்துகளை குறிப்பதாக எடுத்துக்கொள்ள முடியும். தினமணி சுடர் பேட்டியிலிருந்து :

*கேள்வி : தமிழிலக்கியத்தில் தமிழ் அடையாளமும், தமிழ் வாழ்வும் இருக்கிறதா ?*

*பதில் : தமிழ் நவீன இலக்கியம் இன்றைய தமிழ் வாழ்வை முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை. எல்லோரும் எழுத்தறிவு பெற வாய்ப்பு உருவாகிக் கொண்டிருக்கும் காலம் இது. அதனால் முழு வாழ்வும் எழுத்தில் பிரதிபலிக்கக்கூடிய சாத்தியக்கூறும் அதிகமாகிக் கொண்டு வருகிறது. இன்று வரையிலும் மேல்தட்டு வாழ்க்கையும், மத்தியதர வாழ்க்கையும் கணிசமாகப் பதிவாகி இருக்கிறது. அதுவும் ஆசாரங்களுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டுதான். வாழ்வின் ஸ்திதியை வெளிப்படையாக முன்வைக்க இங்கு தடைகள் அதிகம். மேல்தட்டு, மத்தியதர வாழ்க்கை ஒளிவுமறைவு இன்றிப் பதிவாக வேண்டும். கீழ்த்தட்டு மக்களின் துன்பங்களும் ஒடுக்கு முறைகளும் மிகக் கொடியவை. அவர்கள் தங்கள் அனுபவங்களைப் பதிவு செய்வது நாளைய தமிழ் இலக்கியத்தின் முக்கியமான பகுதியாக இருக்கும். இந்நிலைகள் கூடும்போது தமிழ் வாழ்வின் அடையாளம் இருக்கிறதா என்ற கேள்விக்கே இடமிராது.*

'சிலேட்' (ஆகஸ்ட் 92) இதழில் வெளிவந்த 'தலித் இலக்கியம் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?' என்ற கேள்விக்கு சுந்தர ராமசாமியின் பதிலிலிருந்து சில பகுதிகள் :

*இந்து சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகள் உறுதிப்பட்டு கிடக்கின்றன. சமத்துவம் அற்ற நிலையில் வாழ்க்கையில் பிணைந்து கிடக்கும் விதி ஒன்றே இங்கு சமத்துவமாக இருக்கிறது. மேல்தட்டு மக்கள் தங்களுக்குள் கொண்டிருக்கும் ஏற்றத் தாழ்வுகளுக்கும் அடித்தட்டு மக்களின் ஏற்றத் தாழ்வுகளுக்கும் இடையே மிகப் பெரிய கருஞ்சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது. ஜாதியின் இருள் இது. இந்த இருளின் இரு பக்கங்களிலும் முற்றிலும் வேறுபட்ட வாழ்க்கை கிளர்ந்தெழுந்திருக்கிறது. ஒரு பக்கம் உழைத்து நாகரிகத்தை உருவாக்கியவர்கள். மறுபக்கம் அவர்கள் உருவாக்கிய நாகரிகத்தின் மேல் தங்கள் வாழ்க்கையைக் கட்டி எழுப்பி அவர்களுடைய உழைப்பைச் சுரண்டி தங்களுடைய ஆளுமைகளை வளர்த்துக்கொண்டவர்கள். அவர்கள் வளர்த்துக்கொண்ட ஆளுமைகள் உழைப்பாளிகளின் நாகரிகத்தை அவமதிப்பது எண்ணெயை சுடர் இழிவுபடுத்துவது போல் ஆகும். சுடரின் பிரகாசம் எண்ணெயின் சக்தியே அன்றி வேறு அல்ல. ஜாதியின் பிளவைத் தாண்டி மேல்தட்டுப் படைப்பாளியால் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையைப் பற்றிப் பேச முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை.*

*தலித் மக்கள் மொழியில் தங்களை முன் வைக்கும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இன்று வரையிலும் மேல்தட்டு அறிஞர்கள் சொல்லியிருப்பவையே அவர்களைப் பற்றி அறிய நமக்கு அடிப்படையாக இருந்திருக்கிறது. தலித் மக்கள் தங்களைப் பற்றி சொல்லிக் கொள்ள முற்படும்போது இந்த அடிப்படைகள் தகர்ந்து போகலாம். மேல்தட்டுக் கற்பனைகளின் அபத்தங்கள் இனி வெளிப்படலாம். ஒடுக்கப்பட்ட மக்கள் வித்தியாசமானவர்கள் மட்டுமல்ல, முற்றிலும் வேறுபட்டவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களுடைய நீதிகள், ஒழுக்கங்கள், மதிப்பீடுகள், நாகரிகங்கள் மேல்தட்டினர் பிடித்து வைத்திருப்பதை ஆமோதிப்பவையாக இருக்க வேண்டும் என்பதில்லை. தாங்கள் அனுசரித்து வரும் நாகரிகத்தை ஒடுக்கப் பட்டவர்களும் அனுசரிக்கும் சமூகத்தை உருவாக்குவதே ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை என்று கற்பனை செய்து கொள்ள மேல்தட்டுச் சிந்தனையாளர்களுக்கு இனி உரிமை இல்லை.*

*வாழ்க்கையைப் பற்றி அறிய முழு வாழ்க்கையை உள்ளடக்கும் படைப்புகள் தேவை. இதுகாறும் நாம் அறிந்திருக்கும் வாழ்க்கை பெரிதும் மேல்தட்டு வாழ்க்கையே. விடுபட்டுப் போன மிகப்பெரிய பகுதி ஒன்று அதன் சுவடுகளை படைப்பில் பதிக்கும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அப்படைப்புகள் முன்வைக்கும் பார்வை வாழ்க்கையைப் பற்றிய நம்முடைய பார்வையை விரிவுபடுத்தி நம் அடிப்படைகளையே மறுபரிசீலனை செய்ய நம்மை வற்புறுத்தலாம்.*

சிலேட் கேள்வி பதிலுள்ள "ஜாதியின் பிளவைத் தாண்டி மேல்தட்டுப் படைப்பாளியால் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையைப் பற்றி பேச முடியும் என்று எனக்கு தோன்றவில்லை" போன்ற வாக்கியங்கள் அ. மார்க்ஸ் உருவாக்க விரும்பும் ஜாதி அடிப்படையிலான கறுப்பு வெள்ளை பிம்பங்களுக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடியவை. எனவேதான் இதற்கு நேர்மாறான கருத்தை தினமணி சுடர் பேட்டியில் சொல்லியிருப்பதாக பொய் சொல்ல வேண்டிய கட்டாயம் அவருக்கு உருவாகிறது. தலித் அல்லாதவர்களும் தலித் வாழ்க்கையை இலக்கியத்தில் முழுமையாகப் பதிவு செய்ய முடியும் என்று சு.ரா. கூற வேண்டும் என்பதே இவருடைய அவா.

அடுத்தது, 'இதுதாண்டா தலித் இலக்கியம்' (கிழக்கு, டிசம்பர் 94) கட்டுரையில்:

*சுஜாதா, சுந்தர ராமசாமி, ஞானி போன்றவர்களால் ஆரம்பத்திலிருந்தே தலித் இலக்கிய முயற்சிகளைச் செரித்துக்கொள்ள முடியவில்லை. 'அடாவடித்தனம்' என்றார் சு.ரா.* (பக்கம் 71)

மீண்டும் அதே ஒற்றை வார்த்தை மேற்கோள்.

பொய்கள், பச்சைப் பொய்கள், மேற்கோள்கள் என்ற தொடர் அ. மார்க்ஸின் கட்டுரைகளுக்கு பொருந்தக்கூடியது.



படிப்பகம்

www.padippakam.com

அ. மார்க்ஸின் 'புதிய நம்பிக்கை' பேட்டியிலிருந்து: *சுந்தர ராமசாமியின் பேட்டியொன்று சமீபத்தில் 'தினமணி கதிரில்' வெளிவந்திருந்தது. அந்தப் பேட்டியில் அவர் இன்னும்கூட எழுத்துகள் பற்றிய மிகவும் பிற்போக்கான பார்ப்பனிய சிந்தனையில் மூழ்கியிருக்கிறார் என்பது வெளிப்பட்டது. எழுத்து என்பது மிகவும் புனிதமான செயல் என்றும், தான் கவிதை எழுதும்போது ஒரு பெரிய லஹரியில் மிதந்து கொண்டு எழுதுவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். எனவே எழுத்து என்பது இறைவனுடைய திருவருளால் அனுசரிக்கப்பட்டவர்கள் அனுபூதி கொண்டு எழுதும் உன்னதமான விசயம் என்கிற கோட்பாட்டை தாங்கிக் கொண்டிருப்பவர் சுந்தர ராமசாமி.*

அ. மார்க்ஸின் திரித்தல்களிலிருந்து சில விஷயங்களை உணர முடிகிறது.

ஒன்று : பிரதிக்கும் அவருக்குமான உறவு பற்றியது. பிரதியின் உள் முரண்பாடுகளையோ பிறழ்வுகளையோ சறுக்கல்களையோ இவர் ஒருபோதும் கவனப்படுத்துவது இல்லை. மாறாக தான் விரும்பும் அர்த்தங்களை கக்குமாறு பிரதியை மிரட்டுகிறார். நவீன சிந்தனைகளின் இந்த ஒப்பற்ற சிகரத்திற்கும் பிரதிக்குமான உறவு வன்முறை நிறைந்தது என்பது தெளிவு.

இரண்டு : தன் வாசகர்கள் (பக்தர்கள்?) பற்றிய இவருடைய கணிப்பு. தினமணி சுடர் போன்ற வெகுஜன இதழில் வெளியான பேட்டியை எந்தக் கவலையும் இன்றி இவர் திரிக்கும்போது தன் வாசகனிடம் அம்பலமாகிவிடுவோம் என்ற கவலை இவருக்கு சிறிதும் இல்லை. இது தன் வாசகர்கள் பற்றிய இவருடைய இழிவான எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. தன்னுடைய பிரதான வாசகர்களாக தலித்துகளை இவர் காண்பது நம கவனத்திற்கு உரியது.

மூன்று: பழமையான சிந்தனைகளை தகர்ப்பதற்காக நவீன சிந்தனைகளை, தத்துவங்களை கையாள்வதாக கூறிக்கொள்ளும் இவருக்கு ஒரு பேட்டியைக்கூட நேர்மையாக மறுப்பது இயலாத ஒன்றாக இருக்கிறது. ஒரு வாக்கியத்தைக் கூட முழுமையாக மேற்கோள் காட்டி மறுக்க இவரால் இயலவில்லை. எனவேதான் பேட்டியைத் திரிப்பதும் வாசகர்களை ஏமாற்றுவதும் இவருக்கு அவசியமாகிறது.

இக்குறிப்பை அ. மார்க்ஸின் ஒரு முழுமையான மேற்கோளுடன் முடிப்பது பொருத்தமாக இருக்கும். 'களம் புதிது' (டிசம்பர் 94 - பிப்ரவரி 95) தமிழ்ச்சூழலில் தலித்தியத்திற்கும் பெண்ணியத்திற்கும் எதிராய் ஒன்றுகுவியும் சக்திகள், பிற்சேர்க்கை-1, பக்கம் 49)

*தமிழ்ச் சூழலில் பார்ப்பனீயத்தை உயர்த்திப் பிடிக்கும் 'இந்தியா டுடே' பத்திரிகையை கடந்த இரண்டாண்டுகளாக தமிழகம் முழுவதும் தமிழின் உணர்வுடையோர், பார்ப்பனிய எதிர்ப்பாளர்கள், தலித்திய - பெண்ணியச் சிந்தனைகளில் நாட்டமுடையோர் எனப் பலரும் எதிர்த்து வருவதை நாம் அறிவோம். வரும் ஆகஸ்டு 21 இல் 'இந்தியா டுடே' சிறப்பு ஆண்டுமலர் ஒன்றை வெளியிட இருக்கிறது. இது குறித்து 'இந்தியா டுடே' வெளியிட்டுள்ள விளம்பரத்தில் கோவை ஞானி முதன்மைப்படுத்தப்பட்டுள்ளார். கோவை ஞானி போன்ற 'ஜாம்பவான்கள்' 'இந்தியா டுடே' ஆண்டு மலரில் அமுது படைக்கப்போகிறார்களாம்! ஞானியோடு 'இந்தியா டுடே' 'லிஸ்ட்' பண்ணியுள்ள மற்ற ஜாம்பவான்களில் ஒருவர் தவிர மற்றவர் அனைவரும் பார்ப்பனர்கள். இது ஏதோ ஞானியின் விசுவாசத்திற்கு தூக்கி எறியப்பட்டுள்ள சிறு பரிசு என்று சொல்லி விட்டால் போதாது. மாறாக நாம் முன்பு குறிப்பிட்டது போல ஞானியை முதலில் ஜாம்பவனாக நிறுத்தி, பிறகு அவர் வழியாக வேலையைச் செய்யும் முயற்சிதான் இது. இரண்டாண்டுகளுக்கு முன்பு பாண்டிச்சேரியில் 'நிறப்பிரிகை' கூட்டிய கூட்டமொன்றில் 'இந்தியா டுடே' இதழைக் கிழித்து மலம் துடைக்க முடிவு செய்யப்பட்டது நினைவிருக்கலாம். மலம் துடைத்த பக்கங்களை விரித்து அதில் ஞானி படைக்கும் 'அமுதை' வைத்து தமிழ் மக்களிடம் நீட்டுகிறது 'இந்தியா டுடே'!*

○

## வால்கள்

அ. மார்க்ஸின் சில வாக்கியங்களை கவனிப்போம்.

1. 'தமிழ்ச் சூழலில் தலித்தியத்திற்கும் பெண்ணியத்திற்கும் எதிராய் ஒன்று குவியும் சக்திகள்' (களம் புதிது, டிசம்பர் 94-பிப்ரவரி 95, பக்கம் 42)

*'தலித் இலக்கியத்தை தலித் அல்லாதவர்களும் பெண்ணியக் குரலை ஆண்களும் ஒலிக்க முடியும் என்று சொல்வது. (சு.ரா. தினமணி சுடர் பேட்டி) ஒரு மாற்றுக் கருத்து என்ற அளவில் இப்படிச் சொல்வதே பாவம் என நாம் சொல்லவில்லையாயினும்...'*

அ. மார்க்ஸின் இந்தப் பரந்த ஜனநாயக நோக்கை அவருடன் கருத்து ரீதியாக வேறுபடத் துணிந்திருப்பவர்கள் கவனிக்க வேண்டுகிறேன். தமிழில் 'தவறு', 'குற்றம்' போன்ற வார்த்தைகள் பரவலான புழக்கத்தில் இருக்கும்போது அ. மார்க்ஸ் 'பாவம்' என்ற சொல்லை தேர்வு செய்திருப்பதை கவனிக்க வேண்டும். மதச் சிந்தனைகளிலிருந்து பிரிக்க முடியாதபடி பிணைந்து கிடக்கும் சொல் இது. புண்ணியம் சேர்ப்பதில் நம்பிக்கையற்றவர்கள் 'பாவத்தில்' நம்பிக்கை வைப்பதில்லை. 'புண்ணியம்' புனிதத்துடனும், 'பாவம்' அசுத்தத்துடனும் நேரடியான உறவைக் கொண்டிருக்கின்றன.

2. அ. மார்க்ஸின் 'இதுதாண்டா தலித் இலக்கியம்' ('கிழக்கு' டிசம்பர் 94) கட்டுரையிலிருந்து இரண்டு மேற்கோள்கள்:

*(i) கேசவனது கட்டுரை அடுத்தடுத்த இரு 'புதியன' இதழ்களில் வந்துள்ளது. முதல் பாதி வெளியானவுடனேயே, இரண்டாம் பகுதி வெளிவரும் வரை கூடப் பொறுத்திருக்க இயலாமல் நமது பண்பட்ட விமர்சனச் சகோதரர்களாகிய தி.க.சி.யும், வ.க.வும் 'இதுதாண்டா தலித் இலக்கியம் - கேசவன் சொல்வதுதாண்டா தலித் இலக்கியம்" என ஆரவாரித்துக் கடிதங்கள் எழுதியிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.* (பக்கம் 76)

*(ii) ச. தமிழ்ச்செல்வன் பேட்டி (சாரதா-இதழ் 5,6). இந்தப் பேட்டியையும் முடியும் முன்னரே தி.க.சி.யும், வ.க.வும் பாராட்டி விடுகின்றனர்.* (பக்கம் 77)

தி.க.சி.யும் வல்லிக்கண்ணனும் பாராட்டி எழுதும் கடிதங்களின் அடிப்படையில் ஒரு விவாதத்தை நடத்த முடியாது என்றே தோன்றுகிறது. இவர்கள் இருவருக்கும் படிப்பதும், பாராட்டுவதும் வேறு வேறான நடவடிக்கைகளே அல்ல. இவர்களில் படிப்பதும், பாராட்டுவதும் - கர்ப்பமும் பிரசவமும் போல-பிரிக்க முடியாத தொடர்ச்சியைக் கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது. விதிவிலக்காக சுமார் பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை இவர்கள் திடீரென்று ஏதாவது ஒன்றை விமர்சித்துவிடுவதை 'குறைப் பிரசவமாகவே' கொள்ள வேண்டும்.

மேலும் 'பேட்டி முடியும் முன்னரே தி.க.சி.யும், வ.க.வும் பாராட்டி விடுகின்றனர்' என்று சொல்வது யதார்த்தத்தின் பிறழ்வேயாகும். ஒவ்வொரு இதழையும் பாராட்டி கடிதம் எழுத வேண்டும் என்ற பொறுப்பை இவர்கள் சுமந்து கொண்டிருப்பதால் இந்த இடையீடு தவிர்க்க முடியாத ஒன்று என்றுதான் புரிந்துகொள்ள வேண்டும்.

*(மேற்கோள்களில் அழுத்தங்கள் என்னுடையவை)*

**கண்ணன்**



படிப்பகம்

www.padippakam.com

# காலை வெயிலின் மிதமான வெக்கை

**க. பூரணச்சந்திரன்**

காலம் மாறுகிறது. காலப்போக்கில் சமூக மாறுதல்கள் எத்தனையோ நிகழ்கின்றன. அவை சமூகத்தின் எல்லாக்கூறுகளிலும் ஏதோ ஒருவிதத்தில் வெளிப்பாடு பெறவும் செய்கின்றன. நகரங்கள் மனிதப் புற்றுகளாகி வளர்கின்றன. கிராமங்கள் சீர்குலைகின்றன. மனித உறவுகள் வீழ்ச்சியடைகின்றன. அன்பு பாசம் போன்றவை - கொஞ்சகாலம் முன்னர் வேண்டியமட்டும் கிடைத்தவை- விலை வைக்கப்படுகின்றன; நீர் காற்று போல விஷமாகின்றன. வாழ்வின் தகிப்பு நாளுக்குநாள் ஏறுகிறது. இவற்றையெல்லாம் ஆரவாரமற்ற, எளிய முறையில் சொல்லுகின்ற ஒரு நாவல் பெருமாள் முருகனின் 'ஏறுவெயில்.'

தலைப்பே பல தளங்களில் அர்த்தம் தருகிறது. விளையும் காடுகள் கூறுபோடப்பட்டு, வீடுகள் கட்டப்பட்டுக் 'காலனிகள்' ஆகின்றன. இங்கே, வெயில் என்பது மனிதனின் கொடுமைக்கும் அழிவுக்கும் குறியீடாகிறது.

பொன்னையனின் குடும்பமும் இத்தகைய நிலைக்குத்தான் ஆளாகிறது. தாங்கள் இருந்த வளமான காட்டையும் வீட்டையும் கிணற்றையும் விற்றுவிட்டுச் சென்ற பொன்னையனின் அப்பன், வேறோரிடத்தில் காணி வாங்கி, அதிலும் பாதியை விற்கவேண்டி வருகிறது, தன் மூத்த மகனுக்குக் கடைவைத்துக்கொடுக்க. இறுதியில் பைனான்ஸில் பணத்தை இழந்து, மீதிக்காணியையும் விற்றுவிட்டுத் தான் வெறுத்த 'காலனி'யிலேயே வீடுவாங்கிக் கொண்டு இடம் பெயர வேண்டி வருகிறது. "வாலுபோச்சு கத்தி வந்தது" கதையாக ஒரு குடும்பம் சிறிது சிறிதாகச் சிதைகிறது. இதையும் 'ஏறுவெயில்' என்ற தலைப்பு உணர்த்துகிறது.

பொன்னையனின் குடும்பம் மட்டுமன்றி, அவனைச் சுற்றியிருக்கின்ற சமூகம் முழுவதும் ஒரு சீரழிவுக்குச் சிறிதுசிறிதாக ஆட்படுவதை நாம் காண்கிறோம். அதற்குமுன்பு கிராமமாக இருந்த இடங்களும் விளைநிலங்களும் இப்போது கான்கிரீட் காடுகளாக மாற, எங்கும் லாரிகள் முளைக்கின்றன. எங்கும் வாணிகப் பெருக்கம். ஃபைனான்ஸ்கள் ஏராளமாக ஏற்படுகின்றன. கூடவே மஞ்சள் நோட்டீஸ் தருபவர்களும். எல்லாமே வியாபாரமாக மாறுகிறது. பணத்துக்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற மனோபாவம் ஏற்படத் தொடங்கி, அதற்காக எதையும் பணயம் வைக்கிறார்கள். மேற்பூச்சில் மயங்குகிறார்கள்; மயங்கித் திசைகெட்டு அலைகிறார்கள் மக்கள். இதுவும் 'ஏறுவெயில்' தான்.

இறுதியாக, இந்த நாவலின் மையக் கதாபாத்திரத்தின் நிலைக்கும் இந்தத் தலைப்பு பொருத்தமாகிறது. பொன்னையன், நாவல் தொடங்கும்போது பத்தாம் வகுப்புப் படிப்பவன். இவனுக்கு வழிகாட்டி/முன்மாதிரிப் பாத்திரம் இவனது தாத்தா. (ஓரளவில் இவனது அப்பனையும் சொல்லலாம்). பல்வேறு ஜாதிகள், கட்சிகள் போன்றவற்றைச் சார்புபடுத்தும் நிலைப்பாத்திரங்களும் வருகிறார்கள். பொன்னையனின் மூன்றாண்டுக் கால வளர்ச்சியை/முதிர்ச்சி பெறும் பருவத்தை—அவனது இளங்காலைப் பருவத்திலிருந்து முற்பகல் வரை - நாவல் கொண்டுசெல்வதாலும் 'ஏறுவெயில்' என்னும் தலைப்பு பொருந்துகிறது.

நாவலில் தொடர்பற்று உதிரியாகவே சம்பவங்கள் அமைந்தாலும் (எபிஸாடிக்), அவற்றின் தேர்விலும் இணைப்பிலும் ஒரு இன்றியமையாமை இருக்கவே செய்கிறது. ஒரு தேர்ந்த கையின் முதிர்ச்சி வெளிப்படுகிறது. (ஒருவகையில் இதைப் படிக்கும்போது பிரதாப முதலியார் சரித்திரம் ஞாபகம் வருகிறது - மைனஸ், அதன் நகைச்சுவை). பொதுவாகவே தமிழ்நாவல்களில் - மற்ற இந்திய மொழி நாவல்களோடு ஒப்பிடுகையில் - காலப்பின்னணி, வரலாற்றுப் பின்னணி குறைவு. அந்தக் குறை இந்த நாவலில் இல்லை. பொன்னுவின் வாழ்க்கை மாறுதல்கள் யாவற்றிற்கும் அந்தச் சமூகத்தில் ஏற்படும் மாறுதல்களுக்கும் இடையறாச் சம்பந்தம் இருக்கிறது. ஆனால் இந்த சம்பந்தம், ஒருவழிப்பாதைதான். நாளுக்குநாள் மாறும் சமூகநிகழ்வுகள் தங்கள் தகிப்பில் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கின்றன. நாவலின் களம், மனிதத்தன்மையற்ற மாற்றங்கள் பலவற்றிற்கு உட்படுகிறது; ஆனால் கதையின் நாயகன் ஒன்றும் செய்ய இயலாத செயப்படுபொருளாக, ஏற்பியாக இருக்கிறான். இவனது குடும்பத்திலேயே நிகழ்கின்ற சண்டைகளைத் தடுக்கவோ குடும்ப மனிதர்களின் போக்கை மாற்றவோ முடியவில்லை - குறைந்தபட்சம். இவனது செயல்படும் களம் என ஒன்றுமே இல்லை. இம்மாதிரி, நாவல் ஒருவித பெண்மைப்படுத்தல் நிகழ்கிறது - அடுப்பங்கரைக்குள் புகுந்து அழுதல் தவிர வேறெதும் செய்ய இயலாத ஒடுக்கப்பட்ட பெண் நிலையில் - இவன் வைக்கப்படுகிறான். குடும்பத்திலும் சமூகத்திலுமுள்ள உடைப்புகளை அதன் பிரதிநிதிகளான தனது சகோதரி, அம்மா, தாத்தா போன்றோர் மூலமாகவே எதிர்கொள்ள முடிகிறது.

இந்த நாவலின் மையக்கருத்து, சமூகம் மாறிச் செல்கின்ற முறையும் அதனால் சுற்றுச் சூழலிலும் மனிதர்கள் மனங்களிலும் ஏற்படுகின்ற பாதிப்பும்தான். இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் கோயிலுக்கும் தெய்வத்திற்கும்கூடப் பாதுகாப்பில்லை. மாரியம்மன் கோயில் ஒன்று இவர்களுடைய பழைய வீட்டு நிலப்பகுதியில். பக்கத்திலேயே சாலை வளைவு. அடிக்கடி பஸ், லாரி சுற்றுச்சுவரில் மோதல். "சாமிக்கு எப்பவும் எந்திரங்களோடுதான் மோதல்" (5) அங்கு வருவதென்றால், அவனுக்கு விபத்தின் பய நினைவுகள்தான். "சாமியை விடப் பேய்தான் முந்திக் கொள்கிறது". (இவ்வாறு செல்லுமிடங்களில் எளிய யதார்த்தமான நகைச்சுவையையும் முரணையும் பார்க்கிறோம். இது நாவல் முழுதும் தொடர்ந்திருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும்).

இரண்டு வகையான மனிதர்கள் இந்த நாவலில் இடம் பெறுகிறார்கள். ஒருவகையினர் இன்னும் பழமைமீது நம்பிக்கை வைத்து, அன்பு-பாசம்-பந்தம் இவற்றில் நம்பிக்கை கொண்டு, தங்கள் மண்ணின்மீதும் எல்லையற்ற அன்பைப் பொழிபவர்கள். அதைப் பிரிய முடியாது தவிக்கிறார்கள். பொன்னையனது தாத்தா, பாட்டி, அப்பன் போன்றவர்களும் பொன்னையனும் இதில் சேர்த்தி. இவர்கள் அப்பாவிகளாகவும், ஏமாறுபவர்களாகவும் பிழைக்கத்தெரியாதவர்களுமாக இருக்கிறார்கள். இவர்கள் குறையற்றவர்கள் என்பதல்ல. ஜாதித்திமிர் போன்றவை இருக்கின்றன. ஆயினும் அனுபவச் செழுமையும் கூருணர்வும் மனிதாபிமானமும் கொண்டவர்கள். இவர்களுக்கு இந்த நாவலில் வரும் 'மணி' என்ற நாய் ஒரு குறியீடு. (இந்த நாவலில் வரும் மிருகக் குறியீடுகள் கொஞ்சம் பொறுமையாகப் பார்க்க வேண்டியவை).

இன்னொரு வகையான மனிதர்கள், இவர்களுக்கு எதிர்நிலை. (இவர்களுக்கு இந்த நாவலில் 'எருமை' 'பூனை' ஆகியவை குறியீடாக வருகின்றன). இவர்களின் தோல் கெட்டி. இடத்துக்குத் தகுந்தாற்போல் எளிதாக மாறிக்கொள்கிறார்கள். எதைப்பற்றியும் கவலைப் படுவதில்லை. எப்படியோ பிழைத்தாகவேண்டும் - கூடியவரை பணத்தோடு, வசதிகளோடு. பொன்னையனின் அம்மா, அக்கா, பெரியம்மா, அவள் புருஷன், தி.மு.க. மொண்டிமாரி, அ.தி.மு.க. பழனிச்சாமி போன்றவர்கள்.

இவர்கள்தான் இன்று குடும்பங்கள் சிதைவதற்குக் காரணமாக இருப்பவர்கள். ஜாதிச் சண்டைக்கு, மதச்



படிப்பகம்

www.padippakam.com

சண்டைக்கு வித்திடுபவர்கள். நிலத்தை கோரமாகச் சுரண்டுபவர்கள். மலத்திலும் பணம் கிடைக்குமா என்று பந்தபாசங்களையெல்லாம் விட்டு அலைந்து கொண்டிருப்ப வர்கள். என்றாலும், இவர்கள் யாருமே ஸ்டாக் பாத்திரங்களாக - அச்சுமாதிரிகளாக ஆகிவிடவில்லை என்பது படைப்பின் சிறப்பு. இவர்கள் எல்லாருக்குமே பல்வேறு முகங்கள் இருக்கின்றன. ஆனால் இவர்களெல் லாம் ஏன் இப்படி இருக்கிறார்கள் அல்லது ஆனார்கள் என்பதுதான் இந்த நாவல் எழுப்பும் கேள்வி. இந்தக் கேள்வியில் நிகழ்ந்த வாழ்க்கையின் முழுமைபற்றிய பார்வையில் பிறந்ததுதான் இந்த நாவல். ஒரு நாவலாசிரி யனது வேலை மனிதர்கள் எப்படியிருக்கிறார்கள் என்று சரிவரப் பார்த்துச் சொல்வதுதான் என்றால், பெருமாள் முருகன் அதை நன்றாகவே நிறைவேற்றியிருக்கிறார்.


இந்த இரண்டு வகை மனிதர்களில் பெரும் பான்மையினரான இரண்டாம்வகை மனிதர்கள் எப்படியோ பிழைத்துக்கொள்கிறார்கள். வாழ்க்கையைத் தள்ளி விடுகிறார்கள். ஆனால் முதல்வகை மனிதர்கள் ஒன்று அழிந்துபோகிறார்கள், அல்லது போராடத் திராணியற்று, செயலற்றவர்களாக இருக்கிறார்கள். இதுதான் நம் காலத்தின் முரண். இதையும் இந்த நாவல் சொல்கிறது.

இந்த நாவலின் நடை பற்றிக் கட்டாயம் சொல்லி யாகவேண்டும். ஆசிரியர் தன் சொந்த உள்ளங்கையைப் போலக் கதை நிகழும் நாட்டுப்புறத்தை அறிந்து வைத்திருக்கிறார். அவர்கள் மொழியே உயிர்த்துடிப்போடு வருகிறது. கூர்மையான, உன்னிப்பான, வட்டார நடை. கதைசொல்லல், வருணனை- விவரணைகள், உரையாடல் கள் எல்லாமே பொன்னுவின் நோக்குநிலை வாயிலாகச் சொல்லப்படுவதால், எல்லாவற்றிலும் ஒரு இசைவும் மொழியொருமையும் இருக்கிறது. ஆயினும் இம்மூன்று கூறுகளிலுமே ஓரேவித நடை கொஞ்சநேரத்தில் சலிப்பூட்டுவதாகவும் ஆகிவிடுகிறது

.நாவலின் நடையிலும் இன்னும் சுழிப்புகள், படைப்புத்திறனுள்ள வெளிப்பாடுகள், குறியீட்டு- உள்ளுறைமாதிரி தன்மைகளுக்கு இட்டுச் செல்லும் ஆக்கத்தன்மை போன்றவை குறைவு. மொழியை வைத்துப் பிழைப்பவர்கள் ஜனரஞ்சகவாதிகள்; தேவைக்கேற்பச் சரியாக மொழியைக் கையாள்பவர்கள் படைப்பாளிகள் என்றால், ஒரு புதிய மொழியையே உருவாக்குபவர்கள்தான் மிகத் தேர்ந்த இலக்கிய கர்த்தாக்கள். அந்த அளவுக்குத் தமிழில் இன்னும் இந்த நூற்றாண்டில் நாவலாசிரியர் எவரும் தோன்றவில்லை என்பது ஒரு குறைதான். அதனால்தான் இதன் இடம் என்ன என்றெல்லாம் பார்க்கும்போது சற்றே பின்வாங்க வேண்டிவருகிறது.

இந்த நாவலின் நல்ல தன்மைகள் என்று எத்தனையோ சொல்லலாம் - மனித இயற்கையினைக் கூர்ந்து நோக்கி வெளிப்படுத்தல், சாதாரண மனிதர்களின் பலங்கள் பலவீனங்களை மிக அனுதாபத்தோடு புனைதல், பழைய வாழ்க்கை மாறி வருவதால் வரலாற்று மாற்றங்களுடனான மோதலை - பார்த்தவற்றை ஒரு அந்நியமற்ற நடையில் படைத்தல், வருணனை - விவரணைகள் போன்றவை அனைத்தும் ஒன்றாய் உருகி இணைய வாலிபப்பருவத் தொடக்கத்திலுள்ள ஒரு பையனின் மனவெளிப்பாடுகளை உருவாக்குதல் எளிய விஷயமில்லை. இக்காரணங்களால் சமீபத்தில் வெளிவந்த நாவல்களுள் முக்கியமானது 'ஏறுவெயில்'. ஆயினும் இதன் முழுவிளைவு (எஃபெக்ட்) நம் மனத்தைத் தகிக்கச் செய்யவில்லை - சுட்டுப்பொசுக்கவில்லை-மாறாக சற்றே வியர்வை வழிந்தோடச்செய்யும் இளஞ்சூட்டு கொதிப்பிலேயே நிறுத்துகிறது.

**ஏறுவெயில்** (நாவல்) ஆசிரியர்: **பெருமாள் முருகன்,** திருஞி வெளியீடு, 3 மாரீசன் 5 வது தெரு, பரங்கிமலை, ஆலந்தூர், சென்னை 600 016; விலை ரூ.32



**தொலைந்துபோன கடிகாரம்**

கடிகாரம் காணாமல்
மனிதகுலம் மன்றாடியது
சூரியனிடம் -
அது அவர்களிடம்
ஒரு நாள்-
நானும் புதைந்து போவேன்
பிரபஞ்ச வெற்றுவெளிக்குள்
பிறகு யாரிடம் கேட்பீர்கள்
தொலைந்துப்போன கடிகாரத்தை

கடிகாரம் தொலைந்தால்
கவலை வேண்டாம்
இருந்ததுபோல் இருங்கள்

கடிகாரமில்லாவிட்டாலும்.

அபிப்ரியா



படிப்பகம்

www.padippakam.com

## காலச்சுவடு இதழ் 10: ஒரு பார்வை

எஸ்.என். நாகராஜனின் விரிவான பேட்டி நல்ல முயற்சி என்றாலும் இன்னும் நன்றாகச் செய்திருக்கலாமோ என்று படுகிறது. எஸ்.என்.ஐ பேட்டி எடுத்ததில் உள்ள சிக்கல் பற்றி நீங்கள் முன் குறிப்பில் குறிப்பிடுவது உண்மைதான். **His discourse cannot be confined to a rigidly disciplined, formal, coherent, systematic and unilinear narrative. That's his strength and weakness as well. And herein lies the paradox.** ஒரு சிலமணி நேரம் நடத்திய ஒலிப்பதிவு செய்யப்பட்ட பேட்டியிலிருந்து அவர் தொட்டுச் செல்லும் பல விஷயங்களை முழுவதுமாக உள்வாங்க இயலாது. தமிழ்நாட்டில் அவர் எழுப்பும் சில முக்கியமான அடிப்படையான கேள்விகளை விவாதிக்கவும் திறந்த மனதுடன் பரிசீலனை செய்யவும் மிகக் குறைந்த குரல்களே இருக்கின்றன. அவரிடம் பொதிந்துள்ள பாரம்பரிய விவேகமும் விழிப்புணர்வும்தான் அவரது பலங்கள். நமது சம்பிரதாயமான உலகப்பார்வையின் ஆழங்கள் அவரது பேட்டியில் நமக்குப் பார்க்கக் கிடைக்கின்றன. ஆனால் இவை ஒன்றுடன் மற்றொன்று இடித்துக் கொண்டு நெருககுவதால அவர் சொல்வதிலும் நாம் கேட்பதிலும் இடறல்கள் மிகுந்து இரு தரப்பு பலவீனங்களாகவும் எஞ்சி விடுகின்றன. மற்றபடி அவர் சொல்லும் சில விஷயங்களில் எனக்கு வேறுபட்ட கண்ணோட்டங்கள் இருக்கின்றன. வர்க்கம், ஜாதி, வர்ணம் **dynamics** பற்றி, திராவிட இயக்கம் பற்றி, மண்டல் கமிஷன் பற்றி, அவர் சொல்லும் கருத்துகள் ரொம்பவும் எளிமைப்படுத்தப் பட்டிருக்கின்றன. காந்தி பற்றியும் மாவோ பற்றியும் அவர் இன்னும் விரிவாக விளக்க வேண்டியிருக்கிறது. கீழை மார்க்சியம், கீழை இயங்கியல் பற்றி 'அன்பு', 'விடுதலை' என்று அவர் தொடர்ச்சியாகப் பேசி வருவதைவிடத் தெளிவாகவும் ஆராய்ச்சிபூர்வமாகவும் ஒரு விமர்சனப் பார்வையை உருவாக்குவதுதான் நம்மை இந்த இடத்திலிருந்து வேறு தளங்களுக்கு இட்டுச் செல்லும். இவருடைய கீழை மார்க்சியம் என்ற உருவாக்கம் பிராங்பர்ட் குழுவைச் சார்ந்த அடார்னோ, மார்க்யூஸ், ப்ரோம் போன்றவர்களிடமிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதை அவர் விளக்க வேண்டும். ராமஜன்ம பூமி - பாபர் மசூதி பிரச்சினை, இந்துத்துவ அரசியல் பின்னணி, எம்.ஜி.ஆரின் கவர்ச்சி பற்றியெல்லாம் அவர் சொல்வது தமாஷாகத்தான் இருக்கிறது. நம்ம ஊர் டீக்கடையில் உட்கார்ந்து கொண்டு ஊர் உலகத்தில் நடக்கிற விஷயங்களைப்பற்றி எதையெதையோ பேசிவிட்டு துண்டை உதறி தோளில் போட்டபடி நடையைக் கட்டும் பெரிசுகளின் உதிர்த்தல்களைப் போல அமைந்திருக்கிறது. இதுமாதிரியான உணர்வுபூர்வமான வெளிப்பாடுகள் நமக்கு எந்த வகையிலும் பயன்படாது. உலகத்தில் இருக்கிற எல்லா விஷயங்களைப் பற்றியும் எஸ்.என்.க்கு தனிப்பட்ட முறையில் பலவிதமான கருத்துகள் இருக்கலாம். தாராளமாக இருக்கட்டும். ஆனால் அவை அனைத்துமே முக்கியம் என்று கருத வேண்டியதில்லை. அவரிடமிருந்து இன்னும் தெளிவான, விரிவான அடிப்படையான விஷயங்கள் எதிர்பார்க்கப்படுகிறது. இதை அவர் சீர்பட தொகுத்துத் தருவது ஒரு சமூகக்கடமையும்கூட.

இங்குதான் சமூக அறிவியல் ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை நாம் உணரவேண்டியிருக்கிறது. தமிழ்நாட்டில் இன்று மிகக் குறைந்த அளவிலேயே சமூக ஆய்வறிஞர்கள் தீவிரமாக இயங்கி வருகின்றனர். சமூக ஆய்வுகளின் வறட்சியைப் போக்கும் முகமாக காலச்சுவடு சில முயற்சிகளையேனும் செய்வது அவசியம். இவ்விதழில் அஷிஸ் நந்தியை (வளர்ச்சியும் அதிகாரத்துவமும்) ஸ்ரீனிவாசன் மொழிபெயர்த்திருப்பது வரவேற்கப்படவேண்டிய விஷயம். தமிழ் சிறுபத்திரிகைச் சூழலின் தர்க்கரீதியான நீட்சியாக காலச்சுவடிலும் ஒரு மிகைப்படுத்தப்பட்ட நம்பிக்கையின்மை நிலவுவதாகவும் இதுமாதிரியான எதிர்மறையான உருவாக்கங்கள் சிறு பத்திரிகைகளின் இருப்பை நியாயப்படுத்த அவசியமானவை என்றும் ஜி.எஸ்.ஆர் மற்றும் ஜெயமோகனின் விமர்சனங்கள் தெரிவிக்கின்றன. அவர்கள் பார்வையை கருத்தில் கொள்ள வேண்டியதுதான். இருப்பினும் சிறுபத்திரிகைகளின் அளவுகோல்களில் எந்தவிதமான சமரசமும் இருக்கக்கூடாது. தமிழ் வாழ்வுகுறித்து காலச்சுவடு கவலைப்படுவது ஒரு அதீதமான சுய புலம்பல் என்று ஜி.எஸ்.ஆர். குறிப்பிடுவது உடன்பாடானதல்ல. உலகின் எல்லா இடங்களிலும் பிரச்சினை இல்லையா? அப்புறம் ஏனய்யா தமிழ்நாட்டிற்கு மாத்திரம் ஏழரை நாட்டுச்சனி பிடித்த மாதிரி கூரையின் மீதிருந்து கதறுகிறீர்கள் என்று கேட்கிறார் ஜி.எஸ்.ஆர். காலச்சுவடின் சந்தாதாரர்களை ஐம்பதாயிரம் ஆக்கினாலும் தமிழ் நாட்டிலுள்ள இருளையோ புகையையோ ஒன்றும் செய்துவிட முடியாது என்கிறார். இன்னும் நூறு வருஷமானாலும் இதே கதையைத்தான் கேட்டுக்கொண்டிருப்போம் என்று சொல்கிறார். இதையே ஜெயமோகனும் 'சிறுபத்திரிகை நடத்துவது ஒரு அபத்தமான தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளக்கூடிய செயல்' என்று அவர் நண்பர் சொன்னதில் உண்மை இருப்பதாகக் காண்கிறார். புரட்சித்தலைவியின் குருமான புன்சிரிப்பை எதிர்கொள்ள வேண்டிய சமூக யதார்த்தத்தில் 'வாழ்க்கைக்கு பிரயோசனப்படுகின்ற திறனும் நடைமுறைத் தந்திரங்களும்' என்ற மந்திரத்தால் கட்டுண்டு கிடக்கிறோம். இயந்திரவாதப் பகுத்தறிவின் நடைமுறைத் தர்க்கத்தின்படி பார்த்தால் இன்று நாம் செய்ய வேண்டிய ஒரே காரியம் பங்குச் சந்தையில் பண முதலீடு செய்வது மட்டும்தான். ஒரு பக்கம் செல்வியின் பிரம்மாண்டமான கட்அவுட்டுகள், சரத்குமாரின் நூறு நாட்களைத் தாண்டும் படங்கள், மற்றொரு பக்கத்தில் பாலகுமாரன், சுஜாதா, மாலன், கமலஹாசன் ஆகியோர் அடங்கிய 'அறிவு ஜீவித' கலாச்சாரச் சூழல். வேறொருபுறம் வாயிலிருந்து வால் முளைத்து கபாலத்திற்குள் ஒளி வெடித்துச் சிதறும் மாயாஜாலப் பிசாசுகளை கிளப்பும் சில சிறுபத்திரிகைகள். இவை ஒன்றாகக் கலக்கும் சூழல்தான் நம் தமிழ்த்திருநாடு! இப்படி ஒரு பயங்கரமான அசம்பாவிதம் இவ்வளவு பிரம்மாண்டமான இந்தப் பேரண்டத்தில் வேறெங்கேனும் நிகழ்ந்து கொண்டிருக்குமா என்பது சந்தேகமே. 'மக்கள் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும் வழிகளையெல்லாம் இந்த வெகுஜன மீடியா அடித்து நொறுக்கி விட்டது. இந்தச் சூழலில் காலச்சுவடு போன்ற சின்னப் பத்திரிகைகளுக்கு என்ன பங்கு இருக்க முடியும்?' என்று கேட்கிறார் ஜெயமோகன். இவர் எழுப்பும் இந்தக் கேள்வி மிக முக்கியமானது. இதுபற்றி விரிவாக விவாதிக்க வேண்டும். மாற்றங்கள் தற்சமயத்தில் வரலாறு எங்குமே கண்டிராத வேகத்தில் நம் ஒவ்வொரு அசைவுகளையும பாதிக்கிறது. படுக்கையறையிலிருந்து பூஜையறை வரை. வாழ்வின் சகல பரிணாமங்களிலும். இந்த மாற்றங்கள் தொடர்ந்து பல விளைவுகளை ஏற்படுத்திய வண்ணம் இருக்கின்றன. சமூகத்தைப் பாதிக்கும் விஷயங்கள் சிறு பத்திரிகையாளர்களைப் பாதிப்பதுபோல் தெரியவில்லை என்று கருதுவது முற்றிலும் தவறு. ஜெயமோகன் கருதுவதற்கு மாறாக சிறுபத்திரிகை நண்பர்களை இந்த விஷயங்கள் இந்த மாற்றங்கள் இன்னும் அதிக வீச்சோடு பாதிக்கின்றன என்பதுதான் உண்மை. நம் கலாச்சாரச் சூழலில் இவ்வகையான மாற்றங்களுக்கு எதிரான எதிர்ப்பு சக்தியும் உடனிருப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மக்கள் ஆட்டு மந்தைகள்



படிப்பகம்

www.padippakam.com

அல்ல. மேலும் ஜெயமோகன் பழைய காலச்சுவடின் குறைபாடுகளாகக் காணும் விஷயங்கள் வலுவற்றவை. ஜெயமோகன் சித்தரிக்கும் இரும்புத்திரை எதுவும் பழைய காலச்சுவடு இதழ்களை ஒருபோதும் ஆக்ரமித்ததாகத் தெரியவில்லை. அவர் சொல்லும் 'சிந்தஸிஸ்' பழைய காலச்சுவடில் நிகழ்ந்ததாகவேபடுகிறது. 'இலக்கியத் தரங்கறத காலத்திற்கும் கட்டுப்படாத என்னிக்குமே நிலைச்சிருக்கும் ஒரு விஷயமாகப் பார்க்கும் தூய்மைவாதத்தை எல்லாமே சந்தேகத்தோட பார்க்க வேண்டியிருக்கு' என்று கூறும் ஜெயமோகன் என்ன சொல்ல வருகிறார் என்று புரியவில்லை. இலக்கியத் தையோ பிற கலை வடிவங்களையோ பத்தாயிரம் வருடங்கள் நிலைத்திருக்கும் விஷயமாக யாரும் கற்பனை செய்து கொள்வதாகத் தெரியவில்லை. ஆனால் மனிதக் கலாச்சாரம் மற்றும் மேம்பாட்டில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் சில அடிப்படையான தர நிர்ணயங் களையும் காலத்தை பிரதிபலிக்கும் அளவுகோல்களையும் வளர்த்துக் கொள்வது என்பது ஒரு தவிர்க்க முடியாத கோட்பாட்டு ரீதியான அவசியமாகும். மேற்கின் பல சிந்தனையாளர்கள் முன்வைக்கும் **obsolute relativism** நம்மை அராஜகத்திற்கு இட்டுச் செல்லும். 'இதுதான் நிரந்தரமான நிலையான முழுமுற்றான உண்மையான தரம்' என்று இரும்புச் சட்டச்சூத்திரங்களை பழைய காலச்சுவடு ஒருபோதும் கொண்டிருக்கவில்லை. ஆனால் பகிர்தலின் சாத்தியப் பாடுகள் நிறைந்த பல தோராயமான தர வேற்றுமைகளை பிரித்துணர்ந்து காணும் தேடலுடன் அது இயங்கியது என்பதே அதன் தனிச்சிறப்பு. இந்த நிலைபாடுகளை புது காலச்சுவடு மாற்றிக்கொள்ள வேண்டியதில்லை.

'இலக்கியத் தரம் என்பது நாளுக்கு நாள் மாறும் விஷயம். பின்-நவீனத்துவ தொகுப்பாய்வின்படி பார்த்தால், செட்டிநாடு, உடுப்பி ஹோட்டல் உணவு பட்டியல்களும், பல்லவன் பஸ் டிக்கெட்டுகளும்தான் அபாரமான இலக்கியப்பிரதிகள். சிவகாசியில் அச்சிட்டு வெளியாகும் காலண்டரின் ஒரு பக்கத்தில் இருந்து மனித வாழ்வின் வரலாற்றையே உருவி எடுக்கலாம்' என்றெல்லாம் சொல்வதும் மூன்று நிமிடங்களுக்குத் தக்க கோட்பாடுகளை பயன்படுத்தி எல்லாவற்றையும் கட்டுடைத்து விடுவது சாமர்த்தியமான காரியங்கள்தான். அப்படி மிகத் திறமையாக கட்டுடைத்து விட்ட பின்னர் நாலாவது நிமிஷத்திலிருந்து நாம் மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பதே நமது பிரச்சினை. இன்றும் கூட பிளாட்டோ, டாண்டே, ஷேக்ஸ்பியர், கோத்தே, பால்சாக் போன்றவர்களின் ஆக்கங்களைப் படிக்கும்போது அவற்றின் இன்றைய முக்கியத்துவத்தையும் தொடர்ச்சியையும் ஏன் எப்படி உணர முடிகிறது? மகாபாரதத்தில் இன்றையப் பொருத்தம் எதுவுமில்லையா? தமிழ் நவீன இலக்கியமே காலனியாதிக்கத் தாக்கத்தினாலும் மேற்கத்தியக் கல்விமுறையின் பயிற்சியினாலும் உருவானதுதான். இந்த 'சிந்தஸிஸை' யாரும் தடுத்து நிறுத்திவிட முடியாது. அதே சமயத்தில் தமிழ் வாழ்வுக்கான தனித்துவத்தை தக்க வைககும் முயற்சியில்தான் காலச்சுவடின் பயணம் இருக்க வேண்டும். சிறுபத்திரிகைகளின் சில தூய பிம்பங்களை தகர்ப்பதும் அவசியமே.

நமது பொருளாதார, கலாச்சார மாற்றங்கள் பற்றி நாம் அதிகமாக கவலைக் கொள்ளத் தேவையில்லை. தொலைக்காட்சி வந்தவுடன் எல்லாமே அழிந்தொழிந்து போகும் என்று கவலைப்பட வேண்டியதில்லை. இப்படி எத்தனையோ வந்து போய்க்கொண்டுதான் இருக்கும். ஆனால் இந்த ஊடகத்தை தவிர்க்க இயலாத விளைவுகளை நாம் புரிந்து கொண்டு அதற்கான மாற்று வழிகளைப் பற்றி தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். மக்களை எளிதில் அடக்கி ஒடுக்கக்கூடிய கூட்டங்களாகப் பார்க்காமல் அவர்கள் எதிர்ப்பின் வழிமுறைகளையும் மறுப்பை அவர்கள் முன்வைக்கும் விதங்களையும் அவர்களின் படைப்பூக்கத்தின் வெளிப்பாடுகளையும் கற்றுணரும் சிறு பத்திரிகையாளர்கள் தான் இன்றைய நம் தேவை. இவற்றையெல்லாம் குற்றாலம் பட்டறையில் கூத்தடிக்கும் அராஜகவாதிகளிடமிருந்து எதிர்பார்க்க முடிவதில்லை. இதுபோன்ற பொறுப்பற்ற கலாட்டாக்கள் மேலோட்டமானவை. காலச்சுவடு இதற்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்காமல் பல தடைகளையும் மீறி நல்ல எழுத்திற்காகவும் தீவிர வாழ்விற்காகவும் எத்தனிக்கும் இளம் வாசகர்களின் விரிந்த தளமாகவும் பகிர்தலுக்கான களமாகவும் தொடர்ந்திருக்க முயற்சித்துக்கொண்டே இருக்கவேண்டும்.

நட்சத்திரன் செவ்விந்தியன் நம் கவிதைகள் பற்றி முன்வைக்கும் விமர்சனம் மிக முக்கியமானது. ஈழத்தமிழ் கவிதைகளில் வெளிப்படும் வாழ்வும், இயற்கையும், தேடலும் கலந்த பல்வகைப்பட்ட படிமங்கள் தமிழ்நாட்டுக் கவிதைகளில் மிகக் குறைவு. இதற்கு நம்முடைய தட்டையான வாழ்வனுபவங்களே காரணமாக இருக்கலாம். தண்டபாணியின் 'பிள்ளை சிறு விண்ணப்பம்', லஷ்மி மணிவண்ணனின் 'கண்கள்', 'அண்மைக்கால காதலிக்கு', கோலாகல ஸ்ரீநிவாஸின் 'முரண்', நட்சத்திரன் செவ்விந்தியனின் 'மீட்சி' 'ஷெல் குத்தல்' ஆகியவை மிக நல்ல கவிதைகள். ஆதிமூலத்தின் அருவப் பாணி ஓவியங்களில் நிகழும் பயணமும் ஆழ்ந்த பரவச அனுபவமும் ஜெயமோகன் கவிதையாக்கி இருப்பது அழகாக வந்திருக்கிறது.

பாடலிபுத்திரம் சமீபகாலத்தில் வெளிவந்த தமிழ்ச் சிறுகதைகளில் மிகச் சிறந்த கதையாக இருக்கும் என்று தோன்றுகிறது. ஜெயமோகனுக்கு அன்பான பாராட்டுகள். யுவன் சந்திரசேகரின், 'நிழலைத்துரத்தியவன்' நல்ல முயற்சி என்றாலும் அதன் வெளிப்பாட்டு வடிவத்தில் சறுக்கிவிடுகிறது. இந்த இதழில் குறிப்பிட வேண்டியது சு.ரா.வின் 'பாதியில் முறிந்த பயணம்' கட்டுரையைத்தான். கிருஷ்ணன் நம்பியும் சு.ரா.வும் பழகி வளர்ந்த காலங்களில் நம்மில் பலர் பிறந்திருக்கவே மாட்டோம். ஆனாலும் கூட இந்த அழகான முன்னுரையை இப்போது வாசிக்கும்போது அவர்கள் பயணித்த வாழ்வையும் நட்பையும் உணர முடிந்தது சந்தோஷமாக இருந்தது. இவற்றைத் தாண்டியும் கிருஷ்ணன் நம்பி என்ற படைப்பாளியின் மன உலகத்திற்குள் நம்மை மிகுந்த அக்கறையோடும் பொறுப்புணர்வோடும் அழைத்துச்செல்கிறது இந்த முன்னுரை.

புதுமைப்பித்தனின் படைப்புகளும் ஆக்டோவியா பாஸ் பற்றிய குறிப்பும் அவரது இரண்டு கவிதைகளும் இந்த இதழுக்கு வளம் சேர்த்தன. விவாதமேடையும் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு போன்ற தமிழ்க் கலாச்சாரச் சூழலில் நடக்கும் விஷயங்களைப் பற்றிய பதிவுகளையும் காலச்சுவடு தொடர்ந்து வெளியிட வேண்டும். ஆதிமூலத்தின் அருவ ஓவியங்களைத் தொடர்ந்து காலச்சுவடின் அட்டைகளில் கொண்டு வருவதற்காக நன்றிகள். நவீன ஓவியம் பற்றிய நம் புரிதல்களை ஆழமாக்கும் முகமாக காலச்சுவடு இயங்கவேண்டும்.

**என். சத்தியமூர்த்தி**
ஜவகர்லால் நேரு பல்கலைகழகம்
புதுதில்லி



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்ச் சிறுபத்திரிகைச் சூழல்: ஒரு 'கள' ஆய்வு

'தத்துவப்புரிதலோடு மக்கள் இலக்கியத்தின் உண்மையான முதல் பிரதிநிதியாக' மணிமுத்தா நதிக்கரையிலிருந்து வெளிவரும் 'களம் புதிது' இதழ் தமிழ்ச் சிறுபத்திரிகைச் சூழலில் தன்னுடைய தனித்துவத்தையும் மகத்துவத்தையும் நிலை நாட்டுவதற்காக ஒரு சுற்றறிக்கையை அனுப்பியிருக்கிறது. அதில் கண்ட மெய்சிலிர்க்க வைக்கும் ஆணித்தரமான ஆய்வு முடிவுகளின் மீது சில குறிப்புகளை தமிழ் கூறும் நல்லுலகிற்கு எடுத்தியம்புவது ஒரு சிற்றிதழ் வாசகனின் கடமையாகும்.

**களம் புதிது அறிக்கை:**

தமிழ்ச் சிற்றிதழ் சூழலில்ஒரு சிறுபத்திரிகையால் என்ன சாதித்துவிட முடியும்? தமிழில் இறுக்கமான இலக்கியப் புரிதலோடு எழுதியவர்கள் சிறுபத்திரிகைகளை நம்பி இருந்த காலம் உண்டு. சிறுபத்திரிகை என்பது ஒரு குறிப்பிட்ட குழுவின் அல்லது நபரின் பட்டினியில் உருவாகி ஊற்றெடுப்பது என்றிருந்ததை சகல திமிருடனும் வெளியான "காலச்சுவடு" சிறப்புமலர் சில ஆண்டுகளுக்கு முன் உடைத்தெறிந்தது. அதன் அந்தச் செயலால் தற்கொலை செய்து கொண்ட சிறு இதழ்கள் பல.

பார்ப்பனிய விஷயத்தை பாராகணக்கில் கக்கிவரும் 'கணையாழி' முதல் சிற்றிதழ் எழுத்தாளர்களின் பெரிய பண்ணையாக முயற்சிக்கும் கோமல் கும்பலின் அறைக்கோவணமாகிய சுபமங்களா தொடர இலக்கிய ஆண்டு மலர் மூலம் பல ஆயிரங்களை படைப்பாளிக்கு கொட்டித் தீர்க்கும் 'இந்தியா டுடே' வரையிலான நீண்ட துரோக வரலாற்றின் லேட்டஸ்ட் என்ன தெரியுமா? சுடச்சுட பாலியல் வியாபாரம் நடத்தி வந்த 'குமுதம்' சிறுபத்திரிகை சூழலை மய்யமாக வைத்து (நடுவர்கள் பெரும்பாலும் சிற்றிதழ் சார்ந்தவர்கள்) போட்டிகளை நடத்தி 'அதிர்ஷடசாலி' எழுத்தாள அன்பர்களை எய்ட்ஸ் பூமிகளுக்கு நாடுகடத்தியதே.

இப்படிஒரு சூழல் உருவான பிறகும் சிறுபத்திரிகை என்று தமிழில் நடத்துகிறவன் ஒன்று பணக் கொழுப்பெடுத்தவன் அல்லது தனது படைப்பை (இது ஒருவகை வியாதி) வேறு இதழ்களில் பார்க்க முடியாதவன்.

இவையன்றி தத்துவ புரிதலோடு இலக்கியத்தை ஒருவகை அரசியல் செயல்பாடாக கருதிக்கொண்டு வெளிவருகிற சிறு இதழ்கள் சொற்பம். ஆனால் இவைதாம் இன்றைய மக்கள் இலக்கியத்தின் உண்மையான முதல் பிரதிநிதிகள். அவற்றில் ஒன்றாகவே களம் புதிது வந்தது, வருகிறது, வரும்.

இன்றைய சிற்றிதழ் இலக்கிய சூழலில் அரசியல் புரிதலோடு இரு அணிகள் தெளிவாக பிரிந்துள்ளதை காணமுடிகிறது. தலித் இலக்கியவாதிகள் மற்றும் ஆதரவு சக்திகள், சிந்தனையாளர்கள். இவர்களுக்கு எதிராய் பார்ப்பனிய கருத்தாக்கம் கொண்ட எழுத்தாளர்கள், அவர்களால் மிகச் சமீபமாய் அங்கீகரிக்கப்பட்டுள்ள 'முற்போக்கு' யதார்த்தவாத பூனூலிஸ்ட் மார்க்சியர்கள்.

களம்புதிது முதல் அணியை சார்ந்ததாக தன்னை முன்னிலைப்படுத்தக்கொள்ள விரும்புகிறது. இந்தியச் சூழலில் வர்க்க விடுதலையென்பது தலித் மற்றும் பெண்ணிய விடுதலையே என்கிற புரிதலோடு தலித் + பிற்படுத்தப்பட்டோர் + சிறுபான்மையோர் + பெண்ணியவாதிகள் இத்தகையதொரு கூட்டமைப்பை முன் நிறுத்தி போர்குரலெழுப்புகிறது. இச்செயற்பாடுகளை இலக்கியம் சார்ந்தும் வளர்த்தெடுக்க நிறப்பிரிகை, மனுசங்க, கிழக்கு, கவிதாசரண், ஊடகம் போன்றவைகளை தோழமை இதழ்களாக களம்புதிது கருதுகிறது.

மேற்கண்டவைகளை கருத்தில் கொண்டு புதிய கேள்விகளை உருவாக்கிக் கொண்டு, இலக்கிய ரீதியான தடைகளை உடைத்துக் கொண்டு களம்புதிது-4 ஜுனில் வர இருக்கிறது. இதழ் மீதான கருத்துகளையும் ஆரோக்கியமான விவாதத்தையும் முன்நடத்த உங்களை அழைக்கிறோம்.

**ஆசிரியர்குழு.**

(அறிக்கை மூலத்தில் உள்ள படியே இங்கு கொடுக்கப்பட்டுள்ளது), அழுத்தங்கள் 'காலச்சுவடு' தந்தவை.

சிறுபத்திரிகைக்கான இயல்புகளை வரையறுப்பது பற்றிய எல்லாவித குழப்பங்களையும் மேற்படி புரட்சிகர ஆய்வினால் களம் தீர்த்துக்கட்டிவிட்டது. சிறுபத்திரிகைகள் பொருளாதார நெருக்கடிகளுடன் வெளிவந்தன என்ற வரலாற்றை பொருளாதார நெருக்கடிகளுடன் நடத்தப்பட்டால்தான் அது சிறுபத்திரிகை என்ற 'விதி'யாக மாற்றி ஒரு புதிய இலக்கணத்தை மேற்படி சுற்றறிக்கை வகுத்துவிட்டது.

(கோணங்கியிடமிருந்து திருடப்பட்ட இலக்கணம் என்பது வேறுவிஷயம். பார்க்க: கல்குதிரை இதழ் 9 தலையங்கம்)

சிறுபத்திரிகைகளை வகைப்படுத்தும் அதன் வாசக தளம், கலாச்சார சூழலுக்கு செய்யும் எதிர்வினை, வெளிப்பாட்டு மொழி போன்ற நம்முடைய புராதன அடிப்படைகளை தகர்த்து எறிந்து விட்டு அச்சிடப்படும் தாள், அச்சுக் கோர்க்கப்படும் விதம், ஆசிரியரின் வரவு-செலவுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு பத்திரிகையின் இயல்பையும் வீச்சையும் மதிப்பிடுவது மிகவும் நவீனமான ஒரு சிந்தனை என்பதில் ஐயமில்லை. "பரமண்டல ராஜ்ஜியம் ஏழைகளுக்கே" என்ற விவிலியக் கூற்று எவ்வாறு புதிய எல்லைகளை அடைந்து விரிந்துள்ளது என்பதை ஆன்மீகவாதிகள் கவனிக்க வேண்டும்.

காலச்சுவடு ஆண்டு மலரால் பல சிறுபத்திரிகைகள் தற்கொலை செய்து கொண்டதான 'ஆதார பூர்வ' கொலைக் குற்றச்சாட்டிற்கு பதில் சொல்ல இயலாவிட்டாலும் கேவலம், ஒரு பத்திரிகை வெளியிட்ட மலரின் அச்சாக்கத் தொழில் நுட்பத்தைக்கூட எதிர்கொள்ள முடியாத பத்திரிகைகள் செத்தொழிவது மிகவும் ஆரோக்கியமான விஷயம். காலச்சுவடு சிறப்பு மலரால் தற்கொலை செய்துகொண்ட சிறுபத்திரிகை ஆசிரியர்கள், வாசகர்களின் முழுமையான பட்டியலை வெளியிட்டு சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை தூக்கிலிட களம் ஆவன செய்ய வேண்டும்.

சிறுபத்திரிகைகளுக்கும் பெரிய பத்திரிகைகளுக்கும் இடையேயான வித்தியாசத்தை காட்டும் முதலாவது ஆய்வைவிட தீவிரமானது பார்ப்பனிய பத்திரிகைகளுக்கும் அதன் எதிரணி பத்திரிகைகளுக்கும் இடையிலான முரண் பற்றிய ஆய்வு. அரசியல் புரிதலோடு தெளிவாக பிரிந்துள்ள இரு அணிகளின் தன்மைகளை மேலும் தெளிவாகப் புரிந்துகொள்ள சில தகவல்கள்:

களம் புதிது ஆசிரியர் குழு:

இரத்தின கரிகாலன், இரத்தின புகழேந்தி, உ.செ.துளசி, குரல்.இரா.நடராசன், தபசி, ந. அறிவழகன்.

(அ) இரத்தின கரிகாலன்: 'வாழ மறந்த உறவுகள்'தி.ஜா. நினைவு குறுநாவல் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏப்ரல் 95 கணையாழியில் வெளிவந்துள்ளது. பிப்ரவரி 95 சுபமங்களாவில் கவிதை.

(ஆ) உ.செ.துளசி: கணையாழி பிரதான கவிதையாளர்களில் ஒருவர். ஏப்ரல் 95 சுபமங்களாவில் கவிதை.

(இ) தபசி: கணையாழி கவிதையாளர். குமுதம் ஸ்பெஷலிலும் கவிதைகள் வெளிவந்திருக்கின்றன.

(ஈ) குரல்.இரா. நடராசன்: இந்தியாடுடே ஜுலை 6-20/95 இதழில் 'ரத்தத்தின் வண்ணத்தில்' சிறுகதை. 'மிச்சமிருப்பவன்' தொகுப்பிலிருந்து 'சுசி முதல் சுசி வரை' சிறுகதை குமுதத்தில் மறுபிரசுரம். தெளிவான பிரிவினைக்காரர் ஆட்சேபம் எதுவும் தெரிவித்ததாகத் தெரியவில்லை.

(உ) மலம் துடைத்த காகிதத்தில் வைத்துப் படைக்கப்பட்ட 'தலித் இலக்கிய அமுது'. பார்க்க: இந்தியாடுடே இலக்கிய ஆண்டு மலர், மற்றும் தினமணி தலித் சிறப்பிதழ்.

('துரோக வரலாறு' முழுமையானதல்ல)

எழுத்தாளர்களை எய்ட்ஸ் பூமிக்கு அனுப்பியதற்காக குமுதத்தை தாக்குகிறது 'களம்'. மேற்படிவாக்கியத்தை கீழ்க்கண்ட எதிர்வாக நாம் கட்டுடைக்கலாம்.

மேற்கு → ஓரினப்புணர்ச்சி → எய்ட்ஸ் பூமி → அசுத்தம்

X

பாரதம் → பாலியல் ஒழுக்கம் → புண்ணிய பூமி → தூய்மை

அமெரிக்காவில் இருந்து திரும்பும் பரிசுபெற்ற எழுத்தாளர்கள் எய்ட்ஸ் பரிசோதனை சான்றிதழ் ஒன்றை 'களம்' இதழுக்கு அனுப்பி அவர்களின் அச்சம் போக்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் 'களம்' ஆசிரியர் குழுவினர் இந்த ஆண்டு 'எய்ட்ஸ் பூமி' பரிசுப்போட்டிக்கு தங்கள் படைபபுகளை அனுப்பவில்லை என தெளிவுபடுத்துவது விவாதத்தை முன்னெடுத்துச் செல்ல உதவும்.

**இரும்புக்கை மாயாவி**



படிப்பகம்

www.padippakam.com



Sharda®
SAREES BELGAUM

**SHARDA TRADING CO.,**
79, GODOWN STREET
MADRAS - 600 001
☎ 564270

படிப்பகம்

Registration No: 42764/88 KALACHCHUVADU
www.padippakam.com




படிப்பகம்